# குறள் கூறும் இறைமாட்சி

ஆசிரியர் :
டாக்டர் தி. முருகரத்தனம்,
துணைப்பேராசிரியன்,
திருக்குறள் ஆய்வகம்,
மதுரைப் பல்கலைக் கழகம்.

மதுரைப் பல்கலைக் கழகம்
மதுரை - 625021
1974

1B6T12
(N)
L4

# குறள் கூறும் இறை மாட்சி



CONNEMARA PUBLIC LIBRARY
8 JUN 1975
MADRAS

திருக்குறள் ஆய்வக வெளியீடு 2

# குறள் கூறும் இறைமாட்சி

ஆசிரியர் :
டாக்டர் தி. முருகரத்தனம்,
*துணைப்பேராசிரியன்,*
திருக்குறள் ஆய்வகம்,
மதுரைப் பல்கலைக் கழகம்.

மதுரைப் பல்கலைக் கழகம்
மதுரை - 625021
1974

உரிமை மதுரைப் பல்கலைக் கழகத்துக்கு.
திருக்குறள் ஆய்வகத்தின் வெளியீடு.
முதற்பதிப்பு 1974.

Tirukkural Chair Publication 2

**Kingship in Kural**

Dr. T. Murugarathanam
Reader in Tirukkural Chair

MADURAI UNIVERSITY
MADURAI (S. India)

விலை ரூ. 6

வெளியீடு : மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை - 625 021.

அச்சீடு : ஆர். கே. பிரிண்டர்ஸ், மதுரை - 625 001.

## தோன்றாத் துணை வேந்தர்



**1912** உணர்வும் உறக்கமும் **1974**

*மூவாத் தமிழுக்கு மூவா தமிழ் தந்து*
*சாவாப் புகழடைந்தார்; சற்றேனும் — ஓவாப்*
*பணிபுரிந்தார்; பல்கலை போற்றும் கழகத்து*
*அணிபுரிந்தார்; ஆண்டார் நமை.*

## ஆசிரியரின் முன்னுரை

'1968-ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டு கருத்தரங்கினை ஒட்டித் தமிழக அரசு மதுரைப் பல்கலைக் கழகத்தில் நிறுவிய அறக்கட்டளையால் தோற்றம் பெற்ற திருக்குறள் ஆய்வுத்துறைக்குத் திருக்குறளின் வாழ்வியற் கருத்துக்கள் ஆராய்ச்சிப் பொருளாக ஒதுக்கப்பட்டன. மக்கள் குடும்பமாகவும் சமூகமாகவும் அரசின் குடிகளாகவும் இயற்கையின் படைப்பாகவும் வாழுகின்றனர். இவ்வனைத் தியல்புகளையுமே வாழ்வியல் எனல் வேண்டும். ஆகவே வள்ளுவர் கூறும் இல்வாழ்வியல், சமூகவியல், அரசியல், பொருளியல், ஒழுக்கவியல், சமயவியல் கருத்துக்களே திருக் குறளின் வாழ்வியற் கருத்துக்கள் ஆகும். மதுரைப் பல்கலைக் கழகத்துத் திருக்குறள் ஆய்வுத் துறையில் இவைபற்றி முறைப் படி ஆராய்ச்சி நடைபெறும். முதன் முதலாக வள்ளுவர் வழங்கிய பொருளியல் ( Economic Ideas of Tiruvalluvar) ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.' அது குறள் கண்ட பொருள் வாழ்வு என்னும் பெயர் தாங்கி நூலாக வெளி வந்துள்ளது.

அடுத்து 'வள்ளுவர் கண்ட அரசியல்' கருத்துக்கள் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றுள்ளும் அரசர்பற்றிய கருத்துக்கள் முதலில் ஒரு நூலாக எழுதப் பட்டன. அவையே குறள் கூறும் இறைமாட்சி என்னும் இந் நூலாகியது. திருக்குறளின் பொருட்பாலில் முதல் இருபத் தைந்து அதிகாரங்கள் 'அரசியல்' என ஓரியலாக அமைந் துள்ளன. அவ்வியலில் காணப்படும் கருத்துக்களே இங்கு ஆராய்ச்சிக்கு உரியனவாயின.

அரசியல்பற்றிய ஆராய்ச்சி, நாகரிகம் தோன்றிய நாள்முதலே நடைபெற்று வந்திருக்கிறது. மேலை நாடுகளில் பிளேட்டோ, அரிஸ்டாட்டில் தொடங்கி ஏறத்தாழ 2500 ஆண்டு களாக இவ்வாராய்ச்சி நடைபெற்று வந்திருக்கிறது; கீழை நாடான சீனத்திலும் கன்பூசியஸ் தொடங்கி நடைபெற்று வந்திருக்கிறது. இந்தியாவில் மௌரியப் பேரரசர்கள் காலம் முதல் அரசியல் என்னும் பொருள்நூல் ஆராய்ச்சி நடைபெற்று

வந்திருக்கிறது. உலகெங்கும் காணும் இப்பண்டை ஆராய்ச்சி மரபு தமிழகத்திலும் இருந்திருக்கிறது. இம்மரபில் முளைத் தெழுந்ததே முப்பால் என்னும் குறள்.

பண்டைய அரசியற் சிந்தனையுடன் – குறிப்பாக இந்தியச் சிந்தனையுடன் – உறவுபடுத்தியும் இன்றைய சிந்தனையின் நோக்கிலும் குறள் கண்ட இறைவனை வரைந்து பார்த்தல் பயன்தரும் சிறந்த ஆராய்ச்சியாக அமையும். ஆனால் அது விரிவானதாகவும் திங்கள் என்னும் காலக் கணக்கில் அடங்காததாகவும் இருக்குமாதலால், அவ் 'ஆசை' கைவிடப்பட்டது. இன்றைய அரசியற் சிந்தனையின் அடிப்படையில் மட்டுமே குறள் கூறும் இறைமாட்சி வரையுப்பட்டுள்ளது. பண்டைச் சிந்தனையுடன் உறவுபடுத்தல் பின்னர் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்படும். குறள்கண்ட அரசியலை உலகின் பண்டை இன்றைச் சிந்தனையுடன் ஒப்பிடுதலை நோக்கமாகக் கொண்டே இவ்வாண்டின் தொடக்கத்தில் திருக்குறள் துறையின் சார்பாக 'வள்ளுவர் கண்ட அரசியல்' என்னும் ஒரு கருத்தரங்கு நடத்தப்பட்டது. அதில் ஒப்புமைப் பணி ஓரளவு செய்யப்பட்டது. அம்முயற்சியும் தொடருதல் வேண்டும் என்பது இத்துறையின் நோக்கமும் திட்டமும் ஆகும். 'வள்ளுவர் கண்ட அரசியல்' என்னும் கருத்தரங்கில் இடம்பெற்ற கருத்துக்கள் போக எஞ்சியவையே 'குறள் கூறும் இறைமாட்சி' என்னும் இந்நூலுள் இடம்பெற்றுள்ளன. அக்கருத்தரங்கின் கட்டுரைகள் வள்ளுவர் வகுத்த அரசியல் என ஒரு நூலாக வெளிவந்துள்ளன.

முப்பாலின் பொருட்பாலில் பொருள் என்னும் சொல்லுக்குப் பல பொருள் தரப்படுகிறது. பொருள் நூலின் 'பொருள்' இன்னது என ஆராய்கிறது, இந்நூலின் முதல் இயல் பொருட்பால் வழங்கும் பொருள். வள்ளுவர், அரசருள் ஏற்றினை நமக்கு எடுத்துக் காட்டுகிறார். பண்டை அரசுகளிலும் வள்ளுவர் தந்த அரசிலும் அரசனே நடுவண்; கருவும் உருவும் அவனே. அத்தகையோன் திறத்தை ஆராய்கிறது இரண்டாம் இயல் அரசருள் ஏறு. இன்றைய அரசியலறிஞர் அரசை (State) ஒருநுண்பொருளாகக் காணுகின்றனர்; பல கூறுகள் (Elements) அடங்கிய ஒன்று அது எனவும் எண்ணுகின்றனர். இவ்வரசு அரசின் தலைவனாகிய அரசனிலிருந்து வேறுபட்டது எனவும் அவர்கள் பிரித்தறிகின்றனர். இவ்விருமை நிலை இன்று கண்ட புதுமை எனவும் பண்டு காணா அருமை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். குறளில் அவ்விருமையும் அருமையும் உண்டு என விளக்குகிறது

மூன்றாம் இயல் வேந்தனும் வேந்தும். பண்புடைய வேந்தன் பயனுடைய வேந்தன் ஆவான் எனக் கருதுகிறார் வள்ளுவர். அவன் பண்புகளை அவர் வகுத்தும் தொகுத்தும் விரித்தும் குறித்தும் பல அதிகாரங்களில் விளக்குகிறார். அவர் விளக்கத்தை விளக்குகிறது நாலாம் இயல் பண்புடை வேந்தன். இப் பண்புடை வேந்தன் படிப்பதாலும் பண்படுதலாலும் உருவம் பெறுகின்றான். இதனைப் பேசுகின்றன பொருட்பாலின் சில அதிகாரங்கள். அவற்றின் திறத்தை விரித்துரைக்கிறது ஐந்தாம் இயல் படிப்பும் பண்பாடும். பண்புகள் பெற்றுப் படித்தும் பயின்றும் பாராளும் வேந்தனாவோன் நாட்டுக்குப் பணிபுரிகிறான். அது அவன் கடமை. அக்கடமைப் பணி பல திறத்தது. அப் பணியின் திறங்களை வள்ளுவர் அங்கும் இங்குமாகத் தந்திருக்கிறார். அவற்றை வகுத்து வழங்குகிறது ஆறாம் இயல் அரசர் பணி. இவ் ஆறு இயல்களுமே இந் நூல். இம் முறையில் குறள் கூறும் இறைமாட்சி வரையப்பட்டுள்ளது.

இங்கு வரையப்பட்ட 'இறையோவியம்' முழுமையானதாகவும் வள்ளுவர் உள்ளத்தை உணர்த்துவதாகவும் குறளின் பெருமையையும் சிறப்பையும் முறையாக மொழிவதாகவும் அமைந்துள்ளதோ எனக் காணல் படிப்போரின் பணி. புதிதாக அரசியலைப் பயின்று காலத்துக்குக் கட்டுப்பட்டு நூல் வரைதல் ஆசிரியனுக்கு அமைந்த 'எல்லையும் தொல்லையும்' ஆகும்.

வள்ளுவர் கண்ட அரசியல் இறைமாட்சியுடன் முடிவடைவதில்லை. குறள் கண்ட ஆட்சி (Government in Kural) என்னும் மற்றொரு நூல் அடுத்து உருவாகி வருகிறது. அது பொருட்பாலில் எஞ்சிய நாற்பத்தைந்து அதிகாரங்களை ஆராய்கிறது. வள்ளுவர் கண்ட அரசியற் கருத்துக்களை வள்ளுவர் காலத்தில் நடைமுறையில் இருந்து வந்த தமிழக அரசியலோடு ஒப்பிட்டு ஆராய்தல் பல்வகையில் பயன் தரும். அப்பணியும் திருக்குறள் துறையில் தனியே மேற்கொள்ளப் பட்டுள்ளது. ஆதலால் காலத்தோடு ஒப்பிடல் இவ் 'இறைமாட்சி' யில் இடம் பெறவில்லை; அக்காலத்து இலக்கியங்களில் காணும் அரசியற் கருத்துக்களோடு ஒப்பிடலும் இதில் இடம் பெறவில்லை.

வள்ளுவர் கண்ட அரசியல் பற்றித் தமிழகத்தில் சில நூல்கள் முன்னர் எழுந்துள்ளன.[1] அவற்றில் இன்றைய மேலைநாட்டுச் சிந்தனைகள் இடம் பெறவில்லை. குறளின் பண்டை உரையாசிரியர்கள்போக்கில் அவை அமைந்துள்ளன.

ஈழத்து வெளியீடு ஒன்று திருக்குறளை இன்றைய போக்கில் சுருக்கமாக ஆராய்ந்து பார்க்கிறது.[2] அதனைப் பின்னர்க் கண்டேன். என்முயற்சி தனிமுயற்சி.

அரசியல் வரலாற்றுத் துறைப் பேராசிரியர்கள் திருக்குறள் துறையின் இத்தகைய வெளியீடுகளை மதித்தல் வேண்டும் என்பது என் ஆவல்; அது முறையும் ஆகும். ஆதலால் அரசியலும் வரலாறும் கற்ற தமிழறிஞரே இப்பணியைச் செய்தல் வேண்டும். அல்லது இப்பணி செய்யும் தமிழறிஞர்க்கு அவ்வாய்ப்புக்கள் வழங்க வேண்டும். வெறுந் தமிழ்ப்பணி செய்யப் பணிக்கப்பட்டேன்; பணிந்தேன்.

முகப்பின் 'குறள் கூறும் இறைமாட்சி'யைத் தீட்டித் தந்தவர் என் நண்பர் கலைஞர் கோ. விஜய வேணுகோபாலர். மீண்டும் உற்றுழி உதவிய அவர்க்கு நான் உறுபொருள் தரவில்லை; அறத்துப்பாலின் பதினோராம் அதிகாரத்தையே படையலாக்குகிறேன்.

இந்நூலை நாலே வாரத்தில் அழகுற அச்சேற்றி முடித்துவிட்டனர் ஆர். கே. பிரிண்டர்ஸ். இது எங்கள் துறையில் ஒரு புதுமை! அவர்களுக்கு மனமார்ந்த நன்றி மட்டுமல்ல; வாயார்ந்த பாராட்டும் உரியது.

நூல் எழுதும் காலத்தை விட அதனை வெளிக் கொணரும் காலமே நீண்டு நெடிதாக விளங்குகிறது, அது பலர் முயற்சி ஆதலால்.

எழுதியது ஒருவர் முயற்சி. அதனை நூலாக ஆக்கியது திருக்குறள் துறையின் அனைவரது முயற்சியுமாகும். என்னுடன் பணியாற்றும் செல்வி காமாட்சி சீனிவாசன், செல்வி ஜலஜா ஆகியோருக்கு என் நன்றி.

20-9-74 **தி. முருகரத்தனம்**

---

1 1. திருவள்ளுவர் அரசு
2. வள்ளுவர் கண்ட அரசியல் (3 தொகுதிகள்)
3. திருவள்ளுவர் காட்டும் அரசு

2 ஒப்புரவு அல்லது வள்ளுவம்

# பொருளடக்கம்


பக்கம்

ஆசிரியர் முன்னுரை

**இயல் 1 பொருட்பால் வழங்கும் பொருள்** 1

1. 1. பொருளின் பொருள்

1. 2. அரசியல் : ஒரு விளக்கம்

1. 3. பொருட்பால் தரும் கருத்துக்கள் : வகைதொகை

1. 4. பொருட்பால் வகைதொகை : உரையாசிரியர்கள் கருத்துக்கள்

**இயல் 2 அரசருள் ஏறு** 15

2. 1. முதற் குறள் மொழி பொருள்

2, 2. உரைகள் தரும் பொருள்

2. 3. உரைகல்லில் உரைகள்

2. 4. உரைகளின் பின்புலம்

2. 5. கௌடலீயம்

2. 6. சப்தாங்கம்

2. 7. முதற்குறளும் சப்தாங்கமும்

2. 8. ஒற்றுமையும் காரணமும்

2. 9. குறளும் கௌடலீயரும்

2. 10. முதற்குறள் தொகைக் குறளா ?

**இயல் 3 வேந்தனும் வேந்தும்** 37

3. 1. சமூகம்

3. 2. அரசு

3. 3. ஆட்சி

3. 4. அரசன்

3. 5. மயக்கம்

3. 6. அரசின் நுண்மை

3. 7. குறளில் சமூகம்

3. 8. குறளில் அரசு

3. 9. குறளில் அரசன்

3. 10. அரசரின் தலைமை

3. 11. அரசின் அடிப்படைக் கூறுகள்

3. 12. அரசின் அடிப்படைக் கூறுகளும் சப்தாங்கமும்

3. 13. குறளும் சப்தாங்கமும்

**இயல் 4 பண்புடை வேந்தன்** 51

4. 1. இறைமாட்சியின் சிறப்பு

4. 2. இறைமாட்சி தரும் பண்புகள்

4. 3. இயற்கைக் குணங்களும் செயற்கைக் குணங்களும்

4. 4. அஞ்சாமை

4. 5. ஈகை
4, 6. ஊக்கமுடைமை
4. 7. தூங்காமை
4. 8. துணிவுடைமை
4..9. அறன் இழுக்காமை
4. 10. அல்லவை நீக்குதல்
4. 11. மறனும் மானமும்
4. 12. காட்சிக்கு எளிமை
4. 13. இன்சொலுடைமை
4. 14. செவிகைப்பச் சொற்பொறுத்தல்
4. 15. ஊக்கமுடைமை
4. 16. பொச்சாவாமை
4. 17. மடியின்மை
4. 18. ஆள்வினையுடைமை
4. 19. இடுக்கண் அழியாமை
4. 20. இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
4. 21. பெண்வழிச் சேறல்
4. 22. குறள் மரபும் இந்திய மரபும்
4. 23. முடிவுரை

**இயல் 5 படிப்பும் பண்பாடும்** **81**

5. 1. கல்வி முதலான அதிகாரங்கள் : நோக்கம்
5. 2. ஐயம்
5. 3. கல்வி
5. 4. கேள்வி
5. 5. அறிவு
5. 6. குற்றங்கடிதல்
5. 7. பெரியாரைத் துணைக் கோடல்
5. 8. சிற்றினஞ்சேராமை

**இயல் 6 அரசர் பணி** **98**

6. 1. பணிகள் பல
6. 2. காவற் பணி
6. 3. பகையும் பகைவரும்
6. 4. ஆள் தற் பணி
6. 5. வரவு செலவுப் பணி
6. 6. முறைசெயற் பணி
7. முடிவுரை

**குறுக்க விளக்கம்**

**நூல் விளக்கம்**

**சிறப்புச் சொற்கோவை**

# உள்ளிருள் நீக்கும் விளக்கு



அறம் தகளி ; ஆன்ற பொருள் திரி ; இன்பு
சிறந்த நெய் ; செஞ்சொல் தீ ; தண்டு - குறும்பாவா
வள்ளுவர் ஏற்றினார் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு.

—நப்பாலத்தனார்

# 1

# பொருட்பால் வழங்கும் பொருள்

## 1. 1. பொருளின் பொருள்

வள்ளுவர் வழங்கிய முப்பாலுள் நடுப்பாலான பொருட்பாலே இந்நூலின் பொருள். இப்பொருட்பாலின் பொருளை உரையாசிரியர்கள் துணைக் கொண்டு எண்ணுகின்றபோது சில விஞக்கள் எழுகின்றன. பொருட்பால் கூறும் கருத்துக்கள் எவை? பொருட்பால் என்னும் தொடரில் 'பொருள்' என்னும் சொல் குறித்து நிற்கும் பொருள் யாது? இந்த விஞக்களுக்கு விடைகாணும் முயற்சியில் உரையாசிரியர்களை அணுகுகின்றபோது தெளிவு தோன்றவில்லை. அவர்கள் 'பொருள்' என்னும் சொல்லுக்கு வேறுபட்டுப் பொருள் தருகின்றனர். அவர்கள் தரும் கருத்துக்களில் எது பொருந்தும் என்னும் விஞவும் எழுகிறது ஆதலால் இவற்றுக்கு முதலில் விடை காணுதல் தேவையாகிறது. விடை காண உரையாசிரியர்கள் வழியே செல்லலாம்.

பொருட்பால் பற்றி அதன் தொடக்கத்தில் பரிமேலழகர் இவ்வாறு கூறுகிருர்:

"இனி இல்லறத்தின் வழிப்படுவனவாய பொருள் இன்பங்களுள் இருமையும் பயப்பதாய பொருள் கூறுவான் எடுத்துக்கொண்டார். அது தன் துணைக் காரணமாய அரசநீதி கூறவே அடங்கும். அரசநீதியாவது காவலை நடாத்தும் முறைமை."

பரிமேலழகர் இங்குப் 'பொருள்' என்பதற்குச் 'செல்வம்' எனப் பொருள் செய்கிருர். அரசன் நீதி என்னும் காரணமாகச் செல்வம் என்னும் காரியம் கூறப்படுகிறது என்பது அவர் தம் விளக்கம். அதாவது பொருட்பாலில் அரசநீதி கூறுவதன் வாயிலாகச் செல்வமே கூறப்படுகிறது என்பது பரிமேலழகர் எண்ணம்.

மணக்குடவரும் பரிப்பெருமாளும் பொருட்பால் முன்னுரையில் பொருள் பற்றிக் கூறுவது இது:

"பொருள் என்றது மக்களை உடைத்தாகிய நிலம்."

இவ்விரு உரையாசிரியர்களும் பொருள் என்பது 'நாட்டு வாழ்க்கை' பற்றிக் கூறுவது எனக் கருதுவதாகத் தெரிகிறது. இவர்களுக்குப் 'பொருள்' என்பது செல்வம் என்று பொருள்படுவதில்லை; 'நிலம்' என்று பொருள்படுகிறது. நிலம் என்பது நாட்டு வாழ்க்கையைக் குறிக்க வேண்டும். நாட்டு வாழ்க்கையாவது சமுதாய வாழ்க்கையே ஆகும்.

பரிமேலழகரோடு மற்ற உரையாசிரியரிடை அமைந்த வேறுபாடு சிறப்பாகக் குறிக்கத்தக்கது. அது அடிப்படையானதும் ஆகும். மணக்குடவரும் பரிப்பெருமாளும் தரும் பொருளே 'பொருள்' என்னும் சொல்லின் முதற்பொருள் போலும். இதனை நச்சினார்க்கினியர் தம் தொல்காப்பிய உரையில் நன்கு விளக்குகிறார் :

"பொருளாவன அறம் பொருள் இன்பமும் அவற்றது நிலையின்மையும் அவற்றின் நீங்கிய வீடு பேறுமாம். பொருள் எனப் பொதுப்படக் கூறவே அவற்றின் பகுதியாகிய முதல் கரு உரியும், காட்சிப் பொருளும், கருத்துப்பொருளும், அவற்றின் பகுதியாகிய ஐம்பெரும் பூதமும் அவற்றின் பகுதியாகிய இயங்கு திணையும் நிலைத் திணையும் பிறவும் பொருளாம்."

— தொல். பொருள். அகத்திணை. 1

நச்சினார்க்கினியர் சுட்டிக்காட்டும் இம்முதற்பொருளிலிருந்தே மணக்குடவரும் பரிப்பெருமாளும் மேற்கொள்ளும் 'மக்களை உடைத்தாகிய நிலம்' (சமுதாய வாழ்க்கை) என்னும் பொருள் அடுத்து வரையறை (restriction) பெற்று அமைந்திருக்கலாம். வள்ளுவரும் இதனையே மேற்கொண்டிருக்கலாம். 'அறம் பொருள் இன்பம்' என்னும் தொடரிலும் இப்பொருளே அமைந்தது எனல் பொருந்தும்.

பொருள் என்னும் சொல்லுக்குச் 'செல்வம்' என்னும் பொருள் பின்னர்த்தோன்றி அமைந்திருக்க வேண்டும். இவ்வாறு கொண்டாலும் 'செல்வம்' என்னும் பொருளும் பண்டுதொட்டே வழங்கி வந்திருக்கிறது. சங்கத் தமிழிலேயே 'பொருளும்' 'செல்வமும்' வேறுவேறு பொருள்பட வழங்கின :

*அதனால்*
*அறமும்* **பொருளும்** *இன்பமும் மூன்றும்*
*ஆற்றும் பெரும நின்* **செல்வம்**

— *புறம் 28 : 15 — 16*

திருக்குறளிலேயே பொருளின் பல்வேறு பொருளையும் காண முடிகிறது :

*பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்*
*பொருளல்லது இல்லை பொருள்.* (குறள் 751)

*உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்*
*தெறுபொருளும் வேந்தன் பொருள்.* (குறள் 756)

*பொருட் செல்வம் பூரியார் கண்ணும் உள.* (குறள் 241)

ஆனாலும் முப்பாலின் பொருட்பால் செல்வம் பற்றிக் கூறுதலை நோக்கமாகக் கொண்டது எனப் பரிமேலழகர் கருதுமாறு கொள்ளுதல் குன்றக் கூறுதலாகும். பொருட்பாலில் 70 அதிகாரங்களில் செல்வம் டற்றிப் பேசும் அதிகாரங்கள் இரண்டு. ஒன்று, 'பொருள் செயல் வகை'. (அதி. 76) இரண்டு; 'நன்றியில் செல்வம்' (அதி. 101). பிற அதிகாரங்கள் எல்லாம் பிற பொருள் பற்றியே பேசுகின்றன. அரசர்க்கு உரிய 'படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண்' என்னும் உடைமைகளுள் 'கூழ்' என்னும் உடைமை ஆறில் ஒன்றே; இதனால் பொருட்பாலுக்குச் செல்வமே பொருள் என்பது குன்றக் கூறலே ஆகும்.

அது மட்டும் அல்ல; அவ்வாறு கூறுதல் மாறுபடக் கூறலும் ஆகும். பொருட்பால், அரசியல் வாழ்வையும் பேசுகிறது; பொருளியல் வாழ்வையும் பேசுகிறது; குடிமக்கள் வாழ்வையும் சமூக வாழ்வையும் பேசுகிது. 'கல்வி', 'கல்லாமை', 'கேள்வி', 'அறிவுடைமை என்னும் அதிகாரங்கள் பொதுவாக மக்களுக்கு வேண்டிய கல்வி பற்றியே பேசுகின்றன. 'பேதைமை, புல்லறிவாண்மை, வரைவின் மகளிர், கள்ளுண்ணாமை, சூது, மருந்து, குடிமை, மானம், பண்புடைமை, உழவு, நல்குரவு, கயமை' முதலான அதிகாரங்கள் சமுதாய வாழ்வைப் பேசுகின்றன என்பது தெளிவு.

மேலும் அரசரைப் பற்றியும் அவர்தம் உடைமைகளைப் பற்றியும் பேசும்போதும் குறள், மக்களையும் கருத்தில் கொண்டே பேசுகிறது:

"இதனுள் இறைமாட்சி முதலாக இடுக்கண் அழியாமை ஈறுகக் கூறிய அதிகாரம் இருபத்தைந்தும் பெரும்பான்மையும் அரசர்க்கு உரியவாதலின் 'அரசியல்' என்றும், அமைச்சு முதலாக அவையஞ்சாமை ஈறுகக் கூறிய அதிகாரம் பத்தும் பெரும்பான்மையும் அமைச்சர்க்கு உரியவாதலின் 'அமைச்சியல்' என்றும்............"

மணக்குடவர் பொருட்பாலுக்கு எழுதிய இம்முன்னுரைக் கருத்துக்கள் 'அரசியலும் அமைச்சியலும் சிறுபான்மை அனைவர்க்கும் பேசுகின்றன' என்பதையே வற்புறுத்துகின்றன. பரிமேலழகர், 'கல்வி' என்னும் அதிகாரத்தின் முன்னுரையில் "இஃது அரசியலுள் வைக்கப்பட்டதாயினும், யாவர்க்கும் உறுதி பயத்தற் சிறப்புடைமையின் பொதுப்படக் கூறுகின்றார்" என எழுதுவதும் மேற்கண்ட கருத்தையே வற்புறுத்துகின்றது.

இவற்றால் பொருட்பால் வரைதலில் வள்ளுவர்க்கு விரிந்து பரந்துபட்ட நோக்கம் உண்டு என்பது புலனாகிறது. புலனாகவே 'பொருள்' என்பதற்கு மணக்குடவரும் பரிப்பெருமாளும் தரும் உரையே பொருத்தமானது என்பதும் நிலை பெறுகிறது.

பரிமேலழகர், திருக்குறளின் பொருட்பாலுக்குப் பெரும்பாலும் வடமொழியின் அர்த்தசாஸ்த்திரங்களைப் பின்பற்றியே உரைவகுத்துச் செல்லுகிறார். 'அர்த்தம்' என்ற சொல்லுக்கும் அர்த்த வரையறை சிக்கலுடையதாகவே இருக்கிறது. எவ்வாறாயினும் அங்கும் அர்த்த சாஸ்திரத்திற்கு விரிந்து பட்ட அர்த்தம் உண்டு. இருந்தும் பரிமேலழகர் அதனை உணர்ந்து 'பொருளை'ப் பயன்படுத்தியதாகத் தெரியவில்லை. ஆனால் மற்ற உரையாசிரியர்கள் அதனை உணர்ந்து எழுதினார்களோ இல்லையோ; மேலே எடுத்துக் காட்டப்பட்ட அவர்கள் உரை இந்திய மரபுக்கு மிகவும் ஒத்துச் செல்லுகிறது. வடமொழி மரபில் 'அர்த்தத்தின்' பொருளை மேலை நாட்டு வட மொழி அறிஞர் திரு. Zimmer என்பார் இவ்வாறு விளக்குகிறார்:

"ARTHA, the first aim is material possessions. The arts that serve this aim are those of economics and politics, the techniques of surviving in the struggle for existence against jealousy and competition, calumny and blackmail, the bullying tyranny of despots, and the violence of reckless neighbors. Literally, the word artha means "thing, object, substance," and comprises the whole range of the tangible objects that can be possessed, enjoyed, and lost, and which we require in daily life for the upkeep of a household, raising of a family, and discharge of religious duties, i. e., for the virtuous fulfilment of life's obligations. Objects contribute also to sensuous enjoyment, gratification of the feelings, and satisfaction of the legitimate requirement of human nature: love, beautiful works of art,

flowers, jewels, fine clothing, comfortable housing, and the pleasures of the table. The word artha thus connotes "the attainment of riches and wordly prosperity, advantage, profit, wealth," also, "result" ; in commercial life: "business-matter, business-affair, work, price" ; and in law: "plaint, action, petition." With reference to the external world, artha, in its widest connotation, signifies "that which can be perceived, an object, of the senses": with reference to the interior world of the psyche: "end and aim, purpose, object, wish, desire, motive, cause, reason, interest, use, want, and concern" ; and as the last member of a compound, artha: "for the sake of, on behalf of, for, intended for." The term thus bundles together all the meanings of the object of human pursuit, the means of this pursuit, and the needs and the desire suggesting this pursuit."—PP. 35 and 36, Philosophies of India by H. Zimmer.

பண்டை இந்தியாவின் சமூகத்தில் ஆளும் அரசனுக்குச் சிறந்த இடம் உண்டு; மேலான இடமும் உண்டு. அவனே அச் சமூகத்தின் நடுவண். குடிகளும் அவனது உடைமையே. ஆதலால் அன்று சமூகம் பற்றிய ஆராய்ச்சி அரசனோடு அமைந்த அரசியல் பற்றிய ஆராய்ச்சியாகவே அமைந்தது. இதுவே திருக்குறள் பற்றிய உண்மையும் ஆகும் என்பதை உடன்படத்தான் வேண்டும்.

இந்தச் சமுதாய வாழ்க்கையை இன்றைய மேல்நாட்டறிஞர்கள் Social life என்கின்றனர். இதன் அடிப்படை ‘சமூகம்’ Society என்பதாகும். இச் சமூகத்திலேயே ‘அரசு’ (State) என்ற ஒன்றும் அமைந்து விளங்கும். ஆனால் சமூகம் வேறு; அரசு வேறு. இந்த அரசு பற்றியும் அதனோடு உறவு கொண்ட பிற பற்றியும் திருக்குறள் விரிவாகப் பேசுகிறது. பொருட்பாலின் ஒரு பகுதி ‘அரசியல்’ என்பதாகும்.

இதுவரையில் விளக்கிய முறையால் ‘பொருட்பால்’ என்னும் தொடருக்கு ‘மக்களைப் படைத்ததாய சமுதாய வாழ்க்கை’ எனப் பொருள் கொள்ளுதல் பொருத்தம் என்பது நிலை பெறுகிறது.

### 1. 2. அரசியல் : ஒரு விளக்கம்

இத்தொடர் பற்றி இங்கு ஒரு விளக்கம் கூறவேண்டி உள்ளது. இன்று ‘அரசியல்’ என்னும் சொல் Politics என்னும் ஆங்கிலச்

சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லாக வழங்கி வருகிறது. அரசு (State) பற்றிய கல்வியே 'அரசியல்'. அரசு பற்றிய அனைத்தையும் இது சுட்டி நிற்கிறது. அதாவது அரசு, ஆட்சி (Government), மக்கள், நாடு (Territory) ஆகியவையெல்லாம் அரசியலுக்கு உரியன. ஆனால் பொருட்பாலின் 'அரசியல்' என்னும் பகுதிக்கு வரையறை செய்யப்பட்ட குறுகற்பொருள்தான் உண்டு. அங்கு 'அரசியல்' என்பது 'அரசனது இயல்புகள்' என்னும் பொருளுடையது. ('அரசு-அரசனது தன்மை' என்கிறது பரிமேலழகர் உரை. குறள். 384) அரசனும் அரசும் ஒன்றல்ல; வேறு வேறு. 'அரசு', 'அரசியல்' என்னும் சொற்கள் காலப்போக்கில் பொருள் குறித்தலில் மாற்றம் உற்றிருக்கின்றன. குறளில் பயன்படுத்தப்பட்ட 'அரசு' என்னும் சொல்லுக்குப் பரிமேலழகர் முதலான உரையாசிரியர்கள் 'அரசன்' என்றே பொருள் கூறிச் செல்லுகின்றனர். (எ. கா. வல்லது அரசு = வல்லவனே அரசன்; குறள், 385; பரிமேலழகர் உரை.) 'அரசன்' என்பதே 'அரசு' என்ற சொல்லின் பழம் பொருள் போலும். தொல்காப்பியர், அரசு முதலான சொற்கள் 'உயர்திணை' மருங்கின் நிலையின வாயினும் அஃறிணை மருங்கின் கிளந்தாங்கு இயலும்' என்கின்றார். (தொல். சொல். 57) ஆதலால் இன்றைய பொருளை மனத்தில் கொண்டு பண்டை நூல்களை அணுகினால் சிக்கல் ஏற்படும். குறளாராய்ச்சியில் இச்சிக்கல் ஏற்படாவாறு தடுத்தல் பொருட்டே இவ்விளக்கம் இங்குத் தரப்படுகிறது.

## 1. 3. பொருட்பால் தரும் கருத்துக்கள்: வகைதொகை

திருக்குறள் பொருட்பாலின் 70 அதிகாரங்கள் கூறும் கருத்துக்கள் எவை எவை என இனி எண்ணிப் பார்க்கலாம். பொருட்பால் சமுதாய வாழ்க்கை பற்றி உரைப்பது என மேலே விளக்கப்பட்டது. அச்சமுதாய வாழ்க்கையின் ஒரு கூறான அரசியல் பற்றி அப்பொருட்பால் பெரிதும் பேசுகிறது. ஆனால், அரசியல் பற்றி அனைத்தையும் அது பேசவில்லை. பேச வேண்டிய பொருட் செல்வம் பற்றிக் கூட அது குறிப்பாக ஒன்றும் பேசவில்லை. 'இயற்றலும் ஈட்டலும் காத்தலும் வகுத்தலும்' பற்றி அது குறிப்பிடுகிறதே ஒழிய 'அவை எவ்வாறு?' என்பது பற்றிப் பிறிதொன்றும் தரவில்லை. பொருட்பால் அரசியலுக்கு உரிய ஒரு சில பற்றிப் பொதுவாகப் பேசிவிட்டுப் போகிறது. பொருட்பால் பேசும் கருத்துக்களை அதிகார முறைப்படி 21 ஆக வகுத்துக் காணலாம் என்று தோன்றுகிறது. அவை (அதிகார எண்களுடன்) வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | இறைமாட்சி | (39) |
| 2. | கல்வி | (40) |
| | கல்லாமை | (41) |
| | கேள்வி | (42) |
| | அறிவுடைமை | (43) |
| 3. | குற்றங்கடிதல் | (44) |
| 4. | பெரியாரைத் துணைக் கோடல் | (45) |
| | சிற்றினஞ் சேராமை | (46) |
| 5. | தெரிந்து செயல்வகை | (47) |
| | வலியறிதல் | (48) |
| | காலம் அறிதல் | (49) |
| | இடன் அறிதல் | (50) |
| 6. | தெரிந்து தெளிதல் | (51) |
| | தெரிந்து வினையாடல் | (52) |
| | சுற்றந்தழால் | (53) |
| 7. | செங்கோன்மை | (55) |
| | கொடுங்கோன்மை | (56) |
| | வெருவந்த செய்யாமை | (57) |
| | கண்ணோட்டம் | (58) |
| 8. | ஒற்றாடல் | (59) |
| 9. | பொச்சாவாமை | (54) |
| | ஊக்கமுடைமை | (60) |
| | மடியின்மை | (61) |
| | ஆள்வினையுடைமை | (62) |
| | இடுக்கண் அழியாமை | (63) |
| 10. | அமைச்சு | (64) |
| | சொல்வன்மை | (65) |
| | வினைத்தூய்மை | (66) |
| | வினைத்திட்பம் | (67) |
| | வினை செயல் வகை | (68) |
| 11. | தூது | (69) |
| | மன்னரைச் சேர்ந்தொழுகல் | (70) |
| | குறிப்பறிதல் | (71) |
| | அவை அறிதல் | (72) |
| | அவை அஞ்சாமை | (73) |

| | | |
|---|---|---|
| 12. | நாடு | (74) |
| 13. | அரண் | (75) |
| 14. | பொருள் செயல்வகை | (76) |
| 15. | படைமாட்சி | (77) |
| | படைச் செருக்கு | (78) |
| 16. | நட்பு | (79) |
| | நட்பாராய்தல் | (80) |
| | பழைமை | (81) |
| | தீ நட்பு | (82) |
| | கூடா நட்பு | (83) |
| 17. | இகல் | (86) |
| | பகைமாட்சி | (87) |
| | பகைத்திறம் தெரிதல் | (88) |
| | உட்பகை | (89) |
| 18. | பேதைமை | (84) |
| | புல்லறிவாண்மை | (85) |
| | பெரியாரைப் பிழையாமை | (90) |
| | பெண்வழிச் சேறல் | (91) |
| | வரைவின் மகளிர் | (92) |
| | கள்ளுண்ணாமை | (93) |
| | சூது | (94) |
| | மருந்து | (95) |
| | கயமை | (108) |
| 19. | குடிமை | (96) |
| | மானம் | (97) |
| | பெருமை | (98) |
| | சான்றாண்மை | (99) |
| | பண்புடைமை | (100) |
| | நன்றியில் செல்வம் | (101) |
| | நாணுடைமை | (102) |
| | குடிசெயல்வகை | (103) |
| 20. | உழவு | (104) |
| 21. | நல்குரவு | (105) |
| | இரவு | (106) |
| | இரவச்சம் | (107) |

இவ்வாறு வகுப்பதிலே சிக்கல் இல்லாமல் இல்லை. சில அதிகாரங்கள் எதன் பொருட்டுச் சொல்லப்பட்டவை? யார் பொருட்டுச் சொல்லப்பட்டவை என்பது தெளிவு படவில்லை. எடுத்துக் காட்டாகக் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என்னும் அதிகாரங்களைக் குறிப்பிடலாம். இவை இறைமாட்சியை அடுத்து வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அரசர்க்கு என்னும் குறிப்புயாது ஒன்றும் அவற்றில் இல்லை. உரையாசிரியர்களும் 'யாவர்க்கும் உறுதி பயத்தற் சிறப்புடைமையின் பொதுப்படக் கூறுகின்றார்' என விளக்கிச் செல்லுகின்றனர்.[1] இக்காரணத்தால் கல்வி முதலான அதிகாரங்களை அரசியலிலிருந்து பிரித்து நீக்கியும் காணலாம். இவ்வாறே 'ஊக்க முடைமை' முதலிய அதிகாரங்களையும் காணலாம்.

அடுத்து வள்ளுவர் ஒரு கருத்தை உடன்பாட்டிலும் எதிர் மறையிலும் கூறிச் செல்லுகிறார். இது சிலபோது இரண்டதிகாரங்களாக அமைகிறது. இவற்றை வகுப்பதிலும் சிக்கல் தோன்றுகிறது. மேலும் ஓரதிகாரத்தை மற்றோரதிகாரத்துடன் உறவுபடுத்துவதிலும் சிக்கல் எழுகிறது. எடுத்துக் காட்டாகக் 'குற்றங் கடிதலை' 'அறிவுடைமையோடு' இணைக்கலாமா என்று ஐயம் எழுகிறது.

மேலே கண்டவாறு இருபத்தொரு பகுப்பாக அமைந்தவற்றுள் சிலவற்றிடையே உறவு உண்டு. எடுத்துக் காட்டாக 'இவை குற்றம் என்று அறிதலும் கடிதலும் அறிவுடையார்க்கு அல்லது கூடாமையின் அதன்பின் வைக்கப்பட்டது' என்றமையால் குற்றங்கடிதல் அறிவுடைமையின் விளைவு என்கிறது. ஆகவே கல்வி முதல் குற்றங்கடிதல் ஈறாக உள்ள ஐந்ததிகாரங்களையும் ஒரு பொருளாகக் கொள்ளல் கூடும். இவ்வதிகாரங்கள் ஓரரசர் பெறவேண்டிய பயிற்சி எனக் கொள்ளலாம் ஊக்கமுடைமை முதலானவை ஒருவர் பெறவேண்டிய பண்புகள் எனக் கொள்ளலாம். பயிற்சியையும் பண்பையும் ஒன்றாக வகுத்தல் ஆகாதோ என்ற வினா எழாமற் போகாது.

நட்பு முதல்லான அதிகாரங்கள் உடன்பாட்டுக் கருத்து. இகல் முதலான அதிகாரங்கள் எதிர்மறைக் கருத்து. இவை ஒரு நாணயத்தின் இருபுறங்கள் போன்றவை. ஆதலால் இவ்விரு பகுப்பையும் ஒரு கருத்தாகக் கொள்ளலாம்.

பேதைமை முதலானவை தள்ளத்தக்க பண்புகள்; குடிமை முதலானவை கொள்ளத்தக்க பண்புகள். இவற்றையும் ஒன்றாகக் கருத

1. 'அரசன் அறிவுடையன் ஆயக்கால் தன்னுயிர்க்கே அன்றி மன்னுயிர்க்கும் பயன்படுதல் நோக்கி இஃது அரசியலுள் வைக்கப்பட்டதாயினும் யாவர்க்கும் உறுதி பயத்தற் சிறப்புடைமையின் பொதுப்படக் கூறுகின்றார்' —பரிமேலழகர், கல்வி என்னும் அதிகாரத்தின் முன்னுரை.

முடியும். ஆனால் பேதைமை முதலானவை அரசர் தள்ளத்தக்கன; குடிமை முதலானவை குடிமக்கள் கொள்ளத்தக்கன என்பாரும் உண்டு. இதனால் நம் வகுப்பில் சிக்கல் ஏற்படுகிறது.

ஒற்றுடல், தெரிந்து வினையாடலுடனும் தெரிந்து தெளிதலுடனும் உறவுடையது. எல்லாம் அரசின் பணியாளர்களைப் பற்றியது.

இவ்வெண்ணப்போக்கிற்குப் பின்னர்ப் பொருட்பால் கூறும் கருத்துக்களைக் கீழ்க்கண்ட தலைப்புக்களில் அடக்கலாம்:

1. அரசனுடைய நற்குண நற்செய்கைகள்
2. அரசனுடைய பயிற்சியும் பண்பும்
3. அறிவுரைச் சான்றோர்
4. வினை முயற்சி
5. அரசனுவலர்
6. நல்லாட்சி
7. அமைச்சும் தூதும்
8. நாடு
9. அரண்
10. அரசின் பொருளீட்டும் நெறியும் பயனும்
11. படை
12. நட்பும் பகையும்
13. தீப்பண்புகளும் நற்பண்புகளும்
14. உழவு
15. வறுமையும் வழியும்

பொருட்பாலில் இவ்வாறு அமைந்த கருத்துக்களில் பெரும்பகுதி அரசனைப் பற்றியது எனத்தெரிகிறது. அமைச்சு தூது நட்பு படை ஆகியவை பற்றிப் பேசும்போதுகூடக் குறள் அரசனது நோக்கிலேயே பேசுவதாகத் தெரிகிறது. 'தூதை' அடுத்து அமைந்த அதிகாரம் 'மன்னரைச் சேர்ந்து ஒழுகல்' என இருத்தலே இதற்கு எடுத்துக் காட்டாகக் குறிப்பிடலாம். 'பழுது எண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர் எழுபது கோடி உறும்' என்னும் குறள் (839) அமைச்சரின் இலக்கணத்தை அரசரின் நோக்கத்திலேயே குறிப்பிடுகிறது. ஒற்றர் பற்றிப் பொருட்பால் பேசுகிறது. ஆனால் ஒற்றர்களை அரசன் ஆளும் திறத்தை விளக்கும் முறையிலேயே அது பேசப்படுகிறது. இக்

கருத்துக்கள் எல்லாம், பொருட்பாலின் பெரும் பகுதி—வேண்டுமானால் 'குடிமை' முதலான இறுதி அதிகாரங்கள் நீங்கலாக—அரசன் பற்றியே பேசுகிறது என்பதனைச் சுட்டுகின்றன. அவ்வாறானால் படை, நட்பு, பொருள் முதலானவை அரசனைப் பற்றிப் பேசிப் போகும் போக்கிலேயே அவன் உடைமைகள் என்ற முறையில் விளக்கப் படுகின்றன எனல் வேண்டும். இக்கருத்து இந்நாள் வரை வந்த உரை மரபுக்கு ஓரளவு மாறுபட்டதுதான். ஆதலால் இது மேலும் ஆராய்வதற்கு உரிய ஒன்று. இக்கருத்து நிலைபெறுமானால் பொருட்பாலின் சமுதாய வாழ்வில் அரசனுக்கே தலைமையிடம் தரப்பட்டிருக்கிறது எனக் கொள்ள நேர்கிறது. இக்கருத்துக் குறிக்கத்தக்க சிறப்புடைய ஒன்றாகும்.

இப்பதினைந்து கருத்துக்களில் ஒன்று முதல் ஆறு வரை உள்ளவை அரசனுக்கே உரியவை: அரசனது பண்பும் பணிகளுமாகக் கூறப்பட்டவை. பதின்மூன்று முதல் பதினைந்து வரை உள்ளவை குடிமக்களுக்கு உரியவை ஆகலாம். ஆகவே குறளின் பொருட்பால்,

1. அரசர்
2. அமைச்சர், தூதர்
3. நாடு
4. அரண்
5. பொருளீட்டல்
6. படை
7. நட்பும் பகையும்
8. குடிகள்

என அரசனையும் அவன் உடைமைகளைப் பற்றியும் பேசுகின்றது எனக் கொள்ளலாம்.[2]

மேலே எடுத்துக் காட்டிய 21 பகுப்புக்களும் பெரும்பாலும் எடுத்துக் காட்டிய முறையிலேயே திருக்குறளின் பொருட்பாலில் அமைந்துள்ளன. இங்கு 3 இடங்களில் மட்டும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. ஒன்று 'பொச்சாவாமை' என்னும் அதிகாரம் 'ஊக்கம் உடைமை' முதலான அதிகாரங்களுடன் சேர்க்கப்பட்டுள்ளது. இரண்டு பேதைமை, புல்லறிவாண்மை என்னும் இரண்டதிகாரங்

2 இப்பகுதியில் பொருட்பாலை வகுத்துக் காட்டியது போன்றே பேராசிரியர் ந. சுப்பிரமணியன் அவர்கள் தம் கட்டுரை ஒன்றில் வகுத்துக் காட்டுகின்றனர். அதுவே முன்னோடி. ( Tirukkural and Western Political Thought — வள்ளுவர் வகுத்த அரசியல்)

களும் 'பெரியாரைப் பிழையாமை' முதலான அதிகாரங்களுடன் சேர்க்கப் பட்டுள்ளன. மூன்று 'கயமை' என்னும் அதிகாரமும் அவற்றுடன் சேர்க்கப்பட்டுள்ளது. இந்நான்கதிகாரங்களும் தம் முன்பின் உள்ள அதிகாரங்களுடன் பொருட் பொருத்தமுறத் தழுவி நிற்றல் தெளிவு படவில்லை. (அல்லது பொருட்பாலை ஆழ்ந்து கற்று இனி அப்பொருட் பொருத்தத்தைக் காணவேண்டும்.)

## 1. 4. பொருட்பால் வகை தொகை: உரையாசிரியர் கருத்துக்கள்

திருக்குறளின் அதிகாரங்கள் பொதுவாக, 'வைப்புமுறை' என்னும் நயம் தோன்ற அமைக்கப்பட்டிருக்கின்றன. இது இலக்கியச் செம்மைக்கு ஓர் எடுத்துக்காட்டு. பரிமேலழகரும் காளிங்கரும் இவ்வாறே கருதி விளக்கம் கூறிச் செல்லுகின்றனர். ஆனால் 133 அதிகாரங்களும் அவ்வாறே நயம் தோன்ற அமைந்திருக்கும் என்று எதிர்பார்க்க வேண்டியதில்லை. ஆகவே ஒரு சில மாற்றங்கள் செய்து வகைதொகை செய்தலில் தவறில்லை. அல்லது நம்நோக்கிலே வகை தொகை செய்கின்ற போது நாம் அவர்கள் நோக்கிலிருந்து மாறு படலாம்.

பொருட்பாலின் 70 அதிகாரங்களும் 15 தலைப்புக்களாக அடக்கிக் காட்டப்பட்டன. ஆனால் திருவள்ளுவர் அவ்வாறு வகுத்துக் கண்டாரா என்பது தெளிவு படவில்லை. அதிகாரங்கள் அல்லாது 'இயல்கள்' என்னும் ஒரு வகுப்பு திருக்குறளில் அமைந்துள்ளது. ஆனால் உரையாசிரியர்கள் தோறும் அது வேறுபடுகிறது. அந்த வேறுபாடு முரண்பாடு போலும் தோன்றுகிறது. திருக்குறளின் அதிகாரப் பாகுபாட்டில் உரையாசிரியர்களிடையே தோன்றும் ஒற்றுமை, இயல் பாகுபாட்டில் இல்லை. அதனால் இயல்பாகுபாடு திருவள்ளுவரால் செய்யப்பட்டதுதானோ என்பதில் ஐயம் எழுகிறது. உரையாசிரியர்கள் தரும் இயல் பாகுபாட்டை இங்குக் காண்போம்.

"அரசனீதியாவது காவலை நடாத்தும் முறைமை. அதனை **அரசியல், அங்கவியல், ஒழிபியல்** என மூவகைப் படுத்து.........கூறுகிறார்."

— பரிமேலழகர்

"இவையெல்லாம் **அரசியலும் அமைச்சியலும்** பொருளியலும் **நட்பியலும் துன்பவியலும் குடியியலும்** என அடங்கும்." —பரிப்பெருமாள்

"இதனுள் இறைமாட்சி முதலாக இடுக்கணழியாமை ஈறாகக் கூறிய அதிகாரம் இருபத்தைந்தும் பெரும்பான்மை அரசர்க்கு உரிய வாதலின் **அரசியல்** என்றும், அமைச்சு முதலாக அவையஞ்சாமை ஈறுக்க்

கூறிய அதிகாரம் பத்தும் பெரும்பான்மையும் அமைச்சர்க்கு உரிய வாதலின் அமைச்சியல் என்றும், நாடு முதலாகப் படைச்செருக்கு ஈறாகக் கூறிய அதிகாரம் ஐந்தும் பொருட்பகுதியாதலின் பொருளியல் என்றும், நட்பு முதலாகக் கூடா நட்பு ஈறாகக் கூறிய அதிகாரம் ஐந்தும் நட்பின் பகுதியாதலின் நட்பியல் என்றும், பேதைமை முதலாக மருந்து ஈறாகக் கூறிய அதிகாரம் பன்னிரண்டும் கேட்டுக்குக் காரணம் ஆதலின் துன்பவியல் என்றும், குடிமை முதலாகக் கயமை ஈறாகக் கூறிய அதிகாரம் பதின்மூன்றும் மக்களது இயல்பு கூறுதலின் குடியியல் என்றும் ஆகப் பொருட்பால் கூறிய அதிகாரம் எழுபதும் ஆறு பகுதியாயிற்று."

—மணக்குடவர்

அரசியல் ஐயைந்து அமைச்சியல் ஈரைந்து
உருவல் லரணிரண்டு ஒன்று ஒண்கூழ் — இருவியல்
திண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்று
எண்பொருள் ஏழாம் இவை. —திருவள்ளுவ மாலை 20

அரசியல் ஐயைந்து அமைச்சியல் ஈரைந்து
உரைநாடு அரண் பொருள் ஒவ்வொன்று — இருவியல்
திண்படை நட்புப் பதினேழ் குடி பதின்மூன்று
எண்பொருள் எட்டாம் இவை. — பெருந்தொகை 2005

திருக்குறளின் பொருட்பால், 3 இயல்கள், 6 இயல்கள், 7 இயல்கள், 8 இயல்கள் எனப் பல்வேறுவகையாக வகுத்துக் காணப் பட்டு வந்தது என்பது மேல்தந்த மேற்கோள்களால் விளக்கமுறு-கின்றது. இவையெல்லாம் வள்ளுவரே வகுத்த முறையாக இருத்தல் இயலாது. உரையாசிரியர்கள் தத்தம் நோக்கிற்கு ஏற்பப் பொருட் பாலைப் பகுத்துக் கொண்டு உரையெழுதியுள்ளனர் எனக் கொள்ளுவதே பொருந்தும்.[3] இங்கு இந்நூலில் பொருட்பாலை நாம்

---

3. பொருட்பாலில் இயல் பாகுபாடு பற்றி வேறுபட்ட கருத்தொன்றைத் **திருக்குறள் அமைப்பும் முறையும்** என்னும் நூல் தன் குறிப்பு ஒன்றில் எடுத்துக் காட்டுகிறது (பக்.18) :

"பொருட்பால் அரசனை முதலாக நாட்டி அவற்றுக்குப் புறத்துறுப்பான படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் என ஆறாகப் பகுத்து, **அரசர்க்குரிய திறம்** இருபத்தைந்து அதிகாரத்தானும், **அமைச்சரது இயல்பு** பத்து அதிகாரத்தானும், **நாடும் அரணும் பொருளும்** ஓரோரதிகாரத்தானும், **படை** இரண்டதிகாரத்தானும், பகை ஆறதிகாரத்-தானும், **அரசர்க்கு அங்கமான** பெரியாரைப் பிழையாமை முதல் மருந்திறுக **ஆறும்** ஆறு அதிகாரத்தானும், **அதற்குறுப்பு** ஆகிய குடிமை முதல் நாணுடைமை ஈறாகிய ஏழதிகாரத்தானும், அரசர்க்கும் ஏனை வருணங்கட்கும் ஒப்ப உரித்தாகிய **குடிசெயல்-வகையும்**, அவருட் பார்ப்பார் ஒழித்துப் பெரும்பான்மை வேளாளர்க்குரித்தாகி ஏனையோர்க்கும் சிறுபான்மை உரித்தாகிய **உழவும்** ஓரோரதிகாரத்தானும், அவ்வாறு பொருள் செய்தவழி உளதாகும் **நல்குரவும்**, அதுபற்றித் தோன்றும் **இரவும்**, **இரவின்கண்** உளதாகிய **அச்சமும்**, இரப்போர்க்கு ஈயாதார் உள்ளிட்ட **கயவரது ஒழுக்கமும்** ஆகிய இந் நான்கும் ஓரோரதிகாரத்தானுமாக எழுபது அதிகாரத்தால் கூறி........." (செந்தமிழ் : தொகுதி-2, பக்கம் 246.)

எட்டாக வகுத்துக் கண்டோம். இவ்வகுப்பு பெருந்தொகையின் வகுப்பை ஒத்துச் செல்வதைக் காணலாம். ஆனால் இவ்வொற்றுமையிலும் வேற்றுமை இருக்கலாம். நாம் அமைச்சு, தூது இரண்டையும் ஒன்றாகக் கண்டோம்; நட்பையும் பகையையும் ஒன்றாகக் கண்டோம். பரிமேலழகரும் பொருட்பாலை மூன்று இயல்களாகக் கண்டாலும் நடுவணதாகிய அங்க இயலில் ஆறு அங்கங்களைக் கொள்ளுகிறார். அவ்வாறானால் அவர் கருத்துப்படி பொருட்பால் எட்டுக்கருத்துக்கள் பற்றிப் பேசுகிறது என்றாகும். ஆதலால் பரிமேலழகர் வகுப்பும் நம் வகுப்பை ஓரளவு ஒத்துச் செல்கிறது எனலாம்.

காளிங்கர் என்னும் உரையாசிரியர்,

> படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
> உடையான் அரசருள் ஏறு

என்னும் முதற்குறளின் உரையில் 'இனி இங்குச் சொன்ன இறை முதலாகிய எழுவகைப் பொருளுமே இப்பொருட்பால் நடைப்பொருள் என அறிக' என எழுதுகிறார். இவர் கருத்து முக்காலே அரைக்கால் பங்கு நம் கருத்துடன் ஒத்துச் செல்லுதலைக் காண்கிறோம். இவற்றால் எல்லாம் பொருட்பால் கூறும் கருத்துக்கள் இவை இவை எனத் தெளிவு படுகின்றன. இக்கருத்துக்கள் நம் நோக்கில் 15 ஆகப் பிரிந்து 8 ஆக அடங்குகின்றன. இவை பற்றித் தனித்தனியே ஆராய்தல் வேண்டும். அரசரைப் பற்றிக் கூறும் கருத்துக்களை ஆராய்தலே இந்நூல் நோக்கமாகக் கொண்டு செல்லுகிறது.

# 2

# அரசருள் ஏறு

●●●

## 2. 0.

பண்டைத் தமிழகத்தில் கோனரசே அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு நிலவிவந்த அரசுமுறை என்பதும் வள்ளுவரும் அதனை உடன்பட்டே முப்பால் மொழிந்துள்ளார் என்பதும் முன் இயலில் எடுத்துக் காட்டப்பட்டன. கோனரசு, கோமகன் ஒருவனால் நடத்தப் படும் அரசாகும். வள்ளுவர் கண்ட அரசியலில் இக்கோமகனுக்கு எந்த அளவு இடம் உண்டு? வள்ளுவர் அவனுக்குத் தரும் சிறப்பு யாது? வள்ளுவர் கண்ட அரசியலில் அவன் பெற்ற இடம் எத்தகையது? இவை பற்றி உரையாசிரியர்கள் கூறிய பல்வேறு கருத்துக்களின் வன்மை மென்மைகள் யாவை? என இவ்வியலில் காணலாம்.

## 2. 1. முதற் குறள் மொழி பொருள்

இறைமாட்சி என ஓரதிகாரம் பொருட்பாலின் முதலில் இடம் பெற்றுள்ளது. அதாவது மன்னர் மாட்சிகளைக் கூறுவதன் வாயிலாகவே வள்ளுவர் கண்ட அரசியல் தொடங்குகிறது. இவ்வதிகாரம் நாடாள்வோரின் 'நற்குண நற்செய்கைகள்' கூறுவது எனப் பரிமேலழகர் விளக்குகிறார். இவ்வதிகாரம் இவை மட்டும் கூறுவதில்லை; அரசன் அரசியலில் பெறும் இடத்தையும் சுட்டிக் காட்டுகிறது. ஆதலால் இம் முதற்குறள் பல்வகையிலும் ஆழ்ந்து எண்ணுதற்குரியது:

> *படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்*
> *உடையான் அரசருள் ஏறு.* (குறள் 381)

இக்குறட்பா ஒரு தொகைச் சூத்திரம் போன்று அமைந்து பொருட்பால் கருத்துக்கள் அனைத்தையும் தழுவி நிற்கிறது என உரையாசிரியர்களும் மற்றை அறிஞர்களும் கருதுகின்றனர்.[1] இக் குறளின் சிறப்புக்களை நன்கு அறிய இதனை நுணுகி ஆராய வேண்டும். இக்குறளில் அடங்கிய கருத்துக்கள் சில வருமாறு:

---

1 'இனி இங்குச் சொன்ன இறைமாட்சியாகிய எழுவகைப் பொருளுமே இப்பொருட்பால் நடைப்பொருள் என அறிக' என்கின்றார் காளிங்கர் (முதற் குறள் உரை). பேர். தெ. பொ. மீ. அவர்களும் இவ்வாறே கருதுவர்.(வகநாகா.)

1. இக்குறளில் அரசர் பற்றியே பேசப்படுகிறது; அரசு பற்றிப் பேசப்படவில்லை. 'அரசரே ஆறும் உடையார்' எனக் கூறப்படுகிறது.

2. "அரசருள் ஏறு எனவே இவ்வுறுப்பு ஆறில் குறைபாட்டுடையார் அரசர் எனப்படுவராயினும் சிறப்புடையவர் அல்லர்" — (காளிங்கர்) இதனால் அரசருள் ஏறு அல்லாமல் குறைபாட்டோடு வெற்றரசர் பலர் இருக்கலாம்; இருந்திருக்கலாம் என்பதும் பெறப்படுகிறது. அரசருக்கு ஆறுடைமைகளும் தவறாது இருத்தல் வேண்டும் என்ற கட்டாயம் இல்லை; பரிமேலழகர் கூறுமாறு 'அரச னீதி செல்லாது' போகாது.

3. படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்னும் முறையில் அரசனுக்கு வேண்டியவை எடுத்து மொழியப்படுகின்றன. இன்றியமையாமை கருதியோ சிறப்புக் கருதியோ இம்முறைவைப்புக் கொள்ளப்பட்டது எனத் தோன்றவில்லை. இது பற்றிப் பொருட்பாலில் பின்னரும் ஒரு குறிப்பும் இல்லை. இவை பற்றித் தனித்தனியே பின்னர் ஆராய்கின்றபோது இதனின்றும் வேறுபட்ட முறைவைப்பே பின்பற்றப்படுகிறது. பரிமேலழகர் குறிப்பிடுவது போன்று வள்ளுவர் இவற்றைச் 'செய்யுள் நோக்கிப் பிறழ வைத்தார்' எனக் கொள்ளுதல் நல்ல தீர்வாகத் தெரியவில்லை. காரணம் பரிமேலழகர் வகுத்த உரையிலும், கொண்ட வகுப்பு முறையிலும் சிக்கலும் குழப்பமும் இருக்கின்றன. (இது பின்னர் ஆராயப்படுகிறது.)

4. 'ஆறும் உடையான் அரசருள் ஏறு' என்னும் தொடரில் 'உடையான்' என்னும் சொல்லே ஆளப்பட்டுள்ளது. அதனால் அரசர்க்கு இவை உடைமைகள் என்ற கருத்தையே முப்பாலாசிரியர் வழங்குகிறார். அரசர்க்கும் இவற்றுக்கும் இடையே அமைந்த உறவு 'உடையார் உடைமை' என்ற உறவுதான். இவ்வுறவு பிறிதின் கிழமை உறவும் ஆகும் என்பது வெளிப்படை.

5. இக்குறள் அரசர் பெருமையினைச் சுட்டிக் காட்டுவதை நோக்கமாகக் கொண்டிருப்பதாகவே தெரிகிறது. 'பெருமையுடைய அரசர், பேரரசர் இன்னார்' என இது சுட்டிக் காட்டுகிறது; ஆகவேதான் 'அரசர்' எனப் பேசாது 'அரசருள் ஏறு' எனப் பேசுகிறது. அதிகாரத்தின் தலைப்புக்கு ஏற்ப அரசர் மாட்சியை இக் குறள் குறிப்பிடுகிறது. இலக்கணம் எதுவும் இயற்றவில்லை.

## 2. 2. உரைகள் தரும் பொருள்

இக்கருத்துக்களோடு உரையாசிரியர்கள் கருத்துக்களை ஒருங்கு வைத்துப் படித்துப் பார்க்கலாம். அவர்கள் இம்முதற்குறளில் பல புதிய கருத்துக்களைக் காணுகின்றனர். இவ்வெல்லாக் கருத்துக் களையும் இணைத்து எண்ணுகின்றபோது சில வினாக்களும் சிக்கல்களும் எழுகின்றன. இவற்றை ஆராய்வது இங்குக் கடமையாகிறது. உரையாசிரியர் கருத்துக்கள் இவை :

பரிமேலழகர் :-

"படையும் குடியும் கூழும் அமைச்சும் நட்பும் அரணும் என்று சொல்லப்பட்ட ஆறு அங்கங்களையும் உடையவன் அரசருள் ஏறு போல்வான் என்றவாறு."

"ஈண்டுக் குடி என்றது அதனை உடைய நாட்டினை. கூழ் என்றது அதற்கு ஏதுவாய பொருளை. அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்பதே முறையாயினும் ஈண்டுச் செய்யுள் நோக்கிப் பிறழ வைத்தார். 'ஆறும் உடையான்' என்றதனால் அவற்றுள் ஒன்று இல்வழியும் அரசநீதி செல்லாது என்பது பெற்றாம். வடநூலார் இவற்றுக்கு அங்கம் எனப் பெயர் கொடுத்ததூஉம் அது நோக்கி. ஏறு என்பது உபசார வழக்கு."

"இதனால் அரசற்கு அங்கமாவன இவை என்பதூ-உம், இவை முற்றும் உடைமையே அவன் வெற்றிக்கு ஏது என்பதூஉம் கூறப்பட்டன."

காளிங்கர் : –

"படையும் குடியும் கூழும் அமைச்சும் நட்பும் அரணும் என்னும் இவ்ஆறு உறுப்பினையும் உடையான் அரசருள் ஏறு என்றவாறு."

"இனி 'அரசருள் ஏறு' எனவே இவ்வுறுப்பு ஆறில் குறைபாடுடையோர் அரசர் எனப்படுவாராயினும் சிறப்பு-டையர் அல்லர் என்பதூஉம், அரசனையும் உறுப்பாகக் கொண்டு இவை ஆறினோடும் கூட்டி இராச்சியமெல்லாம் ஒன்றாக்கி வடநூலார் கூறுமாற்றின் சில வேறுபடுத்து மாசனம் முதலாக நாட்டிற்கு இவ்வாறினையும் உறுப்பாக்கிக் கூறினர் என்பதூஉம் கொள்க. இனி இங்குச் சொன்ன

இறை முதலாகிய எழுவகைப் பொருளுமே இப்பொருட்பால் நடைப்பொருள் என அறிக.”

மணக்குடவரும் பரிப்பெருமாளும் பரிதிரியாரும் வேறு புதிய கருத்து ஒன்றும் தம் உரைகளில் தரவில்லை. ஆதலால் அவர்கள் உரைகள் இங்குத் தேவை இல்லை.

இவ்வுரைகளை நுணுகி ஆராய்கின்றபோது கீழ்க்கண்ட கருத்துக்கள் வெளிப்படுகின்றன :

1. பரிமேலழகரும் காளிங்கரும் படைமுதலான ஆறினையும் ‘அங்கங்கள்’ எனக்கொள்ளுகின்றனர். பரிமேலழகர் அங்கம் என்ற வட சொல்லை வழங்கக் காளிங்கர் ‘உறுப்பு’ என அதற்கு நேரான தமிழ்ச் சொல்லை வழங்குகிறார். இதனால் உடலுக்கும் அதன் உறுப்புக்களுக்கும் இடையே அமைந்த உறவு அரசர்க்கும் ஆறு பொருள்களுக்கும் இடையே அமைந்துவிடுகிறது. ஆனால் திருவள்ளுவர் இச்சொற்களை ஆளவில்லை.

2. பரிமேலழகர் ‘அரசற்கு அங்கமாவன இவை’ என்கிறார். ஆனால் காளிங்கர் ‘நாட்டிற்கு இவ்வாறினையும் உறுப்பாக்கினர்’ என்கிறார். அரசன் வேறு ; நாடு வேறு ; அரசற்கு எவ்வாறு அங்கங்கள் அமையும் என்பது தெளிவு படவில்லை. ஒரு கால் பரிமேலழகர் அரசன் என்பது அரசுக்கு ஆகிவந்தது என நினைக்கிறாரோ ? காளிங்கர் கருத்துப் பொருத்தமானதாக இருக்கிறது.

3. பரிமேலழகரும் காளிங்கரும், முதற்குறட் கருத்தினை வள்ளுவர் வட நூல்களில் இருந்து மேற்கொண்டார் எனவே கருதுகின்றனர்.

4. வள்ளுவர் வடமொழி மரபை மேற்கொண்டார் என்பதில் சிக்கல் இல்லாமல் இல்லை. வடமொழி மரபுக்கும் வள்ளுவர் கருத்துக்கும் இடையே வேறுபாடு உண்டு என்பதைக் காளிங்கர் சுட்டிக் காட்டுகிறார். பரிமேலழகரோ வேறுபாடு இல்லாது வடமொழி மரபை வள்ளுவர் மேற்கொண்டார் எனக் கருதுகிறார் போலும்.

5. பரிமேலழகர், ‘குடி என்றது அதனையுடைய நாட்டினை’ என நம்புகிறார். இவரைப் போன்றே மணக்குடவர் ‘ஈண்டுக்குடியுள் நாடு அடங்கிற்று’ எனவும், பரிப்பெருமாள் ‘ஈண்டுக் குடி என்றது குடியுள்ள நாடு’ எனவும் நம்புகின்றனர். ஆனால் காளிங்கர் இரண்டையும் வேறு வேறாகக் காணுகின்றார். ‘மாசனம் முதலாக

கான காரணமும் விளக்கமும் தேவை. இவ்வொற்றுமை காணப் பட்ட போதிலும் வேற்றுமைகளை நோக்க அது சிறிதே ஆகும். வேற்றுமைகள் — வேறுபாடுகள் — அடிப்படையானவை என்பதையும் மனத்திற்கொள்ள வேண்டும். இவ்வொற்றுமைக்குக் காரணம் கடன் வாங்கியதாகவும் இருக்கலாம்; வேறாகவும் இருக்கலாம். இக்காரணங் களை ஆராயுமுன் பொதுவான சில கருத்துக்களை நினைவு கூர்தல் வேண்டும்.

இந்தியப் பண்பாடும் அதன் கருத்துக்களும் இலக்கியங்களும் பல்வேறு இனங்களும் அவற்றின் பண்பாடுகளும் இணைந்து பிணைந்து கலந்தமையால் உருக்கொண்டன. இத்தகைய இந்தியப் பண்பாட்டில் தோற்றம் பெற்றவையே பல்வேறு இந்திய மொழிகளும் அவற்றின் இலக்கியச் செல்வங்களும். இவ்வாறு தோற்றம் பெற்ற இலக்கியங் களிடையே ஒற்றுமை காணப்பெறுதல் இயல்பே. இவ்வொற்றுமை கருதி ஓரிலக்கியம் மற்றோரிலக்கியத்திலிருந்து கடன்கொண்டது எனப் பேசுவது உண்மையாகாது. இவ்விலக்கியங்கள் அனைத்தும் ஒரு பொதுக் களஞ்சியத்திலிருந்து கருத்துக்களைக் கொண்டன எனக் கூறுதலே பொருந்தியதாகும். குறிப்பாகத் தத்துவங்கள், சமயங்கள் ஆகியவற்றின் கருத்துக்களுக்கு இப்பொதுமையே காரணம். ஆதலால் ஒன்று ஒரு மொழியில் இடம்பெற்றிருக்குமானால் அது அம்மொழியே ஈன்றெடுத்தது என்று கொள்வதும் உண்மையாகாது; அதனை மற்ற மொழி கடன்பெற்றது என்பதும் உண்மையாகாது.

ஒரு கருத்தும் இலக்கியமும் ஒரு மொழியில் தோன்றி அதற்கே உரிமை பூண்டவையாக இருத்தல் இயலாது என இங்கு அடித்துக் கூறுதல் இல்லை. அத்தகையவை இருக்கலாம்; இருக்கின்றன; அவை பிற மொழிகளுக்குக் கடனாகச் செல்லுதல் உண்டு. சில கருத்துக்கள் பொதுக்கருத்துக்களிலிருந்து கிளைத்துத் தோன்றிச் சில மொழிகளில் வளர்ச்சியுற்று முழுமை பெற்றிருக்கலாம். இவையும் பிறமொழி களுக்குப் பரவலாம்.

இவ்வாறாக ஒரு மொழியில் கருத்துக்கள் பொதுமையின் தொடர்ச்சியாகவோ, வளர்ச்சியாகவோ, திரிபாகவோ இருக்கலாம். சில கருத்துக்கள் இடையில் பூத்த புதுமையாகவும் இருக்கலாம்.

இராமாயணகதை பண்டை இந்தியாவில் பல்வேறு வடிவங்க ளிலும் பல்வேறு மொழிகளிலும் பல்வேறு இடங்களிலும் வழங்கியது; வடமொழியில் வால்மீகியால் நல்லுருவம் கொண்டது: முன்னரும் பின்னரும் பல மொழிகளுக்கும் பரவியது.

பஞ்சதந்திரக் கதைகள் முதன் முதலாக ஒரு மொழியில் ஒருவரால் ஓரிடத்தில் ஒரு காலத்தில் எழுத்து வடிவம் பெற்றிருக்கலாம். ஆனால் அக்கதைகள் பண்டை இந்தியாவில் பல்வேறிடங்களில் பொது மக்களிடையே வழங்கிய நாடோடிக் கதைகளாகும். ஆகவேதான் அவை பல்வேறு மொழிகளிலும் பல்வேறு காலங்களில் பல்வேறு வடிவங்களில் இடம் பெற்றன.

இந்தியச் சமயத் தத்துவங்கள் பல ஆரியச் சார்பற்றவை என வரலாற்றறிஞர்கள் கூறுவதும் இத்தகைய காரணத்தால்தான்.

இத்தகைய ஆராய்ச்சியில் ஒற்றுமைகளையும் காணவேண்டும்; வேற்றுமைகளையும் காணவேண்டும். ஒற்றுமைகளைப் போன்றே இவ்வாராய்ச்சிக்கு வேற்றுமைகளும் முக்கியம் பெற்றவை. வேற்றுமைகளே உண்மைகாணத் துணை செய்கின்றன என்று கூடக் கூறலாம். ஒற்றுமையுடன் கூடிய வேற்றுமைகளே, அக்கருத்துக்கள் அவ்வாசிரியர்க்கு உரியவை எனக் காட்டுகின்றன. ஒற்றுமைகள் பொதுமையிலே முளைத்து நிற்க வேற்றுமைகள் ஆசிரியர்க்கு உரிமையாகி நிற்கும்.[17]

கௌடலீயத்துக்கும் திருக்குறளின் பொருட்பாலுக்கும் இடையே ஒற்றுமையும் உண்டு; வேற்றுமையும் உண்டு. ஒற்றுமைகள் பொதுவான இந்தியாவின் மண்ணுக்கு உரியவையாகலாம். வேற்றுமைகள் தமிழ் மண்ணுக்கு உரியவையாகலாம். இங்கே கொள்ளுதலும் இல்லை; கொடுத்தலும் இல்லை.

சப்தாங்கக் கொள்கை முதன் முதலில் கௌடலீயத்திலேயே காணக் கிடைத்தாலும் அதன் தோற்றம் அதற்கும் முற்பட்ட காலமாகும். இதுபற்றி உரைத்த அறுவர் கருத்துக்களைக் கௌடல்யரே தந்து ஆராய்கிறார். ஆதலால் சப்தாங்கக் கொள்கை கௌடல்யருக்கும் உரியதாகவில்லை. அக்கொள்கை காலம் இடம் கடந்து இந்திய மண்ணில் தோன்றியது போலும்.[18] வள்ளுவர்க்கும் அதிலே உறவும் இருந்திருக்கிறது; உரிமையும் இருந்திருக்கிறது.

---

17 2.8. என்னும் இப்பிரிவில் பேசப்படும் பல கருத்துக்களுக்கும் முடிவுகளுக்கும் ஆதாரமாகுமாறு அறிஞர்கள் சுநீதிகுமார் சட்டர்ஜி, ஸ்லேட்டர், சக்கரவர்த்தி நயினார், மறைமலையடிகள் ஆகியோர் தம் நூல்களில் பல ஆய்வுரைகள் வழங்கியுள்ளனர். அந்நூல்களை நூல் விளக்கத்தில் காண்க.

18 "He (Kauṭilya) starts with his teacher's statement, and citing the evidence of Bharadvāja, Viśālākṣa, Piśuna, Kauṇapadanta, and Vātavyādhi, finally gives his own opinion on this important question." — P. 296, AIPTI.

## 2. 9. குறளும் கௌடலீயரும்

வள்ளுவரின் குறளைக் கௌடலீயத்தோடு ஒப்பிட்டுக் கொள்ளல் கொடுத்தலைக் கணக்கிடுவதற்கு முன்னர் அதன் வரலாற்றை ஒரு சிறிது அறிதல் வேண்டும்.

1. கௌடலீயத்துக்கு இன்னும் வரையறுத்த காலத்தைக் காண முடியவில்லை. கி. மு. வின் மௌரியப் பேரரசர் காலம் முதல் கி. பி. யின் குப்தப் பேரரசர்கள் காலம் வரையிலானதே அதன் காலமாகலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர்.[19] அப்படியானல் அது வள்ளுவர் காலத்துக்கும் பிற்பட்டதாகலாம். அவ்வாருனல் யார் கொண்டது; யார் கொடுத்தது?

2. கௌடலீயம் முழுவதும் இன்று காணப்படுகிற அளவில் ஒருகாலத்தில் ஒருவரால் எழுதப்பட்டதாக இன்றையறிஞர்கள் கருதவில்லை. அதன் சில பகுதிகள் காலத்தால் முற்பட்டவை என்றும் சில பகுதிகள் பிற்பட்டவை என்றும் இவ்வாருக அதில் இடைச்செருகல்கள் பலவாக இருக்கவேண்டும் என்றும் வரலாற்ருசிரியர்கள் கருதுகின்றனர். ஆதலால் ஒப்பீட்டாராய்ச்சிக்கு எந்தப்பகுதியையும் எடுத்து உறுதியாக ஆராய்தல் சாலாது.

3. கௌடலீயத்தின் கருத்துக்கள் அவருக்கே உரியவை என்ருே அல்லது வடமொழிக்கே உரியவை என்ருே கொள்வதற்கில்லை. கௌடல்யரின் 'பிறந்தகம்' தென்ருடு ஆகலாம் என்பது ஒருசாரார் கருத்து. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தென்னகத்தை ஆண்ட சாதவாகன அரசர்காலத்து ஆட்சிமுறைக்கு உரிய கருத்துக்கள் பல கௌடலீயத்தில் இடம் பெற்றுள்ளன என அறிஞர்கள் சுட்டிக் காட்டுவது இக்கருத்தை வற்புறுத்தும்.[19] இதனல்

---

19 "Indian scholars generally place it in the Maurya period, and European scholars four or five centuries later. But in any case there is no basis for using the ARTHAŚĀSTRA material for the pre-Maurya period. The text as we have it does not seem to have been a homogeneous work writtten at one time and place. Although most of the book is writen in prose following the SUTRA style prevalent till the first century B.C. or so, its portions in verse were inserted later. The discussion of its style is better left to language specialists, but it would be fruitful to disentangle the various strata of the text from one another on the basis of style. As regards language the contrast between the Aśokan Prakrit and the Kauṭilyan Sanskrit is obvious. The political organisation outlined by Kauṭilya is different from the system indicated by Aśoka's inscriptions.

பொதுவான கருத்துக்கள் சிலவற்றைக் கௌடல்யர் தென்னகத்தி-லிருந்து மேற்கொண்டார் எனக் கூறுதலும் பொருத்தமாகலாம். அதனுல் குறள் கொண்டது என்பதைவிடக் கொடுத்தது எனல் பொருந்தும்.

4. பரிமேலழகர், காளிங்கர் முதலான உரையாசிரியர்கள், திருக்குறள் கௌடலீயத்தையோ அல்லது அதுபோன்ற பிற அர்த்தசாஸ்திரங்களையோ பின்பற்றிச் செல்லுகிறது எனக் கொண்டனர். பொதுவாகவே அது அவர்கள் கொள்கை. 'தேவ பாடையில்' உள்ளதற்கு மாருகவும் வேருகவும் 'பாகதப்பாடையில்' ஒன்றிருத்தல் கூடும்என்பது அவர்கள் அறிவில் படாத ஒன்று. 'உலக மொழிகளுக்கெல்லாம் வடமொழியே தாயாக நடக்கின்றமையின் அங்குள்ள வழக்கு எல்லாம் இங்கும் பெறும்' என மயங்கிய காலம் அது. குறளும்அப்பொதுவிதிக்கு விலக்கு அல்லவாம். திருக்குறளுக்குப் பரிமேலழகர் எழுதிய முன்னுரையால் இது விளக்கமுறுகிறது. இதனுல் இவ்வுரையாசிரியர்கள் குறளுக்குக் கண்ட உரைகளில் பல இடர்ப்பாடுகள் தோன்றின. அந்த இடர்ப்பாடுகளே முன்னர் (2.3) சுட்டிக் காட்டப்பட்டன. பரிமேலழகர், காளிங்கர் ஆகியோர், குறள் தராத 'அங்கம்', 'உறுப்பு' ஆகிய சொற்களைத் தந்து உடலுறுப்புக்

---

While Kauṭilya emphasises centralisation Aśoka adopts decentralisation. The typical Aśokan officials such as MAHĀMĀTRA, RAJUKA, PRĀDESIKA, PRATIVEDAKA, etc., are not mentioned in the ARTHAŚĀSTRA. MAHĀMĀTRAS appear as the most important functionaries in Aśokan inscriptions, but only their office mahāmātrīyam occurs once in the ARTHAŚĀSTRA which nowhere indicates their functions. Of course a minor Aśokan official called YUKTA is known to Kauṭilya but that does not prove much. The same holds good of the Aśokan administrative unit called āhāra. On the other hand many terms of fiscal and administrative import mentioned in the Arthaśāstra appear in inscriptions, particularly in grants of the first and second centuries A. D. Bhoga, praṇaya, viṣṭi and parihāra, (and taradeya?) occurring in inscriptions of the Deccan and western India find place in the Arthaśāstra; of these parihāra, which means exemptions from taxes on the land granted to beneficiaries, is a significant term occurring frequently in Sātavāhana inscriptions. Similarly the amātya, who emerges as the most important functionary in Śaka and Sātavāhana epigraphs, occupies the same place in the Arthaśāstra of Kauṭilya. The epigraphic evidence would therefore suggest that Kauṭilya's Arthaśāstra was finally compiled in the first century A. D.; atleast several sources of revenue mentioned in the Arthaśāstra reflect the practice prevalent in the second century A. D."— PP. 19 & 20, APII.

கொள்கையினை (Organic Theory) செயற்கையாகக் குறளில் திணித்தனர். பரிமேலழகர் குடியையும், நாட்டையும் ஒன்றாக எண்ணிக் குழம்பினர். அவர் பொருட்பாலின் அதிகாரங்கள் பதின்மூன்றை 'ஒழிபியல்' என 'அனுமத்து' ஆக்கியதும் இதன் விளைவே.[20] இதனால் வள்ளுவத்தின் சிறப்பியல்புகளையும் உணராது புறக்கணிக்க நேர்ந்தது.

கௌடலீயம் ஓர் இளவரசனுக்கு அரசியற்பாடம் கற்பித்தல் பொருட்டுப் பாடப்புத்தகமாக (Hand Book) இயற்றப்பட்டது என்பர் அறிஞர். நன்று தீது பாராது நடைமுறை பார்த்துத் தன் நலம் ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு அரசன் பேரரசனாக உயர்தலுக்கு வழி கூறுகிறது கௌடலீயம். இவ்வகையில் அது சிறுநோக்குக் கொண்டது எனலாம். ஆனால் வள்ளுவமோ எல்லாத் துறைகளிலும் ஒப்பற்ற உயர்நிலையைத் தீட்டிக் காட்ட விரும்பும் ஓர் ஒழுக்க நூல். அறம் பிறழாது பொருளின் முடிநிலையை அடையவே அது விரும்புகிறது. வள்ளுவத்துக்கு நடைமுறை அரசியல் — அன்றாட அரசியல் — மட்டும் பொருள் அல்ல. கௌடலீயத்துக்கும் வள்ளுவத்துக்கும் இடையே நோக்கத்தில் அமைந்த இந்த வேறுபாடு அடிப்படையானது என்பதில் ஐயம் இல்லை. சுருங்கச் சொன்னால் கௌடலீயம் practical politics பேசுகிறது; வள்ளுவம் ideal politics பேசுகிறது.[21] இவ் அரிய வேறுபாடு பரிமேலழகர் காளிங்கர் உரைகளில் முழுதும் மறைக்கப்பட்டு விட்டது; புறக்கணிக்கப்பட்டுவிட்டது; இவ்வேறுபாடே வள்ளுவத்தின் சிறப்பு. வள்ளுவத்தின் சிறப்புக்களை எடுத்துக் காட்டுதல் உரைவகுப்போரின் பணியும் கடமையும் ஆகும். நம் உரையாசிரியர்கள் இக்கடமையில் தவறி விட்டனர் என்றே கூற வேண்டும். சிறிது ஒற்றுமை கண்ட அளவில் வள்ளுவர் வடமொழி நூல்களை முழுவதும் பின்பற்றினர் என அவர்கள் மயங்கி உரை வகுத்ததே அதற்குக் காரணம்.

அறம் சார்ந்த உயர்நிலைப் பொருள்வாழ்வே வள்ளுவர் நோக்கமாதலால் எடுத்த எடுப்பிலேயே அரசருள் ஏறுபற்றி அவர் பேசுகிறார்; பொதுவாக அரசர் பற்றிப் பேசவில்லை; நடைமுறை அரசியல் சார்ந்த சப்தாங்கம் பற்றியும் பேசவில்லை.

---

20 பேர். தெ. பொ. மீ., வகநாகா, பக்கம் 16.

21 டாக்டர் கோ. சுந்தரமூர்த்தி கட்டுரை காண்க: 'வள்ளுவர் வகுத்த அரசியல்' பக்கம் 79—92.

## 2. 10. முதற்குறள் தொகைக் குறளா ?

முதற்குறள் சப்தாங்கமே பேசுகிறது எனக் கருதிய உரையாசிரியர்கள் பொருட்பால் முழுவதும் அச்சப்த அங்கங்களை மட்டிலுமே பேசும் என முடிவு கட்டிவிட்டனர். அதற்கு ஏற்பப் பொருட்பாலில் இயல் பாகுபாடும் அவர்கள் செய்து கொண்டனர். 'எழுவகைப் பொருளுமே இப்பொருட்பால் நடைப்பொருள் என அறிக' என்றார் காளிங்கர். பொருட்பாலின் முதற்குறள் சப்தாங்கம் பேசவில்லை என நாம் முடிவு கட்டுவதால் 'பொருட்பால் நடைப்பொருள்' அதுவாக இருத்தல் வேண்டிய கட்டாயம் இல்லை. முதற்குறள் கூறும் கருத்துக்களே தொகைச் சூத்திரமாகப் பொருட்பால் அதன் விரியாக அமைதல் வேண்டும் எனக் கருத வேறு காரணமும் புலப்படவில்லை. உரையாசிரியர்கள் முதற்குறட் கருத்துக்களுக்கு ஏற்பப் பொருட்பாலில் இயல்வகுத்துக் காணுகின்றனர். அவர்கள் இடையே இவ்வகையில் அமைந்த வேறுபாடே, இவ்இயல் பாகுபாடு வள்ளுவர் செய்ததல்ல என்பதைப் புலப்படுத்தும். ஒருகால் முதற்குறள் கூறும் கருத்துக்களே பொருட்பாலில் பேசப்படலாம். ஒருகால் ஒற்றர் பற்றிய அதிகாரங்கள், தூது பற்றிய அதிகாரங்கள், உழவு பற்றிய அதிகாரம், நல்குரவு பற்றிய அதிகாரங்கள், கயமை பற்றிய அதிகாரம் ஆகியவை தனித்தனியே மேலும் பல இயல்களாக அமையலாம். முதற்குறளே பொருட்பால் நடைப்பொருளானல் வள்ளுவரே அதனை ஒட்டி இயல் பாகுபாடு செய்திருக்கலாமே? இவ்வகையில் மேலும் ஆராய்ச்சி தேவை.

# 3

## வேந்தனும் வேந்தும்

3. 0. அரசியற் பாடத்தில் சமூகம், அரசு, ஆட்சி, அரசன் ஆகிய வற்றுக்கிடையே வேறுபாடு உண்டு. ஒவ்வொன்றும் வேறுவேருகும்.

### 3. 1. சமூகம்

மக்கள் பலப்பலர் வாழச் சேர்ந்த அமைப்பே சமூகம் (Society) ஆகும். மனிதனையே 'சமூக உயிர்' (Social being) என அறிஞர் வழங்குவர். மனிதன், நல்வாழ்வு வாழ வேண்டும் என்ற நோக்குடன் ஒருவரோடு ஒருவர் நல்லுறவுகள் அமைத்து வாழ்கிருன். இவ்வுறவு களால் பொலிவு பெறும் கூட்டு வாழ்க்கையே சமூகம். இவ்வுறவுகளால் பல்வேறு அமைப்புக்கள் உருவாகியுள்ளன. குடும்பம், குடி, சமயம், பிற பிற மன்றங்கள் ஆகியவை இவ்வாறு உருவாகியுள்ள சமூக அமைப்புக்கள். இத்தகையவை அனைத்தையும் இணைத்து விளங்கும் பரந்த அமைப்பே சமூகம். இச்சமூக வாழ்வில் அடங்காதது எதுவும் மக்கள் வாழ்வில் இல்லை எனலாம்.[1]

### 3. 2. அரசு

சமூகத்தில் குடும்பம், சாதி, சமயம் போன்றதே அரசு என்னும் அமைப்பும் ஆகும். சமூகம் வேறு; அரசு (State) வேறு. சமூகத்துள் அரசு அடக்கம். ஆனல் அரசுள் சமூகம் அடங்காது. சமூகம் மக்கள் தோன்றிய நாள் முதலே இருந்து வந்தது எனலாம்; ஆனல் அரசு பின்னர்த் தோன்றியது. அரசு, சட்டம் இயற்றி அதனை நடைமுறைப் படுத்திக் காண்பித்து வரும் ஓரமைப்பு; ஆனல் சமூகம் எண்ணற்ற

---

1 'Man is, by nature, social. Man's personality depends upon the web of groups and associations. Society is the complex of social relations formed and developed through these groups and associations. Social relations are essentially psychical in nature as they are determined by what is called 'mutual awareness'. "Without this recognition there is no social relationship, no society". society. thus, embraces the totality of consciously developed social relations. In other words, there are diverse social forms like communities, associations and institutions. Of these social forms the state is just one and it partakes of an association for a limited purpose, like the family or the church.'— PP. 33&34. PTII.

நோக்கங்களைக் கொண்டு அவற்றைப் பல்வேறு அமைப்புக்கள் வாயிலாக நிறைவேற்றும் ஒரு கூட்டமைப்பாகும். அரசு, தன் உயர் அதிகாரத்தால் மக்களைக் கட்டாயப்படுத்தியும் வற்புறுத்தியுமே எல்லாவற்றையும் சாதித்துக் கொள்ளுகிறது. ஆனால் மக்கள் தம் முயற்சியால் பணிபுரியச், சமூகம் தன் நோக்கத்தை மென்மையாக நிறைவேற்றிக் கொள்ளுகிறது. அரசு என்பது ஒரே ஓர் அமைப்பாகும். ஆனால் சமூகமானது, சாதி, சமயம், தொழிலாளர் சங்கங்கள், பல்கலைக்கழகம், விளையாட்டு மன்றங்கள் போன்ற பலவற்றைத் தன்னகத்தே கொண்டது.[2] சுருங்கச் சொன்னால் அரசு என்பது நாடும் குடியும் கொண்டு ஆள்வோரும் அதிகாரமும் பெற்றதாகும்.[3] சமூகம் அத்தகையது அல்ல.

### 3. 3. ஆட்சி

அரசு என்பதிலிருந்து வேறுபட்டதே ஆட்சி (Government) என்பதாகும். அரசு பெற்ற உருவமே ஆட்சி எனலாம். அரசு, தன் நோக்கங்களை ஆட்சியின் வாயிலாகவே உருவம் தந்து நிறைவேற்றுகிறது. அரசே, தன்னிடம் இயல்பாக அமைந்த அதிகாரத்தை ஆட்சி எனப்படும் ஆளுங்கணத்துக்குத் தந்து செயல்படுகிறது. அரசின்கீழ் நாட்டுமக்கள் அனைவரும் குடி கொண்டுள்ளனர். ஆனால் ஆட்சியில் ஆளும் கணம் எனப்படும் ஒரு சிலரே பங்கு கொள்வர். இவ்வாளுங்கணம் வரலாம்; மாறலாம்; போகலாம். ஆனால் அரசு நிலையானது, மாறாதது.[4] சுருங்கச் சொன்னால் அரசின் கையாள்

---

2 See the discussion in pages 34&35, PTII.

3 '........the consideration of the state as a territorial society, the people living on a particular tract of land organised under a common governing body which has, if not a complete, at any rate a very special degree of authority over them'. — P.57, PT.

4 'The weight of authority, however, seeks to treat the Government as basically, distinct from the state. By the term Government is designated the organisation of the state the machinery through which its purposes are formulated and executed. In order to fulfil this task the government is delegated the necessary authority by the state. The power of the state is original and primary; the authority of the government is derived and delegated. Secondly, the state comprises the aggregate of the population within it, while government consists of a part of the total population...... Thirdly, governments come and go but the state goes on for ever. Usually, the state is a permanent and stable entity, and it is not affected by governmental changes...... Lastly, government is an agency for the fulfilment of the purposes of the state. Hence, people may have grievances against the government but not against the State.' — P. 37, PTII.

போன்று இருந்து பணிபுரிவதே ஆட்சி. அரசராகவும், அமைச்சர்களாகவும், பல்வேறு துறைத் தலைவர்களாகவும் விளங்கி அவ்வாட்சி பணிபுரிகிறது.

### 3. 4. அரசன்

இவ்வாட்சி ஆளுங்கணமாக விளங்குகிறது. இவ்வாளுங்கணத்தின் தலைமையே (Governmental Head) அரசன்; இது முடியாட்சியின் நிலை. குடியாட்சியில் ஆளுங்கணத்தின் தலைமை குடியரசுத்தலைவர் அல்லது அமைச்சர் ஆகும். முடியரசர், யார்கட்டுக்கும் அடங்காது பணிபுரிவர். அதனால் முடியாட்சியில் அரசனே ஆட்சியாகத் தோன்றுவான். குடியரசின் அமைச்சர், குடிமக்களுக்குக் கட்டுப்பட்டுப் பணிபுரிவர். எவ்வாறாயினும் ஆட்சியினையும் அதன் தலைமையரையும் பிரித்தறிதல் வேண்டும்.

இவ்வாறு சமூகம், அரசு, ஆட்சி, அரசர் ஆகியவை அரசியலில் வேறுபடுத்திக் கருதத்தக்கவை; வேறுபடுத்தி ஆராய்தல் தேவையும் ஆகும்.

### 3. 5. மயக்கம்

இந்நால்வகை வேறுபட்ட நிலை பண்டுதொட்டு என்றும் இருந்திருக்கும். ஆனால் இவை பற்றிய தெளிந்த அறிவு பண்டு இருந்தது என்று கொள்வதற்கு இல்லை. சமூகத்தையும் அரசையும் வேறுபடுத்தாது ஒன்று என மயங்கிய அறிவு நிலை எப்போதும் இருந்திருக்கிறது. சமூகத்துக்குள்ளேயே அரசு அடங்கியதாலும், பணியிலும் பரப்பிலும் இரண்டும் விரிந்து விளங்கியமையாலும் இவை இரண்டையும் பிரித்தெண்ணுதல் அரிதாக இருந்திருக்கலாம்.

இவ்வாறே அரசினையும் ஆட்சியினையும் ஒன்று என மயங்குதலும் இயல்பு.[5] இவற்றிடையே அமைந்த வேறுபாடு நுண்ணியதாக இருத்தலே இதற்குக் காரணம். குறிப்பாக வல்லாளர் (Dictator) ஆட்சியில் இவ்வேறுபாடு சிறுத்து மறைகிறது. இது மட்டும் அல்ல. ஆட்சியும் அரசனும் கூட ஒன்று எனக் கருதுதலும் உண்டு. இன்றில்லாமல் போனாலும் பண்டை நாளில் இது உண்மையானது. அன்று அரசனே அரசின் நடுவனாக இருந்து அனைத்தையும் தன் கட்டுக்குள்

---

5 'Some well-known political thinkers, like Laski and Cole, while providing a working theory of the state have treated the government as synonymous with state'. — P. 37, PTII.

வைத்து ஆண்டதால் அரசு, ஆட்சி, தலைமை என்னும் மூன்றும் ஒன்றாக விளங்கின. அவற்றிடையே அமைந்த வேறுபாடு அறிய முடியாத அருமையுடையதாகி விட்டது.[6] பண்டைக்கால அறிஞர்கள் எழுதிய அரசியல் நூல்களில் இத்தகைய மயக்கங்களைக் காண முடிகிறது.

### 3. 6. அரசின் நுண்மை

மேலும் ஒரு சிக்கல்: அரசு (State) என்னும் சொல்லுக்கு அன்று கொண்ட பொருளும் இன்று கொள்ளும் பொருளும் வேறாக இருக்கின்றன. இன்று கொள்ளும் பொருள் மேலே விளக்கப்பட்டது. அறிஞர், இன்று அரசை ஒரு நுண்பொருளாகக் கண்டு விளக்கு-கின்றனர். அரசியல் ஆராய்ச்சியில் ஆழ்ந்து சென்ற பண்டைக் கிரேக்கச் சிந்தனையாளர்களிடத்தும் அரசுக்கு இப்பொருள் இல்லை என இன்றைய அறிஞர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.[7] ஆதலால் அரசு என்னும் சொல்லின் பொருள் பலரிடத்தும் பலவாக இருக்கலாம்.

### 3. 7. குறளில் சமூகம்

வள்ளுவர் வழங்கிய பொருட்பாலில் சமூகம், அரசு, ஆட்சி, அரசன் ஆகியவை எவ்வாறு இடம் பெற்றுள்ளன என இனிக் காணலாம்.

திருக்குறளில் சமூகம் என்னும் கருத்து உண்டு. ஆனால் அதில் 'சமூகம்' என்னும் சொல் இல்லை. அதற்கு மாறாக அதே பொருளில் 'உலகம்', 'வையகம்' என்னும் சொற்கள் ஆளப்பட்டுள்ளன. மக்கட் சமூகத்தைக் குறிக்கும் 'மன்பதை' என்னும் பண்டைத் தமிழ்ச் சொல்லும் குறளில் இடம் பெறவில்லை. 'சமூகம்' என்பது பின்னர் வழக்கிற்கு வந்த வடசொல்லாகும். ஆகவே அது குறளில் இடம்

---

6 "In the early stages of political evolution there was no clear conception of the state. Since the government was always monarchical the term king was really synonymous with government and state".—P. 12, SIP.

"அரசன் என்பதற்கு அரசியல் என்று ஆகுபெயரால் பொருள் கொள்ளுவதே சிறப்புடையதாகும்: அந்நாளைக்கும் இந்நாளைக்கும் பொருந்துவதாகும்."

— தெ. பொ. மீ., பக். 12, வகநாகா.

7 "The word 'state' in anything like its present sense is comparatively modern, not more than three or four hundred years old."—P. 54, PT.

பெறவில்லை போலும். சமூகம் என்னும் கருத்துண்மைக்குக் கீழ்க் காணும் குறள்கள் சான்று :-

*இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்*
*தான்கண் டனைத்து இவ் வுலகு. (குறள் 387)*

*எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் ; தம்மொடு*
*கொள்ளாத கொள்ளாது உலகு. (குறள் 470)*

*கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை*
*உண்மையான் உண்டுஇவ் உலகு. (குறள் 571)*

*பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்*
*தகைமைக்கண் தங்கிற்று உலகு. (குறள் 874)*

*உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து*
*அலகையா வைக்கப் படும். (குறள் 850)*

*கரப்பிலார் வையகத்து உண்மையான் கண்ணின்று*
*இரப்பவர் மேற்கொள் வது. (குறள் 1055)*

உலகம் என்னும் சொல் குறளில் பூத உலகத்தைக் (Physical world) குறித்தும், மக்களைக் குறித்தும் பல இடங்களில் வழங்குகிறது ; சமூகம் என்னும் பொருளிலும் பல இடங்களில் வழங்குகிறது. மேலே தரப்பட்ட குறள்களில் உலகம் என்னும் சொல் 'மக்களது கூட்டு வாழ்க்கை'யினைத் தெளிவாகச் சுட்டி நிற்கின்றது. இதனால் வள்ளுவர்க்குச் சமூகம் பற்றிய கருத்துத் தெளிவாக உண்டு என்பது பெறப்படுகிறது. ஆனால் அவர் சமூகம் என்னும் கருத்தை அரசு, ஆட்சி என்னும் கருத்துக்களுடன் ஒருங்குவைத்து ஒற்றுமை வேற்றுமை செய்து ஏதும் கூற வில்லை ; ஆராய்ச்சி நடத்தவும் இல்லை. சமூகத்தை அரசனுடன் உறவுபடுத்திக் கூறும் கருத்துக்கள் குறளில் கிடைக்கின்றன : (குறள்கள் 837, 389, 520). இவற்றை ஒருங்கு வைத்து எண்ணுகின்ற போதுதான் இவற்றினிடையே அமைந்த வேற்றுமை புலப்படும். வள்ளுவர் அத்தகைய ஆராய்ச்சி எதுவும் மேற்கொள்ள வில்லை.

### 3. 8. குறளில் அரசு

3. 8. 1. அடுத்து அரசு (State) பற்றிக் குறள் கொண்ட கருத்தைக் காணலாம். அரசு என்னும் சொல்லுக்கு இன்று State என்று பொருள் கொள்ளப்படுகிறது. இது ஆட்சி (Government) என்பதிலிருந்து வேறுபட்டது. இச்சொல் திருக்குறளில் மூன்று முறை ஆளப்பட்டுள்ளது.

*அறன்இழுக்காது அல்லவை நீக்கி மறன்இழுக்கா*
*மானம் உடையது* **அரசு.** *(குறள் 384)*

*இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த*
*வகுத்தலும் வல்லது* **அரசு.** *(குறள் 385)*

*கூழும் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்*
*சூழாது செய்யும்* **அரசு.** *(குறள் 554)*

இங்கெல்லாம் அரசு என்னும் சொல்லுக்கு state எனப் பொருள் கொள்ளத் தோன்றுகிறது. ஆனால் பண்டை உரையாசிரியர்கள் அனைவரும் (பெரும்பாலும்) இச்சொல்லுக்கு 'அரசன்' எனவே பொருள் வகுத்துள்ளனர். காளிங்கர் மட்டும் 385-ஆவது குறளில் 'அதுவே அரசு ஆவது' என உரை வகுத்துள்ளார். அறன் இழுக்காது இருத்தலும், அல்லவை நீக்குதலும், மானம் உடையதாதலும், இயற்றலும், ஈட்டலும், காத்தலும், வகுத்தலும், இழத்தலும், சூழ்தலும் ஆகிய வினைகள் உயர்திணைக்கே உரியன என இவ்வுரையாசிரியர்கள் கருதி இவ்வாறு 'அரசு என்பது அரசன்' என உரை வகுத்தனர் போலும். அறனும் அல்லவையும் பார்த்தலும் சூழ்தலும் (=எண்ணுதலும்) குறிப்பாகவும் சிறப்பாகவும் உயர்திணைக்கே உரியனவே. ஆதலால் உரையாசிரியர்கள் இவ்வாறு கருதுதல் பொருத்தம்தான். அரசு என்னும் சொல்லும் 'உயர்திணை மருங்கின் நிலையின ஆயினும் அஃறிணை மருங்கின் கிளந்தாங்கு இயலும்.' (தொல். சொல், 57, நச்.). ஆனாலும் அரசு என்னும் சொல்லுக்கு இக்குறள்களில் state எனப்பொருள் கொள்ளுதல் முடியாது என்பதில்லை. அச்சொல்லுக்கு state என்றே பொருள் கொண்டு, பரிமேலழகர் அடிக்கடி கூறுவது போன்று, அது 'உபசார வழக்காய்' இவ் வினைகளுக்கு உரியதாகிறது எனக் கொள்ளலாம். அவ்வாறு கொள்ளுவதற்கு இக்குறள்களைப் பொறுத்தவரை தடையேதும் இல்லை. வள்ளுவரும் அரசர், வேந்தர், மன்னர் முதலான சொற்களை இக்குறள்களில் எளிதாக ஆளவாய்ப்பிருந்தும் 'அரசு' என்னும் அஃறிணைச் சொல்லையே ஆண்டிருத்தலும் இங்குக் கவனிக்கத்தக்கது. அரசு என்னும் சொல் வள்ளுவர் காலத்தில் ஓர் அரசியல் அமைப்பைக் குறித்தும் பரவலாக வழங்கியது :

*முரசுமுழங்கு தானை மூவருள்ளும்*
*அரசுஎனப் படுவது நினதே பெரும.* (புறம். 35 : 4—5)

*முரசுகெழு தாயத்து அரசோ தஞ்சம்.* (புறம். 73 : 3)

*முரச்கெழு வேந்தர் அரசுகெழு திருவே.* (புறம். 75 : 12)

*செற்றவர் அரசு பெயர்க்குவை.* (மதுரைக் காஞ்சி 132)

*காவற்கு அமைந்த அரசுதுறை போகிய*
*வீறுசால் புதல்வர் பெற்றனை.* (பதிற்றுப் பத்து 74 : 20—21)

இவ்வடிகளில் எல்லாம் அரசு என்னும் சொல் 'அரசர்' என்பதிலிருந்து வேறுபட்டு, ஓர் அமைப்பினைக் குறித்து நிற்றல் தெளிவாகிறது ; உரையாசிரியர்கள் 'அரசாட்சி' என இதற்குப் பொருள் தருகின்றனர். இத்தகைய கருத்தே வள்ளுவர் குறளிலும் அமைந்திருக்கிறது எனக் கொள்ளலாம். இருந்தும் மேல் தரப்பட்ட குறள்களில் அரசன்வேறு அரசு வேறு எனப் பிரித்துணருமாறு கருத்து அமையவில்லை.

3. 8. 2. ஆனாலும் அவ்வாறு அமைந்த குறள் வேறு உண்டு :

*ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுறிந்து*
*வேந்தனும்* ***வேந்து*** *கெடும்.* (குறள் 899)

இக்குறளில் 'வேந்தன் வேறு; வேந்து வேறு' என்பது தெளிவுபட அமைந்துள்ளது. 'வேந்து' என்பது வேந்தனுக்குரிய ஓர் அமைப்பு எனக் கொள்ள வேண்டும். பரிமேலழகர், 'இந்திரனும் இடையே தன்பதம் இழந்து கெடும்' என இக்குறளின் இரண்டாம் அடிக்குப் பொருள் கொள்ளுகிறார். அவருக்கு வேந்து என்பது 'இந்திர பதம்' ஆகிறது. மணக்குடவரும் பரிப்பெருமாளும் 'இந்திரனும் இடையிலே இற்றுத் தன்னரசு இழக்கும்' என உரை எழுதுகின்றனர். அறிஞர் மு. வ. அவர்களும் 'அரசனும் . . . அரசு இழந்து கெடுவான்' எனத் தெளிவுரை தருகிறார்கள்.[8] ஆதலால் வேந்து என்பது இக்குறளில் அரசு என்னும் ஓர் அமைப்பையே குறிக்கிறது எனலாம். பரிமேலழகர் சிறிது வேறுபட்டாலும் அவர் கருத்துப்படியும் அச்சொல் ஓர் அமைப்பையே குறித்து நிற்கிறது.

3. 8. 3. கீழ்க்கண்ட குறள்களில் 'கோல்' என்னும் சொல்லின் ஆட்சி கருதத்தக்கது :

*இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா*
*மன்னவன்* ***கோற்கீழ்ப்*** *படின்.* (குறள் 558)

*அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்*
*நின்றது மன்னவன்* ***கோல்.*** (குறள் 543)

இக்குறள்களில் 'கோல்' என்னும் சொல்லுக்கு 'ஆட்சி' எனப் பொருள் சொல்லலாம் எனத் தோன்றுகிறது ; ஆனால் உரையா

8 திருக்குறள் தெளிவுரை, மு.வ., குறள் 899.

சிரியர்கள் இதற்கு 'முறைமை' 'நீதி' எனவே பொருள் கொள்ளு கின்றனர். **செங்கோல்** (கு. 390), **வெங்கோல்** (கு. 563), **கடுங்கோல்** (கு. 570), என்னும் தொடர்களும் குறளில் இடம் பெற்றுள்ளன. இவ்விடங்களிலும் அவர்களால் அவ்வாறே பொருள் கொள்ளப் படுகிறது. செங்கோல் நல்ல முறைமையையும், கடுங்கோல் தீய முறைமையையும் குறிப்பதாகக் கொண்டால், கோல் என்பது வெறு முறைமையைக் குறிப்பதாகக் கொள்ள வேண்டும். அவ்வாறு கொள்ளுதல் பொருத்தமானதாகத் தோன்றவில்லை. நல்ல நீதியும் தீயநீதியும் அல்லாது வெறு நீதி உண்டோ? ஆதலால் கோல் என்னும் சொல்லுக்குப் பொதுவாக 'ஆட்சி' எனப் பொருள் கொள்ளுதல் பொருத்தம். இப்பொருத்தம் கருதித்தான் சென்னைப் பல்கலைக்கழகத்துத் **தமிழ்ப்பேரகராதியும்** 'மன்னவன் கோற் கீழ்ப்படின்' என்னும் குறள் (558) தொடரையே எடுத்துக் காட்டிக் 'கோல்' என்னும் சொல்லுக்கு 'அரசாட்சி' எனப் பொருள் தந்திருக் கிறது. 'மன்னன் கோல்' என்னும் ஆறும் வேற்றுமைத்தொடர் மன்னவன் வேறு; அவன் கோல் வேறு என்பதைப் புலப்படுத்தி நிற்கின்றது.

3. 8. 4. திருக்குறளில் இவ்வாறு அரசு, வேந்து, கோல் என்னும் சொற்கள் அரசனாகிய தலைமையிலிருந்து வேறுபட்ட ஓர் அமைப்பினைக் குறித்து வழங்குகின்றன. இவ்வமைப்பு யாது? அதனை அரசு (state) என்பதா? அல்லது ஆட்சி (Government) என்பதா? இக் கருத்துத் தெளிவுபடவில்லை. ஆட்சி என்னும் சொல்லும் பொருட் பாலில் இல்லை. 'பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை; அருளாட்சி ஆங்கில்லை ஊன் தின்பவர்க்கு' (கு. 252) என அது அறத்துப் பாலில் வழங்குகிறது. ஆட்சி என்னும் சொல் சங்க இலக்கியங் களிலும் காணோம். ஆட்சி என்பதற்கு நேரான சொல் சங்க இலக் கியத்தில் உண்டோ என்பதும் இனி ஆராய்தற்கு உரியது. அரசு, ஆட்சி என்னும் வேறுபாடு குறளில் இருப்பதாகத் தெரியவில்லை. ஒருகால் இந்நுண்ணிய வேறுபாடு அக்காலத்தில் காணப்பட்டிருந் திருக்காது. இந்நோக்கில் ஆராய்ச்சி வளர்ந்த பின்னரே இவ்வகையில் ஓர் உறுதியான கருத்தைக் காணக்கூடும். எவ்வாறாயினும் அரசிய லமைப்பு ஒன்றினை வள்ளுவர் பகுத்துணர்ந்து குறிப்பிடுகிறார் என்பது தெளிவாகிறது.

### 3. 9. குறளில் அரசன்

வள்ளுவர் காலத்தில் அரசாட்சியின் தலைமை முடியரசனே. வள்ளுவர் பொருட்பாலிலும் தலைமை அரசனே ஆகும். உலகம்

(= சமூகம்), அரசு என்னும் இவற்றிலிருந்து வேறுபட்டவராக அரசரைக் குறிப்பிடுகிறார் வள்ளுவர். மேல் உரைத்த கருத்துக் களால் இது தெளிவுபடுகிறது. அரசின் தலைமையாகிய அரசரைக் குறிக்க வள்ளுவர் பல பெயர்களை ஆண்டுள்ளார். அப்பெயர்கள் அவ்வரசரின் பண்பையும் பணியையும் சுட்டி நிற்கின்றன:-

| | | | |
|---|---|---|---|
| அரசர் | (கு. 381) | வேந்தர் | (கு. 689) |
| இறை | (கு. 432) | வேந்தன் | (கு. 382) |
| இறைவன் | (கு. 690) | ஆன்ற பெரியார் | (கு. 694) |
| காவலன் | (கு. 560) | குறும்பு | (கு. 735) |
| மன்னன் | (கு. 386) | நிலனாள்பவன் | (கு. 383) |
| மன்னவன் | (கு. 388) | படியுடையார் | (கு. 606) |
| கோலன் | (கு. 563) | புரந்தார் | (கு. 780) |
| வேந்து | (கு. 550) | வேலார் | (கு. 683) |

### 3. 10. அரசரின் தலைமை

இதுவரை கண்டவற்றால் வள்ளுவர் பொருட்பாலில் சமூகம், அரசும் ஆட்சியும், அரசன் என்னும் முத்திறக் கருத்துக்கள் அல்லது அமைப்புக்கள் தெளிவுற அமைந்துள்ளமை புலனாகிறது. இவற்றைப் பொறுத்த வரையில் இன்றைய அரசியலறிஞர்க்கும் வள்ளுவர் பொருட் பாலுக்கும் இடையே ஒரு வேற்றுமையும் தென்படுகிறது. இன்றைய அறிஞர்கள் அரசு வேறு ஆட்சி வேறு எனப் பிரித்து உணர்த்து கின்றனர். இவ்வேறுபட்ட நிலையினைக் குறள் உட்பட்ட பண்டைத் தமிழிலக்கியங்களில் காண முடியவில்லை.

பண்டை இலக்கியங்களில் அரசு, ஆட்சி, அரசன் என்னும் மூன்றையும் ஒன்றாகக் கொள்ளும் நிலையினையும் காணலாம் போலும். அரசு என்னும் சொல் சிலபோது ஆகுபெயராக அரசரைக் குறித்து வழங்குதலும்[9] (அரசியல்=அரசரியல்பு), அரசர் ஆற்றும் பணிகளை அரசே ஆற்றுவதாகக் கூறுதலும் (குறள். 384, 385, 554) இக்கருத்தை வலியுறுத்துகின்றன. பண்டைக் காலத்தில் மன்னராட்சி மேலோங்கி அவர் தனிக்கோல் செலுத்தி வந்தபோது இதுவே நடைமுறையாக இருக்கலாம். இதுவே திருக்குறளிலும் எதிரொலிக்கலாம். உலக

9 அடிக்குறிப்பு '6' காண்க. பொருட்பாலுக்கு எழுதிய முன்னுரையில் அரசியல் என்பது அரசனது இயல்பு குறிப்பதாகப் பரிமேலழகர் விளக்கிச் செல்லு கின்றார். இறைமாட்சியில் நாலாம் குறளுரையில் 'அரசு—அரசனது தன்மை' என அவர் எழுதுவது காண்க.

அரசியல் வரலாற்றில் இது ஒரு கட்டமாக விளங்கியதை வரலாறு சுட்டிக் காட்டுகிறது.[10]

இதனால் வள்ளுவர் அரசருக்குத் தந்த ஏற்றத்தையே காணுகிறோம்.

### 3. 11. அரசின் அடிப்படைக் கூறுகள்

அரசுபற்றி ஆராயும் இன்றைய அறிஞர்கள் **அரசின் அடிப்படைக் கூறுகள்** (Essential constituent elements) என நான்கினை எடுத்துக் காட்டுகின்றனர். அவை 1. **மக்கள்** (Population), 2. **நிலப்பரப்பு** (Territory), 3. **ஆட்சி** (Government), 4. **இறைமை** (Sovereignty) என்பனவாகும்.[11] பொதுவாக அன்றும் இன்றும் எல்லாவகை அரசுகளிலும் காணப்படும் கூறுகள் இவை. இவற்றை ஒட்டியே அரசியல் இன்று அறிஞர்களால் ஆராயப்படுகிறது.

3. 11. 1. **மக்கள்** என்பது ஓரரசின் ஆட்சிக்கு அடங்கிய குடிகளைக் குறிக்கிறது. குடிகள் இல்லாது அரசாட்சி ஏது? எல்லாம் மக்களுக்காகத்தானே நடைபெறுகின்றன. ஆதலால் அரசில் மக்கள் இன்றியமையாக் கூறுகின்றனர்.

3. 11. 2. ஓர்அரசு நிலையாக நடைபெறுவதற்கு நிலையான **நிலப்பரப்புத்** தேவைப்படுகிறது. அரசின் அதிகார வரம்புக்கு உட்பட்ட நிலம், நீர், காற்று ஆகியவை அடங்கியதே இந்நிலப்பரப்பு எனக் கொள்ளப்படுகிறது.[12] இந்நிலத்து நிகழ் பொருளே அரசு.

3. 11. 3. அடுத்து **ஆட்சி** என்பது அரசு பெற்ற ஓரமைப்பு; ஓர்உருவம். அதனை அரசின் கருவி எனலாம். அரசின் நோக்கங்களையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்காக அமைக்கப் பெற்றிருப்பதே ஆட்சி. ஆட்சியே, ஒழுங்கு முறைகளையும் விதிகளையும் வகுத்துச் சமூகத்துக்கு ஒரு சட்ட வடிவினையும் அமைத்துத் தருகிறது. அவ்விதிகளையும் ஒழுங்கு முறைகளையும் சட்டங்களையும் போற்றிக் காப்பதும் அவ்வாட்சியின் பணியாகும். ஓர் ஆளுங்கணத்தால் ஆட்சியின் பணிகள் எல்லாம் நடைபெறுகின்றன.

---

10 இவ்வியலின் அடிக்குறிப்பு 6 காண்க.

11 "Thus population, a fixed territory, government and sovereignty – these are supposed to be the essential constituent elements of a state. Certain writers would like to include international recognition as an additional element." – P.29, PTII.

12 "Land, water and air comprise the territory of a state."
— P.30, PTII.

3. 11. 4. இறைமை என்னும் sovereignty, அரசின் கூறுகளுள் மிகமுக்கியமானதாகும். அரசுக்கு உரிய கட்டற்ற பேரதிகாரமே இறைமையாகும். ஒரு நாட்டில் மக்கள் உட்பட்ட அனைத்தின் மீதும் தடையின்றியும் வரையறையின்றியும் இவ்வதிகாரம் செலுத்தப்படும். இவ்வதிகாரம் அரசர் போன்ற ஒருவரிடமும் அடங்கியிருக்கலாம்; ஒரு சிலரிடமும் ஒரு குழுவிடமும் அடங்கியிருக்கலாம். இவ்விறைமையின் மற்றோரியல்பு அவ்வரசினை அண்டை நாடுகள் அயல்நாடுகள் அனைத்தும் உடன்பட்டு ஏற்றுக் கொள்ளுதல் ஆகும்.

### 3. 12. அரசின் அடிப்படைக் கூறுகளும் சப்தாங்கமும்

அரசின் அடிப்படைக் கூறுகள் பற்றிய இக்கருத்துக்களை இந்திய அறிஞர்கள், அர்த்த சாஸ்திரங்கள் கூறும் சப்தாங்கக் கொள்கையுடன் ஒப்பிட்டுக் காணுகின்றனர். அவற்றிடையே ஒற்றுமையும் உண்டு; வேற்றுமையும் உண்டு; இவற்றின் வன்மை மென்மைகளையும் அவர்கள் ஆராய்கின்றனர். (பின் நூல் விளக்கத்தில் காட்டப்பட்டவை சில இவ்வாராய்ச்சி செய்கின்றன.)

இன்றையறிஞர்கள் இந்நான்கினையும் அடிப்படைக் கூறுகள் என வழங்குவது போன்று அர்த்த சாஸ்திர அறிஞர்களும் சப்தாங்கத்தை 'ப்ரக்ருதி' என வழங்குகின்றனர். 'ப்ரக்ருதி' என்னும் சொல்லுக்கு 'முதல்', 'அடிப்படை' என்பது பொருள். (இது முன்னரே சுட்டப்பட்டது.) இவ்வொற்றுமையே, அவை ஒப்பிடத்தக்கன எனச் சுட்டிக்காட்டுகிறது. அவற்றிடையே அமைந்த மற்ற ஒற்றுமை தெளிவானது :–

| | | |
|---|---|---|
| மக்கள்<br>நாடு | } — | ஜனபதம் |
| ஆட்சி | — | அமாத்தியர் |
| இறைமை | — | சுவாமி |

இன்றையறிஞர், மக்கள் நாடு என இருவேறு கூறுகளாகக் காண்கின்றவற்றை அர்த்த சாஸ்திரங்கள் பல (ஒரு சில தவிர) ஒன்றாகக் கொள்ளுகின்றன. வேறுபட்டவற்றை வேறுபட்டனவாகவே கொள்ளுதல் சிறப்பு. ஆட்சி என்பது அமாத்தியரால் நடைபெறுதலால் ஆட்சியினை ஒருவாறு அமாத்தியருக்கு ஒப்பாகக் கொள்ளலாம். இந்திய வரலாற்றில் இறைமை மன்னரிடமே அமைந்திருந்தது. ஆனால் அம்மன்னர் கட்டற்ற அதிகாரம் பெற்றவர் எனக் கருதுதல் இல்லை. 'அந்தணர் நூற்கும் அறத்திற்கும்' அவர்கள் பொதுவாகக் கட்டுப்பட்டவர்களாகவே கருதப்படுகின்றனர். துர்கம்,

கோசம், தண்டம் ஆகியவை இன்றையறிஞர்களால் தனித்தனியே அடிப்படைக் கூறுகள் எனக் கருதப்படுவதில்லை. படை, பொருள் முதலானவை இன்று இறைமை பெற்றோரால் படைக்கவும் ஆளவும் படுகின்றன. ஆதலால் இவை ஒருவாறு இறைமையுள் அடங்கும் என இவர்கள் கருதுகின்றனர் போலும். இவ்வாறு அடக்கி உட்படுத்தி உரைக்காது வெளிப்படுத்தி உரைக்கும் சப்தாங்கக் கொள்கையினை இன்றைய இந்திய அறிஞர்கள் பாராட்டுகின்றனர்.[13] மித்திரர் என்னும் அங்கம் 'பிறநாட்டுடன்பாடு' (International Recognition என்பதற்கு ஒப்பாகும் எனக் கருதப்படுகிறது. இன்றைய மேலை) நாட்டு அரசியற் சிந்தனையாளர்கள் சிலர் பிற நாட்டுடன்பாட்டை ஐந்தாவது அடிப்படைக் கூறாகக் கொள்ளுவர்.[14]

### 3. 13. குறளும் சப்தாங்கமும்

3. 13. இவ்வாறு சப்தாங்கக் கொள்கையினை மேலைநாட்டுக் கருத்துக்களோடு உறவுபடுத்திக் காண்பது போன்று பண்டைத் தமிழ்க் கருத்துக்களையும் அவற்றோடு உறவு படுத்திக் காணுகின்றனர் அறிஞர்கள் சிலர்.[15] திருக்குறளில் பொருட்பாலின் முதற் குறட் கருத்துக்களையும் இவ்வாறு உறவு படுத்திக் காணத் தோன்றுகிறது. ஆனால் இவற்றிடையே அடிப்படையான வேறுபாடு ஒன்று உள்ளது. மேலை நாட்டு அரசியலறிஞர்கள் அரசின் கூறுகளை essential constituent elements எனக் குறிப்பிடுகின்றனர். சப்தாங்கக் கொள்கையினர் ப்ரக்ருதிகள் எனக் குறிப்பிடுகின்றனர். ஆனால் திருக்குறளில் இவ்வாறு 'அடிப்படைக் கூறுகள்' எனக் கருதுமாறு ஒன்றுமில்லை. திருவள்ளுவர் இத்தகைய ஆராய்ச்சியிலும் இறங்கவில்லை. அவர் அம்முதற்குறளில் அரசரின் உடைமைகள் பற்றி மட்டுமே பேசுகிறார். ஆதலால் இவ்

---

[13] "On the contrary there is no place for army, taxation, capital and ally in the modern definition of the state. Perhaps the elements of army and taxation are covered by the concept of sovereign power, which exercises the function of coercion and tax-collection. Since these ingredients are not clearly mentioned in the modern definition it sounds to be abstract in contrast to the ancient definition, which was concrete and eminently practical. In the ancient definition no attempt was made to cver the reality by the use of abstruse phrase, which often obscures the real meaning." – P.39, APII.

[14] We may add that in modern times unless a state receives the recognition of other states, its *de jure* status is not established. Perhaps this element in the modern state may be compared to mitra (ally), although the object in ancient times was to secure allies and not recognition from other states." – P.39, APII.

[15] See Prof. Subrahmanian's Sangam Polity, P.388.

வகையில் இருசார் கருத்துக்களையும் ஒப்பிடுதல் பொருத்தமாக அமையாது.

ஆனல் இன்றையறிஞர் கூறும் அடிப்படைக் கூறுகள் திருக்குறளில் எவ்வாறு இடம் பெற்றுள்ளன? எவ்வளவு இடம் பெற்றுள்ளன? என ஒருவாறு ஆராய்தலில் தவறு இல்லை.

**3. 13. 1. மக்கள்**

வள்ளுவர் முதற் குறளில்(381) குடி என்னும் சொல்லால் மக்களைக் குறிப்பிடுகிறர்; 'குடி ஓம்பல்', 'குடி தழுவல்' அரசன் கடமை என ஆங்காங்கே அவர் வற்புறுத்திச் செல்லுகிறர். நாடு என்னும் அதிகாரத்தில்(74) அவர் குடிமக்கள் பற்றிச் சில கருத்துக்களைக் கூறிச் செல்லுகிறர். வள்ளுவர் குடிமக்களைத் தனியே ஒரு கூருகக் கருதுதல் இவற்ருல் தெளிவாகிறது.

**3. 13. 2. நாடு**

பொருட்பாலின் முதற்குறளில் வள்ளுவர் நாட்டினைக் குறிப்பிடவில்லை. ஆனல் நாடுபற்றி ஓரதிகாரம் தனியே இயற்றப்பட்டுள்ளது. 'நிலனுள்பவர்', 'மாநில மன்னன்' என மன்னர் நாடாளுதல் பற்றிக் குறள் அடிக்கடி பேசுகிறது. நாட்டின் இயல்புகள் வள்ளுவரால் பரக்கப் பேசப்படுகின்றன.

**3. 13. 3. ஆட்சி**

இது ஆளுங்கணத்தால் இயங்கும் ஓர் அமைப்பு. வள்ளுவர் ஆளுங்கணம் பற்றிப் பலபடப் பேசுகிறர். அமைச்சர், தூதர், ஒற்றர் ஆகியோர் பற்றிக் குறளில் அதிகாரங்கள் உண்டு. அவர்களின் பண்பு பணிகளை இவ்வதிகாரங்கள் விளக்குகின்றன. அவர்களல்லாது படை, பொருள், அரண் ஆகியவற்றையும் ஆட்சியின் பகுதிகளாகவே கொள்ளலாம். இவை பற்றியும் குறளில் பல அதிகாரங்கள் உள்ளன. ஆனல் இவை அனைத்தையும் தொகுத்து ஒரு கூருகக் கருதும் நிலை திருக்குறளில் இல்லை. இவ்வாளுங்கணத்தின் தலைவனுகவும் அரசன் விளங்குகின்றன். ஆதலால் அரசனும் ஆட்சியாகக் கருதப்படவேண்டும்.

**3. 13. 4. இறைமை**

இவ்விறைமை ஒரு நுண்பொருள். இது திருக்குறளைப் பொறுத்தவரை அரசரிடமே அமைந்துள்ளது. இறைமை, வரம்பற்ற அதிகா

ரமும் தடையற்ற செயற்பாடும் உடையது. பொருட்பாலில் காணப் பெறும் அரசன், 'இறை என்று வைக்கப்படும்' தகுதியுடையவன்; 'இறை (தலைமை) புரிந்து யார் மாட்டும்' செய்பவன். அவனுக்கு மேற்பட்டார் அவன் நாட்டில் இல்லை. அவனே 'தெரிந்து தெளிந்து வினையாண்டு கோலோச்சுகின்றவன்'. இருந்தாலும் மன்னன் 'இடிக்குந் துணையாராகிய பெரியாரைத் துணையாகக்' கொள்ளு கின்றான்; 'அறனறிந்து ஆன்றமைந்த அமைச்சர்' அறிவுரை பெறு கின்றான்; 'அறனிழுக்காது அல்லவை நீக்கி' ஆள்கிறான்; 'அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்' நிற்கின்றான். ஆதலால் அறம், பெரியார், அமைச்சர் ஆகியோர் அரசனுடைய அதிகாரத்துக்கு வரம்பு கோலுகின்றனர். ஆகவே அவன் இறைமை கட்டற்றது எனக் கருதமுடியாது. அவன் இறைமையில் பெரியோரும் அமைச்சரும் அறமும் ஓரளவு பங்கு கொள்ளுகின்றனர்.[16] வரம்பற்ற அதிகாரம் ஒருவரிடம் குவிந்திருத்தலை இன்றைய உலகம் விரும்புவதில்லை; கட்டற்ற இறைமையையும் அது உடன்படுவதில்லை. நல்லாட்சிக்கு இறைமை பரந்து நிலவ வேண்டும். இன்றைய குடியாட்சிகளில் இந்நிலையே காணப்படுகிறது. வள்ளுவர் வகுத்த அரசியலிலும் இறைமை கட்டுண்டு கிடப்பதைக் காண முடிகிறது. இது குறளுக்குப் பெருமை சேர்க்கிறது.

3. 13. 5. குடியும் நாடும் ஆட்சியும் இறைமையும் இணைந்ததே முழுமைபெற்ற அரசு என இன்று அறிஞர்கள் எடுத்துக் காட்டுகின் றனர். இந்நாற் கூறுகளும் வள்ளுவர் குறளில் தெளிவுற இடம் பெற்றுள்ளன. ஆதலால் வள்ளுவர் கண்ட அரசியல் முழுமை பெற்ற அரசியலாகும். அது மட்டுமல்லாது இன்றைய அறிஞர்கள் நுண்ணு ருவமாக (abstract)க் காணும் அரசின் கூறுகள் வள்ளுவர் குறளில் பருவுருவமாக (concrete)க் கண்டு விளக்கப்பட்டுள்ளன.

---

16 "V. R. Ramachandra Dikshitar says that 'the King's power was so limited by a system of checks and balances, the council, the Purohita and public opinion that he dared not misuse his rights."
—P.382, SP.

# 4

# பண்புடை வேந்தன்

4.0. அரசருள் ஏறுகவும் வேந்திணைச் செலுத்தும் வேந்தனுகவும் விளங்கும் மன்னன் எத்தகையோனுய் இருத்தல் வேண்டும்? அவன் பண்பு நலன்கள் எவை? இவை பற்றி வள்ளுவர் வழங்குவது என்ன? அதனை இவ்வியலில் காணலாம்.

## 4.1. 'இறைமாட்சி'யின் சிறப்பு

வள்ளுவர் காண விரும்பிய வேந்தனை அவர் முதலதிகாரமான 'இறைமாட்சி'யிலேயே வரைந்து காட்டிவிடுகிறுர். இவ்வதிகாரமே அரசியலுக்குத் தோற்றுவாயாக அமைந்திருப்பது மட்டுமல்லாமல் தொகையதிகாரமாகவும் அமைந்துள்ளது. இவ்வதிகாரத்தில் தொகுத்து வழங்கிய அரசர் பண்புகள் பலவற்றையே பின்னர்ப் பிற அதிகாரங்களில் அவர் விரித்து விளக்குகிறுர். இவ்வகையில் அவ்வதிகாரம் சிறப்புப் பெறுகிறது. அதிகாரத்தின் தலைப்பு 'இறைமாட்சி' என அமைந்திருத்தலும் கருதத்தக்கது. வேந்தர், மன்னர், அரசர் முதலான பெயர்களிருக்க 'இறை' என்னும் பெயரை வள்ளுவர் தேர்ந்தெடுத்து இவ்வதிகாரத்துக்குச் சூட்டியது இச்சிறப்பையே வற்புறுத்துகிறது. 'இறை' என்ற சொல்லுக்குத் 'தலைமை, தலைவன்' எனப் பொருள் உண்டு. அரசரது 'தலைமை'ச் சிறப்பைச் சுட்டிக்காட்ட இச்சொல்லை அவர் ஆண்டிருக்கலாம். 'இறை' என்ற சொல்லுக்கு இரண்டாம் பொருளாகத் 'தெய்வம்' என்ற பொருளும் உண்டு. அரசர் '**தெய்வம் என்றும் வைக்கப்படுவர்**' என்னும் கருத்தையும் சுட்டிக்காட்ட வள்ளுவர் இச்சொல்லை ஆண்டிருக்கலாம். எவ்வகையிலும் இத்தலைப்பு வள்ளுவர் வரைந்து காட்டும் வேந்தரின் இயல்பையே எடுத்துக் காட்டுகின்றது. பரிமேலழகரும், இறை மாட்சியாவது '**அவன்தன் நற்குண நற்செய்கைகள்**' என்கிறுர்.

## 4.2. 'இறைமாட்சி' தரும் பண்புகள்

இவ்வதிகாரம் கூறும் அரசர் பண்புகளை அங்குக் கண்டவாறே காணலாம்.

அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு. (கு. 382)

தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு. (கு. 383)

அறன்இழுக்காது அல்லவை நீக்கி மறன்இழுக்கா
மானம் உடையது அரசு. (கு. 384)

காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம். (கு. 386)

இன்சொலால் ஈத்துஅளிக்க வல்லாற்குத் தன்சொலால்
தான்கண் டனைத்துஇவ் வுலகு. (கு. 387)

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு. (கு. 389)

கொடைஅளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி. (கு. 390)

## 4. 3. இயற்கைக் குணங்களும் செயற்கைக் குணங்களும்

வள்ளுவர் வகுத்த இப்பண்புகளை இயற்கைக் குணங்கள் செயற்கைக் குணங்கள் என இருகூறாகப் பரிப்பெருமாள் என்னும் உரையாசிரியர் பகுக்கிறார். அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் என்னும் நான்கும் அவருக்கு இயற்கைக் குணங்கள்; மற்றவை எல்லாம் செயற்கைக் குணங்கள். செயற்கைக் குணங்களாவன :

| | |
|---|---|
| தூங்காமை | இன்சொல்லுடைமை (கடுஞ்சொல் இன்மை) |
| கல்வி | செவிகைப்பச் சொற்பொறுத்தல் |
| துணிவுடைமை | அளியுடைமை |
| மானமுடைமை | காட்சிக்கு எளிமை |

(ஈகை 7-ஆம் குறளிலும் 10-ஆம் குறளிலும் வற்புறுத்தப்படுகிறது. 10-ஆம் குறளில் கொடை என்னும் சொல் ஆளப்பட்டு உள்ளது. பரிமேலழகர் 'ஈகை' என்னும் சொல்லுக்குக் 'கொடை' எனப் பொருள் எழுதுகிறார். கடுஞ்சொல் இன்மை எனவும் இன்சொல்லுடைமை எனவும் ஒரே கருத்து உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் இரண்டு குறள்களில் வற்புறுத்தப்படுகிறது.)

அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் 'இந்நான்கும் எஞ்சாமை வேந்தற்கு இயல்பு' என வள்ளுவரே இயல்பு என்னும் சொல்லைப் பயன்படுத்திக் குறிப்பிட்டுள்ளமையால் இந்நான்கு பண்புகளையும் 'இயற்கைக் குணங்கள்' எனப் பரிப்பெருமாள் கருதுகிறார் போலும்.

பரிமேலழகரும் அவ்வாறு கருதுவதாகத் தெரிகிறது. அவர் 'உயிர்க் குணங்கள்' என்ற சொல்லையே பயன்படுத்துகிறார்.[1] மேலும் அவர், **'இவை எப்பொழுதும் தோன்றி நிற்றல் இயல்பாக வேண்டும் என்பார் அஞ்சாமை வேந்தற்கு இயல்பு என்றார்'** எனவும் விளக்கம் தருகிறார். ஆனால் இந் நான்கு குணங்களும் போக இவ்வதிகாரத்தில் கூறப்பட்ட பிறவற்றை வள்ளுவரோ, பரிமேலழகரோ 'செயற்கைக் குணங்கள்' எனக் குறிப் பிடவில்லை. இருந்தாலும் இப்பாகுபாடு பண்புகளைப் பகுத்தறிவதற்குத் துணை செய்யும்.

இனி அரசர் பண்புகளாகக் குறள் கூறுபவற்றை ஒவ்வொன் றாக ஆராயலாம்.

## 4. 4. அஞ்சாமை

அஞ்சாமையாவது திண்மை எனப் பரிமேலழகர் விளக்குகிறார். அதனைத் தறுகணாண்மை என்கிறார் காளிங்கர்; 'திடபுத்தி' என்கிறார் பரிதியார். காளிங்கர் ஒருவரே 'அஞ்சுதல்' என்னும் வினைக்கு எதிர் மறையாக இச்சொல்லை விளக்குகிறார். திண்மை, உறுதி, வலிமை முதலான பண்புகள் வள்ளுவரால் இவ்வதிகாரத்தில் குறிக்கப்படா மையால், அஞ்சாமை என்பதற்குப் பரிமேலழகர் முதலானோர் இப் பண்புகள் எல்லாம் உள்ளடங்கப் பரந்த பொருள் தருகின்றனர். அவ்வாறு தருதல் பொருத்தமே. இவ்வஞ்சாமை அரசனது போர் வினைக்கு இன்றியமையாதது. 'ஈகை, அறிவு, ஊக்கம் என்னும் மற்ற மூன்று பண்புகளும் அரசனுடைய மற்ற பணிகளுக்கு வேண்டியவை. பரிமேலழகர் இதனை உணர்ந்து குறிப்பிடுகிறார்: "இவற்றுள் அறிவு ஆறங்கத்திற்கும் உரித்து; ஈகை படைக்கு உரித்து. ஏனைய வினைக்கு உரிய." வினை என்பது இங்குப் போர்வினையாகும். பரிமேலழகர் கருத்துப்படி ஊக்கமும் அஞ்சாமையும் போர்வினைக்குத் தேவையானவை. ஊக்கம் ஓர்ஒருகால் பிறவினைகளுக்கும் வேண்டியது. ஆனால் அஞ்சாமை போருக்கே சிறப்பாகத் தேவைப் படுவது. வள்ளுவர் அஞ்சாமையை எடுத்து மொழிதலால் அவர் காணும் அரசனுக்குப் போர்ப்பணியும் ஒரு பணி என்பதும் அதற்கு அஞ்சாமை தேவை என்பதும் பெறப்படுகின்றன. அதனால் அவ்

---

1 *'அறிவு அருள் ஆசை அச்சம் மானம் நிறை பொறை ஓர்ப்புக் கடைப்பிடி மையல் நினைவு வெறுப்பு உவப்பு இரக்கம் நாண் வெகுளி துணிவு அழுக்காறு அன்பு எளிமை எய்த்தல் துன்பம் இன்பம் இளமை மூப்பு இகல் வென்றி பொச்சாப்பு ஊக்கம் மறம் மதம் மறவி இனைய உடல்கொள் **உயிர்க்குணம்**'என்னும் ஒருபழ வழக்கு இங்கு ஒப்பிடத் தக்கது. —வை. மு. ச. குறிப்புரை, திருக்குறள் பரிமேலழகர் உரை பதிப்பு, வை. மு. கோ. கம்பெனி.*

வரசன் போர்க்களத்துக்கு நேரே சென்று தானும் படைக்கலம் ஏந்திப் போரிட்டுத் தலைமை தாங்குவோனாகிறான். பண்டை அரசர் ஆட்சியின் தலைவராக மட்டிலும் அல்லாது அமர்க்களத்தில் தலைவரா கவும் இருந்தனர். அந்நிலையினையே வள்ளுவர் குறளிலும் காணு கின்றோம். ஆனால் அவர் காட்டும் அரசன், முழுவதும் அமர்க்களத்துத் தலைவன் அல்ல; இது அரசனுக்கு என வள்ளுவர் கூறும் பிற பண்பு களால் விளக்கமுறுகிறது.

## 4. 5. ஈகை

ஈகை பற்றி இறைமாட்சியில் வள்ளுவர் மூன்று குறள்களில் குறிப்பிடுகிறார். (குறள் : 382, 387, 590) மூன்றாங் குறளில் 'கோடை' என்னும் சொல்லை வழங்குகிறார். கொடை, ஈகை இவற்றிடையே வேறு பாடு இருப்பதாகத் தெரியவில்லை. பரிமேலழகர், ஈகைக்குக் கொடை எனவே பொருள் வரைகிறார். ஈகைக்கு 'வேண்டுவார்க்கு வேண்டுவன கொடுத்தல்' எனவும் அவர் விளக்கம் தருகிறார். இல்லறத்தார்க்கும் ஓரதிகாரம் நிறைய ஈகை வற்புறுத்தப்படுகிறது. (அதிகாரம் 23). ஆனால் அங்கு '**வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை**'யாம். '**அற்றார் அழிபசி தீர்த்தலே**' அங்கு நோக்கம். இறைமாட்சியில் ஈகை விரிந்த பொருளு டையது. இதனைக் காளிங்கர் அழகாகச் சுட்டிக் காட்டுகிறார்; வேறு பாட்டினையும் எடுத்துக் காட்டுகிறார். 'ஈண்டு ஈகை என்பது கீழ்ச் சொன்ன இல்லறத்து இயல்பாகிய கொடை நெறிக்கு அடங்காது தனது பெரும் பொருட்கும் பெருந்தன்மைக்கும் ஏற்குமாறு மற்று அந்தணர் முதலாக இழிகுலத்தாராகிய புலையர் ஈறாக அனைவர்க்கும் வரம்பற வழங்கும் வண்மை என அறிக'. ஆதலால் வேந்தர்க்கு வற்புறுத்தப்படும் ஈகை வறியார்க்கு மட்டும் ஈதல் அல்ல, வேண்டு வார்க்கு வேண்டுவன ஈதல். 'தளர்ந்த குடிக்கு விதை ஏர் முதலியன கொடுத்தலும்' இதனுள் அடங்கும் என்கின்றனர் மணக்குடவரும் பரிப்பெருமாளும். அந்தணர்க்குக் கொடுத்தலும் உண்டு, ஐந்தாம் சாதியர்க்கு கொடுத்தலும் உண்டு; புலவர்க்குக் கொடுத்தலும் உண்டு. ஆதலால் இக்கொடை என்பது அரசர் செய்யும் 'சமுகநலப்பணி' (Social Welfare Activity) ஆகும். பஞ்சம், பட்டினி, புயல், வெள்ளம், மிகுமழை, மழையின்மை, நோய் ஆகியவை நேர்ந்த காலங்களில் அன்று அரசன் நேரே குடிகளுக்குப் பொருள் கொடுத்து உதவினான். துயர் துடைக்கும் பணிகளை மேற்கொள்ள அன்று சமுகநலப் பணித் துறைகள் வேறு இல்லை என்பதை உணர வேண்டும். வறியோரை ஆதரித்தலும் வாய்ப்பற்றோரைப் பேணுதலும் அவன் பொறுப்பே. பிறந்த நாள் விழா, முடிசூட்டு விழா, வெற்றி விழா முதலான காலங்

களில் அரசன் அனைவர்க்கும் அள்ளி வழங்கினன். போர்க்காலங்களில் கொண்டிப் பொருளையும் கொள்ளைப் பொருளையும் பக்கத்திருப் போருக்கே பகிர்ந்தளித்தான். போர் வீரர்கள் ஆர்வத்தோடும் ஊக்கத்தோடும் போரில் ஈடுபட அரசன் கொடைப்பண்பு பெரிதும் துணையாகும். இக்காரணம் பற்றித்தான் போலும் பரிமேலழகர் ‘ஈகை படைக்கு உரித்து’ என உரை விளக்கம் தந்தார். ஆதலால் மன்னர் மாரிவண்கையராக அன்று விளங்கியிருத்தல் வேண்டும். இத்தேவை கருதியே வள்ளுவர் கொடையை அரசர்க்கு ஓர் இயற்பண்பாக ஒரே அதிகாரத்தில் மும்முறை வற்புறுத்தியிருக்கிறார்.

## 4. 6. ஊக்கமுடைமை

இயற்பண்புகளில் வள்ளுவர் விரும்பும் மற்றொரு பண்பு ஊக்க முடைமை. ‘அஃதாவது மனம் மெலிதலின்றி வினைசெய்தற்கண் கிளர்ச்சியுடைத்தாதல்.’

அஞ்சாமை, ஈகை ஆகியவற்றுக்கு வள்ளுவர் தனியே அதிகா ரங்கள் அமைக்கவில்லை. ஆனால் ஊக்கம்பற்றி விளக்க ஓர் அதிகாரம் தனியே அமைத்து உள்ளார்: (அதிகாரம் 60). அரசர் பண்புகளில் ஒன்றாக ஊக்கமுடைமைக்கு அவர் தரும் சிறப்பு இதனால் புலப்படு கிறது. அரசர்க்கு இவ்வூக்கமுடைமை என்னும் பண்பு ஏன் தேவைப் படுகிறது? ஊக்கமுடைமை என்னும் பண்பு பொதுவாக எல்லார்க்கும் வேண்டும் என்றாலும் அரசர்க்கு இரண்டு காரணங்களால் சிறப்பாக வேண்டும் என வள்ளுவர் கருதுகிறார். அரசர்க்கு வேண்டிய பொருள் சேர்ப்பதற்கு ஊக்கம் தேவை.

அரசனது போர்வினைக்கும் ஊக்கம் தேவை. ‘மனம் மெலிதல் இன்றி வினை செய்தற்கண் கிளர்ச்சியுடைத்தாதல்’ இல்லை எனின் போரிலே அரசன் வெற்றியுறுதல் இல்லை. படைக்குத் தலைமை தாங்கிப் போரை நேரில் நின்று நடத்தும் நிலையுடைய அரசர்க்கு இவ் வூக்கம் இன்றியமையாதது. குறளில் காணப்படும் அரசன் இத்தகை யவனே. தலைநகரில் தங்கிக்கொண்டு படைத்தலைவரிடம் பொறுப்பை ஒப்படைத்து விட்டு நாட்டின் எல்லையில் நடக்கும் போரைக் கேட்டறிந்து கட்டளை இடும் அரசன் அல்ல குறள்காட்டும் அரசன். ஆகவே அவனுக்கு ஊக்கம் பண்பாக வகுத்துக் காட்டப்படுகிறது. ‘வல்லான் வகுத்ததே வாய்க்கால்’ என்பதே நாடுகளிடை உறவாக அமைந்திருந்த பண்டைநாளில் போரும், போரில் ஊக்கமும் வேந்தர்க்கு வேண்டும் என வள்ளுவர் வரையறுப்பது உணர்ந்து போற்றுதலுக்கு உரியது.

இவ்வூக்கம் பற்றிப் பின்னர் விளக்கப்படுகிறது. இக்குறளில் கூறப்பட்ட நாலாம் பண்பான அறிவு கல்வியுடன் வைத்து எண்ணப் பட வேண்டியது. அதனைப் பின்னர்க் காணலாம்.

### 4. 7. தூங்காமை

அடுத்த பண்பு தூங்காமை. தூங்காமையாவது நிலத்தினை யாளுங் '**காரியங்களில் விரைவுடைமை**' என்கிறார் பரிமேலழகர். '**காலம் தாழ்த்தாத தன்மை**' என இதனையே விரித்துரைக்கிறார் அறிஞர் மு. வ. மணக்குடவரும் பரிப்பெருமாளும் தூங்காமைக்கு **மடியின்மை** எனப் பொருள் தருகின்றனர். '**மடியின்மை**' என ஓர் அதிகாரம் (61) திருக்குறளில் பின்னர் உண்டு. ஆனால் அவ்வதிகாரத்தில் தூங்காமை என்ற சொல்லே ஆளப்படவில்லை. இது குறிப்பிடத்தக்கது. ஒரு கருத்தைப் பல சொற்களைப் பயன்படுத்தி விளக்குதல் வள்ளுவர் வழக்கம். ஆதலால், இரண்டு சொற்களையும் ஒரே அதிகாரத்தில் ஆளாமையால் வள்ளுவர்க்குத் தூங்காமை வேறு; மடியின்மை வேறு எனக் கொள்ளவேண்டும். மடியின்மையாவது சோம்பல் இன்மை என எல்லோரும் விளக்குகின்றனர். மடியின்மை, குடி நன்மைக்கு வேண்டும் என்று அவ்வதிகாரத்தில் வள்ளுவர் பன்னிப் பன்னிப் பகர்கிறார். விரைவுடைமை வேறு; சோம்பலின்மை வேறு எனப் பிரித்தறியலாம். காரியங்களில் காலம் தாழ்க்காது விரைந்து செய்யும் பண்பு மன்னர் வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதது. இரவு பகல் எந்நேரமும் காவற்சாகாடு உகைப்பார்க்குத் தோன்றும் சிக்கல்களும் அணுகும் ஆபத்துக்களும் பலப்பலவாகும். அவற்றை அவ்வப்போதே தீர்க்காது தள்ளிவைத்தால் அவை மலைபோல் குவியும். தீமையும் திரண்டு வரும். விரைவுடைமையே இந்நிலையில் விடுதலை தரும்.

### 4. 8. துணிவுடைமை

அடுத்துத் தரப்பட்ட பண்பு துணிவுடைமை. இதனை **ஆண்மை யுடைமை** என விளக்குகிறார் பரிமேலழகர். 'ஆண்மையாவது ஒன்றினையும் பாராது கடிதிற் செய்வது ஆகலின் அஃது ஈண்டு உபசார வழக்கால் துணிவு எனப்பட்டது.' துணிவு, செயல் செய்யும் திறமையைச் சுட்டி நிற்கிறது எனப் பரிமேலழகர் கருதுகிறார். இது அரசர்க்கு வேண்டிய அரிய பண்புதான். ஆனால் துணிவுடைமைக்கு வேறு பொருளும் பகரலாம். 'உலகத்துக் குற்றமும் குணமும் ஆராயுங்கால் மயங்கக் காணாது உண்மை ஆராய்ந்து துணிதல் ஒருதலையாக நிலனாள் பவர்க்கு வேண்டும்' என்பர் பரிப்பெருமாள். மணக்குடவருக்கும் ஏற்ற பொருளே இது. அரசர்க்கு வேண்டிய ஓர் அரிய பண்பு இது

என்பதில் ஐயம் இல்லை. ஆனால் காளிங்கர் துணிவுடைமையை 'மனத் திட்பம்' என்கின்றார்; பரிதியார் 'திடமான புத்தி' என்கிறார். அனைத்தும் வேறு வேறு எனக் கொண்டாலும் அரசர்க்கு வேண்டியவையே.

## 4. 9. அறன் இழுக்காமை

இறைமாட்சியின் நாலாம் குறள்,

*அறன்இழுக்காது அல்லவை நீக்கி மறன்இழுக்கா*
*மானம் உடையது அரசு*

என அரசனுடைய பண்பினையும் கடமையினையும் சுட்டிக் காட்டுகிறது. இக்குறளுக்குப் பொருள் கொள்ளுதற்கு ஏற்ப அரசர் பண்புகள் வெளிப்படுகின்றன. உரையாசிரியர்களோ வேறுபட்டுப் பொருள் கொள்ளுகின்றனர்.

'அறன் இழுக்காது' என்னும் தொடருக்குப் பொருள் கொள்ளுதல் எளிதாகத் தோன்றுகிறது. ஆனால் உரைகளில் நுண்ணிய வேறுபாடுகள் புதைந்து கிடக்கின்றன. 'தன்ம நீதி குன்றாமல்' எனப் பரிதியார் வரைவது போன்று இதற்கு எளிதாக உரை வரையலாம். பரிமேலழகர், 'தனக்கு ஓதிய அறத்தின் வழுவாது ஒழுகி' என எழுதுகிறார். ஆனால் காளிங்கர், 'அளித்தற்குத் தகுவதாகிய அறநெறிப் பொருளை வழுவாது செய்து' என எழுதுகிறார். பரிதியார் உரையைவிட மற்றையோர் உரை தெளிவாகவும் விரிவாகவும் இருக்கிறது. பரிமேலழகர்உரைக்கும் காளிங்கர்உரைக்கும் இடையே மற்றொரு பெரு வேறுபாடு உள்ளது. பரிமேலழகர், 'அவ்வறமாவது ஓதல் வேட்டல் ஈதல் என்னும் பொதுத் தொழிலினும், படைக்கலம் பயிறல், பல்லுயிரோம்பல், பகைத்திறம் தெறுதல் என்னும் சிறப்புத் தொழிலினும் வழுவாது நிற்றல்' என விரித்து வரைகிறார். அவர் 'வழுவாது ஒழுகி' எனவும் 'வழுவாது நிற்றல்' எனவும் எழுதுவதால் அவர் உரை அரசருடைய தனிப்பட்ட ஒழுகலாறுகளை—அல்லது பண்புகளைச்—சுட்டிக் காட்டுவதாக அமைகிறது. ஆனால் காளிங்கர் 'அறநெறிப் பொருளை வழுவாது செய்து' என எழுதுவதால் அவர் உரை அரசன் பிறர்க்குச் செய்யும் கடமைகளைச் சுட்டிக் காட்டுவதாக அமைகிறது. பரிமேலழகர், 'ஓதல், வேட்டல், படைக்கலம் பயிறல்' முதலியவற்றை அறம் எனக் குறிப்பதால் அவர் உரை அரசன் பண்புகளைச் சுட்டுவதாகக் கொள்ள வேண்டும். (ஆனால் அவர் உரையில் ஒரு பகுதி அரசன் பிறர்க்குச் செய்யும் கடமைகளையும் சுட்டுகிறது என்பதையும் உடன்படவேண்டும்.) இவ்வாறாக 'அறன் இழுக்காமை',

அரசன்தன் நற்குணத்தைக் குறிப்பிடுவதாகப் பரிமேலழகர்க்கும், அவன்தன் கடமைகளைக் குறிப்பிடுவதாகக் காளிங்கருக்கும் தோன்று கிறது.

'அறன் இழுக்காது' என்னும் தொடரின் அறம் என்னும் சொல்லுக்குப் பரிமேலழகர் வரையும் உரை கவனிக்கத்தக்கது. அவர் வருணாசிரம தருமத்தையே அறம் என உரைக்கிறார். தருமசாஸ்திரங்கள் நால்வருணத்தாரின் குணங்களையும் கடமைகளையும் வரையறுத்துச் சொல்லுகின்றன. இவற்றைக் கௌடலீயம் அப்படியே எடுத்து மொழிகிறது.[2] பரிமேலழகர் அதனை இங்கு அப்படியே பின்பற்றுகிறார். 'ஓதல், வேட்டல், ஈதல், படைக்கலம் பயிறல், பல்லுயிரோம்பல், பகைத்திறம் தெறுதல்' என்பவை சத்திரியராகிய அரசர்க்கு வரையறுக்கப்பட்டவை. தருமசாஸ்திரங்களில் சொல்லப்பட்டவை என்பதைப் புலப்படுத்தவே பரிமேலழகர் 'தனக்கு ஓதிய அறம்' என எழுதுகிறார். மற்ற உரையாசிரியர்கள் எவரும் அரசனுக்கு ஓதிய எவற்றையும் சுட்டிக் காட்டவில்லை; அவர்கள் பொதுப்படவே 'அறம்' 'தன்மநீதி' என எழுதிச் செல்லுகின்றனர். வள்ளுவர்க்கும் நால் வருணம் உடன்பாடில்லை என்பது வெள்ளிடை மலை.

## 4. 10. அல்லவை நீக்குதல்

இக்குறளில் அடுத்துக் காண வேண்டுவது 'அல்லவை நீக்கு தல்'. பரிமேலழகர், 'அறன் அல்லவை தன்நாட்டின் கண்ணும் நிகழாமல் கடிந்து' என இதற்கு உரை வகுக்கின்றார். மேலும் அவர்,

---

2 "இத்திரையியாற் கூறப்படும் அறம், நால்வகை வருணங்களையும் ஆச்சிரமங்களையும் அவ்வவற்றிற்குரிய அறங்களில் நிலைப்படுத்தலால் அவற்றிற்கு உபகாரமாக உள்ளது.

**வருணதருமங்களாவன :—** அந்தணர்க்கு, ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்னும் இவ்வாறுமாம். அரசர்க்கு, ஓதல் வேட்டல் ஈதல் படைக்கலம் பயிறல் உயிர்களைக் காத்தல் என்னும் இவ்வைந்துமாம். வணிகர்க்கு, ஓதல் வேட்டல் ஈதல் உழவு பசுக்காவல் வாணிகம் என்னும் இவ்வாறுமாம். சூத்திரர்க்கு, இருபிறப்பாளர் மூவர்க்கும் பணிபுரிதல், உழவு, பசுக்காவல், வாணிகம், காருகன்மம், குசீலவகன்மம் என்னும் இவையாம்.

**ஆச்சிரம தருமங்களாவன :—** இல்லறத்தானுக்குரியவை ; தன் வருணவொழுக்கத்தை மேற்கோடல், ஒத்த குலத்தில் வேறுபட்ட கோத்திரத்தில் மணஞ்செய்து கோடல், இருதுகாலத்தில் மனைவியோடு கூடல், தென்புலத்தார் தெய்வம் விருந்து பணியாளர் என்னும் இவர் பொருட்டு வேண்டுவன கொடுத்தல், எஞ்சியது உண்டல் என்னும் இவையாம்.

**பிரமசாரிக்குரியன :** வேதமோதல், அங்கிவினை, நீராடல், ஐயமேற்றல், விரதம், உயிருள்ளவரை ஆசிரியன் பக்கல் இருத்தல், அவன் இல்லையானால் அவ்வாசிரியனுடைய புதல்வன் பக்கலிலாதல், ஒத்த சாகையினனாகிய ஒரு பெரியோன் பக்கலிலாதல் இருத்தல் என்னும் இவையாம்.

'அல்லவை, கொலை களவு முதலாயின' என அதனையே விளக்குகிறார். பரிமேலழகர் கருத்துப்படி அல்லவை நீக்குதலாவது அரசன் தன் நாட்டிற்குச் செய்யும் பணியாகும்; அவனது கடமையாகும். ஆனால் மணக்குடவர் இத்தொடர் அரசன் பண்பே பேசுகிறது என்கின்றார். அவர் 'அறம் அல்லாத காமவெகுளியைக் கடிந்து' என எழுதுவதால் இது தெளிவாகிறது. பரிப்பெருமாள் 'காமவெகுளி மயக்கம்' என்னும் மூன்றும் கடியப்பட வேண்டுவன என்கிறார். மணக்குடவரும் பரிப்பெருமாளும் மன்னன் இம்முக்குற்றங்கள் நீங்கித் தூயோனாக விளங்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

## 4. 11. மறனும் மானமும்

இக்குறளில் அரசர்க்கு உரிய பண்பாக அடுத்துக் கூறப்படுவது 'மறன் இழுக்கா மானமுடைமை.' 'மானம் உடையது அரசு' எனத் திருக்குறள் அஃறிணையில் முடிந்தாலும் 'மானமுடையான் அரசன்' எனவே எல்லா உரையாசிரியர்களும் உயர்திணையில் முடிக்கின்றனர். வீரமுடைமை, மானமுடைமை என்னும் பண்புகள் அஃறிணைக்கு ஏலாமை கருதி அவர்கள் அவ்வாறு உரைவகுக்கின்றனர் போலும். மறன் இழுக்கா மானமானது 'வீரத்தின் வழுவாத தாழ்வின்மை' என்கின்றார் பரிமேலழகர். மானத்தையும் தனியே அவர் விளக்குகிறார். 'அஃதாவது எஞ்ஞான்றும் தம் நிலையில் தாழாமையும் தெய்வத்தால் தாழ்வு வந்துழி உயிர் வாழாமையும் ஆம்' (மானம் என்னும் அதிகாரத்தின் முன்னுரை). 'மறன் இழுக்கா மானம்' என்னும்

---

**வானப்பிரத்தனுக்குரியன :** பிரமசரியம், நிலத்திற்படுத்தல், சடைவளர்த்தல், தோலுடுத்தல், அங்கிவினை, நீராடல், தென்புலத்தார் தெய்வம் விருந்துகளை உபசரித்தல், கனி கிழங்கு முதலியன உண்டல் என்னும் இவையாம்,

**துறவிக்குரியன :** பொறியடக்கம், வினையொழிவு, பொருள் சிறிதுமின்மை, எவருடனும் கூடாமை, பலவிடங்களில் ஐயமேற்றல், காடுறைதல், அகந்தூய்மை, புறந்தூய்மை யென்னும் இவையாம்.

**எல்லோரும் மேற்கோடற்குரியன :-** பிறரைத் துன்புறுத்தாமை, வாய்மை, தூய்மை, அழுக்காறுமை, இரக்கமுடைமை, பொறுமை யென்பனவாம்.

கடமையை மேற்கோடலால் இம்மை நலமும், மறுமையின்பமும், வீட்டின்பமும் உண்டாம். அதனைக் கைவிடில் வரையறைக்கிகந்த கலப்பால் உலகம் அழிவெய்தும்.

**சுலோகங்கள் :-**

1) ஆதலின் அரசன் மக்களை அவர்தம் கடமையினின்றும் பிறழ விடலாகாது. அவர்தம் கடமையை நன்கு மேற்கொள்ளச் செய்யின் இம்மையிலும் மறுமையெனும் இன்பமெய்துவான்.

2) வரையறுக்கப்பட்ட ஆன்றோர் ஆசாரியமித்தை உடையதும், நன்கு தூய்மை செய்யப்பட்ட வருணாச்சிரமநிலைகளை உடையதும், திரையியாற்காக்கப்பட்டதுமாகிய இவ்வுலகம் அழிவின்றி இன்பமெய்தும்.'' —பக்கம் 26–32, கௌடலீயம் பொருணூல்.

தொடரால் வள்ளுவர் வீரமுடைமையும் மானமுடைமையும் ஆகிய இரு பண்புகளும் வேந்தர்க்கு வேண்டும் என வற்புறுத்துகிறார் எனல் வேண்டும். இது உரையாசிரியர்கள் விளக்கத்தால் பெறுவது.

மறன் என்ற சொல்லுக்கு வீரம் எனப் பொருள்படுத்துகின்றனர் உரையாசிரியர்கள். வீரம் என்ற சொல்லை வள்ளுவர் தம் நூலில் எங்கும் ஆளவில்லை. வீரமுடைமை அல்லது மறனுடைமையை (மானமுடைமைக்கு அடையாக இங்கு மொழிந்தது தவிர) வள்ளுவர், இறைமாட்சியிலோ அல்லது வேறு எங்குமோ அரசர்க்கு உரிய பண்பாகத் தனியே எடுத்து மொழியவில்லை. அரசர்க்குப் பல்வேறு பண்புகளை எடுத்து மொழிந்தவர் வீரத்தினை எடுத்து மொழியாமை எண்ணிப் பார்க்கத்தக்கது. வள்ளுவர்க்குப் போர்க்களத்து வீரம் பெரிதாகத் தோன்றவில்லை. அவர் இகலையும் பகலையும் விரும்பவில்லை; அவற்றை அவர் 'நோய்' எனக் கடிகிறார்: (அதிகாரம் 86). 'கொடை அளி செங்கோல் குடியோம்பல்' ஆகியவற்றை வேண்டும் வள்ளுவர்க்குப் போரும் வீரமும் வெறுக்கத்தக்கன போலும். 'கொல்லாமை குவலயமெல்லாம் ஓங்க வேண்டும்' என வேண்டுவோர்க்கு வீரம் வேண்டாத ஒன்றுகும் என்பதில் வியப்பில்லை.

வள்ளுவர்க்கு வீரம் போற்றத்தக்கதாக இல்லாமற்போனாலும், உரையாசிரியர்கள் அதனைப் பண்பாடுடையதாகத் தீட்டிக் காட்டுகின்றனர். பரிமேலழகர் சிந்தை கவரும் சிந்தாமணிச் செய்யுள் ஒன்றை எடுத்துக் காட்டி வீரத்திலும் விழுப்பமுண்மையை விளக்குகிறார்:

*வீறுஇன்மையின் விலங்காம் என மதவேழமும் எறியான்;*
*ஏறுண்டவர் நிகராயினும் பிறர்மிச்சில்என்று எறியான்;*
*மாறுஅன்மையின் மறம்வாடும் என்று இளையாரையும் எறியான்;*
*ஆறுஅன்மையின் முதியாரையும் எறியான் அயில் உழவன்.*

— *சீவக சிந்தாமணி, 2261*

'அழியுநர் புறக்கொடை அயில்வேல் ஓச்சான்' (புறப்பொருள் வெண்பா மாலை, 55) வீரன் என மேலும் அதனைச் சான்று தந்து விளக்குகிறார் பரிமேலழகர். இவ்விளக்கங்களை உடன்படுவோமானால் வள்ளுவர் காண விழைந்த மறம், அறம் கூடிய மறம் ஆகிறது.

மானமுடைமையை மன்னர்க்கு உரிய பண்பாக வள்ளுவர் வகுத்திருத்தல் சிந்தனைக்கு உரியது. 'இறைமாட்சி'யில் அவர் 'மறனிழுக்கா மானம்' வேண்டும் என்கிறார்; 'குற்றங்கடிதலில்' 'மாண்பிறந்த மானம் இறைக்கு ஏதம்' என்கிறார். மன்னர்க்கு வேண்டும் மானத்தை அவர் பின்னர் விரித்துரைக்கவில்லை. ஆனால் குடியியலில் (ஒழிபியலில்) 'குடிமை'யை அடுத்து 'மானம்' என்னும்

ஓரதிகாரத்தை அவர் அமைத்துள்ளார். அதிலே மன்னரைப் பற்றிப் பேச்சில்லை. ஆனால் மன்னர்க்குப் பொருந்தும் கருத்துக்கள் இருக்கலாம். 'ஒட்டார்பின் சென்று வாழ்தலும்' (967), 'இகழ்வார்பின் சென்று நிலை'யும் (966) அரசர்க்கு இருக்கும் பகைவரைக் குறிப்பன போன்றுள்ளன.

மானமாவது 'தம் நிலையின் தாழாமையும் தாழ்வு வந்துழி உயிர் வாழாமையும்' ஆகும். இப்பண்பு தனிமனிதற்கு வேண்டிய அரிய பண்பாகலாம். இத்தகையதையே வள்ளுவர் 'மானம்' என்னும் அதிகாரத்தில் (97) விளக்குகிறார் போலும். இம்மானம் தனிமனிதன் என்ற முறையில் மன்னனுக்கும் தேவை எனலாம். ஆனால் அதனால் நாட்டுக்கும் மக்களுக்கும் அரசுக்கும் என்ன பயன்? நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் அல்லவோ அரசன்? நாட்டுக்கும் மக்களுக்கும் தாழ்வு வந்தவழி அரசன் எங்ஙனம் நடந்துகொள்ள வேண்டும்? இங்கு வினாவிற்கே இடம் இல்லை. நாட்டுக்கும் மக்களுக்கும் தாழ்வு வாராமற் காப்பது மன்னர்க்குக் கடன். ஆதலால் அரசர் பொறுப்பு நாட்டின் மானத்தைக்காத்தல்; நாட்டின் மானமே தன்மானம் எனப் பேணல். உலக அரங்குகளிலும் போர்க்களங்களிலும் நாட்டின் தாழ்வின்மையினை மன்னர் போற்றுதல் வேண்டும். மானமுடைமை என்னும் பண்பிற்கு இவ்வாறே பொருள் கொள்ள வேண்டும் என்பர் குறளுக்குத் தெளிவுரை தந்த அறிஞர் டாக்டர் மு. வ. அவர்கள் :

"இன்னும் ஆராய்ந்தால், மானம் என்பது தன்குடி, தன் நாடு முதலியவற்றின் பெருமையையும் உலக வாழ்க்கைக்கு அடிப்படையான உயர்ந்த கொள்கைகளின் பெருமையையும் காக்கப் பயன்படுவதே அல்லாமல், தன்னல அடிப்படை கொண்ட தன் பழி, தன் புகழ், தன் ஆக்கம், தன்கேடு என்பவற்றைப் பொருளாகக் கொள்வது அன்று. தன்னைவிடத் தன்குடி பெரியது, அதைவிட நாடு பெரியது, அதைவிட உலகம் பெரியது, அதைவிட உலகவாழ்விற்கு அடிப்படையான ஒப்புரவு பெரியது என்று எண்ணுவதே மானமாகும்; அவ்வாறு உயர்வகையான மானமுடையவர்கள் செழித்தோங்குவதை எந்த நாட்டிலும் காணலாம்; ஒப்புரவு நாடு குடி என்பவற்றை மறந்து தன்னலம் கொண்டு, தன் பழி, தன் புகழ் என்னும் குறுகிய எல்லையில் மான உணர்வைக் கொண்டவர்கள் நாளுக்கு நாள் தேய்ந்து அழிவதை எந்த நாட்டிலும் காணலாம். இந்த உண்மையை உணர்ந்தே திருவள்ளுவர் பொதுவாழ்வைக் கூறும் பொருட்பாலில் மானத்தைப் பற்றி விளக்கியுள்ளார்." —பக்கம் 233 - 234, "**திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்.**"

### 4. 12. காட்சிக்கு எளிமை

காட்சிக்கு எளிமையையும் கடுஞ்சொல் இன்மையையும் அரசர் பண்பென அடுத்தகுறள் விளக்குகிறது. காட்சிக்கு எளிமையை வள்ளுவர், வேந்தர்க்கு வேண்டும் என வகுப்பதால், அவ்வேந்தர்கள் அன்று காட்சிக்கு அரியவராக, காணுப்பொருளாக, அரண்மனை வாழ் வோராக இருந்ததில்லை என அறியலாம். உண்மை எவ்வாருனாலும் வள்ளுவர் அந்நிலையை விரும்பவில்லை என்பது மட்டும் தெளிவு. அரசன் யாருக்கு எளியனுக இருத்தல் வேண்டும்? 'முறை வேண்டி-னூர்க்கும் குறை வேண்டினூர்க்கும் காண்டற்கு எளியனுய்' அரசன் விளங்குதல் வேண்டும் என்கிறுர் பரிமேலழகர். 'முறை வேண்டினுர், வலியரால் நலிவெய்திஞர். குறை வேண்டினுர், வறுமையுற்று இரந்தார்' என மேலும் அவர் விளக்குகிறுர். அரசன் எங்ஙனம் எளியனுய் இருத்தல் வேண்டும்? அதனையும் விளக்கி வைத்திருக்கிறுர் அவ்வுரையாசிரியர்: 'காண்டற்கு எளிமையாவது பேரத்தாணிக்கண் அந்தணர் சான்ருேர் உள்ளிட்டாரோடு செவ்வியுடையனுய் இருத்தல்.' வள்ளுவர் இவ்வளவு விளக்கங்கள் தாராமற் போனுலும் அவர் விதிக்கும் காட்சிக்கெளிமைக்கு இவைதான் விளக்கங்களாக அமைதல் முடியும்.

'காட்சிக்கு எளிமை' என்னும் பண்பால் வள்ளுவர் அரசர் பற்றிச் சில கருத்துக்களை வற்புறுத்துகிருர். அரசன் 'குடியானபேர்-களின்' தேவைகளை நேரே கேட்க வேண்டும். அதன் பொருட்டு, அவர்கள் அரசனை விரைந்து காணுமாறு, தடையின்றிக் காணுமாறு, தயங்காது காணுமாறு, முயற்சியின்றிக் காணுமாறு அரசன் விளங்கவேண்டும். தேவைகளை — குறைகளையும் முறை களையும் — கேட்கும் வகையில் கேட்டும், தீர்க்கும் வகையில் தீர்த்தும் வைத்தல் பொருட்டு அறிவுரை வழங்கும் அமைச்சர் ஆன்ருேருடன் அத்தாணிக்கண் அவன் விளங்க வேண்டும்.

அன்று அரசனே அதிகாரம் அனைத்தும் கொண்டவன்; முறை வழங்கும் முதல்வோனுகவும் குறை தீர்க்க வல்லோனுகவும் அவன் விளங்கினுன். ஆதலால் பொதுமக்களுக்கு அவன் ஒருவனே புரவலன் ஆவான்; அனைவர்க்கும் அவன் ஒருவனே ஆதரவாவான். அத் தகையவன் அணுகுதற்கு அரியனுக அமைவானுயின் குடிமக்கள் பெறும் பயன் யாதும் இல்லை. காலம் கடந்து குறை நீக்க வந்தாலும் பயன் இல்லை. குறை கடுமைப்பட்டபின் நீக்கவந்தாலும் பயன் இல்லை. ஆதலால் காட்சிக்கு எளிமை அரிய பண்பாகிறது. மக்கள் நலமே மன்னவன் நோக்கமானுல் காட்சிக்கு எளிமை கட்டாயம் தேவைப்

படுகிறது. அற்றைக் காலத்தில் அரசுஞ் சிறிது; அலுவல்களுஞ் சில; நாடுஞ் சிறிது; மக்களுஞ் சிலர். இந்தச் சூழ்நிலையில் அரசனே அனைத்துக்கும் நேரே பொறுப்பாகிறான். இந்நிலையில் காட்சிக்கு எளிமை இல்லாது போனால் கோனாட்சி கொடுங்கோலாட்சியாகத்தான் விளங்கும். ஆதலால் தான் வள்ளுவர் காட்சிக்கெளிமையை மன்னர்க்கு உரிய பண்பாக வகுத்தளித்தார். காட்சிக்கெளிமை மன்னவனை மக்களுக்கு நெருக்கமுள்ளவன் ஆக்குகின்றது; குடிகளின் துன்பு துயரங்களை நேரில் கண்டு தீர்வு காண வழிகோலு கிறது. 'குடிமக்களுக்கு மன்னவன் நம்மவன்; நமக்கே ஆள்பவன்' என்ற உணர்வு இதனால் தோன்றும். அந்த உணர்வே அவர்கள் வாழ்க்கைப் பயிருக்கு வான்துளி.

## 4. 13. இன்சொலுடைமை

அரசன் காட்சிக்கு எளியனாக இருத்தலோடு கடுஞ்சொலன் அல்லனாகவும் இருத்தல் வேண்டும் என அதே குறளில் வள்ளுவர் வகுக்கிறார். இவ்வாறு எதிர்மறையில் கூறப்படும் கருத்தினையே உடன் பாட்டிலும் 'இன்சொலால் ஈத்தளிக்க வல்லான்' என மீட்டும் ஒரு குறளில் அவர் வற்புறுத்துகிறார். வள்ளுவர் இப்பண்பை இருமுறை வற்புறுத்துவதால் அதன் அருமைப்பாட்டை நாம் உணர்தல் வேண்டும். காவலன் காட்சிக்கு எளியனாய் இருந்து குடிகளும் அவனைக் கண்டபின் அவன் கடுஞ்சொல் வீசினால் ஒருபயனும் இல்லை; குறை வேண்டவும் முடியாது; முறைவேண்டவும் முடியாது.

இக்குறள் 'உலகத்தார் மாட்டு ஒழுகும் திறம் கூறுகிறது' என்பர். வள்ளுவர் கண்ட அரசன் குடிகளோடு நெருங்கிய உறவு கொண்டவன். அவ்வுறவு பண்பும் பயனும் உடையதாய் இருத்தல் வேண்டும் என்னும் வேணவாவால் வள்ளுவர் இவ்விரு பண்புகளையும் வகுத்துத் தருகிறார். மக்களுக்காக மன்னன் என்றிருப்பானானால் அவன் பண்பு இதுவாகவே இருக்கும்.

எளிமையோடும் இனிமையோடும் உலகத்தார் மாட்டு ஒழுகும் அரசனால் உலகத்தார்க்கு மட்டும் நன்மை என்பதில்லை. நாடாளும் மன்னனுக்கும் நன்மை உண்டு: 'மீக்கூறும் மன்னன் நிலம்'. நிலம் மன்னனை மீக்கூறும் என்கிறார் ஓர் உரையாசிரியர். நிலவுலகத்தார் மன்னனைப் புகழ்ந்து கூறுவர் என்பது இதன் பொருள். உலகம் மீக் கூறும் மன்னனது நிலத்தை என்கிறார் பரிமேலழகர். இதுவே பாராளும் மன்னனுக்குச் சேரும் பயன். எவ்வாறு மீக்கூறும் உலகம்? அருமையாக எழுதுகிறார் பரிமேலழகர்: 'மீக்கூறுதல்-இவன் காக்கின்ற

நாடு, பசி பிணி பகை முதலிய இன்றி யாவர்க்கும் பேரின்பம் தருதலின் தேவருலகினும் நன்று என்றல்'. பரிமேலழகர் நீங்கிய பண்டை உரையாசிரியர்கள் மக்கள் மன்னனையே உயர்த்துச் சொல்லுவர் எனக் கருதுகின்றனர். உலகம் புகழும் மன்னனையே வள்ளுவர் உவந்து போற்றுகிறார்.

## 4. 14. செவிகைப்பச் சொற்பொறுத்தல்

'செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடையாளன் கவிகைக் கீழ்த் தங்கும் உலகு' என இப்பண்பினை வள்ளுவர் ஒரு குறளாக இயற்றிப் போற்றுகிறார். அரசனே தலைமகன்; பொதுமக்கள் புரவலன்; நாட்டின் காவலன். ஒப்பாரும் மிக்காரும் இல்லா உயர் மகன்; அனைத்து அதிகாரங்களும் வல்லமைகளும் கொண்ட கோமகன். அவன் செவிகள் கசக்குமாறு சொற்சொல்ல வல்லார் அவன் நாட்டில் இருத்தல் இயலாது; எதிர்பார்க்கவும் முடியாது. ஆனால் வள்ளுவர் அத்தகையதொரு நிலையினை எதிர்பார்க்கிறார். அது மட்டுமல்ல; அதனை ஒட்டி அரசனுக்கும் அறிவுரை தருகிறார். தன் செவி கசக்கக் கேட்ட சொற்களை அரசன் பொறுத்தல் வேண்டும் என்றும் அப்படிப் பொறுக்கும் பண்புடையாளர் 'மண் முழுதும்தானே ஆளும்' என்றும் வள்ளுவர் பண்பும் பயனும் இது என விளக்குகிறார். உலகத்து மக்கள் அத்தகைய மன்னனையே மதிப்பர்; போற்றுவர் என்பது இதன் பொருள்.

செவிகைப்பச் சொற்பொறுத்தல்—காது கசக்க யார் சொல்லும் சொல்லினை அரசன் பொறுத்தல் வேண்டும்? வள்ளுவர் இவ்வதிகாரத்தில் விளக்கம் தரவில்லை; உரையாசிரியர்களை அணுகுகின்றபோது அவர்கள் தரும் விளக்கங்கள் நம்மைச் சிந்தனையில் ஆழ்த்துகின்றன. வள்ளுவர் கண்ட அரசியலில் பல நுணுக்கங்களை அவற்றால் உணரலாம்.

'இடிக்கும் துணையாயினார் சொற்களைத் தன் செவி பொறாதாகவும் விளைவு நோக்கிப் பொறுக்கும் பண்புடைய அரசனது குடை நிழற்கண்ணே தங்கும் உலகம் என்றவாறு' என உரை தருகிறார் பரிமேலழகர். அவர், 'செவிகைப்ப என்பதற்கு ஏற்ப இடிக்குந் துணையார் என்பது வருவிக்கப்பட்டது' என உரை விளக்கமும் தருகிறார். 'இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே கெடுக்கும் தகைமையவர்' என்னும் 'பெரியாரைத் துணைக்கோடல்' அதிகாரத்துக் குறளினை (447) நினைவு கூர்ந்து அவர் இவ்வாறு விளக்கம் தருகிறார். ஆதலால் 'இடிக்கும் துணையார்' என்பார் 'அமைச்சர் புரோகிதர்'

என்பாராம். பெரியாரைத் துணைக்கோடல் என்னும் அதிகாரத்தின் முன்னுரையில் அவர் இவ்வாறு எழுதுகிறார். அமைச்சர் புரோகிதர் ஆகியோர் அரசர்க்கு ஆட்சிப் பணியில் அறிவுரை வழங்குவோராவர். அற நூல்களிலும் நீதிநூல்களிலும் புலமை பெற்ற அமைச்சரும் புரோகிதரும் அரசனுக்கு அறநீதிகளை எடுத்துப் புகட்டுவர். அவை அரசன் விருப்புக்களுக்கும் வினைகளுக்கும் எதிரானவையாகக் கூட இருக்கலாம். அவை அறமும் நீதியும் ஆதலால் அரசன் அவற்றை—அவை கசப்பானவையானாலும்—பொறுத்தல் கடன். அப்படிப் பொறுப்போன் மண் முழுதும் தானே ஆளுவான் என்கிறார் பரிமேலழகர். அது எங்ஙனம் கூடும்? 'அறநீதிகளில் தவறாமையின் மண் முழுதும்தானே ஆளும்'. அமைச்சரும் புரோகிதரும் அறநீதிகளைப் புகட்ட அவை கசப்பனவாயினும் பொறுத்து அவற்றின்படி நாடாளுவானானால் மண் முழுதும் தானே ஆளும் வாய்ப்பினை அவன் பெறுவான் என்பது பரிமேலழகர் வாதம். அற நீதிகளின்படி ஆளும் அரசனை மக்கள் அனைவரும் நாடிச் செல்லுவர் என்பதே 'தானே ஆளும்' என்பதன் பொருளாகும். இதற்கு ஏற்பவே வள்ளுவர் 'தங்கும் உலகு' என உலகினை எழுவாயாக்கி அதன் வினையாக இக்கருத்தினை உரைக்கிறார்.

வேந்தன் யார் சொல்லைப் பொறுக்க வேண்டும் என்பதற்கு மணக்குடவர் தரும் உரை இது: 'தன் செவி வெறுக்கும்படியாகப் பிறர் செய்த குற்றங்களைக் கேட்டுவைத்தும் அதனைப் பொறுக்கவல்ல குணமுடைய வேந்தன்'. இங்குப் பிறர் என்றால் குறிப்பாக யார் என்பது தெரியவில்லை. பிறர் செய்த குற்றங்களை அரசன் ஏன் பொறுக்க வேண்டும் என்பதும் தெளிவுபடவில்லை. மணக்குடவர் உரை இவ்வாறு வெற்றெனத் தொடுத்தலாக நிற்கிறது.

பரிப்பெருமாள், 'இஃது அமாத்தியர் குற்றம் செய்தார் என்று பலரும் சொல்லுங்கால் பலவாற்றானும் பொறுக்க வெண்டும் என்றது' மணக்குடவர் உரைக்கு விளக்கம் வரைவார் போலத் தருகிறார். இவ்வுரை மணக்குடவர் உரையைவிடத் தெளிவுடையதுதான். ஆனால் அமாத்தியர் (அமைச்சர்) குற்றம் புரிந்தால் அரசன் ஏன் பொறுக்க வேண்டும்? தன்கீழ்ப் பணிபுரியும் அமாத்தியரைக் கண்டித்துத் திருத்துதல் அல்லவோ அரசன் கடமை? ஆட்சி அலுவலில் நடுவணான ஓரிடத்தைப் பெற்றிருக்கும் அமைச்சரிடம் மென்மையாக நடந்து ஏவல்கொண்டு 'காவற் சாகாடு உகைத்தல்' அரசன் பொறுப்பாக இருக்குமோ? 'அமாத்தியர் குற்றம்செய்தார் என்று பலரும் சொல்லும்' அளவு அரசன் பொறுக்க வேண்டுமோ? அரசன் அமாத்தியர்க்கு

அஞ்ச வேண்டுமோ? இவ்வாறுன பரிப்பெருமாள் உரையும் தக்க உரையாகத் தோன்றவில்லை. அவர் உரையில் அவருக்கே நிறைவேற்-படவில்லை போலும். ஆதலால் தான் 'அன்றியும் மந்திரி புரோகிதர் அடர்த்துச் சொல்லும் சொற்களைப் பொறுக்க வேண்டும் என்பாரும் உளர்' எனப் பிறர் உரையையும் தழுவுகிருர்!

இக்குறளுக்குப் பரிதியார் உரையே பாராட்டத்தக்கதாக உள்ளது. 'பொறுத்தற்குரிய சொல்லைக் குடியானபேர் வாசலில் பதினெட்டுப் பேர் சொன்னுலும் குற்றம் பாராட்டாமல் பொறுப்பான்......' என்பது அவர் உரை. அரசனது அரண்மனை வாயிலில் குடிமக்கள் பலர் கூடிநின்று முறை வேண்டியும் குறை வேண்டியும் அரசனைத் தூற்றிப் பேசினுலும் அரசன் பொறுத்தல் வேண்டும் என்கிருர் பரிதியார். 'இறைகடியன் என்றுரைக்கும் இன்னுச்சொல்' (குறள் 564) சிலபோது மக்கள் மாட்டு நிகழலாம். அவ்வாறு நிகழாமற்காத்தல் அரசனது கடமை; அவன் காவாது இன்னுச்சொல் நிகழுமாயின் அவன் 'உறைகடுகி ஒல்லைக் கெடும்' (குறள் 564). ஆனல் நிகழுமாயின் அரசன் அவ்வின்னுச் சொல்லை-செவிகைக்கும் சொல்லை - பொறுத்தல் வேண்டும். குடிமக்கள் வீணே பழிதூற்ற மாட்டார்கள். துன்பம் உற்றபோது மட்டும் அரசன் துணை வேண்டி முறையிடுவர்'. பண்டைக் காலத்தில் நாட்டின்மீதுள்ள பற்றைவிட மன்னன்மீதே பற்று மிகுந்திருந்தது; நாட்டுக்காக என்பதைவிட நாடாளும் மன்னனுக்காக மக்கள் வாழ்ந்தனர் என்பர் வரலாற்றறிஞர்.[3] அத்தகைய மக்கள் கூறும் குறை பொருளுடையதாய் இருத்தல் வேண்டும். ஆதலால் மன்னனும் அவற்றைப் பொறுத்தல் வேண்டும். குடிகள் மாட்டு அன்பும் அளியும் கொண்ட மன்னன் பொறுமையே பூணுவான். கசக்கும் மொழிகளைப் பொறுக்கும் பண்புடையானே அவற்றைக் களையவும் முன் வருவான். அவற்றை பொறுத்தலே களைதல் பொருட்டு எனலாம்.

இன்றைய குடியாட்சியில் எழுத்துரிமையும் பேச்சுரிமையும் அரிய செல்வங்களாகக் கருதப்படுகின்றன. குடியாட்சியின் அடையாளமாக, இலக்கணமாக இவை கொள்ளப்படுகின்றன. இவை குடிமக்களின் அடிப்படை உரிமைகளாக அரசியற் சட்டங்களில் இடம் பெற்றுள்ளன. இவற்றைப் பயன்படுத்தி வாழ்வன எதிர்க்கட்சிகள். எதிர்க்கட்சிகள் அரசினரின் குறை நிறைகளை விமர்சனம் செய்து மக்கள்சார்பாகக்

3 "Patriotism as we know it did not exist. A man fought not for his homeland, but for his king and his personal honor".

—P. 269, KCEI.

குறை வேண்டியும் முறை வேண்டியும் போராடும். இவ்வெதிர்க் கட்சிகளின் விமர்சனம் செவி கைக்கும் சொற்களாகவும் இருக்கலாம். இவற்றால் அரசினர் மருளவும் கூடாது;மருட்டவும் கூடாது. அவற்றை அவர்கள் செவிகொடுத்துக் கேட்டுக் களைய முற்படுதல் வேண்டும். இதுவே குடியாட்சியின் அழகு. இக்குடியாட்சியின் அழகினையே செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடையாளனது முடியாட்சியிலும் காணுகின்றோம். வள்ளுவர் கண்ட வேந்தன் முடி சூடியும் குடிகளுக்காக ஆளும் தலைவன். அறத்தின் அடிப்படையில் அரசியலை அமைக்கும் வள்ளுவர் காட்டும் அரசன் இத்தகையோனாகவே இருப்பான். இதனையே பரிதியார் உரை விளக்குகிறது.

காளிங்கர் என்னும் உரையாசிரியர் செவிகைப்பச் சொற்பொறுத்தலுக்கு மற்றொரு விளக்கம் தருகிறார். 'நெறியல்ல செய்வோர் ஆகிய மற மக்களும் கொடுங்கோன்மை செய்வோராகிய மற மன்னரும் தனது செவிகைப்பச் சொல்லுவன எல்லாம் வரையாது பொறுத்து ஒழுகும் மரபுடை மன்னவன் ஆவன்......' என்பது அவர் விளக்கம். இவ் விளக்கத்தில் சிறப்பு ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. மற மக்களும் மற மன்னரும் செவிகைப்பப் பேசுதல் இயல்புதான். அவர்கள்தான் உட்பகையும் வெளிப்பகையும் ஆயினரே. அவர்கள் பேசும் கசப்பு மொழிகளை அரசன் ஏன் பொறுத்தல் வேண்டும்? அவர்களைக் களைய அல்லவோ அவன் முனைதல் வேண்டும்? காளிங்கர் பொறுத்தலுக்கு ஒரு காரணத்தையும் தருகிறார்: 'இதனான் மற்று இவனது பொறை முனிவரைப் போலன்று; மற்று அஃது எங்ஙனமோ எனின் அப்பொழுதைக்கு வரையாது நின்று அதனை ஓர்ந்துணர்ந்து பின் செறுப்போரைச் செறுத்தும் பொறுப்போரைப் பொறுத்தும் இங்ஙனம் ஒழுகுதலே ஆசிரியர் கருத்து என்றவாறு.' ஓர்ந்துணர்தலுக்குத்தான் அரசன் பொறுத்தலை மேற்கொள்ளுகிறார் என்கிறார் காளிங்கர். மற மக்களையும், மற மன்னரையும் ஒறுத்தல் வேண்டுமேயல்லாது பொறுத்தல் வேண்டியிராது. இவர்கள் மாட்டு ஓர்ந்துணர்தலுக்கு என்ன இருக்கிறது? ஒருகால் பொறுத்தலினால் திருத்தல் இயலுமோ? அவ்வாறில்லையாயின் காளிங்கர் உரை இக்குறளுக்கு ஏற்றம் தருவதாக இல்லை. வள்ளுவர் உள்ளம் பரிதியார் எடுத்துக் காட்டுவது போன்று குடிமக்கள் நலம் நாடிச்செல்வதே ஆகும்.

## 4.15. ஊக்கமுடைமை

இப்பண்பாவது 'மனம் மெலிதல் இன்றி வினை செய்தற்கண் கிளர்ச்சியுடைத்தாதல்' என்கின்றார் பரிமேலழகர். 'ஊக்கமுடைமை

யாவது ஒரு வினை செய்யுங்கால் அதனது அருமையை ஓராது இவ்வாறு செய்யக்கடவேன் என்று கருதும் கருத்துடைமை' – இவ்வாறு விளக்குவார் பரிப்பெருமாள். இவற்றால் ஊக்கம் என்பது ஓர் உள்ளப் பண்பு என்பது தெளிவாகிறது. இது வேந்தர்க்கு வேண்டிய பண்பு என வள்ளுவர் ஓரதிகாரத்தால் விரித்துரைக்கிறார். இப்பண்பு இருவகையில் அரசர்க்கு இன்றியமையாதது என அவர் கருதுகிறார். ஒன்று போர் வினையில் வேண்டும்; இரண்டு பொருள் படைத்தலில் வேண்டும். வள்ளுவர் 5 குறள்களிலாவது போர்வினைக்கு ஊக்கம் வேண்டும் என்கிறார் எனலாம். பொருள் படைத்தலுக்கு ஊக்கம் தேவை என்னும் ஒரு குறளை எடுத்துக் காட்டாகக் காணலாம்:

*ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா*
*ஊக்கம் உடையா னுழை. (குறள் 594)*

பொருளாக்கத்துக்கு ஊக்கமே காரணம் என வள்ளுவர் கருதுகிறார். 'எய்தி நின்ற பொருளினும் அதற்குக் காரணமாய ஊக்கம் சிறந்தது என்பது இவை நான்கு பாட்டானும் கூறப்பட்டது' எனப் பரிமேலழகர் இதனைக் கண்டு கூறுகிறார்.

*உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து*
*வள்ளியம் என்னும் செருக்கு (குறள் 598)*

என்னும் குறளால் அவர் ஈகைக்குப் பொருளும், பொருளுக்கு ஊக்கமும் வேண்டும் எனப் பேசுகிறார். 'இயற்றலும் ஈட்டலும் வகுத்தலும்' அரசர் பெருங்கடமைகள். அவற்றுக்கு இன்றியமையா ஊக்கத்தை வள்ளுவர் வற்புறுத்துவது பொருத்தமே.

தெளிவுபட இரண்டு குறள்களிலாவது போர்வினைக்கு ஊக்கம் தேவை என வள்ளுவர் விளக்குகிறார் எனலாம்.

*பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை*
*வெரூஉம் புலிதாக் குறின் (குறள் 599)*

என்னும் குறள் 'பிறிது மொழிதல்' என்னும் அணிநயத்தோடு போருக்கு ஊக்கம் தேவை என்பதை விளக்குகிறது. போரிடுதலும் பொருள் படைத்தலும் அன்று அரசர் வாழ்வில் பெரும்பணிகளாக இருந்தன. அவற்றிலும் மிக்கோனைக் காண விழைந்த வள்ளுவர் ஊக்கமுடைமையை விரித்துப் பேசியிருக்கிறார்.

இதுகாறும் இறைமாட்சி என்னும் அதிகாரத்தால் இறைவர்க்கு உரிய பண்புகளாகத் தொகுத்துத் தரப்பட்டவற்றைத் தனித்தனியே விரிவாகக் கண்டோம். இவ்வதிகாரத்தில் சுட்டப்படாத சில பண்பு

களையும் வள்ளுவர் தனி அதிகாரங்களாக அமைத்து விளக்குகிறார். அவை பொச்சாவாமை, மடியின்மை, ஆள்வினையுடைமை, இடுக்கண் அழியாமை ஆகியவனவாம். இறைமாட்சி என்னும் அதிகாரத்தில் சில பண்புகளைத் தொகுத்துத் தந்தும் அவற்றுள் சிலவற்றைத் தனி அதிகாரங்கள் அமைத்து விளக்கியும், சிலவற்றை அவ்வாறு விளக்காதும் அவ்வதிகாரத்தில் தராத சிலவற்றைப் புதிதாகத் தனி அதிகாரங்கள் அமைத்து விளக்கியும் செல்லும் வள்ளுவர் போக்கு ஆராய்தற்கு உரியது.

ஒருகால் பொச்சாவாமை, மடியின்மை, ஆள்வினையுடைமை, இடுக்கண் அழியாமை என்னும் அதிகாரங்களை ஊக்கமுடைமை முதலான அதிகாரங்களோடு இணைத்தல் கூடுமோ? இது பற்றி மேலும் சிந்தித்தல் வேண்டும். கல்வி, கல்லாமை, கேள்வி என்னும் மூன்றதிகாரங்களும் கல்வியுள் அடங்குதல் இங்குக் குறிப்பிடலாம். கேள்வி இறைமாட்சியில் சுட்டப்படவில்லை. கல்வி, அறிவு ஆகியவற்றையும் வள்ளுவர் இறைமாட்சியில் தொகுத்துத் தந்திருக்கிறார். இவை இரண்டையும் தனித்தனியே இரண்டதிகாரங்களில் விளக்குகிறார் ஆசிரியர். கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என்னும் பண்புகளை மன்னர் பெறும் பயிற்சி எனக் கொள்ளலாம். இக்காரணம் பற்றி இவை தனியே ஓரியலாக ஆராயப்படுகின்றன.

## 4.16. பொச்சாவாமை

பொச்சாவாமை என்னும் பண்பு வேந்தர்க்கு வேண்டும் என வற்புறுத்தி வள்ளுவர் ஓரதிகாரமே (54) அமைத்துள்ளார். இறையின் மாட்சியைத் தொகுத்துச் சொல்லும் முதல் அதிகாரத்தில் இப்பண்பு பற்றி அவர் ஏதுமே பேசவில்லை. கண்ணோட்டம் (58), மடியின்மை (61), ஆள்வினையுடைமை (62) இடுக்கண் அழியாமை (63) முதலிய பண்புகளும் இவ்வாறே வள்ளுவரால் முதலதிகாரத்தில் சுடப்படாது பின்னர் வழங்கப்படுகின்றன. கல்வி (40), அறிவு (43), ஊக்கம் (58) முதலான பண்புகள் இறைமாட்சியில் சுட்டப்பட்டுப் பின்னர் விளக்கியுரைக்கப் படுகின்றன. அதிகாரங்களால் விளக்கியுரைக்கப்படும் பண்புகள் மன்னர்க்கு இன்றியமையாது வேண்டப்படும் சிறப்புடைய பண்புகள் போலும். அத்தகைய சிறப்புடையது பொச்சாவாமை என்னும் பண்பு.

பொச்சாவாமையாவது 'உருவும் திருவும் ஆற்றலும் முதலிய வற்றான் மகிழ்ந்து தற்காத்தலினும் பகையழித்தல் முதலிய காரியங் களினும் சோர்தலைச் செய்யாமை' என விளக்கம் தருகிறார் பரிமேலழகர். இவர்க்குச் சோர்தல் என்றால் மறவி என்பது பொருள். 'பொச்சாப்பு

எனினும், மறவி எனினும், இகழ்ச்சி எனினும் ஒக்கும்' என்பது மணக்குடவர் விளக்கம். 'பொச்சாவாமையாவது செல்வம் பெற்றோர் என்னும் 'ஆங்காரத்தினால் அறிவிலனாதல்' என்கிறார் பரிதியார். பரிப் பெருமாள் 'தன்னைத்தான் கடைப்பிடித்தல்' என்கிறார். காளிங்கர் இது 'பிறரை இகழாமை'; 'அவமதிப்புப் பண்ணாமை' என்கிறார். இவ்வாறு பொச்சாவாமை என்பதற்கு வெவ்வேறு பொருள்கள் தரப்படுகின்றன. ஒவ்வோருரையாசிரியரும் 'பொச்சாவாமை' என்னும் சொல்லுக்குப் பொருள் வரையறை செய்து கொண்டதற்கு ஏற்ப அதிகாரத்தின் குறள்களுக்கு விளக்கம் வரைகின்றனர். அவ்வளவிற்கும் இடம் தருகிறது குறள்!

வள்ளுவர் இவ்வதிகாரத்தில் ஓரிடத்திலேனும் மறவி என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை. அவர் சோர்வு, பொச்சாப்பு, இகழ்ச்சி என்னும் சொற்களைத்தான் பயன்படுத்துகிறார். பொச்சாப்பு என்னும் சொல் எட்டுத்தொகை பத்துப்பாட்டுக்களில் எங்கும் காணப்படாத சொல். ஆதலால் முன்னை ஆட்சி அறிந்து பொருள் கொள்ளும் வாய்ப்பு இங்கில்லை. இரட்டைக் காப்பியங்கள், பதினெண் கீழ்க்கணக்கு முதலான நூல்களில்தான் இச்சொல் பயின்று வருகிறது. பரிமேலழகர் தவிரப் பிற உரையாசிரியர்கள் கூறும் பொருளே வள்ளுவர் கருத்தாக இருக்கலாம்.

எதனையும் போற்றிச் செய்தலே பொச்சாவாமை என வள்ளுவர் கருதுகிறார். பொச்சாப்பு என்பதற்கு எதிர்மறை போற்றுதல் என்னும் சொல்லாகும். வள்ளுவர் ஒரே குறளில் இவ்விரண்டு சொற்களையுமே பயன்படுத்தி உடன்பாடு எதிர்மறையில் கருத்தை விளக்குகிறார்.

> அரிய என்று ஆகாத இல்லை ; பொச்சாவாக்
> கருவியான் போற்றிச் செயின். (குறள் 537)

இவ்வாறே இகழுதல் போற்றுதல் என்னும் இரு சொற்களையும் பயன்படுத்துகிறது மற்றொரு குறள் (538) :

> புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும் செய்யாது
> இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்.

இவ்விரு குறள்களாலும் 'பொச்சாவாமையாவது போற்றுதல்' ஆகும் என உறுதிப்படுகிறது.

புகழ் விழையும் வேந்தர்களும், பல்வகை நலங்களை நாடும் வேந்தர்களும், பொச்சாவாமையைப் போற்ற வேண்டும் என்று வள்ளுவரால் வற்புறுத்தப்படுகிறது. நாடு தழுவி நிற்கும் பல்வேறு

அரசுப் பணிகளைத் தன் பொறுப்பாக மேற்கொண்டுள்ள அரசன் அனைத்தையும் மறவாது தன் கருத்தில் கொண்டு எதனையும் பாராமுகம் கொண்டு புறக்கணிக்காது அக்கரையும் ஆர்வமும் விளங்கப் போற்றிச் செய்தல் வேண்டும். இல்லையேல் தனக்கும் தான் மேற்கொண்ட வினைகளுக்கும் நாட்டுக்கும்தீங்கு விளையலாம்.

இக்கருத்தினையே மணக்குடவர் 'தனது சோர்வு பார்த்துப் பிறர் வஞ்சகம் செய்யும் இடங்களிலும், அறம் பொருள் இன்பங்கள் செய்ய வேண்டும் இடங்களிலும்' பொச்சாவாமை வேண்டும் என எழுதி விளக்குகிறார். 'இகழ்ச்சியிற் கெட்டாரை உள்ளுக' (கு. 539) என்னும் தொடருக்குப் பரிப்பெருமாள் உரையெழுதுகின்றபோது போற்றிச் செய்தலின் தேவையை இவ்வாறு விளக்குகிறார் :

> 'இதனால் சொல்லியது வலியாரைப் பகைவர் வெல்லுங்கால் அவரைச் சோர்வு பார்த்துக் களவினால் கொல்வார்; ஆதலால் தன் வலியை நினையாது பகை உண்டாகும் என்று நினைத்துக் கோயிலும், அந்தப்புரமும், நீர் விளையாட்டு ஆடும் இடமும், இளமரக்காவும், வேட்டையாடும் காடும், உண்பனவும் பூசுமவையும் இகழாது சோதித்துக் கொள்க.'

பொச்சாப்புத் தீது; புகழைக் கொல்லும்; பின் வருத்தத்தைத் தரும்; பொச்சாவாமை இன்றிப் போற்றிச் செய்தால் அரிய என்று ஆகாத இல்லை; உள்ளியது எய்தல் எளிது; பொச்சாப்புடையார்க்கு நன்மை இல்லை; இகழ்ந்தார்க்கு எழுமையும் இல் — என்றெல்லாம் பொச்சாவாமை பற்றி வள்ளுவர் பல்வேறு கருத்துக்களைத் தந்துள்ளார். அரசர்க்கு வேண்டிய அரிய அறிவுரைகள் இவை என்பதில் ஐயம் இல்லை.

## 4. 17. மடியின்மை

மன்னர்க்கு வேண்டிய மற்றொரு பண்பு மடியின்மை. மடி, ஊக்கமுடைமைக்கு எதிர்மறை போன்று தென்படுகிறது. 'அஃதாவது கருதியன செய்யுங்கால் சோம்புதல் இல்லாமை'. பாராளும் மன்னர்கள் மடிகொண்டு சோம்பியிருந்தால் பாராளுதல் செவ்வனே நடைபெறாது. அரசர் பணி ஓய்வு ஒழிவு இல்லாத பணி என்பதை எளிதிலே உய்த்துணரலாம். இந்திய அரசியற் சிந்தனையாளர்கள் இந்திய அரசர்கள் ஒருநாளைக்கு மூன்று மணி நேரமே உறங்கலாம் என வரையறுத்து எஞ்சிய 21 மணி நேரத்தையும் அரசுப் பணி புரிவதற்கே திட்டம்

வகுத்தனர்.[4] இந்நிலையில் மன்னர் மடி கொள்ளுவதற்கு இடம் ஏது? மடிஇடம் பெற்றால் இன்னலே பெறுவர்; கேடே அடைவர். இதனைப் பொதுவாக எல்லாரும் எதிர் பார்க்கலாம். வள்ளுவரும் இதனையே தருகிறார் :

> *நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்*
> *கெடுநீரார் காமக் கலன்.* (குறள். 605)

மடியிலா மன்னவன் மூவுலகும் ஆள்வான்; எள்ளும் சொல் அவனுக்கு இல்லை; ஒன்னார்க்கு அடிமை ஆகான்; மாண் பயன் எய்துவான் என்றெல்லாம் மடியின்மையின் பயனை வள்ளுவர் விளக்கு கிறார். ஆனால் மடியின்மையின் பயன் வள்ளுவர்க்கு இவை மட்டும் அல்ல. அவர் மடியின்மையையும் குடிகாத்தலையும் ஆறு குறள்களில் இணைத்துப் பேசுகிறார். இவ் ஆறு குறள்களையும் எண்ணுகின்றபோது கோமகன் தனது குடிகாத்தல் வேண்டும் என்றும் அதன் பொருட்டே மடியின்மையை அவன் பேண வேண்டும் என்றும் வள்ளுவர் கருதுவ தாகத் தெரிகிறது.

குடிபற்றிய கருத்துக்கள் வள்ளுவர்க்குப் போற்றத்தக்க அருமை யுடையனவாகத் தோன்றுகின்றன. குடிக்கு எனப் பண்புகள் உண்டு என்று அவர் கருதுகிறார்; அவை அரிய உயர்பண்புகளாகும் எனவும் அவற்றைப் போற்றிப் பேணுதல் வேண்டும் எனவும் வற்புறுத்துகிறார்; இக்குடிப் பண்புகளைக் குடிமை எனக் குறிப்பிடுகிறார்; இக்குடிப் பண்புகளை விளக்கவே 'குடிமை' என ஓர் அதிகாரமும் (96) இயற்றியுள்ளார். குடிப்பண்புகள் கோமகன் முதற்கொண்டு குடிமகன் அனைவர்க்கும் வேண்டும் என வள்ளுவர் கருதுகிறார். ஆதலால்தான் இறைமாட்சி என்னும் அதிகாரத்திலிருந்து விலகி நெடுந்தொலை தள்ளிக் 'குடியியலில்' குடிமை என்னும் இவ்வதிகாரத்தை அவர் அமைத்துள்ளார்; அதன் பின்னர்க் குடிசெயல்வகை என்னும் அதிகா ரத்தை (103) அமைத்துள்ளார். இவ்வதிகாரங்களில் அரசர் பற்றியும்

---

4 "It appears incredible that a ruler should have had such a rigorous and heavy time-table like the one mentioned above! One wonders whether one could give credence to the divisions of the day and night into sixteen parts in the manner done by Kauṭilya, especially when one realizes that the period of rest enjoyed by the king was only two parts comprising in all three hours! We could have entertained the above doubt but for the fact that very many of the injunctions laid down in the Arthaśāstra were actually observed by the greatest of the Mauryan Emperors .."

—P. 306, AIPTI.

அலுவலர் பற்றியும் சிறிதும் பேச்சில்லை. முன்னர் அமைச்சர்களைப் பற்றிப் பேசுகின்றபோது ஆசிரியர் 'குடிகாத்தல்' (அமைச்சு, கு. 632) என்னும் பண்பு அமைச்சர்க்கு வேண்டும் என வற்புறுத்துகிறார். 'மடியின்மை' என்னும் அரசியல் அதிகாரத்தில் அரசர்க்குக் குடிகாக்கும் பொறுப்பு வேண்டும் என அவர் வற்புறுத்துகிறார்.

வள்ளுவர்க்குக் குடி என்பது வருணாசிரம தருமத்தின் அடிப் படையில் தோன்றிய சாதிச் சழக்கு அல்ல. அவர் போற்றும் குடியும் பிறப்பின் பேரில் வேற்றுமை கொண்டதாகத் தெரியவில்லை. அக் குடியினை அவர் குலம் (கு. 956, 958) எனக் குறிப்பிட்டாலும் அதனையே இல் (கு. 951, 1026) எனவும் குடும்பம் (கு. 1029) எனவும் அகம் (கு. 102) எனவும் குறிப்பிடுகிறார். ஆதலால் குறள் கூறும் கருத்தில் குடி என்பது வழிவழி வந்து தனக்கென அரும் பண்புகள் பலவற்றைப் பெற்ற ஓர் இல்லமாகிய குடும்பம் ஆகும். இவ்வகையில் பலர்க்கும் குடி உண்டு; பாராளும் மன்னர்க்கும் குடி உண்டு.

மன்னரும் தாம் பிறந்த குடியினைக் காத்தல் வேண்டும். அக்குடி சூரிய குலம்' 'சந்திர குலம்' என வள்ளுவர் புராணம் பேசவில்லை. கலப்பற்ற சத்திரியக் குடி எனவும் கற்பனை செய்யவில்லை. அது அரசு பணிபூண்ட ஒரு பழங்குடி; பண்பின் தலைப்பிரியாக் குடி; 'செப்பம், நாணம், ஒழுக்கம், வாய்மை, நகை, ஈகை, இன்சொல், இகழாமை' (கு. 951, 952, 952) ஆகியவை பேணும் 'குடியென்னும் குன்றா விளக்கம்' (கு. 601) எனவே அவர் கொள்ளுகிறார். அத்தகைய குடி மடியென்னும் மாசு ஊர மாய்ந்து கெடலாம் (கு. 601). ஆதலால் அரசர் மடியை மடியா ஒழுகிக் குடியைக் குடியாக்க வேண்டும் (கு. 602).

## 4. 18. ஆள்வினையுடைமை

ஆள்வினையுடைமையாவது 'இடைவிடாத மெய்ம்முயற்சி யுடைமை'. ஊக்கமுடைமை உள்ளம் பற்றியது. இவ்வாள்வினை யுடைமை உடல்பற்றியது என்பது கருதத்தக்கது. 'ஒரு காரியத்தை எடுத்தால் அந்தக் காரியம் குறையாமல் முடித்தல்' எனப் பொதுவாக இம்மெய்ம்முயற்சிக்குப் பொருள் கொள்ளலாம். ஆனால் இம்மெய்ம்முயற்சி சிறப்பாகப் பொருள் ஈட்டலுக்கே வேண்டும் என வள்ளுவர் கருது கிறார்:

> முயற்சி திருவினை ஆக்கும்; முயற்றின்மை
> இன்மை புகுத்தி விடும். (குறள் 616)

முயற்சியின்மை வறுமையையே வருத்தித் தரும். அரசர் செல்வம் சேர்த்துச் செய்ய வேண்டிய கடமைகள் சில உண்டு. ஒன்று வேண்டு

வோர்க்கு வேளாண்மை செய்தல் ; மற்றொன்று 'தன்கேளிர் துன்பம் துடைத்து ஊன்றுதல்'. இவை இரண்டும் ஆள்வினையுடைமையால் அமையும் என வள்ளுவர் கருதி அதனை வற்புறுத்துகிறார் :

*தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே*
*வேளாண்மை என்னும் செருக்கு.* (குறள் 613)

*இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்*
*துன்பம் துடைத்தூன்றும் தூண்.* (குறள் 615)

தெய்வப்புலவர் திருவள்ளுவர் மண்ணாளும் மன்னர்க்கு மெய் முயற்சியினை வைத்து வழங்கும் இறுதி அறிவுரை அவர் வழங்குவன வற்றுள் எல்லாம் மணிமுடியாக விளங்குகிறது; வகையற்ற மன்னர்க்கும் வாய்ப்பு உண்டு எனச் சுட்டிக் காட்டி முயற்சி மேற் கொள்ளச் செய்கிறது :

*ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்*
*தாழாது உஞற்று பவர்.* (குறள் 620)

எதற்கும் 'அருமை உடைத்து என்று அரசர்கள் அசாவாமை வேண்டும்'. அவர்க்கு 'அறிவறிந்து ஆள்வினை இன்மை பழி' சேர்க்கும்.

## 4. 19. இடுக்கண் அழியாமை

அரசர் வாழ்வில் துன்பங்கள் தோன்றலாம். அரசரது தனி வாழ்விலும் அவரது பணிவாழ்விலும் அத்துன்பங்கள் தோன்றலாம். அவற்றின் பொருட்டு அரசன் மனங் கலங்காது இருத்தல் வேண்டும். இதுவே இடுக்கணுக்கு அழியாமை. இவ்விடுக்கண் அழியாமைப் பண்பு வேந்தர்க்கு வேண்டும் என ஓரதிகாரத்தில் (63) வள்ளுவர் வற்புறுத்துகிறார். இடுக்கண் என்ன காரணத்தால் தோன்றும் என்பது பற்றி வள்ளுவர் ஒன்றும் பேசவில்லை. ஆனால் பரிமேலழகர் 'தெய்வத்தானாகை, பொருளின்மையானாகை, மெய்வருத்தத்தானாகை... இடுக் கண் வந்து' தோன்றும் என வகுத்துக் காட்டுகிறார். வள்ளுவர் வரைந்த பத்துக் குறள்களிலும் இக்கருத்துக்கு இடம் இருப்பதாகத் தெரியவில்லை. காரணம் இருந்தும் காணமுடியாதவாறு நடைபெறும் நிகழ்ச்சிகளுக்குத் தெய்வத்தையும் ஊழையும் கற்பித்துக் கொள்ளுதல் சாதாரண மக்களின் வழக்கமாக இருந்து வருகிறது. அம்முறையில் இங்குப் பரிமேலழகர் ஊழையும் தெய்வத்தையும் கற்பித்துக் கொள்ளு கிறார்.

இடும்பை வரும் காரணத்தை வள்ளுவர் எடுத்துரைக்காது போனாலும் அதனைத் தீர்க்கும் வழிகளை உரைத்திருக்கிறார். 'இடுக்கண்

வருங்கால் நகுதல்' (குறள் 621), 'உள்ளத்தின் உள்ளிக் கெடுத்தல்' (குறள் 622), 'இடும்பைக்கு இடும்பை படுத்தல்' (குறள் 623) 'இடும்பை இயல்பு எனல்' (குறள் 628), 'இன்பத்துள் இன்பம் விழையாமை' (குறள் 629), 'இன்னுமை இன்பம் எனக் கொளல்' (குறள் 630) ஆகிய வற்றைத் துன்பம் துடைக்கும் வழிகளாக வள்ளுவர் வழங்குகிருர். இங்கே பழி வாங்குதலும் இல்லை; பாவம் செய்தலும் இல்லை. அரசர் கைக்கொள்ளும் அகங்காரமும் இல்லை. துன்பம் வந்துற்றபோது துறவோர் மேற்கொள்ளும் தூய வழிகளாகவே இவை தோன்று கின்றன. வள்ளுவர் மன்னர்களை இங்கு மெய்ப்பொருள் காண வைக் கிருர். இன்பத்தின் இயல்பு; இன்னலின் இயல்பு ஆகியவற்றை அவ்வரசர்களுக்கு அவர் கற்பிக்கிருர். இன்பம் விழையாமைக்கு அவர்களை அவர் பழக்குகிருர். உற்ற நோய் நோற்றல் வேண்டும் என உணர்த்துகிருர். சுருங்கச் சொன்னல் நாடாளும் மன்னர்கள் மெய்யுணர்ந்து தத்துவக் கண்கொண்டு உலகினை நோக்கி இடுக்கணைக் களைந்து கொள்தல் வேண்டும் என வள்ளுவர் விரும்புகிருர் எனலாம். 'இடுக்கண் அழியாமை' அரசியலில் இறுதிப் பகுதி. இத்தகைய மெய் யுணர்வுக் கருத்துக்களை எடுத்துரைத்து 'இறைவன் இயலை' முடிக் கிருர் வள்ளுவர்.

இவ்வளவும் வேந்தர்க்கு வேண்டிய பண்புகளாக வள்ளுவர் வகுத்துரைக்கிருர். இவையெல்லாம் பொருட்பாலின் அரசியலில் அமைந்தவை. இவையே அரசர்க்குப் போதுமான பண்புகள் என்று எண்ணி விடுதல் கூடாது. இன்றியமையாப் பெரும் பண்புகளையே வள்ளுவர் இங்கு எடுத்து ஓதினுர் எனக் கொள்ளவேண்டும். வள்ளுவர் பொருள் மட்டும் இயற்றவில்லை; அறமும் இயற்றினுர். அறமே முதற் பால்; அடிப்படையான பாலும் ஆகும். அதனைத் தழுவியே பொருள் போகும். இரண்டும் வேறுபடும் இடம் இல்லாமல் இல்லை. ஆட்சிக்கு ஏற்ப அறம் சிறிது திரியலாம். கொல்லாமையை வற்புறுத்துகிறது அறம். கொலையிற் கொடியாரை வேந்து ஒறுத்தலைப் பொருள் பேசு கிறது; இது ஒரு காரணம் பற்றியே பரிந்துரைக்கப்படுகிறது. ஆயினும் முன் சொன்ன அறம் சிதையுமாறு பொருள் செல்லாது. பிறர்க்கு அறம் எனப்பட்டவையும் அரசர்க்கும் அறமாகும்.

### 4. 20. இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்

வள்ளுவர் கண்ட அரசன் பிற ஒழுகலாறுகளிலும் தூயோன். **கள்ளுண்ணுமை** (அதி. 93), சூது (அதி. 94), வரைவு இல் மகளிர் (அதி. 92) ஆகிய அதிகாரங்கள் குறளில் குறிப்பிடத்தக்கன. வள்ளுவர் கள்ளுண்ணலை எள்ளுகிருர்; சூதினைச் சாடுகிருர்; வரைவு இல்

மகளிரை வைகிறார். இவை இன்னார்க்கு உரிய ஒழுக்கம் என்றில்லாது பொதுவாகவே அவர் பேசுகிறார். பொருட்பாலின் நட்பியலில் இவை இடம் பெற்றுள்ளன எனப் பரிமேலழகர் வகுத்துக் காட்டுகிறார். அவ்வாறுஞல் இவ்வொழுக்கங்கள் அரசர்க்கும் ஏற்கும் என்ருகிறது. காரணம் நட்பு, அரசர் உடைமைகளுள் ஒன்று. பிறர்க்கும் உரிமை கருதி இவ்வொழுகலாறுகளை அரசரது இயல்பு கூறும் அரசியலில் வைக்காது வள்ளுவர் பின்னர்த் தள்ளி வைத்தனர் போலும். சூதாடி நாடிழந்த பெருமை இந்திய மரபில் உண்டு! அழிவதும் பெண்ணாலே; ஆவதும் பெண்ணாலே என்பதை வரலாறு அறியும். குடியால் கெட்ட கோனரசுகளும் பலப்பல. இத்தீமை நாடாளும் வேந்தரைக் கெடுத்தல் வழியாக நாட்டினையும் கெடுத்தல் எளிதே. ஆதலால் நாடாளும் வேந்தர்க்கு இவை கடியத்தக்க ஒழுகலாறுகளாக வள்ளுவரால் விதிக்கப்பட்டன. அறத்தின் அடிப்படையில் சீரிய சமூகம் ஒன்றைப் படைக்க விழைந்த வள்ளுவர் இவ்வொழுக்கங்களைத் தனிப்பட்ட மக்களுக்கு விதிக்க வல்லார்; நாடாளும் மன்னர்க்கு விதித்தலில் வியப்பில்லை :

> இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
> திருநீக்கப் பட்டார் தொடர்பு. (கு. 920)

இவ்வொழுகலாறுகளின் பெருமை எண்ணிப் பார்ப்பார்க்கு எளிதிலே விளங்குபவைதான். ஆயினும் வள்ளுவர்க்குச் சிறப்பான முறையில் பெருமையுண்டு. இந்திய மரபில் மன்னர்க்குப் பொழுது போக்காகச் சூது கருதப்படுகிறது. அதனை அவ் இந்திய மரபு Royal game எனப் போற்றுகிறது. அவ்வாறே கள்ளும் கணிகையரும் கடியப்படுவன அல்ல. இந்தச் சூழ்நிலையிலேயே வள்ளுவரின் தனிமை, சிறப்பு தெள்ளெனத் தெரிகிறது.

## 4. 21. பெண்வழிச் சேறல்

அரசியலில் அல்லாது நட்பியலில் சொல்லப்படும் இக்கருத்தும் சிந்தித்தற்கு உரியது.

> அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
> பெண்ஏவல் செய்வார்கண் இல் (குறள் 909)

எனப் பெண் ஏவல், வள்ளுவரால் பழிக்கப்படுகிறது. குறிப்பாக அவர் கண்டனத்துக்கு உரியன 'இல்லாளை அஞ்சுதல்' (குறள் 904, 905, 906) பெண் விழைதல் (குறள் 901, 902, 908) ஆகியவை. இல்லாளை அஞ்சி ஒழுகுதலும் நன்னுதலாள் பெட்டாங்கு ஒழுகுதலும் நாட்டுப் பணிபுரியும் மன்னர்க்கு ஏலா போலும். இல்வாழ்க்கை,

வாழ்க்கைத்துணை நலம் முதலிய அதிகாரங்களில் (5,6) பெண்ணைப் போற்றும் வள்ளுவர் இங்கு அவர்களைத் தூற்றும் காரணம் ஆழ்ந்து ஆராய்தற்கு உரியது. வரைவில் மகளிர், கள்ளுண்ணாமை, சூது என்னும் அதிகாரங்களுக்கு முன்னர் இப்பெண்வழிச்சேறல் என்னும் அதிகாரம் அமைந்துள்ளதால் அவ்வதிகாரங்கள் அரசர் உள்ளிட்டு அனைவர்க்கும் பொருந்துமாறு போல இவ்வதிகாரமும் அரசர்க்கும் பொருந்துமாறு பொருள் கொள்ள நேர்கிறது. (அது முறையோ என்பதும் ஆராய்ச்சிக்கு உரியது. பொதுவாகவே இந்திய மரபில் பெண்ணுக்குப் பெருமை இல்லை. அரசியலிலோ அவர்க்கு இடம் அரிதினும் அரிது ;[5] இந்நிலைக்கு இயற்கையும் காரணம்; செயற்கையும் காரணம். வள்ளுவர் கருத்து இந்திய மரபினைச் சுட்டி நிற்கிறதா? அல்லது வேறு தமிழ் மரபினைச் சுட்டி நிற்கிறதா என்பது ஆராய்ச்சிக்கு உரியதே. அரிவையர் மாட்டுக் கொண்ட ஆசையும் அச்சமும் ஆட்சிக்கு மட்டும் அல்ல; பிற துறைக்கும் தேவை இல்லாதவை. ஆசைக்கும் அச்சத்துக்கும் ஆட்படாத அரசர் போற்றுதலுக்கு உரியவர் அல்லவா?

**4. 22. குறள் மரபும் இந்திய மரபும்**

வள்ளுவர் கருத்தினைக் கண்டோம். இந்தியப் பண்பாட்டின் அர்த்த சாஸ்திரங்கள் குறள் கண்டது போன்று அரசன் பண்புகளைக் கண்டன. அக்கருத்துக்களைக் குறள் கண்ட கருத்துக்களோடு ஒப்பிடுதல் இவ்வகையில் குறளின் சிறப்பினை எடுத்துக் காட்டும். கௌடல்யரும் அரசர் பண்புகளைத் தொகுத்துத் தருகிறார். அவை வருமாறு :

" அவற்றுள் அரசனது இறைமாட்சி (கூறப்படும்). உயர்குடிப் பிறப்பு, நற்செயல், அறிவு, அஞ்சாமை, என்னும் இவற்றையுடைமை, முதியவரைக் காண்டல், அறத்தின் வழுவாமை, உண்மை பேசுதல், சொல் திறம்பாமை, நன்றி

5 "A women is unfit to enjoy independence. The father protects her during infancy the husband protects her when she is grown up, and the sons protect her in old age". It was considered most undesirable to have a woman as ruler. Under such a government, men would sink like stone boats, and the Majjhima Nikāya says: 'It is impossible, it cannot come to pass that a woman should be a wheel-turning king ........ but a man could be a wheel-turning king—this situation occurs'. The Buddhist View of women was not a particularly flattering one and it is not surprising, that, in general, ancient Indian political thinkers considered it most unfortunate that a woman should come to the throne". — P 46, PTAI.

யறிதல், உயரிய நோக்கம், முயற்சி இவற்றையுடைமை, விரைவிற் செய்தல், குறுநில மன்னரை ஆளும் திறன், திண்மையான கருத்து சிறந்த அவையத்தாரையுடையனுதல் விநய விருப்பம் என்னும் இவை அடையத்தக்கக் குணங்களாம்.''
(பக். 719, கௌடலீயம் பொருணூல்)

இங்கு நற்செயல் என்பது தெய்வாம்சம் எனவும் அஞ்சாமை என்பது வீரம் எனவும் பல மொழிபெயர்ப்பாளர்களால் கருதப்படுகிறது.[6]

கௌடலீயம் காட்டும் மன்னர்க்கும் குறள் காட்டும் மன்னர்க்கும் வேற்றுமை உண்டு. வள்ளுவர் மன்னர் உயர்குடிப்பிறப்பினராக இருத்தல் வேண்டும் என்று விதிக்கவில்லை. குடிப்பிறப்பினை — குடிமையை—வள்ளுவர் போற்றவே செய்கிருர். தூதர்க்கு ஆன்ற குடிப்பிறத்தல் ஒரு பண்பாக வள்ளுவர் வகுக்கிருர். குடியியலில் பொதுவாக

> அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
> பண்புடைமை என்னும் வழக்கு (கு. 992)

என அனைவர்க்கும் அது நல்லது என்கிருர் அவர். ஆனல் உலகாளும் வேந்தர்க்கு அப்பண்பு ஏன் விதிக்கப்படவில்லை? இது எண்ணுதற்கு உரியது.

கௌடலீயம் அரசன் தெய்வாம்சம் பெற்றிருக்க வேண்டும் என வேண்டுகிறது. அரசன் தெய்வத்தால் நியமிக்கப்பட்டான் என்றும், அவன் தெய்வசக்திகள் பெற்றவன் என்றும் இந்திய மரபு கருதுகிறது. ஆனல் வள்ளுவர் அரசர்க்குத் தெய்வாம்சம் இருப்பதாகவோ இருக்க வேண்டும் என்றே வகுக்கவில்லை.[7]

> முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
> இறையென்று வைக்கப் படும் (குறள் 388)

என்ற குறளில் அவர் நல்லரசன் தெய்வமாகக் கருதப்படலாம் எனவே குறிப்பிடுகிருர். இக் குறளில் 'இறை' என்ற சொல்லுக்குத் 'தலைவன்' என்றே பொருள் கொள்ளப்படுகிறது. ஆதலால் வள்ளுவர் கண்ட அரசன் இவ்வுலக மகனே.

---

6 "Born of a high family, godly, possessed of valour, seeing through the medium of aged persons, virtuous, truthful, not of a contradictory nature, grateful, having large aims, highly enthusiastic, not addicted to procrastination, powerful to control his neighbouring kings, of resolute mind, having of no mean quality, and possessed of a taste for discipline". — P. 43, PTAI.

7 'வள்ளுவர் கண்ட அரசியல்' என்னும் நூலில் ஒரு கருத்தரங்கக் கட்டுரை: 'வள்ளுவர் கண்ட அரசன்: இறைமையின் எல்லையும் இயல்பும்' (ஆசிரியர் இ. முருகரத்தனம்). இக்கட்டுரை அரசரது தெய்வாம்சம் பற்றிய கருத்துக்களை விரிவாக ஆராய்கிறது.

பல பண்புகளை அரசர்க்கு வகுத்துரைக்கும் வள்ளுவர் அவர்க்கு வீரம் வேண்டும் என வெளிப்படையாக விதி ஒன்றும் செய்யவில்லை. 'மறன் இழுக்கா மானம் உடையது அரசு' என்ற இடத்தில் மானத்திற்கு அடையாக மறத்தை அவர் குறிப்பிடுவது தவிர நேரர்க மறம் மன்னர்க்கு வேண்டும் என்று சொல்லவில்லை. அரசன் உடைமைகளுள் படையும் உண்டு. படைமாட்சி, படைச்செருக்கு என்னும் அதிகாரங்களும் குறளில் உண்டு. ஆனாலும் வள்ளுவர் அரசர்க்கு வீரத்தை விதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வள்ளுவர்

இகல்என்ப எல்லா உயிர்க்கும் பகஎன்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய் (குறள் 851)

எனப் பகையைப் பழிக்கிறார். அறத்துப்பாலில் கொல்லாமை போற்றும் வள்ளுவர் பொருட்பாலில் அதனைத் துறந்தார் எனக் கொள்ளுதல் முடியாது. வள்ளுவர்க்கு வாள் எடுத்துப் போராடும் வீரம் பெரிதாகத் தோன்றவில்லை போலும்.

வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை (குறள் 872)

என்னும் கொள்கையர் அவர். அவர்க்குச் சொல்லும் உள்ளமும் அறிவுமே பெரியன. வள்ளுவர் கண்ட அரசன் வல்லாளாக இருப்பதைவிட நல்லாளாக இருப்பதையே காணுகின்றோம். அவனை மறவோன் என்பதை விட அறவோன் என்னலாம். கௌடலீயத்துக்கும் வள்ளுவத்துக்கும் இடையே இத்தகைய வேறுபாடுகள் தென்படுகின்றன. இவை எளியவை அல்ல; அரிய வேறுபாடுகள். மன்னன் இயல்புக்கு ஏற்பவே மண்ணின் இயல்பும் இருக்கும் அல்லவா?

கௌடல்யர் கண்ட அரசனும் பிற அர்த்த சாஸ்திர அறிஞர் கண்ட அரசனும் உலகின் உயர்ச்சிகளோடு தெய்வாம்சமும் பெற்றவர்களாகி இவ்வுலக வாழ்க்கையில் காணாதவர்களாகிவிடுகின்றனர்.[8] ஆனால் வள்ளுவர் கண்ட அரசனே உலகின் உயர்ச்சிகளைப் பெற்றவனாக இவ்வுலகுக்கே உரியவனாக விளங்குகின்றான். இவ்வகையில் வள்ளுவரது அரசியல் இன்றைய அறிஞர்கள் போற்றும் நடைமுறை அரசியலும் ஆகும்.

---

8 "Who shall be King? The kingly ideal was seldom attained in ancient India; perhaps this is because that ideal was at most superhuman. He truly would have been a god who satisfied the standards of Kauṭilya ....." — P. 43, PTAI.

## 4. 23. முடிவுரை

வள்ளுவர் கண்ட அரசன் எப்பண்பினன்? அவன் அஞ்சான்; ஈகையன்; அறிவாளன்; ஊக்கமுடையான்; தூங்கான்; கல்வியாளன்; துணிவுடையன்; அறன் இழுக்கான்; மானத்தான்; காட்சிக்கெளியன்; இன்சொலினன்; கைக்கும் சொல் பொறுப்பவன்; அளியுடையன்; குற்றங்கள் கடிந்தவன்; பெரியாரைத் துணைக் கொண்டவன்; சிற்றினஞ் சேரான்; பொச்சாவான்; மடியிலான்; ஆள்வினையாளன்; இடுக்கண் அழியான்; பெண்வழிச் சேரான்; மனையாளை அஞ்சான்; கள்ளுண்ணான்; சூதாடான்.

இத்தகைய மன்னனையே கம்பரும் அழகிய பாடலால் குறிப்பிடுகிறார்:

*இனிய சொல்லினன்; ஈகையன்; எண்ணினன்;*
*வினையன்; தூயன்; விழுமியன்; வென்றியன்;*
*நினையும் நீதி நெறிகட வான்எனில்*
*அனைய மன்னற்கு அழிவும்உண் டாம்கொலோ?* 9

இம்மன்னன் தேவ மகனோ எனின் அல்லன்; இவ்வுலக மகனே; இவ்வுலக மக்களுள் உயர்ந்தோன், சிறந்தோன்.

ஆள்வோர் நல்லவரானால் நன்மை என்ன? ஆளப்படுவோர் எல்லோருக்கும் நன்மை அல்லவா?

*நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்*
*பண்புபா ராட்டும் உலகு.* (குறள் 994)

*பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்*
*மண்புக்கு மாய்வது மன்.* (குறள் 996)

---

9 கம்பராமாயணம், அயோத்தியா காண்டம்—மந்தரை சூழ்ச்சிப்படலம் 26.

# 5

# படிப்பும் பண்பாடும்

## 5. 1. கல்வி முதலான அதிகாரங்கள்: நோக்கம்

மாட்சி மருவிய மன்னரைக் காண விழைகிறார் வள்ளுவர். இது காறும் அதனைக் கண்டோம். அத்தகைய மன்னரை எவ்வாறு பெறுவது? அவர் பிறப்பால் அமைவரா? பிறப்பின் பின்னர் அமைவரா? அத்தகைய மன்னர், பிறந்த பின்னர்த்தான் உருவாகின்றனர். அம்மன்னர் இளமன்னராய்ப் படித்துப் பண்படுதலால் அமைகிறார். இளவரசர், கல்வி கேள்வி அறிவால், பெரியார் உறவால் மாட்சியுடைய மன்னராதல் வேண்டும். வள்ளுவர் காட்டும் வழி இதுவே.

வள்ளுவர் இறைமாட்சி என்னும் முதல் அதிகாரத்தில் மன்னரின் மாட்சியையும் பணியையும் சுட்டிக் காட்டுகிறார். அவ்வதிகாரமே பொருட்பாலுக்குத் தோற்றுவாயாக அமைகிறது எனலாம். அடுத்து வரும் சில அதிகாரங்கள் மன்னரை உருவாக்கும் வழிவகைகளை வகுக்கின்றன எனலாம். பொருட்பாலின் முதற்கட்டம் மன்னர் வாழ்வின் முதற்கட்டம். இவையே அடுத்து வரும் சில அதிகாரங்கள் :

1. கல்வி
2. கல்லாமை
3. கேள்வி
4. அறிவுடைமை
5. குற்றங்கடிதல்
6. பெரியாரைத் துணைக்கோடல்
7. சிற்றினம் சேராமை

இங்குக் கல்வி கல்லாமை இரண்டும் ஒரு பொருள் பற்றியன; உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் அப்பொருள் கூறப்படுகிறது. கல்வியோடு உறவுடையதுதான் கேள்வி. இவற்றோடு உறவுடையதுதான் அறிவுடைமை. கேள்வி, 'நூற் பொருளைக் கற்றறிந்தார் கூறக் கேட்டல்'. அறிவுடைமை, 'கல்வி, கேள்விகளினாய அறிவோடு உண்மையறிவு உடையனாதல்'.

'குற்றங்கடிதல்', தன்னைத்தானே பண்படுத்தல் ஆகும். 'பெரியாரைத் துணைக்கோடல்', பெரியாரால் தான் பண்படுதல் ஆகும். 'சிற்றினம் சேராமை', பண்பட்டதைப் பாதுகாத்தல் பற்றிக் கூறுவது.

ஆதலால் 'கல்வி' முதல் 'அறிவுடைமை' வரை படித்தல் கூறுவது; 'குற்றங்கடிதல்' முதல் 'சிற்றினம் சேராமை' வரை பண்படுதல் கூறுவது.

### 5. 2. ஐயம்

இடையே சில ஐயங்கள் எழுகின்றன.

கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என்னும் நான்கு அதிகாரங்களும் பொதுவாகவே அவற்றின் பெருமை தேவைகளைப் பற்றிப் பேசுகின்றன. அரசரைப் பற்றிய குறிப்போ, இவை அரசர்க்கு உரியன என்பது பற்றிய குறிப்போ வெளிப்படையாக இவ்வதி காரங்களில் எங்கும் இல்லை! பரிமேலழகர் முதலான உரையாசிரியர்கள் நான்கு குறள்களில் அரசரோடு உறவு படுத்தி உரையெழுதுகின்றனர்: (குறட்பாக்கள் 415, 421, 426, 428). சிறப்பாக அரசர்க்குக் கல்வி வேண்டும்; அரசர்க்கு எனத் தனிக் கல்வியும் வேண்டும். அரசர்க்குக் கல்வி எத்துணை இன்றியமையாதது என்பது சிறிது எண்ணினாலும் விளக்கம் உறும். மன்னன் 'கல்வியறிவுடையனாதல் மன்னுயிர்க்கெல்லாம் இனிது' என்பர். ஆனாலும் வள்ளுவர் இவ்வதிகாரங்களைப் பொதுப்பட அமைத்ததின் நோக்கம் சிந்தனைக்கு உரியது. பரிமேலழகர்க்கும் இவ்வையங்களும் வினாக்களும் தோன்றுகின்றன. அவரும் அமைதி கூற முயலுகிறார்: 'அஃதாவது அவ்வரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல். அவையாவன அறநூலும், நீதிநூலும், யானை குதிரை தேர் படைக்கலம் என்ற இவற்றின் நூல்களும் முதலாயின. அரசன் அறிவுடையன் ஆயக்கால் தன்னுயிர்க்கே அன்றி மன்னுயிர்க்கும் பயன்படுதல் நோக்கி இஃது அரசியலுள் வைக்கப்பட்டதாயினும், யாவர்க்கும் உறுதிபயத்தற் சிறப்புடைமையின் பொதுப்படக் கூறுகின்றார்.'

பரிமேலழகர், இவ்வதிகாரங்கள் அரசர்க்கே கல்விமுறை கூறுகின்றன எனக் கண்டது பாராட்டுதற்கு உரியது. அவர் வடமொழி அர்த்த சாஸ்திரங்களைப் பின்பற்றுகிறார். அங்கு அவ்வாறுதான் உள்ளது.[1] இவ்வதிகாரங்களில் இவை அரசர்க்குக் கூறப்படுவன என்பதற்கான குறிப்புக்கள் எவையும் இல்லையாயினும் இவ்வதி காரங்களின் முன்னும் பின்னும் அரசர்க்கு உரியனவே பேசப்படுதலால் இவையும் அரசர்க்கே உரியன எனல் வேண்டும். இவ்வதிகாரங்களின் இவ்வாறான வைப்பு முறையே இவை அரசர்க்கு உரியன பற்றிப் பேசுகின்றன என்பதற்கு நல்ல சான்றாகும்.

---

1 கௌடலீயம் பொருணூல் முதல் அதிகரணம் 'பயிற்சி பகர்தல்' காண்க.

ஆனால் பரிமேலழகர், 'அறநூலும், நீதிநூலும், யானை குதிரை தேர் படைக்கலம் என்ற இவற்றின் நூல்களும்' கற்றல் பற்றி இவ்வதிகாரங்கள் பேசும் என எதிர்பார்க்கிறார். ஆனால் இத்தகைய குறிப்பு எதுவும் இவ்வதிகாரங்களில் இல்லை என்பது மேலாகப் படிப்போர்க்கும் புலப்படும். அவ்வாறு இல்லாமை பரிமேலழகருக்கு மயக்கம் ஊட்டுகிறது. ஆனால் அவ்வாறு இல்லாமையே குறளுக்குப் பெருமையாகலாம். அரசன் கல்வி கற்றுக் கேள்வியுற்று அறிவுடையனாதல் வேண்டும் என்று உயர் நெறியினை வகுக்கும் வள்ளுவர்க்கு இராச தந்திரங்களும் போர்ப் பயிற்சியும் பெரியனவாகத் தோன்றவில்லை போலும். வள்ளுவர் நோக்கம் மெய்யுணர்ந்த மன்னனைக் காணல் போலும். பரிமேலழகரே எடுத்துக் காட்டுவது போன்று கல்வியினது 'யாவர்க்கும் உறுதி பயத்தற் சிறப்புடைமை'யை வள்ளுவர் நன்கு உணர்ந்திருத்தல் வேண்டும். இறைமாட்சி என்னும் அதிகாரத்தில் '**கல்வி, நீங்காது நிலனாள்பவற்கு**' எனச் சுட்டிப் பேசியிருத்தலால் யாவர்க்கும் உரிய கல்வி அரசர்க்கும் ஆகிவிடுகிறது.

### 5. 3. கல்வி

வள்ளுவர் கல்வியினது சிறப்பினைக் கூறும் முறையினை இனிக் காணலாம்:

*எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்*
*கண்என்ப வாழும் உயிர்க்கு.* (குறள் 392)

*கண்ணுடையர் என்பவர் கற்றோர்.* (குறள் 393)

*, . . . . . . . . . . . மாந்தர்க்குக்*
*கற்றனைத் தூறும் அறிவு.* (குறள் 396)

*ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு*
*எழுமையும் ஏமாப்பு உடைத்து.* (குறள் 398)

*கேடுஇல் விழுச்செல்வம் கல்வி.* (குறள் 400)

வள்ளுவர் கல்வியின் உயர்வினைப் போற்றும் பாங்கினை இக் குறள்கள் தெளிவாகக் காட்டுகின்றன. 'வாழும் உயிர்க்கு', 'மாந்தர்க்கு,' 'ஒருவற்கு' என்னும் ஆட்சிகள் அவர் கல்வி யாவர்க்கும் வேண்டும் எனப் பேசுகிறார் என்பதையே காட்டுகின்றன.

*உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்*
*களர்அனையர் கல்லா தவர்.* (குறள் 406)

*விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்*
*கற்றாரோடு ஏனை யவர்.* (குறள் 410)

இவ்விரண்டு குறள்களும் கல்லாமையின் இழிவை எடுத்துப் பேசுகின்றன.

## 5. 4. கேள்வி

கல்வி கல்லாமை என்னும் அதிகாரங்களை அடுத்துக் 'கேள்வி' என்னும் அதிகாரம் அமைந்துள்ளது. இக்கேள்வி எப்போது யாருக்கு என்பது பற்றிக் கருத்து வேறுபாடு ஒன்று உள்ளது. "கல்லாத மக்களும் என் செயற்பாலது எனின் கற்றுணர்ந்த சான்றோருழைச் சென்று மற்று அவர் உரைக்கும் கல்விநெறிப்பாட்டைப் பலநாளும் பயிலக் கேட்க", என்கின்றார் காளிங்கர். அவர் கருத்துப்படி 'கல்வி கற்கமாட்டாதாருக்குத்தான் கேள்வி' என்றாகிறது. ஆனால் பரிமேலழகர், 'கற்ற வழி அதனின் ஆய அறிவை வலியுறுத்தலானும் கல்லாத வழியும் அதனை உண்டாக்குதலானும்' என எழுதுதலால் கேள்வி, கற்றார் கல்லாதார் என்னும் இருசாரார்க்கும் என்றாகிறது. மணக்குடவரும் பரிப்பெருமாளும் காளிங்கரைப் பின்பற்றுகின்றனர். ஆயினும்

*செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் ; அச்செல்வம்*
*செல்வத்துள் எல்லாம் தலை,* (குறள் 411)

*கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியான்*
*தோட்கப் படாத செவி* (குறள் 418)

என்னும் குறள்கள், 'கேள்வி, கற்றார் அல்லாதார் ஆகிய அனைவர்க்கும் வேண்டும்' என்ற கருத்தையே வலியுறுத்துகின்றன. 'கற்றிலன் ஆயினும் கேட்க' என்னும் குறளின் (414) 'உம்மை கற்க வேண்டும் என்பது பட நின்றது' (பரிமேலழகர்). ஆதலால் 'கற்றவனே கேட்க; கற்றிலன் ஆயினும் கேட்க' என்னும் பொருளே இங்குத் தோன்று கிறது. 'கற்க மாட்டாதான் கேட்க' என்று உரையாசிரியர்கள் இங்குக் கூறுவது அவர்களே எடுத்துக் காட்டும் உம்மையின் பொருளுக்குப் பொருந்துவதாக இல்லை. 'பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார்' என்னும் குறளில் (417) 'உணர்ந்தும்' என்னும் சொல் 'முன்னரே கற்று உணர்ந்தும்' எனவே பொருள் கொள்ளத்தக்கது. இக் காரணங்களால் கேள்வி கற்றோர்க்கே வேண்டும் என வள்ளுவர் கருது வதாகக் கொள்ளலாம்.

அப்படியானால் கல்வி, கல்லாமை ஆகியவற்றினும் கேள்வி ஒரு படி மேலே செல்லுகிறது எனலாம். கல்வியால் பெறமுடியாத ஒன்றைக் கேள்வியால் பெறலாம் போலும். கல்வி தராத ஒன்றைக் கேள்வி தரும் போலும். அது எதுவாகலாம்?

*இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே*
*ஒழுக்க முடையார்வாய்ச் சொல்* (குறள் 415)

என்னும் குறள் அதனைச் சுட்டிக் காட்டுகிறது எனலாம். 'ஒழுக்கமுடை

**யாரது அறிவுரை கேட்டலே கேள்வி** ' என இப்போது தெரிகிறது. கல்வி, நூல்களை மட்டும் கற்றலாம். கல்வி, ஆசிரியர்களிடம் கேட்டல்; கேள்வி, ஒழுக்கமுடைய சான்றோரிடம் கேட்டல். பரிமேலழகரும் 'காவற்சாகாடு உகைப்பார்க்கு ஒழுக்கம் உடையார் வாய்ச் சொற்கள் ஊன்றுகோல் போல் உதவும்' என்கிறார். அரசராவோரது கல்விப் பயிற்சி இவ்வாறு கற்றல் கேட்டல் என இரண்டு கட்டங்களாக அமைந்துள்ளது.

**5. 5. அறிவு**

அரசர் பயிற்சியில் அடுத்த கட்டம் 'அறிவுடைமை'. அதுவே அடுத்த அதிகாரம். அதனைக் 'கல்வி கேள்விகளின் ஆய அறிவோடு உண்மை அறிவுடையனாதல்' என்கின்றார் பரிமேலழகர்; 'உலகத்து அரசர்க்கும் பிறர்க்கும் இக்கல்வியும் கேள்வியும் சிறந்த ஞானத்தைப் பயக்கும்' என்கின்றார் காளிங்கர். கல்வி கேள்வி ஆகியவற்றின் பயன் அறிவுடைமையாதலால், கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை என்னும் நான்கு அதிகாரங்களும் அரசராவார்க்குப் பயிற்சி 'அளிக்கின்றன' எனல் வேண்டும்.

அரசர்க்குப் படை அரண் முதலியவற்றைவிட அறிவே மிகுபயன் தருவது எனக் கருதுகிறார் வள்ளுவர். அறிவினை அவர் அரணாக உருவகம் செய்கிறார்:

*அறிவுஅற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்*
*உள்அழிக்கல் ஆகா அரண்.* (குறள் 421)

வள்ளுவர் படைகொண்டு ஆள்வதைப் போற்றவில்லை; அறிவு கொண்டு ஆள்வதையே போற்றுகின்றார். 'வல்லதே நல்லது' (Might is right) என்பது அவர் கொள்கை அல்ல. (இக் குறளில் 'செறுவார்க்கு' என்னும் சொல்லும் 'அரண்' என்னும் சொல்லும் ஆளப்பட்டிருப்பதைக் கொண்டே பரிமேலழகர் இக்குறள் அரசர்க்கு உரியது பேசுகிறது என உரையெழுதுகிறார். அறிவே உருவகமாக அரண் எனப்படுதலால் இக்குறளும் பொதுப்படவே பேசுகிறது எனக் கொள்ளலாம்.)

மன்னர்கள் நாடாளும்போது நாட்டின் பழக்கவழக்கங்களை அறிந்து மதித்து ஒழுகல் வேண்டும் என்பது ஓர் இந்திய மரபு; உயர் நெறி; முறையும் கூட. வள்ளுவர்காணும் வேந்தனும் இம்மரபு வழிப் படுவோனாக இருக்கின்றான். அது அறிவுடைமையால் கைகூடும். ஆளும் நாட்டின் பழக்கவழக்கங்களை அறியாதும் மதிக்காதும் மன்னன் ஒழுகுவானாயின் குடிமக்களின் வெறுப்பை அவன் தேடிக்கொள்வா

னுவான்; குடிபழி தூற்றும் கோலன் ஆவான். குடி தழீஇக் கோலோச்சும் மன்னன் உலகத்தோடு ஒட்ட ஒழுக வேண்டும். இக் கருத்துக்களையே வற்புறுத்துகிறது 'அறிவுடைமை'யின் ஒரு குறள்:

*எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு*
*அவ்வது உறைவது அறிவு.* (குறள் 426)

அரசன் 'உலகத்தையெல்லாம் யான் நியமித்தலால் என்னை நியமிப்பார் இல்லை எனக் கருதித் தான் நினைத்தவாறே ஒழுகின் பாவமும் பழியுமாம். ஆகலான் அவ்வாறு ஒழுகுதல் அறிவு அன்று என விலக்கியவாறாயிற்று' என இதனை விளக்கியுரைக்கிறார் பரிமேலழகர்.

அறிவின் பயன் பற்றி அரசர்க்கு இதை விட வேறென்ன கூற வேண்டும் :

*அறிவுடையார் எல்லாம் உடையார்: அறிவிலார்*
*என்னுடைய ரேனும் இலர்.* (குறள் 430)

## 5. 6. குற்றங்கடிதல்

கல்வியாலும் கேள்வியாலும் அறிவு நிரம்பப் பெற்ற அரசன் அதற்குத் தக நிற்றலும் வேண்டும்; நின்று தன்னைப் பண்படுத்தல் வேண்டும்; அதுவே அடுத்த பணி. குற்றங்கடிதலும் பெரியோரைத் துணைக்கொண்டு ஒழுகுதலுமே பண்படுதலுக்கு வழி ஆகும். இவற்றையே அடுத்து வரும் மூன்று அதிகாரங்கள் பேசுகின்றன.

அறிவுடைமை வேறு; குற்றங்கடிதல் வேறு. அறிவு பெறுதலாலேயே குற்றங்கடிதல் தானே நிகழும் என்று எதிர்பார்க்க முடியாது. 'அறிவுடையராயினும் குற்றங்கடிதல் வேண்டும்' என்னும் மணக்குடவர் கருத்தால் இது தெளிவுபடுகிறது.

அரசர் எவ்வெக் குற்றங்களைக் கடிதல் வேண்டும்? குற்றங்கடிதலாவது, 'காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம் என்பட்ட குற்றங்கள் ஆறனையும் அரசன் தன்கண் நிகழாமல் கடிதல்' என்பர் பரிமேலழகர். 'குற்றங்கடிதலாவது காமக் குரோத லோப மோக மத மாற்சரியம் என்னும் ஆறு குற்றமுங் கடிந்து ஒழுகுதல்' என்பர் மணக்குடவர். 'இவற்றை வடநூலார் பகைவர்க்கம் என்ப' எனப் பரிமேலழகர் வடநூல் மதத்தைச் சுட்டிக் காட்டுகிறார். மணக்குடவர் ஆண்ட வட சொற்றொடர் இதனைச் சுட்டாது சுட்டிக் காட்டுகிறது. இவ்வடநூல் மதத்தைப் பின்பற்றியே வள்ளுவர் மொழிந்தார் என இவ்வாசிரியர்கள் கருதுகின்றனர்போலும். இவை பற்றிய வள்ளுவர் கருத்தடங்கிய குறள் இது :

*செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார்*
*பெருக்கம் பெருமித நீர்த்து.* (குறள் 431)

**5. 6. 1.** வள்ளுவர் **சிறுமைக் குணம்** ஆகாது என்கிறார். பரிமேலழகர் அச்சிறுமைக் குணமாவது காமம் என விளக்குகிறார். மணக்குடவர் ' சிறியார் செய்வன ' எனப் பொதுவாகக் கூறிச் செல்லு கிறார். பரிப்பெருமாள் 'சிறியார் செய்வன செய்தலாவது **காம நுகர்ச் சியும், சூதும், கள்ளும், வேட்டையும்** முதலாயினவற்றின் மிக்கு ஒழுகுதல்' என விளக்குகிறார். பரிமேலழகர் சிறுமை என்பது காமம் மட்டுமே எனக் கருதுகிறார். வள்ளுவர் குற்றங்கடிதல் என்னும் அதிகாரத்தில் காமம் என்பது ஒரு குற்றம் எனக் கடிந்துரைக்கவில்லை. வடநூலார் சொல்லியிருக்கின்ற காரணத்தால் வள்ளுவரும் சொல்லியிருக்க வேண்டும் எனக் கருதிப் பரிமேலழகர் இக்குறளில் காமத்தைத் திணிக் கிறார். பரிப்பெருமாள், 'சூதும், கள்ளும், வேட்டையும் (கொலையும்) அரசர்க்கு மிகாது (அளவோடு) ஆகும்' என விளக்குவது வள்ளுவர் கொள்கைக்குச் சிறிதும் ஒவ்வாது. சூது, கள்ளுண்ணாமை, கொல்லாமை என்னும் அதிகாரங்களின் கருத்துக்களைப் பரிப்பெருமாள் எங்கனம் புறக்கணித்தாரோ? பரிமேலழகரும் பரிப்பெருமாளும் வடநூல் மரபைக் கண்மூடிப் பின்பற்றுவதால் விளையும் தவறு இதுவாகும். வட நூல்கள் சூதினையும் கள்ளினையும் விலங்கு வேட்டையையும் அரசர்க்கு இன்பத்துக்காகவும் பொழுது போக்கிற்காகவும் உடன்படுகின்றன. அவை சூதினை **அரச ஆட்டம்** (Royal game) எனப் போற்றுகின்றன. ஆனால் இவற்றை வள்ளுவர் தூற்றுவது அனைவரும் அறிந்ததே. வட மொழிப் பொருள் நூல்களிலிருந்து எந்த அளவு குறள் வேறுபடு கிறதோ அந்த அளவுக்குக் குறளுக்குப் பெருமை சேர்கிறது. இந்த உண்மை இருமொழிப் பொருள் நூல்களையும் உடன் வைத்து நோக்கு கின்றபோது வெளிப்படுகிறது. உரையாசிரியர்கள் இதனை உணர்ந்த தாகத் தெரியவில்லை.

**5. 6. 2.** செருக்கு என்பது **பிறர்மனை நயத்தல்** என்கிறார் மணக் குடவர். 'பிறன் இல் விழையாமை' (அதிகாரம் 15) வள்ளுவர்க்கு ஓர் உயர் நெறியே. ஆனால் செருக்கும் பிறர் மனை நயத்தலும் வேறு வேறு எனப் பிரித்தறியத்தக்கவை.

**5. 6. 3.** அடுத்த குறள் கூறும் குற்றங்கள் இவை :—

*இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா*
*உவகையும் ஏதம் இறைக்கு.* (குறள் 432)

**இவறலாவது** 'வேண்டுழிப் பொருள் கொடாமை' என்பர் பரிமேலழகர். இவ் ஈகைக் கருத்து 437–ஆம் குறளில் தெளிவாக அமைந்துள்ளது எனக் கருதுகிறார் அவர்.

*செயற்பால செய்யாது இவறியான் செல்வம்*
*உயற்பாலது அன்றிக் கெடும்.*

'செயற்பால' என்பதற்குப் 'பொருளால் தனக்குச் செய்து கொள்ளப்படுமவற்றை' என அவர் விளக்குகிறார். 'செயற்பாலவாவன அறம் பொருள் இன்பங்கள். பொருளால் பொருள் செய்தலாவது பெருக்குதல். அது,

> பொன்னின் ஆகும் பொருபடை; அப்படை
> தன்னின் ஆகும் தரணி; தரணியில்
> பின்னை ஆகும் பெரும்பொருள்; அப்பொருள்
> துன்னுங் காலைத் துன்னாதன இல்லையே.

இவ்வாறு சீவக சிந்தாமணிப் பாடலை (1923) எடுத்துப் பரிமேலழகர் மேலும் விளக்குகிறார். இவறல் என்னும் குற்றத்தின் இயல்பையும் அதனால் வரும் தீங்குகளையும் இவ்விளக்கத்தால் தெளிவாக உணரலாம்.

ஆனால் இதிலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஒரு விளக்கத்தை இக் குறளுக்குப் பரிப்பெருமாள் தருகிறார்: 'உலோபம் இரண்டு வகைத்து: தனக்கு முறையில்லாத பொருளை விரும்புதலும் உண்டான பொருளை விடாமையும்' என்கிறார் அவர். இது 432-ஆம் குறளின் உரையில் அவர் எழுதியது. 437-ஆம் குறளுரையில் 'செய்யும் முறைமை செய்யாதே ஈட்டுதற்கு விரும்பினவனும் அவனது செல்வமும் உய்யும் பகுதி இன்றிக் கெடும்' எனவும் 'இது (குறள் 437) பிறர் பொருளை விரும்பினால் வரும் குற்றம் கூறிற்று' எனவும் தம் கருத்தை அவர் மேலும் விளக்குகிறார். 'செயற்பால செய்யாது இவறுதல்' என்பது 'முறையல்லாத முறையில் பொருள் ஈட்ட விரும்புதல்' ஆகுமாம். புவியாளும் மன்னர் பொருளீட்டும் நெறிகளை வள்ளுவர் 'பொருள் செயல்வகை' என்னும் அதிகாரத்தில் (76) விளக்குகிறார். 'அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம் புல்லார் புரள விடல்' (குறள் 755) என்பது அங்குக் கூறப்பட்ட பொது நெறி. நெறியல்லா முறையில் ஈட்டப்பட்ட பொருள்மீது கொண்ட 'பற்றுள்ளம்' பற்றியும் அதனால் வரும் தீங்குகள் பற்றியும் வள்ளுவர் இங்குக் கூறுகிறார் எனலாம். பரிமேலழகர் இக்குறள் ஈகைபற்றிக் கூறுகிறது என்பதற்கும் பரிப்பெருமாள் ஈட்டும் நெறி பற்றிக் கூறுகிறது என்பதற்கும் நிறைய வேறுபாடு இருக்கிறது. வள்ளுவர் ஈகைபற்றி வேறு பல அதிகாரங்களில் பேசுகிறார். பரிப்பெருமாள் உரை, பாராளும் வேந்தர் ஆட்சிப்பணியில் கைக்கொள்ள வேண்டிய ஒரு புது நெறியினை, திருக்குறளில் பிற இடங்களில் பேசப் படாத ஒரு புது நெறியினை, 'தீவழிப் பொருள் மீது பற்று வைத்த பற்றுள்ளம் தீது' என்பதை, கடியப்பட வேண்டிய ஒரு குற்றத்தினை இங்குச் சுட்டிக் காட்டுவதால் அவ்வுரை போற்றத்தக்கதாகிறது. இன்றைய அரசியல் பொருளியலறிஞர்கள் போற்றும் நெறிகளோடும்

கடியும் குற்றங்களோடும் பரிப்பெருமாள் எடுத்துக் காட்டும் வள்ளுவர் நெறி ஒத்துச் செல்கின்றது. இதுவே இங்குக் குறிக்கத்தக்க சிறப்பு.[2]

**5. 6. 4.** மானத்தை வள்ளுவர் போற்றுகிறார். இறை மாட்சியிலும் 'மறன் இழுக்கா மானம் உடையது அரசு' (குறள் 384) என்பதால் இதனை உணர்கிறோம். 'மயிர் நீப்பின் வாழாக் கவரி மாவன்னார் உயிர் நீப்பர் மானம் வரின்' என்பது குடியியலின் 'மானம்' என்னும் அதிகாரம் (97) அதனைப் போற்றும் திறன். ஆனால் மாண்பிறந்த மானமே வள்ளுவரால் இங்குக் கடியப்படுகிறது. மாண்பிறந்த மானமாவது, 'அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர் தந்தை தாய் என்றிவரை வணங்காமையும் முடிக்கப் படாதாயினும் கருதியது முடித்தே விடுதலும் முதலாயின' என விளக்குகிறார் பரிமேலழகர். பரிமேலழகர் விளக்கம் முழுவதற்கும் குறளில் இடம் காண முடியாது. சான்றோர் அருந்தவத்தோரை அரசர் போற்றுதலுக்குக் குறளில் இடம் உண்டு. 'பெரியாரைத் துணைக் கோடல்' என்னும் அதிகாரம் இதற்குச் சான்று. பிறர் எல்லாம் பரிமேலழகர் சேர்க்கையேயாகும். இங்கு ஒன்று கருதத்தக்கது. அரசர்க்கு வணங்கத் தக்கார் உள்ளமையின் அவர் அதிகாரம் கட்டுப்படுத்தப் படுகிறது எனலாம். அரசியல் ஆராய்ச்சியில் இது குறிக்கத் தக்கது.

உவகை அரசர்க்கு இருக்கலாம். ஆனால் மாணா உவகையே குற்றமாகும் என்கிறது இக்குறள்.

**5. 6. 5.** அடுத்த குறள் இது :

*தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக்*
*கொள்வர் பழிநாணு வார்.* (குறள் 433)

குற்றத்தின் அளவு தன்மைபற்றி இக்குறள் கூறுவதாக உரையாசிரியர்கள் கருதுகின்றனர். ஆனால் இக்குறளிலும் வேந்தர்க்கு வேண்டாத குற்றம் ஒன்று கூறப்படுவதாகக் கொள்ளலாம். அக்குற்றம் பழிக்கு நாணாமை என்பதாகும். பரிமேலழகரும், மணக்குடவரும் எடுத்துக் காட்டும் வடநூல் மரபின் குற்றங்கள் ஆறனுள்ளும் இது அடங்காமை குறிக்கத்தக்கது.

**5. 6. 6.** அடுத்து வரும் குறள் கூறும் கருத்து ஆராய்ச்சிக்கு உரியது :

*வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்*
*வைத்தூறு போலக் கெடும்.* (குறள் 435)

---

2 **குறள் கண்ட பொருள்வாழ்வு** *(தி. முருகரத்தனம்)* — '*அரசும் பொருளும்*' என்னும் இயல் காண்க.

வருமுன்னர்க் காவாமை என்பது ஒரு குற்றமாக வள்ளுவரால் கருதப்படுகிறது. மணக்குடவரும் பரிப்பெருமாளும் 'துன்பம் வருவதன்முன் அதற்குத் தக்கது அறிந்து காவல் செய்யாமை' என விளக்கம் தருகின்றனர். 'தனக்கு ஒரு விதனம் வருமுன்னே' எனத் தொடங்குவார் பரிதியார். துன்பம், விதனம் என்பவை வேறு; குற்றம் என்பது வேறு. மணக்குடவர் முதலானோர் கருத்துப்படி 'துன்பம் வருமுன்னர்க்' காவாமை குற்றம் ஆகும். ஆனால் பரிமேலழகர் 'குற்றம் வருமுன்னர்' என இணைக்கிறார்; துன்பம் வருமுன்னர் என உரைக்கவில்லை. அவர் கருத்து இக்குறளில் கடியத்தக்க குற்றம் ஒன்றும் கூறப்படவில்லை என்பதாகும். மணக்குடவர் முதலானோர்க்கு இக் குறளில் ஒரு குற்றம் கூறப்படுகிறது; அது ஆறு குற்றங்களிலிருந்தும் வேறானது. பரிமேலழகர், இவ்வதிகாரத்தின் முகவுரையில் தான் சுட்டிக் காட்டிய ஆறு குற்றங்கள் தவிரப் பிற கூறப்படவில்லை எனக் கருதிக் கொண்டு உரையெழுதிச் செல்லுகிறார். ஆதலால் 'துன்பம் வருமுன்னர்க் காவாமை'யை ஒரு குற்றமாக அவரால் உடன்பட முடியவில்லை!

5.6.7. அடுத்துத் '**தன்னை எஞ்ஞான்றும் வியவற்க**' என்றும் '**நன்றி பயவா வினை நயவற்க**' என்றும், ஒரு குறள் (439) காவலர்கள் கடியத்தக்க குற்றங்களை அடுக்கிச் சொல்கிறது. பரிமேலழகர் 'மதத்தால் தன்னை நன்கு மதித்தல், மானத்தால் நன்மை பயவா வினைகளை விரும்பல்' ஆகிய இரு குற்றங்களும் இக்குறளில் கூறப்படுகின்றன என்கிறார். பிற உரையாசிரியர்கள் எல்லோரும் இதனை முழுவதும் உடன்பட்டதாகத் தெரியவில்லை. மதமாகிய குற்றமே இங்குப் பேசப் படுகிறது; மானமாகிய குற்றம் அல்ல என்கின்றனர் பரிப்பெருமாளும் காளிங்கரும். இக்குறள் கூறும் குற்றங்களை மதத்துடனோ மானத் துடனோ இணைத்து இடர்ப்படுதல் தேவையில்லை எனத் தோன்றுகிறது. தன்னை வியத்தலும், தீமை நயத்தலும் ஆகியவை தனித்தனி தாமே குற்றங்கள் எனக் கொள்ளலாம்.

5. 6. 8. இறுதிக் குறள் கடியத்தக்க பிறிதொரு குற்றம் பற்றிக் கூறுகிறது:

*காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்*
*ஏதில ஏதிலார் நூல்.* (குறள் 440)

அரசன் 'தன் விருப்பம் பிறர்க்குத் தெரியாதபடி விருப்பமான வற்றை நுகர வல்லனானால் பகைவர் தன்னை வஞ்சிப்பதற்காகச் செய்யும் சூழ்ச்சிகள் பலிக்காமல் போகும்' (திருக்குறள் தெளிவுரை— மு. வ.). **பலர் அறியச் செய்து பகைவர்க்கு இடம்தரல்** என்னும் குற்றம்

கூடாது என்பதே இதன் நோக்கம். காமமும் உவகையும் அல்லாத குற்றம் ஒன்றே இங்குப் பேசப்படுகிறது. இதனை, 'அக்காதலை அடக்காமையும் குற்றம் என்று கூறப்பட்டது' எனப் பரிப்பெருமாள் எழுதுவதால் அறியலாம்.

**5. 6. 9.** நாட்டு வாழ்விற்கும் அரசனது தனிவாழ்விற்கும் ஆகாத குற்றங்களை இவ்வதிகாரம் எடுத்து விளக்குகிறது எனலாம். அவற்றை இப்போது இங்குத் தொகுத்துக் காணலாம்:

செருக்கு
சினம்
சிறுமை
இவறல்
மாண்பிறந்த மானம்
மாணு உவகை
பழி நாணுமை
வருமுன்னர்க் காவாமை
தன்னை வியத்தல்
நன்றிபயவா வினை நயத்தல்
காதல காதல் அறிய உய்த்தல்

## 5. 6. 10. தமிழ் மரபின் குறள்

உரையாசிரியர்கள் வடநூல் மரபினைப் பின்பற்றிக் 'காமக் குரோத லோபமோக மத மாற்சரியம்' என்னும் ஆறு குற்றங்களே இவ் வதிகாரத்தில் பேசப்படுகின்றன என்கின்றனர். ஆனால் அவர்களால் அவ்வாறு அடக்கிக் காட்டுதல் இயலவில்லை. எடுத்துக்காட்டாக 'வருமுன்னர்க் காவாமை'யைப் பரிமேலழகர் ஆறு குற்றங்களுள் அடக்க இடர்ப்படுவது முன்னர்ச் சுட்டிக் காட்டப்பட்டது. வள்ளுவர் குற்றங்கடிதல் என்னும் அதிகாரத்தை விரிந்த, பரந்த முறையில் அமைத்துள்ளார், அதனைப் பரிமேலழகர் போன்றோர் குறுக அமைப்பது பொருந்தாது. வள்ளுவர் தமிழக, தென்னக மரபைப் பின்பற்றி நூல் இயற்றிச் செல்லுகிறார் எனத் தெரிகிறது. வள்ளுவர்க்கு முன்னரும் குற்றங்கடிதலாகிய அரசியலாராய்ச்சி நடைபெற்றிருப் பதைப் பதிற்றுப்பத்து காட்டுகிறது:

*சினனே காமம் கழிகண் ணோட்டம்*
*அச்சம் பொய்ச்சொல் அன்புமிக வுடைமை*
*தெறல் கடுமையொடு பிறவும் இவ்வுலகத்து*
*அறம்தெரி திகிரிக்கு வழியடை ஆகும்.* (பதிற்றுப்பத்து 22 : 1-4)

இவ்வாராய்ச்சி மரபின் வழியே திருக்குறள் எழுந்திருக்கலாம். வள்ளுவர் தன் நோக்கத்துக்கு ஏற்றவாறு கூட்டியும் குறைத்தும் தம் நூலை யாத்திருக்கலாம். இதனை உடன்படாது வடநூல் மரபுடன் திருக்குறளை இணைப்பதால் சிக்கல் ஏற்படுகிறது.

இக்குற்றங்களை அகப்பகை என்பார் சிலர். இவ்வகப் பகையை ஒழித்து ஒழுகுவதால் பாராளும் மன்னர் பண்படுவர். இவ்வாறு பண்படுதலுக்குக் கல்வியும் அறிவுடைமையும் அடிப்படையாகித் துணை நிற்கும். கல்விப் பயிற்சியை அடுத்துப் பண்படுதல் நடைபெறுகிறது. குற்றங்கடிதல் இவ்வாறு பண்படுதலின் முதல் கட்டம். அடுத்த கட்டம் 'பெரியாரைத் துணைக் கோடல்'.

## 5. 7. பெரியாரைத் துணைக் கோடல்

5. 7. 1. அரசன் என்றும் பெரியாரைத் துணையாகக் கொண்டு ஒழுகுதல் வேண்டும். பெரியாரால் அரசர் 'பெருமை'யை—பெரும் பண்புகளைப் – பெறுவர் என்பது தெளிவு. 'மாந்தர்க்கு இனத்தியல்பது ஆகும் அறிவு' (குறள் 452) ஆதலால் பெரியாரது அறிவை அரசர் பெறுவர். 'மனம் தூய்மை செய்வினை தூய்மை இரண்டும் இனம் தூய்மை தூவா வரும்' (குறள். 455) ஆதலால் பெரியாரது தூய்மையால் அரசர் தூயராவர். 'இனத்தான் ஆம் இன்னான் எனப்படும் சொல்' (குறள் 453) ஆதலால் அரசர் பெரியராய்த் திகழ்வர். பெரியாரைத் துணைக் கோடலால் அரசர் பண்படுவர் என்பதே வள்ளுவர் வழங்கும் இக்கூற்றுக்களால் தெளிவாகிறது. தம் மாட்டுக் குற்றங்கடிந்த கொற்றவர் பெரியார் துணையால் பெருந் தன்மையுற்றுப் பண்படுவர் என எதிர்பார்க்கலாம்.

அரசர் துணைக் கொள்ளத்தக்க பெரியார் யார்? எத்தகையர்? அப்பெரியாரைத் திருவள்ளுவர்,

அறன் அறிந்து மூத்த அறிவுடையார் (குறள் 441)
பெரியார் (குறள் 443)
சூழ்வார் (குறள் 445)
தக்கார் (குறள் 446)
துணையார் (குறள் 447)
நல்லார் (குறள் 450)

எனப் பல பெயர்களால் குறளில் வைத்தே சுட்டிக் காட்டுகிறார். **அறன் அறிதல், மூத்தல், அறிவுடைமை,** பெருமை, சூழ்தல் (ஆராய்தல்), **நடுநி** (நடுவுநிலைமை, அதிகாரம் 12), **துணைமை, நன்மை** ஆகிய பெரும்

பண்புகளைப் பெற்றோர் இப்பெரியார் என்பதை இவ்வதிகாரத்தால் உணரலாம்.

பொருட்பாலின் நட்பியலில் **பெரியாரைப் பிழையாமை** என்னும் ஓர் அதிகாரமும் (90) உண்டு.

ஆற்றுவார் (குறள் 891, 893, 894)
பெரியார் (குறள் 892, 896)
தகைமாண்ட தக்கார் (குறள் 897)
குன்றன்னர் (குறள் 898)
ஏந்திய கொள்கையார் (குறள் 899)
சிறந்து அமைந்த சீரார் (குறள் 900)

என்னும் தொடர்கள் இவ்வதிகாரத்தில் காணப்படுகின்றன. இவ்விரண்டு அதிகாரங்களிலும் கூறப்படும் பெரியார் ஒருவராகவே இருக்கலாம். இவ்விரண்டாம் அதிகாரம் குறிப்பிடும் பெரியார் ஒழுக்கத்தாலும் அறிவாலும் பண்பாலும் தவத்தாலும் உயர்ந்து அழிக்கவும், ஆக்கவும் வல்ல ஆற்றல் பெற்ற சான்றோராகத் தோன்றுகின்றனர்.

*ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து*
*வேந்தனும் வேந்து கெடும்* (குறள் 899)

என்னும் குறள் இக்கருத்தினைத் தெளிவாக்குகிறது. இத்தகையோர் அரசில் நிலையானபொறுப்பேற்ற அரசனுவலர் அல்லர் என்பதுதெளிவு. வள்ளுவர் தம் நூலில் எங்கும் அவ்வாறு குறிப்பிடவில்லை. பெரியாரைச் சுட்டிப் பேசும் பெயர்களும் அத்தகையவை அல்ல. இத்தகையோர் அரசர்க்கு நட்பு முறையில் அமைந்தோரே ஆவர். அரசரே சென்று அவர் நட்பினைத் தேர்ந்து கொள்ள வேண்டும்; அவரது ‘அருமைப்பாட்டை அறிந்து’ தேர்ந்து கொள்ள வேண்டும். ‘அறிவுடையார் கேண்மை திறனறிந்து தேர்ந்து கொளல்’ (குறள் 441) என்பதால் இது தெளிவுபடுகிறது. தேர்ந்து கொண்ட நட்பினை — நல்லார் தொடரினை (குறள் 450) — அப்பெரியார் உவப்பன செய்து போற்றி வருதலும் வேண்டுமாம். இதனைப் ‘பேணிக் கொளல்’ (குறள் 442) என்றும் அடுத்த குறளின் தொடர் குறிப்பிடுகிறது. நட்புச் செய்து அப்பெரியாரைப் ‘பேணித் தமராகக் கொளல்’ (குறள் 443) வேண்டும்; ‘தமரா ஒழுகுதல்’ (குறள். 444) வேண்டும். இப்பெரியாரெல்லாம் அரசர்க்கும் பெரியார் என்பதைத் ‘தம்மிற் பெரியார்’ (கு. 444) என்னும் தொடர் குறிப்பிடுகிறது. இக் கருத்துக்கள் எல்லாம் பெரியார் பெருமையினையும் அப்பெரியார்மாட்டு அரசர் மேற்கொள்ளும் முயற்சிகளையுமே சுட்டுகின்றன. ஆதலால் இங்குப்

பெரியார் என்பார் அமைச்சர் எனப்படுவோர் அல்லர் எனத் தெரி கிறது ; அவரினும் இப்பெரியார் வேறானவர் போலும்.

ஆனால் பரிமேலழகர், பெரியாரைத் துணைக்கோடலாவது 'பேரறிவுடையாரைத் தனக்குத் துணைக்கோடல் ... ... பேரறிவுடை யாராவார் அரசர்க்கும் அங்கங்கட்கும் மானுடத் தெய்வக் குற்றங்கள் வாராமல் காத்தற்கு உரிய அமைச்சர், புரோகிதர்' என விளக்கியிருக் கிறார். மணக்குடவரும் பரிப்பெருமாளும் பரிமேலழகரைப் பின்பற்று கின்றனர். ஆனால் 'அமைச்சியலில்' பயன்படுத்தியது போன்று இவ்வியலில் வள்ளுவர் அமைச்சர், மந்திரி ஆகிய எச்சொல்லையும் பயன்படுத்தவில்லை ; புரோகிதர் என்ற சொல்லும் குறளிலேயே இல்லை. பெரியார் என்னும் சொல் புரோகிதர் என்பாரையும் உள்ளடக்கி நிற்கிறது எனப் பிற உரையாசிரியர் எவரும் குறிப்பிடவும் இல்லை. வள்ளுவர் குறளிலும் வள்ளுவர் காலத்திலும் தமிழக ஆட்சியில் புரோகிதர்க்கு எவ்வளவு இடம் உண்டு என்பது ஆராய்வதற்கு உரியது.[3] அமைச்சர் முதலான அரசலுவலர் பற்றி வள்ளுவர் பின்னர் 64-ஆம் அதிகாரம் முதல் கூறுகிறாராதலால் இறைமாட்சியை அடுத்துப் பெரியாரைத் துணைக்கோடலில் அவர் பற்றிக் கூற வேண்டுவதில்லை. ஆதலால் பெரியார் என்பார் அமைச்சரினும் வேறாவர் எனவே கொள்ள வேண்டும்.

**5. 7. 2.** இப்பெரியார் அரசரின் நட்பினர் என மேலே கண்டோம். இந்நட்பால் அரசர் பண்படுவர் எனவும் கண்டோம். இப் பெரியார்க்கு வேறு பணியுண்டோ? திருக்குறளின் அதிகாரத்தால் அவர் பணியை அறிய முடிகிறது.

'உற்ற நோய் நீக்கி உறாஅமை முற்காத்தல்' பெரியார்க்கு ஒரு பணி என ஒரு குறள் (442) குறிப்பிடுகிறது. நோய் எவை? நீக்குதல் எவ்வாறு? இக்குறளால் இவை தெளிவுபடவில்லை. ஆதலால் பரிமேலழகர் அர்த்த சாஸ்திர மரபினைப் பின்பற்றி இவற்றை விளக்கு கிறார் :

'தெய்வத்தானாக மக்களானாகத் தனக்கு வந்த துன்பங்களை நீக்குமாறு அறிந்து நீக்கிப் பின் அப்பெற்றியன வாராவண்ணம் முன் அறிந்து காத்தல்............

3 புரோகித என்னும் வடசொல் புரோசு எனத் திரிந்து சங்கத் தமிழில் வழங்கியது. (பதிற்றுப்பத்து, பதிகம், 7–10, 9–12). இவர்கள் சங்க கால ஆட்சியில் பெற்ற இடத்தை இவ்வழியில் ஆராயலாம்.

தெய்வத்தான் வரும் துன்பங்களாவன: மழையின்து இன்மை மிகுதிகளானும் காற்றுத் தீப் பிணி என்ற இவற்றானும் வருவன: அவை கடவுளரையும் தக்கோரையும் நோக்கிச் செய்யும் சாந்திகளான் நீக்கப் படும். மக்களான் வரும் துன்பங்களாவன: பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வார் என்று இவர்களான் வருவன. அவைசாம பேத தான தண்டங்களாகிய உபாயத்துள் ஏற்றதனால் நீக்கப்படும். முற்காத்தலாவது: தெய்வத்தான் வருவனவற்றை உற்பாதங்களான் அறிந்து அச்சாந்திகளாற் காத்தலும், மக்களான் வருவனவற்றை அவர் குணம், இங்கிதம், ஆகாரம், செயல் என்பவற்றான் அறிந்து அவ்வுபாயங்களுள் ஒன்றாற் காத்தலுமாம். ஆகவே புரோகிதரையும் அமைச்சரையும் கூறியவாறு ஆயிற்று.'

வள்ளுவர், பெரியார் பணியைத் தெளிவுபடக் கூறாதபோது பரிமேலழகர் விளக்கம் பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. ஆனால் இயற்கையைக் கட்டுப்படுத்தல் சாந்தி செய்தல் ஆகிய மந்திர தந்திரங்களில் வள்ளுவர்க்கு நம்பிக்கை உண்டா என்பது ஐயமே. குறளில் இவற்றுக்கு இடம் இல்லை. பரிமேலழகர், பெரியார் என்பார் புரோகிதரும் எனக் கொண்டதால் இத்தகைய விளக்கங்களைச் சொல்ல நேர்ந்தது. புரோகிதர் பணி அத்தகையதே. பெரியார் என்பார் புரோகிதரும் அல்ல எனக் கொள்வோமானால் இவ்விளக்கங்களும் பொருந்தாமற் போகும்.

பெரியாரின் அடுத்த பணியினைப் பின்வருங் குறள்கள் காட்டுகின்றன:

*தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்*
*வன்மையுள் எல்லாம் தலை.* (குறள் 444)

*தக்கார் இனத்தனாய்த் தான்ஒழுக வல்லானைச்*
*செற்றார் செயக்கிடந்தது இல்.* (குறள் 446)

*முதல்இலார்க்கு ஊதியம் இல்லை; மதலையாம்*
*சார்பிலார்க்கு இல்லை நிலை.* (குறள் 449)

பெரியார், வலிமை தருகின்றனர்; செற்றாரிடமிருந்து காக்கின்றனர்; தாங்குவதாம் துணையாகின்றனர். அதாவது பகையிலும் போரிலும் இப்பெரியார் தம் அரசர்க்குத் துணையாக இருக்கின்றனர். இத்துணைமை பகை நீக்கலும், சந்து செய்வித்தலும், அமைதி ஏற்படுத்தலும் ஆகலாம்.

பெரியாரின் அடுத்த பணிபற்றிப் பின்வரும் குறள்கள் பேசுகின்றன:

*இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே*
*கெடுக்கும் தகைமை யவர்.* (குறள் 447)

இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும். (குறள் 448)

இக்குறள்கள் அப்பெரியார் அரசர்க்கு அறிவின் துணையாக நின்று திருத்துகின்றனர் என்பதைக் குறிப்பிடுகின்றன.

**5. 7. 3.** இத்தகைய பெரியார் யாராக இருத்தல் கூடும்? வள்ளுவர் காலமாகிய சங்க காலத்தில் வாழ்ந்த புலவர் பெருமக்களே இங்கு நினைவிற்கு வருகின்றனர். அவர்களே அறன் அறிந்து மூத்த அறிவுடையார்; பெரியார்; சூழ்வார்; நல்லார்; தக்கார்; அவர்களே **பிசிர் ஆந்தையார், கபிலர், கோவூர்கிழார், அவ்வையார், இளந்தத்தனார், வெள்ளைக்குடிநாகனார்** போன்றோர். அரசர் வரிவாங்கும் முறை, குடி காக்கும் முறை, பகையொழித்து நட்பாக்கும் முறை — இம்முறைகளில் இப்புலவர் பெருமக்கள் ஆற்றிய பணி சங்க இலக்கியங்கள் வழியாக நாம் அறிந்ததே. இத்தகைய பெரியோரையே வள்ளுவர் 'பெரியாரைத் துணைக்கோடல்' என்னும் அதிகாரத்தில் குறித்திருக்க வேண்டும். இத்தகைய பெரியோரால் பண்டைத் தமிழ் மன்னர் பண்பட்டதைப் பழந்தமிழ் நூல்கள் விளக்கி நிற்கின்றன. இந்நிலையினையே வள்ளுவர் தாம் கண்ட ஆட்சியில் மேற்கொண்டார் எனலாமே.

## 5. 8. சிற்றினஞ் சேராமை

பெரியாரைத் துணைக் கொண்டு பெற்ற பண்பாட்டைச் சிற்றினம் சேர்ந்து சிதைத்தல் ஆகாது. 'அறிவைத் திரித்து இருமையும் கெடுக்கும் இயல்பிற்றாய அதனைப் (சிற்றினத்தினைப்) பொருந்தின் பெரியாரைத் துணைக்கோடல் பயன் இன்று' என்பார் பரிமேலழகர். சிற்றினத்தால் சிற்றறிவே தோன்றும் (குறள் 452). மனந்தூய்மை, செய்வினை தூய்மை இரண்டும் சிற்றினத்தால் சிதறும் (குறள் 455). சிற்றினம் புகழ் கெடுக்கும் (குறள் 457). தீயினம் அல்லற்படுக்கும் (குறள் 460). இத்தகைய காரணங்கள் பலவற்றால் அரசன் பண்பாடிழப்பான் என்பது தெளிவு. 'சிற்றினமாவது நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இல் என்போரும் விடரும் தூர்த்தரும் நடரும் உள்ளிட்ட குழு' எனப் பரிமேலழகரும், 'சிற்றினம் சேராமையாவது காமுகரையும், சூதாடிகளையும் பெண்டிர் முதலாயினாரையும் சேர்ந்தொழுகினால் வரும் குற்றமும் சேராமையால் வரும் நன்மையும் கூறுதல்' என மணக்குடவர் பரிப்பெருமாளும் சுட்டிக் காட்டுகின்றனர். பெரியார் துணையால் பண்பட்டதை சிறியார் உறவால் சீரழித்தல் கூடாது என்பதே வள்ளுவர் நோக்கம். ஆதலால், அவர் பெரியாரைத் துணைக் கோடல் என உடன்பாட்டால்

ஓரதிகாரமும் சிற்றினம் சேராமை என எதிர்மறையால் ஓரதிகாரமும் இயற்றியுள்ளார்.

இவற்றால் அரசன் ஆட்சிப்பணிக்கு வேண்டிய ஆயத்தங்களை முழுமையுறப் பெறுகின்றான் எனலாம். கல்வி (அதிகாரம் 40) முதலாகச் சிற்றினம் சேராமை ஈறாக (அதிகாரம் 46) அரசர் ஆக்கமே பேசப்படுகிறது. இதனையே சில அர்த்த சாஸ்திரங்கள் இளவரசர் பயிற்சி என வகுத்துரைக்கின்றன. அந்நூல்கள் உயர்அரசலுவலரிடத்து இளவரசர் பயிற்சி பெறுதலைக் குறிக்கின்றன.[4] வள்ளுவர் அந் நூல்களோடு முழுவதும் ஒத்துச் செல்லவில்லை. பயிற்சியில் அறிவுடைமை சான்றாண்மை ஆகியவற்றுக்கு அவர் முதன்மை தந்து செல்லுகிறார். இது திருக்குறளிலே காணும் சிறப்பியல்பு.

பிளேட்டோ என்னும் பண்டைக் கிரேக்கச் சிந்தனையாளர் தம் குடியரசு என்னும் நூலில் மெய்யுணர்ந்த மன்னன் (Philosopher King) ஒருவனை உருவாக்க விழைகிறார். அவன் கல்வியாலும் அறிவாலும் சிறந்தவனாக இருப்பான். அவனே நாடாளத் தக்கவன் என்கிறார் பிளேட்டோ. அத்தகைய மெய்யுணர்ந்த மன்னனையே இந்திய மரபின் அர்த்த சாஸ்திரங்களும் உருவாக்க விழைகின்றன என இந்திய வரலாற்றறிஞர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.[5] வள்ளுவர் கண்ட இறைவன், பிளேட்டோ விரும்பியதைப் போன்று கல்வியும் அறிவும் நிறைந்த மன்னனே. அது மட்டுமல்ல; அவன் சான்றாண்மை மிக்கவனும் ஆவான். கல்வி, அறிவு, சான்றாண்மை இவற்றின் உருவமாக விளங்கும் மன்னன் மெய்யுணர்ந்த மன்னனைவிட மேலானவன் அல்லவா?

---

4 காண்க பக். 302–304, AIPTI.

5 "The education of the prince aimed at nothing less than the production of a Philosopher King".— P. 258, KCEI.

# 6

## அரசர் பணி

### 6. 1. பணிகள் பல

பண்புடை வேந்தன் பணி நாடாளுதல். நாட்டாட்சி ஒரு பணியாய் முடிவதில்லை. அது உண்மையில் பல்வேறு பணிகளைக் கொண்டது. அதற்கு ஏற்ப அரசன் பணிகளும் பலவாகும்; பல திறத்தனவாகும். வள்ளுவர் கண்ட அரசனுக்கு என்ன என்ன பணிகள் உண்டு என இவ்வியலில் காணலாம்.

**இறைமாட்சி** என்னும் முதல் அதிகாரமே, பண்புகளைத் தொகுத்துச் சொல்லுவது போன்று பணிகளையும் தொகுத்துச் சொல்லுகிறது. அவை வருமாறு:

> *அறன்இழுக்காது **அல்லவை நீக்கி** மறன்இழுக்கா*
> *மானம் உடையது அரசு.* (கு. 384)
>
> **இயற்றலும் ஈட்டலும் காத்தலும்** *காத்த*
> **வகுத்தலும்** *வல்லது அரசு.* (கு. 385)
>
> *இன்சொலால்* **ஈத்தளிக்க** *வல்லாற்குத் தன்சொலால்*
> *தான்கண் டனைத்துஇவ் வுலகு.* (கு. 387)
>
> **முறைசெய்து காப்பாற்றும்** *மன்னவன் மக்கட்கு*
> *இறைஎன்று வைக்கப்படும்.* (கு. 388)
>
> **கொடை அளி செங்கோல் குடிஓம்பல்** *நான்கும்*
> *உடையானாம் வேந்தர்க்கு ஒளி.* (கு. 390)

இப்பணிகளை அல்லாது பிற அதிகாரங்களைத் துருவிப்பார்க்கின்ற போது வேறு சில பணிகளும் உண்டு என்பது தெரிகிறது. அவற்றையெல்லாம் தொகுத்துப் பார்த்தால்தான் குறள்கூறும் அரசர் பணிகள் ஓரளவு முழுமையாகத் தெரியும்.

அதிகாரங்கள் **தெரிந்து செயல்வகை (47), வலியறிதல் (48), காலம் அறிதல் (49), இடன் அறிதல் (50)** முதலியவை அரசன் மேற்கொள்ளும் **போர்வினை** பற்றிப் பேசுகின்றன. 48-ஆம் அதிகாரம் வலியறிதல் **ஈகை, ஒப்புரவாண்மை** பற்றிப் பேசுகின்றது: **ஆற்றின்** அளவறிந்து **ஈக**

(கு. 477); உளவரை தூக்காத ஒப்புரவாண்மை (கு. 480). அதிகாரங்கள் தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல் (51,52) ஆகியவை அரசர்க்கு உரிய சில பணிகளைக் குறிப்பிடுகின்றன. அதிகாரம் (58) ஒற்றாடல் மற்றொரு பணியினைப் பேசுகிறது. இவ்வாறே சுற்றம் தழால் (அதி. 53) வேறொரு பணியாகலாம். இப்பணிகளையெல்லாம் வகுத்தும் தொகுத்தும் காணலாம் :

1. காத்தல், காப்பாற்றல்
   அல்லவை நீக்கல்
2. வினை
3. தெரிதல்
   தெரிந்து வினையாடல்
   ஒற்றாடல் .
4. இயற்றல்
   ஈட்டல்
5. வகுத்தல்
   ஈதல், கொடை
   அளித்தல்
   சுற்றம் தழுவல்
   குடி ஓம்பல்
6. முறைசெய்தல்

இப்பணிகள் எல்லாம் ஆறுவகையாக அடங்குகின்றன. இவற்றை முறையே 1) காவற்பணி 2) போர்ப்பணி 3) ஆட்சிப்பணி 4) வருவாய்ப்பணி 5) அறப்பணி 6) முறைசெயற்பணி என வழங்கலாம். அரசியல் வரலாற்றறிஞர் காவற்பணியை Executive duties எனவும் போர்ப்பணியை Military duties எனவும் ஆட்சிப் பணியை Administrative duties எனவும் வருவாய்ப் பணியை Revenue duties எனவும் அறப்பணியை Enlightened duties எனவும் முறைசெயற்பணியை Judicial duties எனவும் பெயர் சூட்டி வழங்குவர்.[1] இவை பற்றி இனி விரிவாகக் காணலாம்.

## 6. 2. காவற்பணி

அரசர்க்குத் தலையாய பணி காவற்பணியே ஆகும். காவற்பணி என்பது சிறப்பாக நாடுகாவற் பணியையே குறிக்கும். அதாவது

1 இவ்வாறு வகுத்துக்கொண்டு டாக்டர் சலட்டோர் அவர்கள் விரிவாக ஆராய்கிருர்கள். அவர் நூல் AIPTI. பக்கம் 306 காண்க.

வெளிநாடுகளில் இருந்து — அண்டை அயல் நாடுகளில் இருந்தும் பகை நாடுகளில் இருந்தும்—தோன்றி வரும் தாக்குதல்களிலிருந்து அரசன் தன் அரசையும் மக்களையும் காத்தலே ஆகும். பண்டைக் காலத்தில் வெளியிலிருந்து மாற்றரசராலும் மக்களாலும் தான் தோன்றித் தலைவர்களாலும் ஒரு நாட்டுக்கும் அதன் மக்களுக்கும் வரும் துன்பமே பெரிதாக இருந்தது. ‘நாடுகளிடையே சம உரிமை உண்டு; அனைத்து நாட்டு மக்களும் ஒத்த உரிமை பெற்றவர்கள்; ஒருவரை மற்றவர் தாக்குதல் வரம்பு மீறியதாகும். போரும் பூசலும் துன்பத்தையே தரும்; உலக நாடுகளிடையே அமைதியே ஆக்கமும் இன்பமும் தரும்’ என்பன போன்ற அரசியல் அறங்கள் இன்றைய உலகு பட்டுணர்ந்து தெளிந்தவையே; பண்டைஉலகு அறியாதவை. அன்று வல்லான் வகுத்ததே வாய்க்கால். ஒவ்வோரரசனும் அன்று ‘ஒரு தனியாழி உருட்டவே’ விரும்பினன்; ‘ஏகச்சக்ராதிபதியாக’ விளங்கவே விழைந்தனர்; ஆகவே மாற்றரசரை அழிக்கவே ஒவ்வோ ரரசனும் எண்ணம் கொண்டிருந்தான்; திட்டம் தீட்டினன். இதன் விளைவாக நாடுகளிடை ஓயாது போரும் பூசலும் நடைபெற்று வந்தன. இந்நிலையில் நாடு காவல் பணியே மன்னர்க்குப் பெரும் பணியாயிற்று. பண்டை அரசன் போர்க்களத்திலேயே உருவாகித் தோன்றினன் என்பர் ஒருசார் வரலாற்றாசிரியர். இச்சூழ்நிலையில் காவற்பணி மன்னரின் முதற்பணி ஆயதில் வியப்பில்லை.

குறளில் வரும் அரசனும் இந்நாடுகாவற்பணியைத் தன்பெரும் பணியாக்க் கொண்டவன் எனத் தெரிகிறது. அரசர்க்குக் காவற்பணி ஒரு பெரும்பணி என்பதற்கு ஒரு நல்ல சான்று காவலன் என்னும் சொல் வழக்கே ஆகும். அரசரைக் குறித்து வழங்கும் காவலன் என்னும் சொல் காரணம் பற்றித் தோன்றிய பெயர். அது அவர் பணியை எடுத்துக்காட்டி வழங்குகிறது. சங்ககாலமாகிய பழந்தமிழகக் காலத்திலேயே காவலன் என்னும் சொல் பரக்க வழங்கியது. காவற்கு அமைந்த அரசு என்கிறது பதிற்றுப்பத்து (74-20). காவல் மன்னர் என்கிறது புறநானூறு (331-11).

வள்ளுவரும் தம் குறளில் அரசர்க்கு உரிய காவற்பணி பற்றிப் பேசுகிறார். காவற்பணிபற்றிய கருத்துக்களை அவர் ஓரே இடத்தில் தொகுத்துத் தரவில்லை. பல்வேறு அதிகாரங்களில் அவை அமைந்து கிடக்கின்றன. இது ஒரு குறள் :

> முறைசெய்து **காப்பாற்றும்** மன்னவன் மக்கட்கு
> இறைஎன்று வைக்கப் படும். (இறைமாட்சி, குறள் 388)

மன்னவன் இங்குக் **காப்பாற்றும்** மன்னவன் எனப்படுகிறான். அரசர்க்குரிய காவல்பணி இதனால் தெளிவாகப் புலப்படுத்தப்படுகிறது.

அது ஓர் அரிய பணி என்பதும் இக்குறளால் விளக்கமுறுகிறது. அது ஓர் அரிய பணியாக இருத்தலால்தான் அப்பணியைச் செய்யும் மன்னன் 'இறை என்று வைக்கப்படுவதாக' இக்குறள் குறிப்பிடுகிறது. இங்குக் கூறப்படும் காவல் வெளிப்பகையிலிருந்து காத்தல் உட்பகை யிலிருந்து காத்தல் என்றில்லாது பொதுவாகவே பேசப்படுவதையும் காணலாம். மேலும் ஒருகுறள் இப்பணியினை மேலும் தெளிவாகக் குறிப்பிடுகிறது :

இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின். (செங்கோன்மை, குறள் 547)

'இவ்வுலகத்து வாழும் மக்கள் முதலாகிய உயிர்கள் அனைத்தையும் மன்னனுனவன் ஒன்றினை ஒன்று நலியாமல் பாதுகாத்து ஒழுகும்' எனக் காளிங்கர் இக்குறளுரையில் விளக்குவர். இவ்வுரை-யாசிரியர் 'ஒன்றினை ஒன்று நலியாமல்' என்பதனல் மக்களுக்கும் விலங்குகளுக்கும் பிற மக்களாலும் விலங்குகளாலும் வரும் நலிவுகளை அவர் குறிப்பிடுகிருர் எனலாம். பிற மக்கள் அயல் அண்டை நாட்டுப் பகையாகலாம்; உட்பகையும் ஆகலாம். அடுத்தும் ஒருகுறள் பொது வாக இக்காவற் பணிபற்றிக் குறிப்பிடுகிறது :

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின். (கொடுங்கோன்மை, குறள் 560)

'காவலன் காவான் எனின்' என்னும் தொடர் காவலன் தன் கடமையாகிய காத்தலைச் செய்யான் என்ருல் எனவே பொருள் தந்து நிற்கிறது. இதனல் காத்தல் மன்னர்க்குக் கடன் என்ருகிறது. 'காவலன் காவான் எனின்' எனப் பெயராகவும் வினையாகவும் அதே சொல்லை ஆளுகிருர் ஆசிரியர். காவல் என்னும் சொல் கா என்னும் வினையடியாகப் பிறந்தது என்பதை இக்குறளடிகளே காட்டுகின்றன. வள்ளுவர் 'காவலன்' என்னும் வழக்கை உடன்படுதலாலும் அதனைப் பெயராகவும் வினையாகவும் ஆண்டுள்ளதாலும் வள்ளுவர் கண்ட அரசனுக்குக் காவற்பணி எவ்வளவு இன்றியமையாதது என்பது தெளிவாகிறது.

### 6.2.1. புறங்காவல்

அரசர்க்கு உரிய காக்கும் பணியினை வள்ளுவர் வேறு சொல் லாட்சியாலும் சுட்டுகிருர்:

செருவந்த போழ்தின் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும். (வெருவந்த செய்யாமை, கு.569)

இக்குறள் 'போர் வந்த போது காவல் செய்யாத அரசன் தானும் வெருவி அழிவான்' எனக் குறிப்பிடுகிறது. போர் வந்த போது

காத்தல் செய்வது தேவை என்னும் கொள்கை இதனுல் நிலைபெறுகிறது. இப்போர் மாற்ருரால், வெளிநாட்டாரால், வெளிப்பகைவரால் மூண்ட போர் ஆகும். இதனுல் மாற்ருரிடமிருந்து மக்களைக் காத்தல் மன்னன் கடமை எனக் கொள்ளலாம். இக்குறளில்தான் மாற்ருரிடமிருந்து மக்களைக் காத்தல்—புறப்பகையிலிருந்து காத்தல், நாடு காத்தல்—அரசன் பணி என்பது தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

அன்று அண்டை நாடுகளிடையே பொதுவாகப் பகை என்பதல்லது நட்பு என்பது இருப்பதில்லை; தளர்ச்சி பார்த்திருந்து தாக்குதல் பகையரசனின் போக்கு. அரசுகள் இத்தகைய தாக்குதலையும் தாங்குதல் செய்து நாட்டினைக் காத்தல் வேண்டும். தாக்கும் பகையரசனுடைய பகைமையை மாய்க்க வேண்டும்; திமிரை ஒடுக்க வேண்டும்; செம்மலைச் சிதைக்க வேண்டும்; இல்லையேல் தன்னுடு தழைக்காது; வாழாது. இத்தகைய காவற்பணி பற்றிக் குறளின் 'பகைத்திறம் தெரிதல்' பேசுகிறது:

*உயிர்ப்ப உளரல்லர் மன்ற செயிர்ப்பவர்*
*செம்மல் சிதைக்கலா தார்.* (குறள் 880)

'தம்மொடு பகைப்பாரது செருக்கினைக் கெடுக்கலாயிருக்க, இகழ்ச்சியான் அது செய்யாத அரசர், பின் உயிர்க்கு மாத்திரத்திற்கும் உளரல்லர் ஒரு தலையாக' என இதனைப் பரிமேலழகர் விளக்குகிருர். இக்குறளில் செயிர்ப்பவர் எனப்படுவார் அயல் நாட்டுப் பகைவர் ஆவர்.

பகைவர் இத்தகைய பண்புடையவராதலால் பகையை முளைக்கின்ற போதே முற்றக் களைய வேண்டும் எனவும் வற்புறுத்துகிருர் வள்ளுவர்:

*இளைதாக முள்மரம் கொல்க; களையுநர்*
*கைகொல்லும் காழ்த்த இடத்து.* (பகைத்திறம் தெரிதல், குறள் 879)

இந்தச் சூழ்நிலையில் வலியாரிடம் மென்மையாகவும் மெலியாரிடம் வன்மையாகவும் நடத்தல் அறிவுடைமை போலும்! இவ்வறிவுரையை வள்ளுவர் வழங்குகிருர்:

*வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக; ஓம்பா*
*மெலியார்மேல் மேக பகை.* (பகைமாட்சி, குறள் 861)

'தன்னில் வலியார் மேலே மாறுகொள்வதை விடுக; தன்னில் எளியார் மேலும் பகையை விடுக' என இக்குறளுக்குப் பரிதியார் உரை வரைகிருர்.

வள்ளுவர், படையும் அரணும் வேண்டும் என்கிருர். அவை சிறப்புற அமையவும் வேண்டும் என்கிருர். 'அரண், படைமாட்சி, படைச்செருக்கு' முதலான அதிகாரங்கள் இவை பற்றிப் பேசுகின்றன. 'மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற் காடும்' உடையதாக அரண் இருத்தல் வேண்டும் என்பது அவர் விதி. இவை எல்லாம் அரசையும் மக்களையும் நாட்டையும் காத்தல் பொருட்டே அரசன் அமைத்துக் கொண்டுள்ளான் என்பதில் ஐயம் இல்லை. அரண் செய்தலே காவல் செய்தல் ஆகும்.

இக்கருத்துக்களால் வள்ளுவர் காட்டும் அரசனுக்கு அயலார் பகையிலிருந்து தன் நாட்டு மக்களைக் காத்தல் கடன் என்பது உறுதியாகிறது.

### 6. 2. 2. அகங்காவல்

பகை முதலியன, வெளிநாடுகளிலிருந்து மட்டும் தோன்றுவனவா? அவை நாட்டின் உள்ளேயே தோன்றலாமே! அவ்வாருன பகையை உட்பகை என்கின்றனர். உட்பகை நாட்டைப் பாழ் செய்துவிடும். ஆகவே அது பாழ் செய்யும் உட்பகை எனப்படுகிறது. உட்பகை போன்றே குழுவும் குறும்பும் அரசுக்குத் தீங்கு தருபவை. குழு பல்குழுவாகி, குறும்பு கொல்குறும்பாகி அரசை அலைக்கும். இதனை நாடு என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் விளக்குகிருர் :

> பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
> கொல்குறும்பும் இல்லது நாடு. (குறள் 735)

பல்குழுவாவது 'பல குடியைச் சேதம்பண்ணும் தாயாதிகள்' என்கிருர் பரிதியார்; 'மறப்படை மாக்கள் பெருகக் கூடும் கூட்டம்' என்கிருர் காளிங்கர்; 'சாதி பற்றியும் கடவுள் பற்றியும் மாறுபட்டுக் கூடும் பல கூட்டம்' என்கிருர் பரிமேலழகர்; 'பாழாக்கும் உட்பகை யாவது நாட்டுத் தலைவராயினும் அதிகாரியாயினும் நாட்டைக் கெடுக்குமவர்கள்' என்கின்ருர் பரிப்பெருமாள். 'உட்பகை ஆறலைப்பார், கள்வர், குறளை கூறுவார் முதலிய மக்களும், பன்றி, புலி, கரடி முதலிய விலங்குகளும்' என்கின்ருர் பரிமேலழகர். இவ்வுரையாசிரியர்கள் தரும் கூற்றுக்கள் வேறுபட்டனவாயினும் இவை எல்லாமே ஒவ்வொரு நோக்கிலிருந்து கருத்துக்களைக் கூறுகின்றன. பரிமேலழகர் தவிரப் பிற உரையாசிரியர்கள் அரசுக்குப் பகையாவனவற்றையே (Political enemies) சுட்டிக் காட்டுகின்றனர். பரிமேலழகர் சமூகத்துக்குப் பகையானவற்றையே (Enemies of society) சுட்டிக் காட்டுகிருர். இவை அனைத்தையும் தொகுத்துப் பார்க்கின்ற போதுதான் உள்நாட்டுத் தீமைகளின் முழுமை தென்படுகிறது. 'பல்குழுவும் உட்பகையும் கொல்குறும்பும் இல்லது நாடு' எனலால் அவை இல்லாமற் காப்பது அரசன் கடமையாகிறது.

பரிமேலழகர் தம் உரையில் பிறிதோர் இடத்தில் அரசரது காவற் பணிபற்றிப் பேசுகிறார்: 'பெரியார், பேரறிவுடையார். பேரறிவுடையாராவர், அரசர்க்கும் அங்கங்கட்கும் **மானுடத் தெய்வக்குற்றங்கள் வாரமல் காத்தற்கு** உரிய அமைச்சர் புரோகிதர்'. இவ்வுரை, பரிமேலழகர் 'பெரியாரைத் துணைக்கோடல்' என்னும் அதிகாரத்தில் எழுதிய முன்னுரையாகும். இங்கு ஒரு காவல் குறிப்பிடப்படுகிறது. அமைச்சரும் புரோகிதரும் இதற்கு உரியராக இங்குக் கூறப்பட்டிருந்தாலும் இறுதியில் இக்காவல் அரசரின் பொறுப்பாகவும் அரசின் பொறுப்பாகவும் அமைகிறது. அமைச்சரும் புரோகிதரும் அரசின் அங்கங்களே ஆகின்றனர். இங்கு அரசன் காக்க வேண்டிய மானுடத் தெய்வக் குற்றங்கள் யாவை?

"தெய்வத்தான் வரும் துன்பங்களாவன **மழையினது இன்மை மிகுதிகளானும் காற்றுத் தீப் பிணி** என்ற இவற்றானும் வருவன. அவை கடவுளரையும் தக்கோரையும் நோக்கிச் செய்யும் சாந்திகளான் நீக்கப்படும்.

மக்களான் வரும் துன்பங்களாவன **பகைவர், கள்வர், சுற்றத்தார், வினை செய்வார்** என்று இவர்களான் வருவன. அவை சாம பேத தான தண்டங்களாகிய உபாயத்துள் ஏற்றதனால் நீக்கப்படும்.

முற்காத்தலாவது தெய்வத்தான் வருவனவற்றை உற்பாதங்களான் அறிந்து அச் சாந்திகளான் காத்தலும் மக்களான் வருவனவற்றை அவர் குணம், இங்கிதம், ஆகாரம், செயல் என்பனவற்றான் அறிந்து அவ்வுபாயங்களுள் ஒன்றாற் காத்தலுமாம்."

பரிமேலழகர் உரையால் விளக்கமுறும் கருத்துக்கள் சில: 'இயற்கையில் நேரும் தீங்குகள் ஒருவகை. செயற்கையாக-மக்களால்-தோன்றும் தீங்குகள் மற்றொரு வகை. இவற்றினின்றும் அரசன் **காவல் செய்ய வேண்டும்**'. பரிமேலழகர் 'பகைவர்' எனக் குறிப்பிடுவது வெளிப்பகைவரையாகும். 'கள்வர், சுற்றத்தார், வினைசெய்வார் என்பார் 'பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும்' கொல்குறும்பும் என்னும் இடத்துப் பரிமேலழகராலும் பிற உரையாசிரியர்களாலும் சுட்டிக் காட்டப்பட்டவர்களே. அங்கு நாடு என்னும் அதிகாரத்தில் தீமைகள் சுட்டிக் காட்டப்பட்டன; இங்கு அவை 'உறுஅமை முற்காக்கும்' திறம் கூறப்பட்டது.

பரிமேலழகர் பன்றி புலி கரடி பெருமழை மழையின்மை காற்று தீப் பிணி (கொள்ளை நோய் முதலாயின) ஆகியவற்றை நாட்டின் கேடுகளாகத் தொகுத்துத் தருகிறார். விலங்குகளால் வரும் தீமைகளை

அரசன் வேட்டையாடித் தீர்க்கலாம். அரசனுடைய வேட்டப்பணி பற்றி வள்ளுவர் யாதும் குறிப்பிடவில்லை. கொல்லாமை போற்றும் வள்ளுவர்க்குப் பொழுதுபோக்கிற்காகவும் இன்பத்திற்காகவும் வேட்டமாடுதல் அறத்திற்கு மாறுனதாகலாம். ஆனுல் 'கொடியாரை வேந்து கொலையின் ஒறுத்தல்' அவருக்கு உடன்பாடே. கொடிய விலங்குகள் கொடுமை புரிகின்றபோது மட்டும் வள்ளுவர் வேட்டத்தை உடன்படலாம். ஆனுல் அதுபற்றிக் குறளில் குறிப்பில்லை. இது மேலும் ஆராய்தலுக்கு உரியது.

பெருமழை, வறட்சி முதலான இயற்கையின் கொடுமை-களிலிருந்து நாட்டைக் காத்தல் எங்கனம் கூடும்? யாரால் கூடும்?

—மாசி

*வறப்பின் தருவாரும் இல்லை; அதனைச்*
*சிறப்பின் தணிப்பாரும் இல்.*

(நாலடியார் 11–4)

ஆனுல் அன்றைய உலகம் இயற்கையின் தீமைகளிலிருந்தும் காத்தல் அரசர் கடமை என்றே கருதியிருந்தது. ஆதலால்தான்

*மழைவளம் கரப்பின் வான்பேர் அச்சம்*
*பிழைஉயிர் எய்தின் பெரும்பேர் அச்சம்*

(சிலம்பு, காட்சிக்காதை 100-101)

என அரசர் அஞ்சினர். இத்தகைய கொடுமைகளிலிருந்து காத்தலுக்குப் பரிமேலழகர் சமயவழி கூறினுர். அதனை நாம் உடன்படலாம்; அல்லது மறுக்கலாம். ஆனுல் இங்கு இவ்வகையில் அரசர்க்கு உரிய காவற் பொறுப்பைக் கருத வேண்டும்.

வள்ளுவர் சுட்டிக் காட்டிய இத்தீங்குகள் சமூகத்தின் கட்டுக் கோப்பைச் சிதைக்கின்றன; அமைதியைக்குலைக்கின்றன. சமூகத்தின் கட்டுக்கோப்பையும் அமைதியையும் காத்தல் அரசன் பொறுப்பு: அரசு சமூகத்துக்காகவே அமைந்தது; சமூகம் மக்களுக்காகவே அமைந்தது. ஆகவே அரசன் பொறுப்பாகிறுன். அதலால் மக்கட் சமூகத்தில் அமைதிகாத்தல் அரசன் கடமையாகிறது.

நாட்டிற்குத் தீமை புறத்திருந்தும் புறப்படும்: அகத்திருந்தும் முளைக்கும். இருவகைத் தீமைகளிலிருந்தும் காத்தல் காவலாகும். இத்தகைய காவல் செய்தலால் அரசன் காவலன் என வழங்கப்படு-கிறுன்.

இன்றும் அரசுகளின் கடமைகளில் தலையாயவை புறப்பகை அகப்பகை ஆகியவற்றிலிருந்து தத்தம் நாடுகளைக் காத்தலாகும். புறப்பகையிலிருந்து காத்தலுக்குப் படைகளும் (Military Forces)

அகப்பகைகளிலிருந்து காத்தலுக்குக் காவற்படைகளும் (Police Forces) அரசுகளால் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் பொருட்டுப் பெரும் பொருள் செலவு செய்தலும் அரசுகளின் தேவையாகி விடுகிறது. அரசுகளின் இப்பணியை இன்றைய அரசியற் சிந்தனையாளர்கள் உடன்பட்டுக் குறிப்பிடுகின்றனர். அன்று இதனைக் குறளும் உடன்பட்டுக் கூறியது போற்றுதலுக்கு உரியது.

### 6. 2. 3. குடி காவல்

பகையிலிருந்து காத்தல் மட்டும் அல்லாது மற்றொரு காவலும் குறளிலும் மற்ற இலக்கியங்களிலும் கூறப்படுகிறது.

> குடிபுறங் காத்துஓம்பிக் குற்றங் கடிதல்
> வடுவன்று; வேந்தன் தொழில். (செங்கோன்மை, குறள் 549)

'குடிகளை நலியாமல் காத்து ஓம்புதற்காகக் குற்றஞ்செய்தாரை ஒறுத்தல் குற்றம் அன்று; அரசன் தொழில் என்றவாறு' என்பது மணக்குடவர் பரிப்பெருமாள் உரை. இதனால் 'தன் குடிகளைத்தான் நலியாமல் காத்தல்', ஒரு காவல் என்றாகிறது. இக்காவல் முன்னர்க் காட்டிய அகங்காவல் புறங்காவல் ஆகியவற்றிலிருந்து வேறுபட்டது.

> குழவிகொள்வாரின் குடிபுறந் தந்து.
> (பதிற்றுப்பத்து, பதிகம் 6)

> காவல், குழவி கொள்பவரின் ஓம்புமதி
> அளிதோ தானே அது பெறலருங் குரைத்தே.
> (புறம் 5 : 6-8)

> குழவிகொள் பவரின் இகழாது ஓம்பிப்
> புகழ்பட வாழ்க; புகழ்பிறிது இல்லை.
> (பெருங்கதை (4) 10: 134-5)

இவ்வாறெல்லாம் கூறப்படுவதே இக்காவல் ஆகும். 'காவல் குழந்தை வளர்ப்பாரைப் போல ஓம்புக' எனப்படுதலால் இக்குடி காவல், குடியைப் போற்றுதல், ஓம்புதல், பேணுதல் என்னும் சொற்களால் தொகையாகக் குறிக்கப்படும் காவல் ஆகும்; அது வெறும் புறங்காவலோ அகங் காவலோ அல்ல. இன்றைய அறிஞர்கள் social welfare activities எனக் குறிப்பிடும் சமூக நலப்பணிகளையே இது குறிப்பிடுகிறது எனலாம்.

> வையகம் முழுவதும் வறிஞன் ஓம்புமோர்
> செய்எனக் காத்துஇனிது அரசுசெய் கின்றான்
> (கம்பராமாயணம், பாலகாண்டம், அரசியல் 12)

எனக் கம்பர் இப்பணிகளையே காத்தல் என்று குறிப்பிடுகிறார்.

உணவுக்குப் வழியற்ற ஏழை தன் நிலத்தில் 'ஏரும் எருவும் நீரும் களையும் காப்பும்' செய்து ஓம்புதலைக் கம்பர் இங்குப் பேசுகிறார். இதனையே இளங்கோவடிகள் 'குடிபுரவு உண்டு... மன்பதை காக்கும்' எனச் செங்குட்டுவன் வாயால் (காட்சிக்காதை 102–103) விளம்புகிறார். இந்தக் குடிபுரவே ஒருகாவல். புரவு, புரத்தல் என்பன காவல் என்னும் பொருளுடைய வினைப் பெயர்கள். 'புர' என்னும் வினைப் பகுதியிலிருந்தே புரவலன் என்னும் அரசனைக் குறித்து வழங்கும் சொல்லும் தோன்றியது. புரவலன் எனினும் காவலன் எனினும் ஒக்கும். இக் கருத்துக்களால் 'குடி ஓம்பலும்' ஒரு காவல் என வள்ளுவராலும் பிற இலக்கிய அறிஞராலும் அன்று கருதப்பட்டது என்பது புலனாகின்றது.

### 6. 2. 4. அறங்காவல்

குடியோம்பல் போன்றே அறன் ஓம்பலும் காவலர் கடமையாகப் பேசப்படுகிறது:

*அறன்இழுக்காது அல்லவை நீக்கி மறன்இழுக்கா*
*மானம் உடையது அரசு.* (குறள் 384)

*அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்*
*நின்றது மன்னவன் கோல்.* (குறள் 543)

'அறன் இழுக்காது' என்னும் தொடரால் அறன் ஓம்பல் பெறப்படுகிறது. 'அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் — காரணமாய் — மன்னவன் கோல் நின்றது' என்றலால் அவற்றைப் பேணும் பொறுப்பு — காக்கும் பொறுப்பு — அரசனுடையதாகிறது. அரசர் 'தர்மரட்சகராய்' விளங்குதல் வேண்டும் என்னும் வடநூல் மரபினை இங்கும் காணுகிறோம்.

இவ்வாறாகப் புறப்பகை அகப்பகையினின்றும் காத்தல், குடி காத்தல், அறங்காத்தல் ஆகியவை அரசர் காவற்கடமைகளாகப் பண்டைச் சான்றோரால் விதிக்கப்பட்டுள்ளன. வள்ளுவரும் இதனை முழுவதும் உடன்படுகிறார். நாடு காத்தலால் அரசரைக் குறிக்கும் காவலர் என்னும் வழக்குத் தோன்றியிருக்கலாம் எனப்பொதுவாகக் கருத வாய்ப்பிருந்தாலும் குடியோம்பல் குடிகாத்தல் குடிபுரத்தல் குடி புறந்தருதல் என்னும் பண்டை வழக்குக்களால் குடி காத்தல் — குடி பேணுதல் — என்னும் காரணத்தாலேயே மன்னர் காவலர் என்னும் பெயர் பெற்றிருக்கலாம் எனக் கருதத் தோன்றுகிறது. எவ்வாறாயினும் காவற்பணி அரசர் பணிகளில் தலையாய பணியாகிறது.

### 6. 2. 5. காவலும் 'கடமை'யும்

காவற்பணி தலையாய பணி என்பதற்கு வேறொரு சான்றும் உண்டு. அரசன் குடிகளிடமிருந்து வரி வாங்குகின்றான். இறை என்னும் நிலவரி அரசனுக்குப் பெருவருவாயாகும்.

> உறுபொருளும் உல்கு பொருளுந்தன் ஒன்னார்த்
> தெறுபொருளும் வேந்தன் பொருள் (குறள் 756)

என்னும் குறள் அரசன் சில வழிகளில் வருவாய் பெறுவது முறையே எனக் குறிப்பிடுகிறது. இக்குறளில் கூறப்படும் உல்குபொருள் ஒரு வரியே. இறை உல்கு முதலானவற்றை மக்கள் மனமுவந்து தந்திருக்கலாம். இவற்றை மக்கள் ஏன் அரசர்க்குத் தருகின்றனர்? அதற்குக் கைமாறாக அவர்கள் என்ன எதிர்பார்க்கின்றனர்?

வழங்கும் வரிக்கு மாற்றாக மக்கள் அரசன் செய்யும் காவற் பணியையே எதிர்பார்க்கின்றனர். வெளிப்பகை உட்பகைகளிலிருந்து குடிகளைக் காத்தல் அரசன் கடமை; அக்கடமையைச் செய்யும் அரசனுக்கே குடிகளும் 'கடமை'யைத் தருவர்; தரவும் கடமைப்பட்டவர். இந்தக் கருத்தினை இந்திய மரபு நன்கு வற்புறுத்துவதாக ஆராய்ச்சி அறிஞர் எடுத்துக் காட்டுகின்றனர்.[2] குறளாசிரியரும் இதனை உடன்படுவதாகப் பரிதியார் என்னும் உரையாசிரியர் எடுத்துக் காட்டுகிறார்.

> செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
> வெருவந்து வெய்து கெடும் (வெருவந்த செய்யாமை, கு. 569)

என்னும் குறளுக்கு அவ்வுரையாசிரியர் எழுதிய உரை இதனை விளக்குகிறது:

> "குடிக் கடமையை அன்பினாலே வாங்கி மாற்றார் வந்தால் அக்குடியைக் காட்டிக்கொடுக்கும் மன்னவன் சடுதியிலே கெடும் என்றவாறு."

கடமை வாங்கிக் காவாத மன்னன் கெடுவான் என்கிறார் இப் பரிதியார். கடமையாவது இறையென்னும் வரி. வரி வாங்கும் வேந்தன் மக்களைக் காத்தல் வேண்டும். அரசின் வருவாயே குடிகளைக் காத்தல் பொருட்டு என்றால் காவலின் சிறப்பை நன்கு உணரலாம்.

இக்குறளுக்குப் பரிதியார் மட்டுமே இவ்வாறு உரை வகுக்கின்றார். பிற உரையாசிரியர்கள் வேறுபொருள் தருகின்றனர். கோல்

---

2 "The Hindu governmental contract, like the Buddhist, was in essence an exchange of taxes for protection..." — P.245, KCEI.

கோடாது செங்கோல் செலுத்தும் அரசர்க்கே வருவாயும் உண்டு; மக்களும் உண்டு. கோல்கோடிச் செய்யும் கோன் கூழும் இழப்பான், குடியும் இழப்பான் எனப் பொதுவாக ஒரு குறள் பேசுவது இங்கு ஒப்பிட்டு உறவு காணத்தக்க கருத்து:

> கூழும் குடியும் ஒருங்குஇழக்கும் கோல்கோடிச்
> சூழாது செய்யும் அரசு. (கொடுங்கோன்மை, கு. 554)

## 6. 3. போர்ப்பணியும் படைப்பணியும்

**6. 3. 1. பகையும் பகைவரும்:** காவலரின் காவற்பணியோடு இணைந்தவையே போர்ப்பணியும் படைப் பணியும். புறப்பகை அகப்பகை என்பவற்றையும் அவற்றின் பொருட்டான புறங் காவல் அகங்காவல் ஆகியவற்றையும் பற்றி முன்னரே பேசப்பட்டது. அன்று புறப்பகையிலிருந்து மக்களைக் காத்தல் ஓர் அரும்பணி. வள்ளுவரும் புறப்பகையின் பல்வேறு திறத்தையும் உணர்ந்திருக்கிறார். பகை (கு.674, 763, 861, 871, 872 முதலியன), பகைமை (கு. 709), செறுபகை (கு. 734), இகல் (கு. 851 - 860), ஒன்றாமை (கு. 886), மாறு (கு. 861) எனப் பல்வேறு சொற்களைப் பயன்படுத்திப் பகையின் பல் வேறு திறங்களைப் பற்றி அவர் பேசியுள்ளார். பகுப்பது பகை; ஒன்றுது விலகல் ஒன்றாமை; இகுத்தல் (எறிதல், கொல்லல், துன்புறுத்தல், குழைத்தல்) இகல்; மறுப்பது மாறு. பகைவரும் பல திறத்தார். ஒட்டார் (கு. 671), ஒன்னார் (கு. 608, 630, 827, 828), பகைவர் (கு.882), குறும்பு (கு. 735), செயிர்ப்பவர் (கு. 880), செற்றார் (கு. 446), செறுநர் (கு. 448, 759); செறுவார் (கு. 843) தெவ்வோர் (கு. 639), பற்றார் (கு. 865), மாற்றலர் (கு. 749), மாற்றான் (கு. 481), மாற்றார் (கு. 868), வேண்டாதார் (கு. 584), இகல் வேந்தர் (கு. 691) என்னும் பல்வேறு தொடர்களை வள்ளுவர் தம் குறளில் வழங்கியுள்ளார். இவற்றால் அவர் உணர்ந்த பகைவர் திறமும் தெளிவாகிறது.

இப்பகைமையும் பகைவரும் அல்லாது 'பல்குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் கொல் குறும்பும்' (கு. 735) வேந்தர்க்குத் தீங்காய் முடிவன. அவற்றையும் வேந்தர் விரட்ட வேண்டும். பண்டைக் காலத்தில் நாடுகளிடையே நல்லுறவு என்பது அரிதாய் நிலவியது. இகல் என்பதே இயல்பான உறவு எனக் கருதப்பட்டது. இவ்வியல்பினையே வள்ளுவர் சுட்டும் பல்வேறு திறத்துப் பகைமையும் பகைவரும் குறிப்பிடுகின்றன. இப்பகைப் பாங்கால் போரும் பூசலும் எந்நேரமும் ஏற்படலாம். ஒருகால் அரசன் ஆண்டில் பல நாட்கள் போரிடலில் கழிக்க நேரலாம். ஆதலால் வள்ளுவர் வாழ்ந்த காலத்தில்

அரசர்க்குப் போர்ப்பணி தவிர்க்க முடியாத ஒரு பணியாக அமைந்திருத்தல் வேண்டும்.

ஆதலால் போர்க்களங்கள் பற்றியும் குறள் குறிப்பிடுகிறது. **அமரகம்** (குறள் 814, 102), **முனைமுகம்** (குறள் 749) என்னும் தொடர்கள் குறளில் வழங்கப்பட்டுள்ளன. போரின் வகைகள் பற்றியும் குறள் பேசுகிறது. **செரு** (குறள் 569), **போர்** (குறள் 767), **வினை** (குறள் 749, 750), **முற்று** (முற்றுகை) (குறள் 747) என்னும் சொற்கள் போரின் திறத்தை விளக்குகின்றன.

இவற்றால் குறள் காட்டும் காவலர்க்குப் போர்ப்பணி இன்றியமையாதது என்பது புலப்படுகிறது. ஆகவே திருவள்ளுவர் இப்பணிபற்றிப் பல அதிகாரங்களில் விரித்து விளக்குகிறார். **தெரிந்து செயல் வகை** (47) **வலியறிதல்** (48) **காலம் அறிதல்** (49) **இடன் அறிதல்** (50) ஆகிய அதிகாரங்கள் அரசரின் போர்ப்பணி பற்றிப் பேசுகின்றன. இனி வள்ளுவர் கூறும் போர்ப்பணி எத்தகையது என ஒருசிறிது காணலாம்.

### 6. 3. 2. தெரிந்துசெயல்

அரசருடைய போர்ப்பணி நான்கு வகையினது எனக் குறள் குறிப்பிடுகிறது. **தெரிந்து செய்தல், வலியறிதல், காலம் அறிதல், இடன் அறிதல்** என்பனவே அந்நால்வகை. தெரிந்து செய்தலைத் 'தெரிந்து செயல்வகை' என்னும் அதிகாரம் பேசுகிறது. 'அஃதாவது அரசன் தான் செய்யும் வினைகளை ஆராய்ந்து செய்யும் திறம்.' இங்கு வினைகள் எனப்படுவன போர்ச் செயல்கள் எனப் பரிமேலழகர் மணக்குடவர் முதலானோர் கருதுகின்றனர்; வினைகள் ஆவன நன்மை தீமைகள், பாவ புண்ணியங்கள் எனக் கருதுகின்றனர் காளிங்கர் பரிதியார் ஆகியோர்.[3] இவ்வதிகாரத்தில் வரும் சில குறள்கள் (குறள் 465 ......) போர்வினைகளை ஆராய்ந்து செய்தல் பற்றியே

---

3 "வினையாவது மேற்சேறல் முதல் வேறல் ஈறாய தொழில்."
— பரிமேலழகர் உரை, குறள் 462.

"அத்திறங்களாவன வலி காலம் இடன் என்ற இவற்றால் தனக்கும் பகைவர்க்கும் உளவாம் நிலைமைகளும், வினைதொடங்குமாறும், அதற்கு வரும் இடையூறுகளும், அவற்றை நீக்குமாறும், வெல்லுமாறும், அதனால் பெறும் பயனும் முதலாயின. அவற்றுள் சில எஞ்சினும் பகைவர்க்கு இடனும் ஆகலான் முற்றுப்பெற எண்ண வேண்டும் என்பதாம்." — பரிமேலழகர் உரை, குறள் 465.

"தெரிந்து செயல்வகையாவது புண்ணியமும் பாவமும் அறிந்து தனக்கு ஆன காரியம் செய்வான் என்றவாறு." — பரிதியார் முன்னுரை, அதிகாரம் தெரிந்து செயல்வகை.

குறிப்பிடுகின்றன. மேலும் பின்னர் வரும் வலி அறிதல், காலம் அறிதல், இடன் அறிதல் என்னும் அதிகாரங்களோடு தெரிந்து செயல் வகை என்னும் அதிகாரம் பொருட்பொருத்தம் உறத் தழுவி நிற்க வேண்டுமானால் வினைகள் என்னும் சொல்லுக்குப் போர்ச்செயல்கள் எனப் பொருள் கொள்ளுதலே பொருத்தம் ஆகும்.[4]

இவ்வதிகாரம் போர்செய்தலுக்கு எழுமுன் நன்கு எண்ணுதல் வேண்டும் என வற்புறுத்துகிறது :

| | |
|---|---|
| சூழ்ந்து செயல் | (கு. 461) |
| தேர்ந்து எண்ணிச் செய்வார் | (கு. 462) |
| எண்ணித் துணிக கருமம் | (கு. 467) |
| பண்பறிந்து ஆற்றி | (கு. 469) |
| எண்ணிச் செயல் வேண்டும் | (கு. 470) |

சூழ்தல், எண்ணுதல், அறிதல், தேர்தல் என்னும் ஒரு பொருட் பன் மொழிகள் மீண்டும் மீண்டும் இவ்வதிகாரத்தில் ஆளப்பட்டுள்ளமை எண்ணத்தக்கது. இவ்வதிகாரம் முழுவதும் அரசன் போர்வினைகளை மேற்கொள்ளும்முன் ஆராய்ந்து தொடங்குதல் வேண்டும் என வற் புறுத்துகிறது என்பது தெளிவாகிறது. போரின் இயல்பும் போரின் விளைவும் எவ்வளவு கடுமையானவை என்பது அனைவரும் அறிந் தவையே. அது அரசனை மட்டும் அல்லாது அனைவரையும் பாதிக்கும்; நாட்டையும் பாதிக்கும். ஆதலால் நாடாளும் அரசன் சூழ்ந்து எண்ணிய பிறகே அமர் மேற்கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு எண்ணித் தொடங்குவதால் வரும் நன்மைகள் என்ன? எண்ணாமை யால் வரும் தீங்குகள் என்ன?

*அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்*
*ஊதியமும் சூழ்ந்து செயல்* (கு. 461)

*தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு*
*அரும்பொருள் யாதொன்றும் இல்* (கு. 462)

*வகையறச் சூழாது எழுதல் பகைவரைப்*
*பாத்திப் படுப்பதோர் ஆறு* (கு. 465)

*ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று*
*போற்றினும் பொத்துப் படும்* (கு. 468)

என்னும் குறள்கள் எண்ணிச் செய்தலின் திறத்தை விளக்குகின்றன. வள்ளுவரின் கருத்துக்கள் மிகப் பொதுவாகவே அமைந்திருக்கின்றன.

---

4 *பரிமேலழகர் உறவுபடுத்துவதை 465-ஆம் குறள் உரையில் காணலாம். மேல் 3-ஆம் குறிப்புக் காண்க.*

பரிமேலழகர் உரை அக்கருத்துக்களின் ஆழத்தையும் அகலத்தையும் நுட்பத்தையும் புலப்படுத்துகின்றது.

வகையறச் சூழ்தல் என்னும் கருத்திற்குப் பரிமேலழகர் வரையும் உரைவிளக்கம் கருதத்தக்கது :

'அத்திறங்களாவன வலி காலம் இடன் என்றிவற்றான் தனக்கும் பகைவர்க்கும் உளவாம் நிலைமைகளும் வினை தொடங்குமாறும் அதற்கு வரும் இடையூறுகளும் அவற்றை நீக்கு மாறும் வெல்லுமாறும் அதனால் பெறும் பயனும் முதலாயின. அவற்றுள் சில எஞ்சினும் பகைவர்க்கு இடனாம் ஆகலான் முற்றுப்பெற வேண்டும் என்பதாம்'. (கு. உரை 465)

பரிமேலழகர் உரையால் விளக்கமுறும் ஒரு கருத்து, பகையரசர் பூசலில் கொள்ளத்தக்க உபாயம் பற்றியதாகும். உபாயம் என்னும் கருத்தினைத் திருவள்ளுவர் வெளிப்படையாகக் குறிப்பிடவில்லை. பரிமேலழகர் வடநூல் அர்த்த சாஸ்திரங்களிலிருந்து தந்துரைக்கிறார். 'உபாயம்' என்னும் வடசொல்லாட்சியே அதனைக் குறிப்பிடுகிறது. ஆனாலும் உபாயத்தால் குறிக்கப்படும் கருத்துக்கள் தமிழகத்துக்குப் புறமானவையும் அல்ல. வள்ளுவர் அவைபற்றி எண்ணியும் இருக்கலாம். அவ்வுபாயம் பற்றிப் பரிமேலழகரது உரை தரும் கருத்துக்கள் இவை :

'எண்ணித் துணிக கருமம் = செய்யத்தக்க கருமம் முடிக்கும் உபாயத்தை எண்ணித் தொடங்குக.'

'அது (உபாயம்) கொடுத்தல், இன்சொற்சொல்லல், வேறு படுத்தல், ஒறுத்தல் என நால்வகைப்படும். இவற்றை வட நூலார் தான சாம பேத தண்டம் என்ப. அவற்றுள் முன்னைய இரண்டும் ஐவகைய ; ஏனைய மூவகைய. அவ் வகைகள் எல்லாம் ஈண்டு உரைப்பின் பெருகும். இவ்வுபாயம் எல்லாம் எண்ணாது தொடங்கின் அவ்வினை மாற்றானால் விலக்கப்பட்டு முடியாமையானும் இடையின் ஒழிதல் ஆகாமை யானும் அரசன் துயர் உறுதலின் அவ்வெண்ணுமையை 'இழுக்கு' என்றார். செய்வனவற்றையும் உபாயம் அறிந்தே தொடங்குக என்பதாம்'. (குறள் உரை 467)

'முடியும் உபாயத்தான் முயறலாவது கொடுத்தலைப் பொருள் நசையாளன் கண்ணும் இன்சொல்லைச் செப்ப மூடையான், மடியாளன், முன்னே பிறரொடு பொருது நொந்

தவன் என்னும் இவர்கண்ணும்; வேறுபடுத்தலைத் துணைப் படையாளன், தன் பகுதியோடு பொருந்தாதான் என இவர் கண்ணும்; ஒறுத்தலை இவற்றின் வாராதவழி இவர்கண்ணும், தேறப்படாத கீழ்மக்கள்கண்ணும் செய்து வெல்லுமாற்றான் முயறல்.' (குறள் உரை 468)

'நன்றாய உபாயமாவது கொடுத்தலும் இன்சொல் சொல்லுதலுமாம். அவை யாவர்கண்ணும் இனியவாதற் சிறப்புடைமையின்.' (குறள் உரை 469)

'தம் நிலைமையோடு பொருந்தாத உபாயங்களைச் செய்தலாவது தாம் வலியராய் வைத்து மெலியார்க்கு உரிய கொடுத்தல் முதலிய மூன்றனைச் செய்தலும் மெலியராய் வைத்து வலியார்க்கு உரிய ஒறுத்தலைச் செய்தலுமாம். இவை இரண்டும் அறிவிலார் செய்வனவாகலின் உலகம் கொள்ளாது' என்றார்.' (குறள் உரை 470)

ஏற்படும் பூசலில் உபாயங்களை எண்ணி அறிதல் ஓர் அரும் பணியாக இருக்கும் என்பதில் ஐயம் இல்லை. இதன்பொருட்டு அரசன் அருமுயற்சி மட்டும் அல்லாது நீண்டகால முயற்சியும் கூட மேற் கொள்ள வேண்டி இருக்கும். இப்பணியே போர்ப்பணியில் முதற் கட்டம். அரசர்க்கு உரிய போர்ப்பணியின் அடுத்த கட்டம் வலியறிதல் முதலாயின.

## 6. 3. 3. வலி அறிதல்

போர்வினை தொடங்கும்முன் அரசன்

*வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்*
*துணைவலியும் தூக்கிச் 'செயல்'* (கு. 471)

வேண்டும். வலி நால்வகை என்பது இக்குறளால் விளங்குகிறது. இவ்வலியெல்லாம் படையைப் பற்றியதே எனக் கருதப்படுகிறது. துணை வலி என்பது தனக்குத் துணையாகும் அரசர் வலியும் தன் பகைவர்க்குத் துணையாகும் அரசர் வலியும் ஆகும். இவற்றை அறிந்தல்லது போரினை வெற்றியுற நடத்தல் முடியாது. இயல்வது அறிந்து அதன்படி போர் மேற்கொள்வார்க்குக் கைகூடாதது ஒன்றும் இல்லை. தம் வலியறியாது ஊக்கத்தால் மேற்சென்று இடையில் கெட்ட அரசர் பலர். அள வறியாது தன்னை வியந்து போர் மேற்கொண்ட அரசன் விரைந்து கெடுவான். இத்தகைய கருத்துக்களைக் கூறி வள்ளுவர் வலியறிதலின் சிறப்பை வற்புறுத்துகிறார்.

மேற்கண்ட நால்வகை வலிஅறிதல் மட்டுமே உண்டு என்ப தில்லை. பரிமேலழகர் வலியறிதல் என்பது நால்வகை வலியறிதல் மட்டுமே என்கின்றார்.[5] ஆனால் குறள் மேலும் விரிந்து செல்லுவ தாகத் தோன்றுகிறது. போராடும் வேந்தன் தன் பொருள்வலியும் அறிதல் வேண்டும் என்கிறது குறள். போர் என்றால் பெரும்பொரு ளும் செலவாகும். வலியறிதல் என்னும் அதிகாரத்தின் ஈற்றுநான்கு குறள்கள் பொருள்வலி பற்றியே பேசுகின்றன.

*ஆகாறு அளவுஇட்டிது ஆயினும் கேடுஇல்லை*
*போகாறு அகலாக் கடை* (குறள் 478)

என்னும் ஒருகுறளை இதற்கு எடுத்துக்காட்டாகச் சுட்டலாம்.

இன்று சட்டமன்ற ஆட்சி முறை அமைந்த குடியரசு நாடுகளில் வரவு செலவினங்கள் சட்டமன்றங்களின் ஒப்புதல் பெற்று நடைபெறு கின்றன. ஆனால் அன்று கோனரசு நடைபெற்றதால் அரசனே வரவு செலவினங்களைக் கவனித்து வந்தான். ஆதலால் பொருளின் வலி அறிதலும் அவன் பணியாகிறது. அவனுக்கே அறிவுரையும் எச்சரிக் கையும் தேவைப்படுகின்றன:

*அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல*
*இல்லாகித் தோன்றாக் கெடும்.* (குறள் 479)

### 6. 3. 4. காலம் அறிதல்

போரிடும் வேந்தன் வலியறிதலோடு காலம் அறிதலும் வேண்டும். இதனை 49-ஆம் அதிகாரம் பேசுகிறது. 'இனிக் காலமாவது வெம்மையும் குளிர்ச்சியும் தம்முள் ஒத்து நோய் செய்யாது தண்ணீரும் உணவும் முதலிய உடைத்தாய்த்தானை வருந்தாது செல்லும் இயல் பினதாம்' எனக் காலத்தைப் பரிமேலழகர் விளக்குகிறார். இது குன்றக் கூறலாகத் தோன்றுகிறது. படை செல்லுதலுக்கு ஏற்ற காலை வேளையோ மாலை வேளையோ இங்குக் காலம் எனப்படுவது? போர் மறவர்கள் ஓய்வு பெற்றிருக்கும் இளவேனில் காலமோ மாரி காலமோ இங்குக் காலம் எனப்படுவது? போர்ப்படை நடத்தல் அல்ல முக்கியம்; போர் தொடங்கலுக்கு ஏற்ற செவ்வி—தக்க சமயம்—வாய்ப்பு அல் லவோ காலம் எனப்பட வேண்டும்? '...... தம்மில் தாம் மாறுபட்டுப் பொரும் மன்னவர்க்கும் தமக்குச் செயமாகிய வாய்ப்புடைக்காலம் ......' எனக் காளிங்கர் விளக்கும் காலம் அல்லவோ அது? அதனையே

---

5 "(வலியறிதல்) அஃதாவது அவ்வுபாயங்களுள் ஒறுத்தல் குறித்த அரசன் **நால்வகை வலியையும்** அளந்து அறிதல்" எனப் பரிமேலழகர் தரும் முன்னுரையால் வலி நாலே என்பது அமைகிறது.

'வாய்த்த காலம்' என்பார் மணக்குடவர்; 'தனக்குத் தாயமாகிற வேளை' என்கிறார் பரிதியார்.

> கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
> குத்தொக்க சீர்த்த இடத்து (குறள் 490)

என்னும் குறள் காலைவேளையையோ மாலைவேளையையோ வளர்த்தையோ வறட்சியையோ குறிப்பதாகவா கொள்ள முடியும்? போர் மேற்கொண்ட மன்னர்கள்

> எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே
> செய்தற்கு அரிய 'செயல்' (குறள் 489)

எனக் கருத வேண்டும். எய்தற்கு அரியது இயைந்த நிலையே இங்குப் பேசப்படுகிறது; அது வெற்றிக்கு உரிய வாய்ப்பு; செவ்வி.

> செறுநரைக் காணின் சுமக்க; இறுவரை
> காணின் கிழக்காம் தலை (குறள் 488)

என்னும் குறள் கூறும் 'இருக்கும்வழிப் பகைமை தோன்றாமல் இருக்க' என்ற பொன்மொழியைப் போராடும் மன்னர்கள் போற்றுதல் வேண்டும். 'கலங்காது ஞாலம் கருதுபவர் காலம் கருதி இருப்பர்'. காலத்தோடு ஒட்டி ஒழுகும் அரசரையே செல்வமும் சேர்ந்திருக்கும்.

> பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினைத்
> தீராமை ஆர்க்கும் கயிறு (குறள் 482)

என்னும் குறள் காலம் அறிதலின் பிறிதொரு பயனை எடுத்து விளக்குகிறது. போர் செய்யாது அரசன் ஒடுங்கியும் இருத்தல் நேரும். அதன் பொருட்டு எண்ணித் திட்டமிடுதலும் அவன் பணி. அது 'பொருதகர் தாக்கற்குப் பேரும் தகைத்து'(குறள் 486) ஆம். இவ்வாறு செவ்வி பார்த்துச் சமரிடுதல், வேந்தர் வாழ்க்கையின் ஒரு பகுதி.

### 6. 3. 5. இடம் அறிதல்

அடுத்து அறியவேண்டுவது இடம். இது போரிடும் நிலத்தியல்பு பற்றியதாகும். முற்றுகைக்கு ஏற்ற இடம், அரண் சேர்ந்த இடம், ஆற்றரும் ஆற்றி அடத்தக்க இடம், சிறுபடையாயினும் செல்லிடம், பகை மாந்தர் உறை நிலம் முதலிய இடத் தியல்பை மன்னன் முதலிலேயே எண்ணித் தேர்ந்து போர் தொடங்க வேண்டும். இல்லையேல் 'ஒட்டல் அரிது' (குறள் 499); 'உறுபடையான், ஊக்கம் அழிந்து விடும்' (குறள் 498); 'எண்ணிய பகைவர் எண்ணம் இழவார்' (குறள் 494). ஆதலால் இடன் அறிதல் எவ்வளவு பெரிது? எவ்வளவு இன்றியமையாதது? முதலையை நெடும்புனலில் வெல்லுதல் கூடுமே என்கிறது 495-ஆம்

குறின் கால்வல் நெடுந்தேர் கடல் ஓடுமோ? நாவாயும் நிலத்து ஓடா என்கிறது 496-ஆம் குறள். இவ்வாறு இடன் அறிதலின் சிறப்பு விளங்க அணிநயத்தோடு அறிவுரை வழங்குகிறது குறள் :

*காலாழ் களரின் நரிஅடும் கண்அஞ்சா*
*வேலாள் முகத்த களிறு* (கு. 500)

## 6. 3. 6. படைப்பணி

தெரிந்து செய்து வலியறிந்து காலம்அறிந்து இடன்அறிந்து வினை செய்யும் வேந்தன் போர்செய்யும் காலங்களில் அதற்காகத் திட்டமிடுதல் மட்டும் அவன் பணி என்பதில்லை. எப்போதாவது நடைபெறும் போரின் பொருட்டும் அவன் எப்போதும் படையினை வைத்துப் போற்றிப் பேணி வருதல் வேண்டும். போரோ ஓரோவழிப் பணி; படைவைத்துப் பேணுதலே நாட்பணி. படைப்பயிற்சி, படையினைப் பார்வையிடல், படைஞரைத் தேர்ந்தெடுத்தல், படைத் தலைவர்களை அமர்த்தல் ஆகியவை அரசன் நாட்பணியாக இருந்திருத்தல் வேண்டும். அரசன் உடைமைகளுள் ஒன்றாகப் படை கூறப்படுவதால் (கு. 381) இப்பணியின் அருமையை உணரலாம். இதற்கு ஏற்பவே படைமாட்சி, படைச்செருக்கு என்னும் அதிகாரங்கள் (77, 78) பொருட்பாலில் இடம்பெற்றுள்ளன. இவ்வதிகாரங்கள் 'படையினது நன்மை'யையும் 'படையினது மறமிகுதி'யையும் கூறுகின்றன. இவற்றில் அரசனுக்கும் பங்கிருத்தல் வேண்டும்.

*உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்*
*வெறுக்கையுள் எல்லாம் தலை* (கு. 761)

என்னும் குறள் படை அரசனது செல்வம் என்கிறது. செல்வத்தை ஈட்டவும் காக்கவும் அவன் எவ்வாறு பாடுபடுவானோ அவ்வாறு படையின் பொருட்டும் பாடுபடுதல் வேண்டும்.

படை ஒருபடையும் அல்ல. அது யானைப்படை, தேர்ப்படை, குதிரைப்படை, காலாட்படை ஆகிய நான்கும் அடங்கியதே. 'உறுப்பமைந்த படை' என வள்ளுவரால் குறிக்கப்படுவது இந்நால்வகைப் படையே ஆகும். இவை மட்டும் அல்லாது தூசிப்படை எனப்படும் தார்ப் படையும் முன்னோரைத் தொடங்கி வரும் தொல்படையும் உண்டு எனக் குறள் (767, 762) குறிப்பிடுகிறது. இதுவே மறம்மிக்கு மூழ்செல்லும் மேதகு படையாம். இவ்வாறு படைபெருகப் பெருக அரசனது பணியும் பெருகும் அல்லவா? இவற்றுக்கெல்லாம் 'மறம் மானம் மாண்ட வழிச்செலவு' (கு. 766) கற்பித்தல் அரசன் கடமை அல்லவா? சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும் இல்லாது படை பேணுதலும் அரசனுடைய கடமையல்லவா? நிலைமக்களும் தலைமக்களும் படைக்குண்டு

(கு. 770). இவர்களை அமர்த்தலும் வினையாடலும் அவன் பொறுப்பாகும். இவ்வாறு அரசன் படையைப் புரத்தல் வேண்டும். அதனால் அவன் புரவலன் எனப் பெயரும் பெறுகிறான் (கு. 780).

### 6. 3. 7. ஒற்றாடல்

போருக்குத் திட்டமிடுதலின் ஒரு பகுதி மாற்றார் நிலையறிதல். இது ஒற்றர்வழியால் கைகூடும். மன்னன் இதன் பொருட்டு 'ஒற்றரை ஆளுதலும்' வேண்டும். ஒற்றாடல் என்னும் ஓர்அதிகாரம்(59) இது பற்றிப் பரக்கப் பேசுகிறது. இங்கு வள்ளுவர், 'அரசனுக்குத் தன் நாடு செலுத்துங்காலும் பிறர் நாடு கொள்ளுங்காலும் வேண்டுவன கூறுகின்றார்'(பரிமேலழகர்). ஒற்று, மன்னவன் கண் ஆகும் என்கிறார் வள்ளுவர்(கு. 587). ஒற்றின்றி வெற்றியும் இல்லையாம். (கு. 583). காரணம் அது வேண்டாதாரை(பகைவரை) ஆராய்ந்து கூறுகிறது (கு. 584).

### 6. 3. 8. முடிவுரை

இதுகாறும் கண்டவை அரசன் போர்ப்பணியாகவும் படைப் பணியாகவும் (Military duties) குறள் கூறியவையாகும். இக்குறள் மரபினைப் போற்றி **விநாயக புராணம்** இக்கருத்துக்களை இனிய பாடலாக்கிப் பாடுகிறது :

வலியே காலம் வினைஇவற்றால்
மாற்றான் தனக்கும் உனக்கும்உள
பலவாம் நிலையும் வினைதொடங்கும்
பண்பும் அதற்காம் இடையூறும்
விலகாது அதனை விலக்குவதும்
வெல்லும் ஆறும் வென்றதனால்
உலவாப் பயனும் முதல் அனைத்தும்
ஓர்ந்து தெளிந்தே வினை செய்க

(திருவள்ளுவர் அரசு, பக்கம் 109)

## 6. 4. ஆள்தற் பணி

### 6. 4. 1. ஆள்தல் யாது ?

அரசு நடத்தும் பணி பல்வேறு திறத்தது என முன்னர் விளக்கப்பட்டது. அவற்றுள் ஒன்றே இவ்வாள்தற் பணி (Administrative duties). இதனை வள்ளுவர் வினையாடல் (வினையை ஆடல், ஆள்தல்) என வழங்கிப் பேசுகிறார்; இப்பணியை ஆராய்ந்தே ஆள்தல் வேண்டும் எனவும் அவர் கருதுவதால் தெரிந்து வினையாடல் என அதிகாரத்தின் தலைப்பை அமைத்துக் கொண்டுள்ளார். இவ்வாள்தல் பணி, பொதுவாக அமைச்சர் முதலான அரசலுவலரை அமர்த்தல், அவர்களைச்

செயல் செய்வித்தல் ஆகியவை ஆகும். இவற்றுடன் உடைமை (சொத்து) பற்றிய நிலைகளை வரையறுத்தல் புதையற்பொருள், எடை முதலான அளவைகளை முறையாக ஆளுதல் ஆகியவையும் ஆளும்பணி எனக் கருதப்படுகின்றன.[6] சொத்துடைமைபற்றிய கருத்துக்களும் அதனை ஒட்டி எழும் சிக்கல்கள்பற்றிய கருத்துக்களும் குறளில் இருப் பதாகத் தெரியவில்லை. அதனால் இவைபற்றி வள்ளுவர் என்ன கருதினார் என்பதும் நமக்குப் புலப்பட வழி இல்லை. ஆனால் அன்று சொத்துடைமையும் உண்டு. அதுபற்றி வழக்குக்களும் இருந்திருத்தல் வேண்டும். அன்று தனியுடைமை, சமூகத்தில் வழக்கில் இருந்தது என்பது குறளாலேயே தெளிவு படுகிறது.[7] இந்நிலையில் ஒருவர் உடைமையை மற்றொருவர் கவருதல்—களவு செய்தல்—கூடாது எனவே வள்ளுவர் வற்புறுத்துகிறார்; அதன் பொருட்டுக் கள்ளாமை என்னும் அதிகாரம்(29) ஒன்றையும் அமைத்துள்ளார். புதையற் பொருள், கள்வரிடமிருந்து பறித்த பொருள் ஆகியவைபற்றியும் குறளில் குறிப்பொன்றும் இல்லை. ஒருகால் வள்ளுவர் ‘உறுபொருள்’ என்னும் தொடரில் இவற்றை அடக்கியிருக்கலாம்.[8] ‘உறு பொரு ளும் . . . . . வேந்தன் பொருள்’(குறள் 756) என்னும் ‘பொருள் செயல்வகை’ அதிகாரத்தின் குறளே குறிப்பாக இக்கருத்தைப் பேசு கிறது. ஆதலால் ஆள்தல்பணி என்பது குறளைப் பொறுத்தவரை அமைச்சர் முதலான அலுவலரை அமர்த்தலும் ஆள்தலுமே ஆகும்.

### 6. 4. 2. அரசலுவலர்

அரசின் உயர் அலுவலர் யார் யார்? குறளால் அறியப்படு வோர் யார்? வள்ளுவர் காலத்தின் அரசலுவலர் அனைவர்பற்றியும்

---

6 “ Apart from the three kinds of duties mentioned above, there were the administrative duties which related to two categories—appointments and administrative problems. The former referred to the appointment of seven or eight ministers, and of other officials. The number of the latter depended on the nature of the state business. As regards the administrative problems, the king decided questions of property, treasure troves and weights and measures. Property, owner of which had disappeared, was kept as a deposit with the state for three years within which period the owner could claim it, and after that term, the king could take it. ”

— P. 303-309, AIPTI.

7 ‘குறள் கண்ட பொருள் வாழ்வு’ (இ. முருகரத்தனம்) என்னும் நூலில் 2. 5. காண்க. குறளில் காணும் தனியுடைமை பற்றிய கருத்துக்களை இப்பகுதி தொகுத்துரைக் கிறது.

8 குறள்கண்ட பொருள் வாழ்வு’, 3. 6. என்னும் பகுதி ‘உறுபொருளின்’ திறத்தை விளக்குகிறது.

குறளில் கருத்துக்கள் காணமுடியாது. குறளால் அறியப்படும் அரசின் துறைகளும் பணிகளும் பல. அவற்றில் பணிபுரிவோரும் பலராக இருந்திருத்தல் வேண்டும். எடுத்துக்காட்டாக 'இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும்' வல்லதாக அரசு இருத்தல் வேண்டும் என்கிறது குறள் (385). ஆனால் நிதித்துறை அலுவலராக அது யாரையும் பதவி சுட்டிக் குறிப்பிடவில்லை. ஆதலால் அரசலுவலர் ஒருசிலர் பற்றி மட்டுமே குறளால் அறிய முடிகிறது. அவர்கள்,

| | |
|---|---|
| அமைச்சர் | நிலை மக்கள் |
| தூதர் | தலை மக்கள் |
| ஒற்றர் | |

என்போராவார். அமைச்சரும் தூதரும் ஒருவராகவும் இருக்கலாம்; வேறாகவும் இருக்கலாம். அமைச்சர், தூதர், ஒற்றர் பற்றித் தனித்தனி அதிகாரங்கள் குறளில் அமைந்துள்ளன. நிலை மக்களும் தலை மக்களும் படையில் பணிபுரியும் அலுவலர்.

*நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை*
*தலைமக்கள் இல்வழி இல்.* (குறள் 770)

நிலை மக்களாவார் படை மறவர்; தலை மக்களாவார் படைத் தலைவர். இவ்வாறு குறளில் வெளிப்படப் பேசப்பட்டாரும் வெளிப்படப் பேசப் படாதாரும் ஆகிய அனைவரையும் தேர்தலும் அமர்த்தலும் ஆள்தலுமே அரசனது ஆள்தல் பணியாகும்.

### 6. 4. 3. தெரிந்து தெளிதல்

இப்பணியினைத் திருவள்ளுவர் உறவுடைய இருவேறு பணிகளாகக் கருதுகிறார் போலும். ஒன்று அரசலுவலரை ஆராய்ந்து தெளிதலாகும். இரண்டு ஆராய்ந்து வினையாள்தலாகும். இவை இரண்டையும் அவர் முறையே தெரிந்து தெளிதல் என்னும் அதிகாரத்திலும் (51, தெரிந்து வினையாடல் என்னும் அதிகாரத்திலும்(52) விளக்குகிறார்.

அரசலுவலரை அரசனே தேர்ந்தெடுக்கிறான்; அப்போது ஆழ்ந்த கவனம் செலுத்துகிறான். பரிமேலழகர் குறிப்பிடுவது போன்று 'அமைச்சர் முதலாயினாரைப் பிறப்புக் குணம் அறிவு என்பனவற்றையும் செயலையும் காட்சி கருத்து ஆகமம் என்னும் அளவைகளான் ஆராய்ந்து தெளிதல்' அவன் மேற்கொள்ளும் முறையாகும். வள்ளுவர் கருத்தை நேரே காணலாம்:

*அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்*
*திறம்தெரிந்து தேறப் படும்.* (குறள் 501)

குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான் கட்டே தெளிவு. (குறள் 502)

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். (குறள் 504)

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். (குறள் 505)

அற்றாரைத் தேறுதல் ஓம்புக: மற்றவர்
பற்றிலர் ; நாணார் பழி. (குறள் 506)

முதற்குறள் அறம் பொருள் இன்பம் உயிரச்சம் என்னும் நான்கின் திறத்தால் தெளிதலைக் குறிப்பிடுகிறது.[9] குடிப்பிறப்பும் குற்றமின்மையும் பழிக்கு நாணுதலும் தெளிதலுக்குத் தகுதி என அடுத்த குறள் குறிப்பிடுகிறது. பற்றுடைமை மற்றொரு தகுதி என்கிறது பிறிதொரு குறள். கருமத்தால் பெருமை சிறுமைகளை அறிக என்கிறது ஒரு குறள். குணத்திலும் குற்றத்திலும் மிகை நாடுக என்கிறது மற்றும் ஒரு குறள். இக்கருத்துக்கள் எல்லாம் அரசலுவலரைத் தேர்ந்தெடுத்தலில் உள்ள அருமைப்பாட்டையே புலப்படுத்துகின்றன. அவ்வருமைப்பாட்டை உணர்ந்து அரசன் பணிபுரிதல் வேண்டும்.

---

9 பரிமேலழகர் நான்கின் திறத்தால் தெளிதலை இக்குறளின் உரையில் விரிவாக விளக்குகிறார். வடநூல் மரபினைப் பின்பற்றி இக்கருத்துக்களை அவர் தருகிறார். வள்ளுவர் மரபு தெளிவாகவில்லை. வடநூல் மரபும் ஒரு மரபு என்ற முறையில் கருதலாம் ;

"அரசனால் தெளியப்படுவான் ஒருவன் அறமும் பொருளும் இன்பமும் உயிர்ப் பொருட்டான் வரும் அச்சமும் என்னும் உபதை நான்கின் திறத்தான் மனவியல்பு ஆராய்ந்தால் பின்பு தெளியப்படும்.

அவற்றுள், அற உபதையாவது: புரோகிதரையும் அறவோரையும் விட்டு அவரால் இவ்வரசன் அறவோ னன்மையின் இவனைப் போக்கி அறனுமுரிமையுமுடையா னொருவனை வைத்தற்கெண்ணினம்; இதுதான் யாவர்க்கு மியைந்தது: நின் கருத் தென்னை யெனச் சூளுறவோடு சொல்லுவித்தல். பொருளுபதையாவது: சேனைத் தலைவனையும் அவனோடியைந்தாரையும் விட்டு, அவரான் இவ்வரசன் இவறல் மாலையனாகலின் இவனைப் போக்கிக் கொடையும் உரிமையுமுடையா னொருவனை வைத்தற்கெண்ணினம்: இதுதான் யாவர்க்குமியைந்தது; நின் கருத்தென்னையெனச் சூளுறவோடு சொல்லுவித்தல்; இன்ப உபதையாவது: தொன்று தொட்டு உரிமையொடு பயின்றாளொரு தவமுதுமகளை விட்டு, அவளால், உரிமையுள் இன்னாள் நின்னைக் கண்டு வருத்தமுற்றுக் கூட்டுவிக்க வேண்டுமென்று என்னை விடுத்தாள்; அவளைக் கூடுவையாயின் நினக்குப் பேரின்பமேயன்றிப் பெரும் பொருளும் கைகூடுமெனச் சூளுறவோடு சொல்லுவித்தல். அச்ச உபதையாவது: ஒரு நிமித்தத்தின் மேலிட்டு ஓரமைச்சனால் ஏனையோரை அவனில்லின்கண் அழைப்பித்து, இவர் அறைபோவான் எண்ணற்குக் குழீஇயினாரென்று தான் காவல்செய்து, ஒருவனால் இவ்வரசன் நம்மைக் கொள்வான் சூழ்கின்றமையின் அதனை நாம் முற்படச் செய்து நமக்கினிய அரசனொருவனை வைத்தல் ஈண்டை யாவர்க்கு மியைந்தது; நின் கருத்தென்னை யெனச் சூளுறவோடு சொல்லுவித்தல். இந்நான்கினுந் திரிபிலனாயவழி எதிர்காலத்துத் திரிபில னெனக் கருத்தளவையால் தெளியப்படுமென்பதாம்."

இத்தகுதிகள் அமையாத அலுவலரைத் தேர்ந்து அமர்த்தல் அரசனுக்குப் பலவகைத் தீங்குகளைக் கொண்டுவந்து சேர்க்கும். அறிய வேண்டுவனவற்றை அறியாதாரைத் தேர்தல் பேதைமை எல்லாம் தரும்(கு. 507); தன் வழியினர்க்கும் தீரா இடும்பை தரும் (கு. 508). இத்தீங்குகளைக் கருத்தில் கொண்டும் அரசன் அலுவலரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். இதனால் முன்குறிப்பிடப்பட்ட அருமைப்பாடு மேலும் அருமையுடையதாதல் விளங்குகிறது.

### 6. 4. 4. தெரிந்து வினை ஆள்தல்

இவ்வாறு 'தெளியப்பட்டாரை அவர் செய்யவல்ல வினைகளை அறிந்து அவற்றின்கண்ணே ஆளும் திறம்' யாது? நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த தன்மையானே அரசனால் வினைக்கு ஏவப்படுதல் வேண்டும் (கு. 511). இவ்வலுவலரைக் கொண்டு அரசின் வருவாயைப் பெருக்கி நாட்டை வளப்படுத்தலும் அங்குத் தோன்றும் இடையூறுகளை நீக்கலும் அரசன் பொறுப்பு :

*வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை*
*ஆராய்வான் செய்க வினை.* (குறள் 512)

அன்பு, அறிவு, தேற்றம், அவாவின்மை ஆகிய பண்புகள் பெற்றோனை அரசன் வினைக்கண் ஆளுதல் வேண்டும் என ஒருகுறள் (513) பேசுகிறது அறிவு மட்டும் போதாது; கலங்காமை என்னும் தெளிவும் வேண்டும் என்கிறது இக்குறள். வினைக்கண் ஏவப்பட்டான் தானே முடிவெடுக்கும் திறமும் பெற்றிருத்தல் ஆட்சிப் பணிக்கு வேண்டியது தானே. ஆட்சிப் பணியில் அரசலுவலர் கையூட்டுப் பெறுதல் என்னும் கொடிய வழக்கம் இன்று ஆல்போல் பரவிப் பெருகி இருப்பது போன்று அன்றும் இருந்ததோ என்னவோ? இக் கையூட்டுத் தீவினை, அரசின் தலைவர்க்கு என்றும் தலைவலியாகும். இத்தீவினை இல்லாரை அரசன் தேர்ந்தெடுத்து வினைக்கண் ஆளுதல் வேண்டும். இதனையே இக் குறளில் 'அவாவின்மை'(பொருளாசை) என்னும் பண்பு வேண்டும் என்பதால் குறிக்கிறார் வள்ளுவர். ஆளும் பணிபற்றிப் பேசும் அறவோராகிய வள்ளுவர் இத்தீவினைபற்றிப் பேசுதல் வியப்பல்ல; ஆயினும் போற்றுதலுக்கு உரியது. இருந்தாலும்

*எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்*
*வேறாகும் மாந்தர் பலர்.* (கு. 514)

இருக்கின்றனரே என வள்ளுவர் எச்சரிக்கையும் விடுக்கிறார். சுருங்கச் சொன்னால் தெரிந்து வினை ஆள்தலில் இதுதானே செய்ய வேண்டியது:

*இதனை இதனான் இவன்முடிக்கும் என்றாய்ந்து*
*அதனை அவன்கண் விடல்.* (கு. 517)

'வள்ளுவர் கண்ட அரசன், அறிவும் பண்பும் கொண்டோரை அமைச்சர் முதலான உயர் அரசலுவலராக அமர்த்தி நாட்டுக்கு நன்மை தரும் பணியில் செலுத்தி ஆள்தல் வேண்டும்' என்பதே இதுகாறும் அறிந்த செய்தி.

## 6. 5. வரவு செலவுப் பணி

வள்ளுவர் வகுத்த அரசியலில் பொருள் இன்றியமையாத இடம் பெறுகின்றது. அரசனுடைய பெரும்பணியும் தலையாய பணியுமான நாடு காவலுக்குப் படையும் அரணும் வேண்டும். அவற்றைப் பேணச் செல்வம் வேண்டும். அரசன் 'கொடை அளி செங்கோல்' உடைய வனாகிக் 'குடிதழீஇக் கோலோச்ச' வேண்டும். அரசன் தன் அரண் மனை வாழ்வுக்கும் பிற இன்ப வாழ்வுக்கும் பெரும் பொருள் செலவிடு கின்றான். இச்செலவினங்களால் அரசனுக்கு வருவாய் வருகை தந்து கொண்டிருக்க வேண்டும். பொருளின் இத்தேவைகள் கருதியே வள்ளுவர் பொருளும் அரசன் உடைமைகளுள் ஒன்று என முதற் குறளிலேயே வகுத்துரைக்கிறார் :

*படைகுடி கூழ்அமைச்சு நட்பு அரண்ஆறும்*
*உடையான் அரசருள் ஏறு.* (குறள் 381)

பொருளின் பெருமை, பயன் ஆகியவைபற்றி எடுத்துச் சொல் லவே வள்ளுவர் பொருள் செயல்வகை என ஓர்அதிகாரமே அமைத் துள்ளார்.

*பொருள் அல் லவரைப் பொருளாகச் செய்யும்*
*பொருள்அல்லது இல்லை பொருள்.* (குறள் 751)

*இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை*
*எல்லாரும் செய்வர் சிறப்பு.* (குறள் 752)

என அதன் பெருமையை அவ்வதிகாரம் எடுத்து மொழிகிறது. பாராளும் மன்னர்க்கு அதனால் பெரும்பயன் உண்டு. பக்கத்து நாட்டுப் பகையை மாற்றவும் பகைவரை மாற்றவும் அப்பொருள் பயன் படுகிறதாம் ; ஆகவே அதனைச் செய்க என்கின்றார் வள்ளுவர் :

*பொருள்என்னும் பொய்யா விளக்கம் இருள்அறுக்கும்*
*எண்ணிய தேயத்துச் சென்று.* (குறள் 753)

*செய்க பொருளைச் செறுநர் செருக்குஅறுக்கும்*
*எஃகுஅதனின் கூரியது இல்.* (குறள் 759)

இவ்வாறு நாட்டுக்கும் நல்வாழ்வுக்கும் இன்றியமையாப் பொருளை ஈட்டுதலும் போற்றுதலும் அரசன் கடமையும் பணியும் ஆகும்

அல்லவா? குறள் அப்பணிபற்றிச் சிறிது பேசுகிறது. இவ்வகையில் இறைமாட்சியில் இந்தக்குறள் குறிக்கத்தக்கது :

*இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த*
*வகுத்தலும் வல்லது அரசு.* (குறள் 385)

இக்குறள் அரசின் பொருளது நான்கு திறத்தைக் குறிப்பிடுகிறது: "தனக்குப் பொருள்கள் வரும் வழிகளை மேல் மேல் உளவாக்கலும் அங்ஙனம் வந்தவற்றை ஒருவழித் தொகுத்தலும் தொகுத்தவற்றைப் பிறர் கொள்ளாமல் காத்தலும் காத்தவற்றை அறம்பொருள் இன்பங்களின் பொருட்டு விடுத்தலும் ......" இன்றைய பொதுநிதியியல் (Public Finance) அல்லது அரசின் பொருளியல் (Economics of Govern-ment) என்னும் துறையின் நோக்கில் இக்குறள் கூறும் நான்கு திறங்களையும் மூன்றாகக் காணலாம் :

| | | |
|---|---|---|
| இயற்றல் | — | வருவாய் (Revenue) |
| ஈட்டல்<br>காத்தல் | — | நிதியாட்சி (Financial Administration) |
| வகுத்தல் | — | செலவு (Expenditure) |

இவை அனைத்தையுமே அரசனின் வரவுசெலவு முதலான பொருள் பற்றிய பணி எனக் கருத வேண்டும். இனி இவற்றின் விளக்கத்தைக் காணலாம்.

### 6. 5. 1. இயற்றல்

இயற்றல் என்பது பொருள் வரும் வழிகளை மேல்மேல் உள்வாக்கல் என்பது பரிமேலழகர் உரையால் விளங்குகிறது. பொருள் 'வரும் வழிகளாவன பகைவரை அழித்தலும், திறைகோடலும், தன்நாடு தலையளித்தலும் முதலாயின' எனப் பரிமேலழகரே மேலும் விளக்குகிறார். பகைவரை அழித்து அவர் செல்வத்தைக் கவர்தல் முதல் வழியாம். இதனால் வரும்பொருள் கொண்டி எனவும் கொள்ளை எனவும் வழங்கப்படுகிறது. தோற்ற மன்னர் வென்ற மன்னர்க்கு முறையாக ஆக்கும் பொருள் திறை எனப்படுகிறது. அரசன் அன்பு கொண்டு குடிகளைக் காத்து வந்தால் குடிகளும் மனமுவந்து அவனுக்குப் பரிசு முதலானவை தருவர்; இதுவும் ஒரு வருவாய் வழியாகும். இம்மூவழிகளிலும் பொருள் வந்து கொண்டிருக்குமாறு பார்த்தல் அரசன் பணியாகும். இவை மட்டுமல்லாது வேறு சில வழிகளும் உண்டு என்பது குறளாலும் அதன் உரையாலும் வெளிப்படுகிறது.

*வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை*
*ஆராய்வான் செய்க வினை* (குறள் 512)

என்னும் ஒருகுறள் அரசரின் ஆள்தல் பணியாகத் தரப்படுகிறது.

(தெரிந்து வினையாடல், குறள் 512). 'பொருள் வருவாயில்களை விரியச் செய்து, அப்பொருளான் செல்வங்களை வளர்த்து அவ்வாயில்கட்கும் பொருட்கும்(செல்வங்கட்கும்) உற்ற இடையூறுகளை நாடோறும் ஆராய்ந்து நீக்கல்' பற்றி இக்குறள் பேசுகிறது. மேல் உரைக்கப் பட்ட மூன்று வழிகள் அல்லாது இக்குறளுரையில் பரிமேலழகர் 'உழவு, பசுக்காவல் வாணிகம் என்னும் வார்த்தையைத்' தருகிறார். இப் பணிகளையும் வேண்டுமானால் வேந்தர் மேற்கொண்டு அரசின் செல்வத்தைப் பெருக்குதல் வேண்டும்.

மேலும் ஒருகுறள் சில அரசு வருவாய்களைத் தருகிறது:

*உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்*
*தெறுபொருளும் வேந்தன் பொருள்.* (குறள் 759)

'உறுபொருள், வைத்தார் இறந்துபோக நெடுங்காலம் நிலத்தின்கண் கிடந்து பின்கண்டெடுத்ததூஉம், தாயத்தார் பெறாததூஉம் ஆம். சுங்கம் கலத்தினும் காலினும் வரும் பண்டங்கட்கு இறையாயது. தெறுபொருள் தெறுதலான் வரும் பொருள் . . .' அதாவது இவை புதையலும், வாரிசற்ற பொருளும், அயல்நாட்டு உள்நாட்டுப் பண்டங்கட்கான சுங்கமும் ஆகும். கள்வர்போட்டுவிட்டுப்போனகளவுப் பொருளும் இவ்வுறு பொருளுள் அடங்கலாம். இப் பொருள்களைப் பெறு வதற்கு அரசர் மேற்கொள்ள வேண்டிய பணிகள் பலப்பலவாகும். பிறர் கைக்கோ பிறவகையிலோ கிடைத்த புதையற் பொருளை அரசிற்கு உரியதாக்கிச் சேர்த்தல், தாயத்தார் இல்லாப் பொருளை வரையறுத்து நிலை நிறுத்தி அரசுக்குச் சேர்த்தல், சுங்கச் சாவடிகளை நாட்டின் பெருவழிகளிலும் துறைமுகங்களிலும் அமைத்து அங்கெல்லாம் அரசு அலுவலரை அமர்த்தி அப்பொருளைத் தொகுத்தல், கள்வர் போட்டு விட்டுச் செல்பவற்றைத் தொகுத்தல் ஆகியவை அரசன் பணிகளாகின்றன.

இவ்வருவாய் வழிகள் அல்லாமல் நிலவரி என்னும் இறைப் பொருளும் ஒருவழி என ஒருகுறளால் தெரிய வருகிறது:

*பொறைஒருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்கு*
*இறைஒருங்கு நேர்வது நாடு.* (குறள் 733)

பரிப்பெருமாளும் மணக்குடவரும் இவ்விறையினை நிச்சயித்த கடமை எனக் குறிப்பிடுகின்றனர். காளிங்கர், 'அரசற்கு ஆறில் ஒன்றாக என்றும் இறுத்தற்கு உரிய இறை' என இதனை விளக்குகிறார். பரிமேலழகரும் இதனை அருளொடும் அன்போடும் 'கூடி ... ஆறில் ஒன்றாய் வருதல்' எனக் (குறள் 755) குறிப்பிடுகிறார். இந்நிலவரியினை

ஊர்தோறும் அரசலுவலரை அமர்த்தி வாங்கித் தொகுத்தல் அரசன் பணி.

### 6. 5, 2. ஈட்டலும் காத்தலும்

இப்பணிகள் எல்லாவற்றையும் அரசனுக்காக இயற்றும் அரசலுவலர்பற்றிக் குறிப்பு ஒன்றும் குறளில் இல்லை. வினைசெய்வான் (குறள் 677), வினைக்கண் வினையுடையான் (குறள் 519), உற்றவை ஆராய்வான் (குறள் 519) என்னும் தொடர்கள் பொதுவகையாகச் சில அரசலுவலரைக் குறிக்கின்றன. ஆனாலும் குறிப்பிடத்தக்க அரசலுவலர் பலர் இருந்திருத்தல் வேண்டும். இவர்கள் பொருள்தனைப் பல வழிகளிலும் வாங்கித்தொகுத்து அரசனிடம் அவன் அரண்மனையில் கொண்டு வந்து சேர்த்திருத்தல் (ஒருவழித் தொகுத்தல்) வேண்டும். இப் பணியே ஈட்டல் என வள்ளுவரால் குறிக்கப்படுகின்றது போலும். மணக்குடவரும் இப்பணியைப் பண்டாரத்தில் சேர்த்தல் என்கிறார். இவ்வாறு ஈட்டிய பொருளைக் கருவூலம் (பண்டாரம்) அமைத்துக் காத்தல் வேண்டும். 'பகைவர், கள்வர், சுற்றத்தார், வினைசெய்வார்' முதலானாரால் தொகுத்த பொருள் கவரப்படலாம்; சுரண்டப்படலாம். இவர்களிடமிருந்தும் காத்தல் அரசன் பொறுப்பு. இக்காவலுக்கு ஒற்றரும் படைஞரும் தேவைப்படுவர்.

### 6. 5. 3. வகுத்தல்

இவ்வாறு இயற்றி ஈட்டிக் காத்த பொருளை வகுத்தல் வேண்டும் எனக் குறள் விதிக்கிறது. வகுத்தலாவது 'அறம் பொருள் இன்பங்களின் பொருட்டு விடுத்தல்' ஆகும் என்கின்றார் பரிமேலழகர்; அதாவது இவற்றின் பொருட்டுச் செலவிடுதல். "கடவுளர் அந்தணர் வறியோர் என்றிவர்க்கும், புகழிற்கும் கொடுத்தலை அறப்பொருட்டாகவும், யானை குதிரை படை நாடு அரண் என்ற இவற்றிற்கும் பகையொடு கூடலின் பிரிக்கப்படுவார்க்கும் தன்னிற் பிரிதலின் கூட்டப்படுவார்க்கும் கொடுத்தலைப் பொருட் பொருட்டாகவும், மண்டபம் வாவி செய்குன்று இளமரக்கா முதலிய செய்தற்கும் ஐம்புலன்களால் நுகர்வனவற்றிற்கும் கொடுத்தலை இன்பப் பொருட்டாகவும் கொள்க." இவ்விளக்கம் பரிமேலழகரது. இவ்வுரை விளக்கத்தை ஆராய்கின்ற போது அரசர்க்குக் கொடைச் செலவு, நாடுகாவற் செலவு, அயல்நாட்டுறவுச் செலவு, மக்கள் நலப்பணிச் செலவு ஆகியவை உண்டு என்பது தெளிவாகிறது.

கோலோச்சும் மன்னரின் கொடைத் திறம்பற்றிக் குறள் பல இடங்களில் குறிப்பிடுகிறது. 'கொடை அளி......உடையானும் வேந்தர்க்கு ஒளி' (கு. 390) என்கிறது ஒரு குறள். 'இன்சொலால் ஈத்தளிக்க வல்லான்' பற்றி மற்றொரு குறள் (387) பேசுகிறது.

> *கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து*
> *மாணாத செய்வான் பகை* (கு. 867)

செய்க பொருளைச் செறுநர் செருக்கு அறுக்கும்
எஃகு அதனின் கூரியது இல் (கு. 759)

என்னும் குறள்கள் அரசரின் அயல் நாட்டுறவுச் செலவைக் குறிப்பிடுகின்றன.

படை அரசனுடைய உடைமைகளுள் ஒன்று என முதற்குறள் (381) குறிப்பிடுகின்றது. 'வெல்படை வேந்தன் வெறுக்கையுள் எல்லாம் தலை'(கு. 76) என்கிறது மற்றொரு குறள். உறுப்பமைந்த படையாம் அது. படை, காத்தற் பொருட்டல்லவா? இதன் பொருட்டாகும் செலவே காவற் செலவு.

பரிமேலழகர் அரசின் செலவினங்களைச் சுருங்கச் சொல்லல் என்னும் அழகு தோன்ற வகுத்தும் தொகுத்தும் சொன்னார். ஆனால் அவர் குறிப்பிட்ட அளவிலேயே அரசின் செலவினங்கள் நின்றிருக்கும் எனக் கருத முடியவில்லை; வேறுபல செலவுகளும் இருந்திருக்க வேண்டும். தன் பரந்த நாட்டை ஆளுதல் பொருட்டு அரசன் அமைச்சர் தூதர் ஒற்றர் முதலான எண்ணற்ற அரசலுவலரை அமர்த்தி வினையாடல் புரிந்திருத்தல் வேண்டும்; இவ்வாட்சிக் கருவிக்குச் சம்பளம் முதலான செலவுகள் செய்திருத்தல் வேண்டும். இவை நடைமுறைச் செலவுகளாகும். அவன் அரண்மனை, எண்ணற்ற சுற்றம் தழுவி நிற்க ஓர் உயர் வாழ்வாகவும் பெருவாழ்வாகவும் விளங்கியிருக்கும். அதன் பொருட்டு ஆகும் செலவு தலைமைச் செயலகச் செலவாகவோ தலைநகர்ச் செலவாகவோ கருதப்படும்: இவையல்லாது விழா, சமயம், குடிமக்கள் துயர் துடைத்தல் முதலானவற்றின் பொருட்டு அரசன் பல்வகைச் செலவுகள் செய்திருத்தல் வேண்டும். 'குடி ஓம்பல்' (கு. 390) என்னும் கருத்து இச் செலவினங்களை உள்ளடக்கிய ஒருபணியாக இருந்திருக்கலாம்.

இங்குக் கண்டவை எல்லாம் அரசின் வரவும் செலவும் ஆகும். இதன் பொருட்டு அரசனுக்குப் பொறுப்பும் கடமையும் உண்டு. நாள்தோறும் ஒரு குறிப்பிட்ட காலம் எண்ணுதலும் திட்டமிடுதலுமாக இப்பணியில் அவன் செலவிட்டிருத்தல் வேண்டும்.

வருவதெல்லாம் வரவென்று கொள்ளலாமா? வள்ளுவ சான்றோருக்கு வரவிலும் செலவிலும் நெறியும் நோக்கமும் இருத்தல் வேண்டும். இதுவே அரசர் பணியினை அருமையுடையதாக்குகிறது. பொருளிலே வேண்டாப் பொருளும் உண்டு என்கிறார் வள்ளுவர்:

அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல். (குறள் 755)

## 6. 6. முறைசெயற் பணி

முறைசெயலில் இன்றும் அன்றும் நிறைய வேறுபாடு உண்டு. குடியாட்சி மேலோங்கி நடைபெற்றுவரும் இன்றைய நாளில் முறை செயல் வேறு; அரசாட்சி வேறு என அமைக்கப்பட்டிருக்கிறது; முறைசெயல், ஆட்சியிலிருந்து பிரிந்து தனித்து இயங்கும் ஒன்றாக (independent judiciary) விளங்குகிறது. ஆள்வோரே முறைவழங்குவோராக இருந்தால் ஆள்வோராலும் அரசாலும் விளையும் தீமைகளையும் கொடுமைகளையும் எதிர்த்து யாரிடம் முறையிடுவது? ஆள்வோரிடமே முறையிட்டால் நீதி கிட்டாதல்லவா? ஆதலால் முறைசெயற்பணியும் ஆட்சிப் பணியும் ஒரேஇடத்தில் இருத்தலை இன்றைய உலகம் ஒப்புவது இல்லை. ஆனால் பண்டை உலகில் அரசனே முறை வழங்குவோன்; அவனே தலைமை நீதிமன்றம் (Supreme Court). நாட்டில் ஊர்தோறுமோ நகர்தோறுமோ முறைமன்றங்கள் அன்று இருந்திருக்கலாம். ஆனால் தலைநகரில் வாழும் அரசனே இறுதித் தீர்ப்பிற்கு உரியவன்; வழங்கவும் வல்லவன்.

இத்தகைய நிலையையே திருக்குறளிலும் காணுகின்றோம், வள்ளுவர் கண்ட அரசனது சிறந்த பணிகளில் முறைசெயலும் ஒன்று. முறைசெயல், முறைவழங்கு மன்றங்கள், வழக்குக்களின் இயல்பு இவற்றுக்கு அடிப்படையான நீதிநூல்கள் ஆகியவை பற்றிய குறிப்பு ஒன்றும் குறளில் கிடைக்கவில்லை. அரசன் சிறந்த முறையில் முறை வழங்க வேண்டும் என்பது மட்டுமே குறளில் வற்புறுத்திப் பேசப்படுகிறது.

இறைமாட்சியின் ஒரு குறள்,

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும் (குறள் 388)

என முறைசெய்தலின் சிறப்பை மொழிகிறது. அதன் சிறப்புக் கருதியே அதன் பொருட்டு ஓரிரண்டு அதிகாரங்கள் திருக்குறளில் இயற்றப்பட்டுள்ளனவாக உரையாசிரியர்கள் கருதுகின்றனர். செங்கோன்மை, கொடுங்கோன்மை, வெருவந்த செய்யாமை என்னும் அதிகாரங்கள் (55, 56, 57) இவ்வகையில் இயற்றப்பட்டவையே என்பர் அவர்கள். செங்கோன்மையாவது, 'அரசனால் செய்யப்படும் முறையினது தன்மை' என்பர் பரிமேலழகர். 'செங்கோன்மையாவது செவ்விதாகிய முறைசெய்தலுடைமை' என்பர் மணக்குடவரும் பரிப்பெருமாளும். செங்கோன்மை பற்றிய கருத்தையே எதிர்மறையில் கொடுங்கோன்மை, வெருவந்த செய்யாமை என்னும் அதிகாரங்கள் கூறுகின்றனவாம். இவற்றால் முறைமையின் சிறப்பையே உணரலாம். ஆனாலும் முறைமை என்பது வேறு; செங்கோன்மை என்பது வேறு என ஓரளவு பிரித்துரைக்கலாம். முறைசெயல் என்பது நீதி வழங்கல் மட்டுமே

ஆகும். செங்கோன்மை என்பது நல்லாட்சி நடத்தலைக் குறிக்கும். இவ்வாறே இங்குக் கொள்ளப்படுகிறது.

முறை வழங்கும் 'முறை'யினைக் கீழ்க்கண்ட குறள் நன்கு விளக்குகிறது :

*ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்*
*தேர்ந்துசெய் வஃதே முறை.* (குறள் 541)

வழக்கை ஆராய்தலும், கண்ணோடாமையும், நடுநிலை புரிதலும், நீதிநூல்களை ஆராய்தலும் முன்றசெயலின் இலக்கணமாக (பரிமேலழகர் கருத்துப்படி) இக்குறளில் குறிக்கப்படுகின்றன. 'எண்பதத்தான் ஓர்ந்து முறை' செய்தல் வேண்டும் என்கிறது மற்றொரு குறள் (548). முறைவேண்டினார்க்கு எளிய செவ்வியுடையனாய் இருத்தல் வேண்டும் என்பது இதன் பொருள். குடிமக்கள் நேரே அரசனைக் கண்டு முறையிடும் வகையில் குறள் கண்ட அரசன் இருப்பான் என்பது இதனால் விளங்குகிறது. அரிதிலே கிடைக்கும் முறை, முறையே அல்ல என்னும் கூற்று இங்குக் கருதத்தக்கது. இவ்வாறு முறையாக ஆட்சி நடத்தும் அரசனை அம்முறையே காத்து நிற்கும் என்கிறது பிறிது ஒருகுறள் :

*இறைகாக்கும் வையகம் எல்லாம்; அவனை*
*முறைகாக்கும் முட்டாச் செயின்.* (குறள் 547)

## 6. 7. முடிவுரை

உலகாளும் மன்னன் எல்லாக் கடமைகளையும் செவ்வனே செய்யலாம். ஆனால் அவற்றுக்கு எல்லாம் முடியாகவும், அடியாகவும் விளங்குவது முறைமையுடன் கூடிய செங்கோன்மையே யாகும். செங்கோன்மையே மன்னர்க்கு மாட்சி சேர்க்கும். இந்நிலையில்தான் இறைமாட்சி என எடுத்துப் பேசல் பொருந்தும். வள்ளுவர் காண விழைந்த இறைமாட்சியும் இதுவேயாகும். வள்ளுவர் கண்ட இறைமாட்சியினைப் பின்னையோரும் போற்றிப் பாடினர் :

*செருவின் ஒட்டலரைக் கொன்று*
*திறைகொண்டு நாடு காத்துப்*
*பொருளினை ஈட்டிக் கள்வர்*
*புல்லவர் சுற்றம் ஆதி*
*பருகுதல் இலாமை காத்துப்*
*பயில்அறம் ஆதி மூன்றின்*
*மருவுற விடுத்துச் செங்கோல்*
*வளர்ப்பது மாட்சி யாமே.*

(திருவள்ளுவர் அரசு, பக்கம் 9)

# குறுக்க விளக்கம்

1. அகம். : அகநானூறு
2. சிலம்பு. : சிலப்பதிகாரம்
3. கு. : குறள்
4. கு. உரை : குறள் உரை
5. தொல். சொல். : தொல்காப்பியம் சொல்லதிகாரம்
6. தொல். பொருள். : தொல்காப்பியம் பொருளதிகாரம்
7. புறம். : புறநானூறு
8. வகநாகா. : வள்ளுவர் கண்ட நாடும் காமமும் (தெ. பொ. மீ.)

9. AIPTI. : Ancient Indian Political Thought and Institutions by Dr. B. A. Saletore
10. APII. : Aspects of Political Ideas and Institutions in Ancient India by R. S. Sharma
11. KCEI. : Kingship and Community in Early India by Drekmeier
12. PT. : Political Theory by G. C. Field
13. PTAI. : Political Theory of Ancient India by John W. Spellman
14. PTII. : Political Theory Ideas and Institutions by Ray and Bhattacharya
15. SIP. : South Indian Polity by T. V. Mahalingam
16. SP. : Sangam Polity by Dr. N. Subrahmanian

# நூல் விளக்கம்

(இந்நூலில் மேற்கோளாக ஆளப்பட்டனவும் பிறவகையில் சுட்டிக் காட்டப்பட்டனவும் உட்படச் சிறப்பாகக் குறிக்கத்தக்கன மட்டுமே இங்குத் தரப்படுகின்றன.)

## தமிழிலக்கியங்கள் :


1. கம்பராமாயணம் : (1958), எஸ். ராஜம் வெளியீடு, சென்னை-1

2. சிலப்பதிகாரம் : (1972), தி. தெ. சை. சி. நூற் பதிப்புக் கழகம் லிட்., சென்னை-1

3. சீவக சிந்தாமணி : (1967), தி. தெ. சை. சி. நூற் பதிப்புக் கழகம் லிட்., சென்னை-1

4. திருக்குறள் : பரிமேலழகர் உரை, உ. வே. வை. மு. சடகோப ராமாநுஜா சார்யர், உ. வே. வை. மு. கோபாலக்ருஷ்ணமாச்சார்யார் குறிப்புரையுடன், (1965), வை.மு. கோ. கம்பெனி, சென்னை-5

5. திருக்குறள் : உரைக்கொத்து, பொருட்பால், (1959), ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்

6. திருக்குறள் : ஆராய்ச்சிப் பதிப்பு, பதிப்பாசிரியர் கி. வா. ஜகந்நாதன், (1963), ஸ்ரீ ராமகிருஷ்ணமிஷன் வித்தியாலயம், கோவை மாவட்டம்

7. திருக்குறள் சொற்பொருள் அகரவரிசை : திரு.வா.மார்க்கசகாயம்செட்டியார், திரு. சு. ஆ. இராமசாமிப் புலவர், (1969), தி. தெ. சை. சி. நூ. கழகம் லிட்., சென்னை-1

8. தொல்காப்பியம் சொல்லதிகாரம் : நச்சினார்க்கினியர் உரை (1–5 இயல்கள்), (1971), தி. தெ. சை. சி. நூ. கழகம் லிட்., சென்னை–1

9. தொல்காப்பியம் பொருளதிகாரம் : (மேல் கண்டது)

10. நற்றிணை : பின்னத்தூர் நாராயணசாமி உரையுடன், (1967), தி. தெ. சை. சி. நூ. கழகம் லிட்., சென்னை-1

11. நாலடியார் : (1968), தி. தெ. சை. சி. நூற் பதிப்புக் கழகம் லிட்., சென்னை-1

12. பதிற்றுப்பத்து : ஔவை சு. துரைசாமிப்பிள்ளை உரையுடன், (1968), தி. தெ. சை. சி. நூ. கழகம் லிட்., சென்னை-1

13. பத்துப்பாட்டு : நச்சினார்க்கினியர் உரையுடன், உ. வே. சா. பதிப்பு, (1961), சென்னை–5

14. பழந்தமிழ்நூல் சொல்லடைவு (3 பகுதிகள்) : (1967, 1968, 1970), பிரெஞ்சு இந்தியக் கலைக் கழகம், பாண்டிச்சேரி

15. புறநானூறு : உ. வே. சா. பதிப்பு, (1950), சென்னை-5

## தமிழ் நூல்கள் :

1. இலட்சுமிரதன்பாரதி, சோ : இறைமாட்சி அல்லது அரசியல், (1961), தி. தெ. சை. சி. நூ. கழகம் லிட்., சென்னை–1

2. கதிரேசச் செட்டியார், மு. : (மொழிபெயர்ப்பாசிரியர்) கௌடலீயம் பொருணூல், (1955), அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

3. சண்முகம் பிள்ளை, எம். : திருக்குறள் அமைப்பும் முறையும், (1972), சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை

4. சாமிநாத சர்மா, வெ. : புராதன இந்தியாவின் அரசியல், பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம், புதுக்கோட்டை, திருச்சி மாவட்டம்

5. சாரங்கபாணி, இரா. : திருக்குறள் உரை வேற்றுமை பொருட்பால், (1960), செல்வி பதிப்பகம், காரைக்குடி

6. மகேசன், க. : ஒப்புரவு அல்லது வள்ளுவம், (1970), திருவள்ளுவர் அச்சகம், நல்லூர், யாழ்ப்பாணம்

7. மதுரை முதலியார், கு. : திருவள்ளுவர் அரசு, (1964), பழனியப்பா பிரதர்ஸ், சென்னை–5

8. முத்து, செந்துரை. : வழிகாட்டும் வள்ளுவர், வள்ளுவர் வகுத்த அரசு, (1966), கலைமகள் காரியாலயம், சென்னை–4

9. மீனாட்சிசுந்தரன், தெ.பொ. : வள்ளுவர் கண்ட நாடும் காமமும், (1955), பழனியப்பா பிரதர்ஸ், சென்னை–5

10. மறைமலை அடிகள் : வேளாளர் நாகரிகம், தி.தெ.சை.சி. நூ. கழகம் லிட்., சென்னை–4

11. முருகரத்தனம், டாக்டர் தி. : குறள் கண்ட பொருள் வாழ்வு, (1973), மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை–625021

12. முருகரத்தனம், டாக்டர் தி. : வள்ளுவர் வகுத்த அரசியல், (கருத்தரங்கக் கட்டுரைகள், 1974) மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை–625021

13. வரதராசனார், டாக்டர் மு. : திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், (7–ஆம் பதிப்பு 1967) பாரி நிலையம், சென்னை–1

14. வரதராசனார், டாக்டர் மு.: திருக்குறள் தெளிவுரை, (1970),
திரு. தெ. சை. சி. நூ. கழகம் லிட்.
சென்னை-1

## ஆங்கில நூல்கள்

1. Basham, A. L. : The Wonder that was India, 1967, Rupa & Co , Delhi.

2. Saletore, B. A. : Ancient Indian Political Thought and Institutions, 1963, Asia Publishing House, Bombay.

3. Brown, Mackenzie D. : The White Umbrella, 1964, Jaico Publishing House, Bombay.

4. Chatterji, S. K. : Indo-Aryan and Hindi

5. Drekmeier : Kingship and Community in Early India, 1962, Stanford University Press, California.

6. Field, G. C. : Political Theory, 1963, Mattuen & Co. Ltd., Strand.

7. Ghoshal, U. N. : A History of Indian Political Ideas, 1966, Oxford University Press.

8. Mahalingam, T. V. : South Indian Polity, 1967, University of Madras.

9. Radee, Anderson and Christol : Introduction to Political Science, 1957, Megraw-Hill Book Company, Inc.

10. Ramaswamy, T. M. : Essentials of Indian State Craft, 1962, Asia Publishing House, Bombay.

11. Ray, A. and Bhattacharya, M. : Political Theory Ideas and Institutions, 1964,
The World Press Pt. Ltd., Calcutta.

12. Sharma, R. S. : Aspects of Political Ideas and Institutions in Ancient India, 1968,
Motilal Banarsidass, Delhi.

13. Slater, Gilbert : The Dravidian Element in Indian Culture,
T. S. I. S. S. Works Publishing Society Ltd., Madras - 1.

14. Spellman, John W. : Political Theory of Ancient India, 1964,
Clarendon Press, Oxford.

15. Subrahmanian, Dr. N. : Sangam Polity, 1966,
Asia Publishing House, Madras - 2.

16. Subrahmanian, Dr. N. : Pre-Pallavan Tamil Index (Index of Historical Material in Pre-Pallavan Tamil Literature), 1966,
University of Madras, Madras - 5

17. Zimmer, Heinrich : Philosophies of India, 1953,
Joseph Campbell, Bollingen Foundation, Inc.

# சிறப்புச் சொற்கோவை

(எண்கள் பக்க எண்கள். எண்களை அடுத்த புள்ளிகள் பன்முறையாட்சியைக் குறிக்கும்.)


அஃறிணை 6 42 69
அகங்காவல் 103 106... 109
அகத்திணையியல் 2
அகப்பகை 92 105 106 107 109...
அகம் 73
அங்கம் 17... 18... 19... 20... 23... 25... 26... 34 48 94 104
அங்கவியல் 12
அங்கிவினை 58 59
அச்சம் 13 120
அசாவாமை 74
அஞ்சாமை 52... 53... 77
அடிமை 72
அண்டை நாடுகள் 47
அத்தாணி 62...
அதிகாரி 103
அந்தணர் 47, 54, 58' 62, 89 125
அந்தணர் நூல் 107
அந்தப்புரம் 71
அமர் 54 110 111
அமரநிகண்டு 25
அமாத்தியர் 22, 24, 29, 47, 65
அமைச்சர் 3, 11, 13, 24, 27 28 39... 49 60... 62 64 65 94... 95 104 117 118 119 122 126
அமைச்சியல் 3 4 12 13 27
அமைச்சு 3 7 10 12 13 14 16 17... 19 20 24... 25 27 29
அமைதி 95 100 105
அமைதி காத்தல் 105
அயல் அண்டை நாட்டுப் பகை 101 102
அயல் நாட்டு உறவுச் செலவு 125 126
அயல்நாடு 10 47 101 102
அர்த்த சாஸ்திரம் 4... 21 27 23... 25 27 30 34 47 72 79 82 97 112
அரச ஆட்டம் 87
அரசலுவலர் 10 28 93 97 117 126
அரசனீதி 1... 12 16 17 19
அரசாட்சி 43 44 127
அரசியல் 3 4... 5... 6... 9... 12... 15... 21 24... 27 35... 40 51 64 67 82 88 89 100 122
அரசியல் அறங்கள் 100
அரசியல் வரலாறு 46
அரசியற் சட்டங்கள் 66
அரசின் அடிப்படைக் கூறுகள் 46 48 49
அரசின் கருவி 46
அரசின் பணியாளர்கள் 10
அரசின் பொருளியல் 123
அரசு 5... 6... 15... 16 18 22 24... 25... 27... 37... 38... 39... 40... 41... 42... 43... 44... 45... 46... 47... 50... 63 89 100 103 105 106... 117 119 123 124 126 127
அரசுபணி 71
அரண் 3 8 11 13 16 17... 19 20 25 59 49 85 103
அரண்மனை 62 66 122 125 126
அருளாட்சி 44
அல்லவை நீக்கல் 99
அலுவலர் 10 28 93 97 117 118 126
அவ்வையார் 96
அவாவின்மை 121
அவை அஞ்சாமை 3 7 12 27
அவை அறிதல் 7
அவையத்தார் 78
அழுக்காறுமை 59

அளி 52. 60 66 99 122 125
அற்ருர் 54
அறங்காவல் 107
அறத்துப்பால் 44 79
அறநீதிகள் 65...
அற நூல் 82 83
அற நெறி 57
அறப்பணி 99
அறம் 2... 21... 35... 47 50 57... 58... 59 60 71 75 88 92 96 100 107 120 123 125
அறவோன் 79 120 121
அறன் இழுக்காமை 57
அறன் ஓம்பல் 107
அறிவு 52... 53 56 69 81 85 86 93 97 121 122
அறிவுடைமை 3 7 9 81 82 85 86 92 97 102
அறிவுடையார் 9 93
அறிவுரை 50 62 64 65 71 73 85 86 102 114
அன்ருட அரசியல் 35
அஷ்டாங்கிக ராஜ்ய 22
ஆங்கிலச் சொல் 6
ஆச்சிரமங்கள் 58
ஆட்சி 6... 30 33 37 38... 39... 40... 41 43 44... 45... 46... 47... 50 54 77 96 127... 128...
ஆட்சிப் பணி 65 88 97 99 111 127
ஆண்மையுடைமை 56
ஆந்தையார் 96
ஆரியம் 21
ஆரியா வர்த்தம் 22
ஆள்தல் பணி 117... 118 123
ஆள்வினையுடைமை 7 69
ஆளப்படுவோர் 80
ஆளுங்கணம் 38 39 46 49
ஆறலைப்பார் 103
ஆன்ற பெரியார் 45
ஆன்ருேர் 62
இகல் 8 9 60 109
இகல் வேந்தர் 109
இடன் அறிதல் 7 98 110 111 115
இடிக்குந் துணையார் 50 64...
இடுக்கண் அழியாமை 3 7 12 27 69 74
இந்தியப் பண்பாடு 31
இந்திய மரபு 4 76 85 97 108
இந்திய மொழி 31
இந்தியா 5 31 32... 21 22 47 94
இந்திரபதம் 43...
இயற்கைக் குணங்கள் 52...
இயற்றல் 6 68 99 119 123...
இரட்டைக் காப்பியங்கள் 70
இரப்போர் 13
இரவச்சம் 8
இரவு 8 13
இராச்சியம் 17 19
இராச தந்திரங்கள் 83
இராமாயணகதை 31
இல்லறத்தார் 54 58
இல்லறம் 1 54...
இல்லாள் 76
இலக்கணம் 27 66 128
இலக்கியங்கள் 12 21 45
இவறல் 91
இளங்கோவடிகள் 107
இளந்தத்தனுர் 96
இளமரக்கா 71 125
இளவரசர் 35 81 97...
இளவரசர் பயிற்சி 97
இளவேனில் காலம் 114
இழிகுலத்தார் 54
இறை 15 18 19 45 50 51 60... 108
இறைப்பொருள் 124
இறைமாட்சி 7 9 12 27... 45 51... 54... 57 60... 68 69 81 83 94 98 123 127 128...
இறைமை 46 47 48... 49...
இறைவர் 45 68 75
இன்சொல் 52 63... 80 112 113 125
இன்பம் 71 88 100 120... 123 125...
இன்ருமை 66 75
ஈகை 52... 53... 54... 55 57 58 80 86 87 98
ஈட்டல் 6 60 119 125...

உட்பகை 8 67 101... 103... 104 109...
உடலுறுப்புக் கொள்கை 34 35
உடைமை 3... 5 11... 25 16... 26... 28... 30 79 118... 122 126
உபசார வழக்கு 42... 56
உபதை 120...
உபாயம் 104 112... 113
உயர் அலுவலர் 118
உயர்குடிப்பிறப்பு 77 78
உயர்திணை 42... 59
உயிர்க் குணம் 53...
உயிரச்சம் 112
உரிமை 30 100
உரையாசிரியர் 1... 2... 4 6 12... 13 14 15... 16... 17... 19... 20.. 27 35 42... 43 57 58 59 60 64 67 70 84 89 91 94 101 103... 108... 104 127
உல்குபொருள் 108...
உலக அரங்குகள் 61
உலக நாடுகள் 100
உலகமகன் 78
உலகமொழி 44
உலோபம் 88
உவகை 86 91
உழவு 3 8 13 36 58... 124
உள் நாட்டுத்தீமைகள் 103
உறுப்பமைந்த படை 116 126
உறுப்பு 18 19... 20... 21... 24... 25... 04...
உறுப்புக் கொள்கை 23 24
உறுபொருள் 118 124
ஊக்கம் 52... 53... 55... 67 68... 69 80 113 115
ஊழ் 74
எட்டுத்தொகை 70
எட்டுறுப்பரசு 22
எண்ணிச் செய்தல் 111
எதிர்க் கட்சிகள் 56... 67
எழுத்துரிமை 66
ஏகச்சக்ராதிபதி 100
ஏழுறுப்புக் கொள்கை 21... 22
ஐம்பெரும் பூதம் 2
ஒப்புரவு 61... 98 99
ஒழிபியல் 12 28 35 60
ஒழுக்கமுடையார் 84
ஒளி 125
ஒற்றர் 36 49 117... 119.. 125 126
ஒற்றாடல் 7 10 99.. 117...
ஒறுத்தல் 75 112 113
ஓதல் 57... 58..
கடமை 103 108 . 116 123 124
கடவுள் 95 103 104 125
கடுங்கோல் 44..
கடுஞ்சொல் 52 63 64
கடும்பற்றுள்ளம் 86
கண்ணோட்டம் 7
கணிகையர் 76
கபிலர் 96
கம்பர் 106 107
கம்பராமாயணம் 106
கயமை 3 8 12 13 27 28 36
கருவூலம் 12
கல்லாமை 3 7 9 60 69 81... 82 83 84 85
கல்வி 3 4 6 7 9... 52 56 69 80 81... 82 83 84 85 92... 97...
கள் 76 87
கள்வர் 95 103 104... 118 124... 125
கள்ளாமை 118
கள்ளுண்ணுமை 3 8 75
களவு 71 118 124
களவுப்பொருள் 124
காட்சிக்கு எளிமை 52 80
காத்தல் 6 99 105 106... 107... 108...
காதல காதல் அறிய உய்த்தல் 91
காமம் 86 87 91...
காம வெகுளி மயக்கம் 59
காருகன்மம் 58
காலம் அறிதல் 7 98 110 111 114 115
காலாட்படை 116
காவல் 1 90 100... 101... 103, 104 .. 105... 106... 107... 108... 112 125
காவலர் 90 110 45 63 64 100... 101 105 107... 109...
காவற்செலவு 126

காவற்படைகள் 106
காவற்பணி 99 100... 101 .. 102 104 107 108 109
காளிங்கர் 12 14 15 16 18... 19... 20 .. 26 34 35... 42 54 57 .. 58 67... 70 85 101 103 114 124
கிரேக்கச் சிந்தனையாளர் 40 97
குசீலவகன்மம் 58
குடி 3 13 5 11 16 17... 18... 20... 24 25 27 29 36 49 50 54 61 63 66 67 73 106... 108... 123
குடிக்கடமை 108
குடிகாத்தல் 72 96 106 107...
குடிசெயல்வகை 8 13 72
குடி தழுவல் 49
குடிப்பிறப்பு 120
குடிமக்கள் 3 10 20 23... 28 49... 62 63 66 67 85
குடிமை 3 8 10 11 13... 27 28 78
குடியரசு 114
குடியாட்சி 50 66... 67 127
குடியியல் 12 13 27 60 72 78 89
குடியோம்பல் 28 49 60 99 107... 126
குடும்பம் 37.. 73
குடைநிழல் 64
குதிரைப்படை 116
குப்தப் பேரரசர் 22 33
குரோதம் 86 91
குற்றங் கடிதல் 7 9... 60 80 81... 86 87 91 92
குற்றம் 120
குறள் கண்ட பொருள் வாழ்வு 89 118...
குறளை கூறுவார் 99
குறிப்பறிதல் 7
குறுநில மன்னர் 78
குறும்பு 45 103... 104 109...
கூடாநட்பு 8 27
கூழ் 3... 13 16 20 25 29 109
கேள்வி 3 7 9 69 81... 82 83 84 85 86
கையூட்டு 121...
கொடுங்கோன்மை 7 28 63 67
கொடை 52 54 55 60 99 122
கொடைச்செலவு 125
கொண்டிப் பொருள் 55 123
கொல்லாமை 60 75 87 105
கொள்ளைப் பொருள் 55 123
கோசம் 29 48 62
கோசலம் 22
கோயில் 71
கோல் 43... 44... 45 108 109...
கோலன் 45 86
கோவூர் கிழார் 96
கோனரசு 15... 63 114
கௌடல்யர் 21 35 34 77 79
கௌடலீயம் 21... 22... 25 24 25 29 32... 33 .. 34 35 58 59
சக்கரவர்த்தி நயினர் 32
சங்க இலக்கியங்கள் 44 96
சங்க கால ஆட்சி 94
சங்க காலம் 96 100
சங்கத் தமிழ் 2 94
சட்டம் 37
சட்டமன்றம் 114
சத்திரியர் 58 73
சந்திர குலம் 73
சந்து செய்வித்தல் 95
சப்தாங்கம் 21 22 23 24 26 27 29 30 32 35 36... 47... 48
சமயம் 37 38 105 126
சமுதாய வாழ்க்கை 2... 3 5 6... 11
சமூக உயிர் 37
சமூகநலப்பணி 54 106
சமூகநலப் பணித் துறைகள் 54
சமூகம் 3 5... 37... 38... 45 105 118
சாதவாகன அரசர் 33
சாதி 37 38 103
சாந்திகள் 95
சாந்தி பருவம் 22 23
சாம பேத தானதண்டம் 104 112
சாமம் 23 104
சான்றோர் 10 62 89 93 107 126

சித்தார்த்த புத்தர் 22
சிலம்பு 105
சிற்றினஞ் சேராமை 7 81... 96... 97...
சிறியார் 87 96
சிறுமை 87 91 116
சினம் 91
சீவக சிந்தாமணி 60... 88
சுக்கிரநீதி 24...
சுங்கம் 89 124
சுந்தரமூர்த்தி, கோ. 35
சுநீதி குமார் சட்டர்ஜி 32
சுப்பிரமணியன், ந. 11
சுயராஜ்யம் 12
சுலோகங்கள் 59
சுவாமி 22 23... 24 26... 29... 47
சுற்றந்தழால் 7 99
சுற்றம் 8 95 99 104 125 126
சூத்திரர் 58
சூது 3 8 9 75 87... 96
சூளுறவு 120
சூரிய குலத்தினர் 70 73
சூழ்ச்சி 59 88
சூழ்வார் 25 26 32 96
செங்குட்டுவன் 107
செங்கோல் 7 44... 60 109 122 127 128
செயற்கைக் குணங்கள் 52... 53
செருக்கு 87 91 102
செல்வம் 1... 2... 3 73 88 115 116... 112 124
செலவு 113 122 125 126
செவிகைப்பச் சொற்பொறுத்தல் 52 64
சென்னை 44
சொத்துடைமை 118
சொல் வன்மை 7
தக்கோர் 94 95 96 104
தகுதி 92
தண்டம் 22 29 48 95 112
தந்திரங்கள் 95
தமிழ் 13 21... 32 48
தமிழ்ப் பேரகராதி 44
தமிழ் மரபு 21 77
தமிழக ஆட்சி 94
தமிழகம் 15 21... 91 112
தமிழர் 21
தமிழிலக்கியங்கள் 45
தர்மார்த்த காமம் 21
தர்மோத்தர புராணம் 22
தர்மரட்சகர் 107
தருமசாஸ்திரங்கள் 58...
தலைநகர் 55 127
தலைநகர்ச்செலவு 126
தலைமக்கள் 116 119...
தலைமைச் செயலகச் செலவு 126
தலைமை நீதி மன்றம் 127
தலையளித்தல் 123
தன்மநீதி 58
தன்னை வியத்தல் 91
தனியாழி 100
தனியுடைமை 118...
தாயத்தார் 124
தாயாதிகள் 103
தார்ப்படை 116
தானம் 23 112
தானை 114
திரிவர்க்கங்கள் 21
திருக்குறள் தெளிவுரை 43
திறை 123
தீநட்பு 8
தீயினம் 96
துணைவலி 113
துணிவுடைமை 51 52 56... 57 80
துர்கம் 22 29 47
துறவி 59
துன்பவியல் 12 13 27
தூங்காமை 52 56...
தூசிப்படை 116
தூது 7 10.. 11 14 36 49 78 119 126
தெய்வசக்திகள் 78
தெய்வாம்சம் 78
தெரிந்து செயல்வகை 7 98 110... 111
தெரிந்து தெளிதல் 7 10 99
தெரிந்து வினையாடல் 7... 10... 99 117 121... 124
தெறுபொருள் 124
தென்புலத்தார் 58
தேவருலகம் 63
தேர்தல் 111
தேர்ப்படை 116
தேற்றம் 121

தொல்காப்பியம் 2
தொல்காப்பியர் 6
தொல்படை 116
தொழிலாளர் சங்கங்கள் 38
நகரமக்கள் 23
நச்சினார்க்கினியர் 2...
நட்பாராய்தல் 8
நட்பியல் 12 13... 27 93
நட்பு 3 8 9 10 11... 14 16 17... 19 20 22 24 25 27... 29 75 93... 94 96 102
நடர் 96
நடுவு நிலைமை 92
நடைமுறை அரசியல் 35
நடைமுறைச் செலவு 126
நல்குரவு 3 8 13 36
நன்றி பயவா வினை நயத்தல் 91
நன்றியில் செல்வம் 3 8
நாட்டுப்புறம் 23
நாட்பணி 116...
நாடு 7 10 11 13 17... 18... 19... 20 22... 23 24 27... 28 .. 47... 49... 50 55... 61... 63 64... 66 70 71 98 99 100... 102 .. 103... 104... 109 111... 117... 121 122... 123 126
நாடுகாவல் 99 100... 102... 107 122
நாடுகாவற்செலவு 125
நாடோடிக் கதைகள் 32
நாணுடைமை 8 13 28
நால்வருணத்தார் 58
நாலடியார் 105
நிதித்துறை 119
நிதித்துறை அலுவலர் 119
நிதியாட்சி 123
நிலவரி 108 124 125
நிலனுள்பவர் 27 29 45 49 56 85
நிலைமக்கள் 127 128
நீதி 1... 44... 127...
நீதிநூல் 65 82 83 127 128
பகை 11 13 14 22 95 102 ... 103 106 109 115 122 125
பகைத்திறம் தெரிதல் 8
பகைத்திறம் தெறுதல் 57 58...
பகைநாடுகள் 100
பகைமாட்சி 8
பகையரசன் 102 112
பகையழித்தல் 69
பகைவர் 61 71 90 95 102... 104... 105 106 109 112 113 115 122 123 125
பகைவர்க்கம் 86
பசுக்காவல் 58... 124
பஞ்சதந்திரக் கதைகள் 32
பஞ்சம் 54
பட்டினி 54
படியுடையார் 27 28 29 45
படை 3 10 11... 16 17... 19 20... 24 25 28 29 48 49 53 55... 85... 103... 105 106 113 114 116... 119 122 126...
படைக்கலம் 54
படைக்கலம் பயிறல் 57... 58...
படைச் செருக்கு 8 13 27 79 103 116
படைஞர் 116 125
படைத்தலைவர் 24 55 116
படைப்பணி 109... 116 117
படைப்பயிற்சி 116
படைமாட்சி 8 79 103 116
படைவீரர் 24
பண்டாரம் 125...
பண்புடைமை 3 8 28
பணியாளர் 58
பத்துப்பாட்டு 70
பதிற்றுப்பத்து 91... 94 100
பதினெண் கீழ்க்கணக்கு
பயிற்சி பகர்தல் 82
பரிதியார் 57... 66 67 70 102 103 108... 110 115
பரிப்பெருமாள் 2... 4 18... 43 52... 54 56 59... 65 66 68 70 84 86 87 88 89 90... 103 106 124 127
பரிமேலழகர் 1... 2 3 4... 6... 9... 12 14... 15 16 17 18... 19... 20... 25 28 29... 34... 35... 43 51 53... 54... 55 56... 57... 58... 59... 60...

62 64... 65 67 68 69 70 82... 86 87 89 90... 91 94 95 96 102 103... 104... 105 110... 111 112... 114 120 124 125 126 127 128
பல்லுயிரோம்பல் 57 58
பல்கலைக் கழகம் 38 44
பல்குழு 103 104 109
பழங்குடி 73
பழிக்கு நாணுமை 89 91
பழைமை 8
பற்றுடைமை 120
பற்றுள்ளம் 88
பார்ப்பார் 13
பாலகாண்டம் 106
பிசிர் 96
பிரகிருதி 22 47 48
பிரமசரியம் 59
பிரமசாரி 58
பிளேட்டோ 97...
பிறந்த நாள் விழா 54
பிறநாட்டுடன்பாடு 48
பிறர்மனை நயத்தல் 87
பிறன் இல் விழையாமை 87
பிறிது மொழிதல் 68
புகழ் 61... 70 71 125
புதையற் பொருள் 118 124
புயல் 54
புரோகிதம் 94 95
புரோகிதர் 64 65... 66 94 95 104...
புல்லறிவாண்மை 3 8 11
புலையர் 54
புறங்காவல் 101 106...
புறநானூறு 100
புறப்பகை 102 105 107 109...
புறப் பொருள் வெண்பாமாலை 60
பெண்வழிச் சேறல் 8
பெரியார் 50... 81 92... 93... 94 95... 96 104
பெரியாரைத் துணைக்கோடல் 7 64 65 81... 86 89 92 96...
பெரியாரைப் பிழையாமை 8 12 13 93
பெருந்தொகை 14
பெருமை 8 28 92
பேச்சுரிமை 66
பேதைமை 3 8 9 10 11 13 27 121
பொச்சாப்பு 53 69 70 71
பொச்சாவாமை 7 11 69 70 71
பொது நிதியியல் 123
பொருட் செல்வம் 6
பொருட்பால் 1... 3... 4... 5... 6...10... 11... 12... 13... 14... 16 18 19... 21... 27... 28 30... 32 35 36... 40 44 48 49 50 81 93 116
பொருணூல் 59 82
பொருள் 1...2 3...4...11 13 14 19 21 24 48 49 55... 57 68 71 88...89 106 112 114...118...120... 122... 123... 124... 125...126
பொருள் செயல்வகை 3 8 118 122
பொருள் நசையாளன் 112
பொருள் வாழ்வு 35
பொருளாக்கம் 68 88
பொருளாசை 121
பொருளாட்சி 44
பொருளியல் 3 12 27 88 123
பொருளீட்டல் 11
பொருளீட்டும் நெறி 88
பொறுத்தல் 66
போர் 53 55...68 95 98 100... 101...102...109...110...111 113...114...115...116
போர்க்களம் 54 60 61 100
போர்ப்பணி 99...109...110..113 117
போர்ப்பயிற்சி 83
போர்வீரர்கள் 85 114
மக்கள் 1 2 3 5 23 .. 38... 40... 46... 47... 49 59 61 62 63 .. 64 66... 94 95 100... 101... 102.. 103... 104... 105 108... 109 .
மக்கள் நலப்பணிச் செலவு 125 ..
மகதம் 22
மடியின்மை 7 56... 69 71 72 73

மணக்குடவர் 1 2... 4... 13 18... 27 43 54 56 59... 65... 70 71 84 86 87 88 90... 96 106 110 115 124 125 127
மதம் 53 86 90 91
மதில் 24
மந்திரி 66 94
மருந்து 3 8 13 27
மறப்படை மாக்கள் 67 103
மறம் 53 60... 67 79 116...
மறவி 69 70
மறவோன் 79
மறனிழுக்கா மானம் 60
மறைமலையடிகள் 32
மன்றங்கள் 37
மன்னராட்சி 45
மன்னரைச் சேர்ந்தொழுகல் 7
மனு 21
மனுதரும சாஸ்திரம் 23
மாசனம் 17 18 19 20
மாண்பிறந்த மானம் 60 89 91
மாணு உவகை 89 91
மாநில மன்னன் 27 49
மாபாரதம் 22 23
மாற்சரியம் 86
மானம் 3 8 28 52 59... 60... 61... 69 79 80 86 89... 90 91 116
மானுடத் தெய்வக் குற்றங்கள் 104...
மித்திரர் 22... 29 48
முடிசூட்டுவிழா 54
முடியாட்சி 39 44 67
முதல்வோன் 62
முப்பால் 1 3 19 21
முருகரத்தனம், தி. 89 118
முற்றுகை 110 115
முறை 99 127 128
முறைசெயற்பணி 99... 127
முறை மன்றங்கள் 127
முறை வழங்குவோர் 127
முனிவர் 67
மூத்த அறிவுடையார் 96
மெய்யுணர்ந்த மன்னன் 83 97
மோகம் 86 91
மௌரியப் பேரரசர் 22 33
யானைப்படை 116
ராதா கிருஷ்ண சௌத்ரி 82
ராஜ்யம் 26...
ராஷ்ட்ர 23
லோபம் 91
வகுத்தல் 6 68 119 125...
வகையறச் சூழ்தல் 112
வடநூல் 29, 40 86...87 112 107 120...
வடமொழி 21 23 25 26 29 30 31 33 40 82 87 94
வணிகர் 58
வரவு செலவுப் பணி 122
வரி 108
வரிவாங்கும் முறை 96
வருணசிரமம் 58...59
வருமுன்னர்க் காவாமை 91
வருவாய் 108 109
வருவாய்ப் பணி 99...
வரைவில் மகளிர் 3 8 75
வல்லாளர் 39
வலியர் 62 102 113
வலியறிதல் 7 98 110...111... 113 114...
வழக்கு 127 128
வள்ளுவம் 35...
வள்ளுவர் வகுத்த அரசியல் 11 35
வறுமை 73 116
வாணிகம் 58...124
வால்மீகி 31
வாழ்க்கை விளக்கம் 61
வானப்பிரத்தன் 59
விதனம் 90

விநய விருப்பம் 78
விநாயக புராணம் 117
விலங்கு வேட்டை 87
விளையாட்டு மன்றங்கள் 38
வினை 53 55 68 98 99 110... 111... 112 113 116 117 121...
வினை செய்வார் 95 104... 125
வினைசெயல் வகை 7
வினைத்திட்பம் 7
வினைத்தூய்மை 7
வினையாடல் 117 126
வினையுடையான் 125
வீட்டின்பம் 59
வீரம் 59 60... 79
வெகுளி 86
வெங்கோல் 44
வெருவந்த செய்யாமை 7 127...
வெள்ளம் 54
வெள்ளைக்குடி நாகனார் 96
வெளிநாட்டார் 102
வெளிநாடுகள் 100 103
வெளிப்பகை 67 101 102 104
வென்றி 53
வேட்டல் 57... 58...
வேட்டை 71 87 105
வேத உபநிடத பிராமணங்கள் 22
வேதமோதல் 58
வேளாண்மை 73
வேளாளர் 13
வைப்புமுறை 12
ஜனபதம் 22 23... 29 47
ஸ்லேட்டர், ஜி. 32

# மதுரைப் பல்கலைக் கழகம்

## திருக்குறள் ஆய்வக வெளியீடுகள்

1. குறள் கண்ட பொருள்வாழ்வு
   — டாக்டர் தி. முருகரத்தனம்

2. குறள் கூறும் இறைமாட்சி
   — டாக்டர் தி. முருகரத்தனம்

3. வள்ளுவர் வகுத்த அரசியல்
   (கருத்தரங்கக் கட்டுரைகள்)

4. வள்ளுவர் வகுத்த பொருளியல்
   (கருத்தரங்கக் கட்டுரைகள்)

(அச்சில்)

அடுத்து வருவன

5. குறள் கூறும் ஆட்சி
   — டாக்டர் தி. முருகரத்தனம்

6. குறள் கண்ட சமூகம்
   — காமாட்சி சீனிவாசன்

# பிழை பொறுக்க

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 3 | 21 | பேசுகிது | பேசுகிறது |
| 18 | 3 | பரிதிரியாரும் | பரிதியாரும் |
| 22 | அ.கு. | as | are |
| 33 | ,, | writtten | written |
| ,, | ,, | writen | written |
| 43 | 3 | புதல்வர் | புதல்வற் |
| 43 | 12 | இடைமுறிந்து | இடைமுரிந்து |
| 48 | அ.கு. | cver | cover |
| 59 | ,, | நியமித்தை | நியமத்தை |
| 62 | 36 | கர்ட்டாயம் | கட்டாயம் |
| 66 | 7 | பொறுத்தற்குரிய | பொறுத்தற்கரிய |
| 67 | 26 | மேற்கொள்ளுகிறுர் | மேற்கொள்ளுகிறுன் |
| 69 | 3 | ஆகியவனவாம் | ஆகியனவாம் |
| 69 | 26 | சுடப்படாது | சுட்டப்படாது |
| 77 | 5 | அதிதாரம் | அதிகாரம் |
| 77 | அ.கு. | women | woman |
| 78 | 4 | அடையத்தக்கக் | அடையத்தக்க |
| 100 | 14 | விழைந்தனர் | விழைந்தனன் |
| 120 | அ.கு. | கொள்வான் | கொல்வான் |
| 132 | 14 | செந்துரை | செந்துறை |